இருபதில் கம்பன்

ச.சிவகாமி



இருபதில் கம்பன்

ச.சிவகாமி

அமுதநிலையம் லிமிடட்.,
17, ஸ்ரீபுரம் இரண்டாவது தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

இருபதில் கம்பன்		Irupathil Kamban
முனைவர் ச.சிவகாமி இணைப்பேராசிரியர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113.		Dr. S.Sivakami Associate Professor International Institute of Tamil Studies, Chennai - 600 113.
முதற்பதிப்பு	: ஆகஸ்ட் 2002	First Edition : August 2002
பக்கம்	: 256	Page : 256
அளவு	: 1/8 டெமி	Demy 1/8
தாள்	: 18.6 மேப்லித்தோ தாள்	18.6 Maplitho Paper
விலை	: ரூ. 80/–	
வெளியீடு	: ச.சிவகாமி	
விற்பனை உரிமை	: அமுத நிலையம் லிமிடட்., 17, ஸ்ரீபுரம் இரண்டாவது தெரு, இராயப்பேட்டை, சென்னை – 600 014. ✆ 811 1343 E.Mail : amudhanila@rediffmail.com	
அச்சீடு	: ஜப்பானிக்கா பிரிண்டிங் மீடியா, 17, ஸ்ரீபுரம் 2வது தெரு, இராயப்பேட்டை, சென்னை – 600 014. E.Mail : japonica@rediffmail.com	

நெஞ்சம் நிறைந்த பெற்றோர்

வ.தி.சங்கரலிங்கம்- வ.தி.ச.மீனாட்சியம்மாள்

நினைவாக

டாக்டர் ச.வே.சுப்பிரமணியன்,
மதிப்புறு இயக்குநர்,
உலகத்தமிழ்க் கல்வி இயக்கம்,
தமிழூர் – 627 808.

வாழ்த்துரை

முனைவர் ச.சிவகாமி அவர்களின் இருபதில் கம்பன் என்ற நூலைப் படிக்கும் வாய்ப்புப் பெற்றமைக்குப் பெரிதும் மகிழ்கிறேன். இயல்பாகவே முதுகலை கற்கும் காலத்திலிருந்து சிவகாமிக்குக் கம்பனில் மிகுந்த ஈடுபாடு உண்டு. அவருடைய முதுகலை ஆய்வேடாகிய 'அனுமன் ஆய்வும் வழிபாடும்' சில பதிப்புகளைக் கண்ட நூல். அவருடைய 'கம்பன் ஆய்வடங்கல்' அவருடைய கம்பன் அறிவின் எல்லையை விரித்தது. இவ்வளர்ச்சி நிலையில் இப்போது, 'இருபதில் கம்பன்' கம்பன் ஆய்வுகளுக்குச் சிகரமாக அமைந்துள்ளது.

கம்பன் கல்வியின் அகலத்தையும் ஆழத்தையும் நுண்மையையும் இருபதில் கம்பன் எடுத்தியம்புகிறது. இந்நூலின் ஒவ்வொரு சொல்லும், சிவகாமியின் கடுமையான உழைப்பைச் சொல்லுகிறது. அவர் வகுத்துக்கொண்ட உட்தலைப்புகள் அவருடைய கம்பன் பற்றிய அறிவின் பரப்பைக் காட்டுகின்றன.

ஆய்வின் அடிப்படைகளாகிய தொகுத்தல், வகுத்தல், விரித்தல், விளக்குதல் போன்றவை சிவகாமியின் சிறந்த சிந்தனைச் செல்வத்தை வெளிப்படுத்துகின்றன.

கம்பனின் கருத்தாழமிக்க, கலை நயம் செறிந்த பாடல்கள் அனைத்தும் இருபதில் கம்பன் நூலில் உள்ளதால் இந்நூலைப் படித்தால் கம்பனை முழுவதும் படித்த உணர்வு நமக்கு ஏற்படும். கம்பன் தொடாத துறைகள் இல்லை. எல்லாத் துறைகளிலும் வல்லவன் என்பதை இந்நூலின் ஒவ்வொரு பக்கமும் பறை சாற்றுகின்றது.

ஒரு காப்பியம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகக் கம்பன் காப்பியம் உள்ளது போன்று, ஒரு இலக்கிய ஆய்வு நூல் எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருபதில் கம்பன் உள்ளது.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள், சிறுகதை எழுத்தாளர்கள் இவர்களின் கம்ப ஈடுபாடு ஆய்வாளரின் கவனத்தை ஈர்த்துள்ளதைப் பல பக்கங்களில் பார்க்கிறோம்.

கம்பன் அடிப்பொடி காரைக்குடி சா.கணேசன் அவர்கள் கம்பன் கழகங்களைத் தமிழகத்தில் பல இடங்களில் தோற்றுவிப்பதற்குக் காரணமாய் இருந்தார்கள். 'கம்பன் புகழ் வாழ்க, கன்னித் தமிழ் வாழ்க' என்று உரிய காலத்தில் ஒரு வினாடி கூட யாருக்கும் காத்திருக்காது காரைக்குடியில் கம்பன் நிகழ்ச்சிகளைத் தொடங்குவார்கள். எங்கள் பேராசிரியர்கள் அருணாசலக் கவுண்டர்,சேது இரகுநாதன் போன்றோருக்கு இராமாயணம் முழுவதும் மனப்பாடம். அந்த நிலையில் பேச்சால், உரையால் கம்பனைத் தமிழகத்தில் பலர் பரப்புகின்றனர். சிவகாமி எழுத்தால் கம்பனைப் பரவச் செய்கின்றாள். பேச்சு நிற்காது; எழுத்து என்றும் நிற்கும். அச்செயலைச் செய்து வருகின்ற சிவகாமியைப் பாராட்டி மகிழ்கின்றேன்.

கம்பன் என்ற கவிதை இமயமலையில் சில இடங்களில் ஏறிக் காட்சிகளைக் கண்டுள்ள சிவகாமி இன்னும் மேலேறிப் பல காட்சிகளைக் கண்டு மகிழ இறைவன் அவளுக்கு எல்லா நலன்களையும் தருமாறு வேண்டி, அவளை வாழ்த்தி மகிழ்கின்றேன்.

தமிழூர்
3-8-02

அன்பன்
ச.வே.சுப்பிரமணியன்

தென்ன கத்துக் காப்பிய நற்கலைஞர்க் கெல்லாம்
திசை காட்டும் கலங்கரைசேர் விளக்கமானான்
மன்னுகவிச் சக்கரவர்த்தி மகுடம் பெற்றான்
மாகவிஞர் புகழ்பாடி மகிழ்வம் நன்றே

– மலரமுதன்

டாக்டர் அன்னிதாமசு
பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை– 600 113

அணிந்துரை

கம்பன் ஒரு பெருங்கடல். அவன் கவிதையின் ஆழ அகலங்கள், அழகு வளங்கள் பல்வகைச் சுவைஞரையும் கவர்ந்திழுத்துள்ளன. அவன் கவியாக்கத்தைப் பற்றி இடையறாது எழுந்தோங்கும் ஆய்வு அலைகள் கிளிஞ்சிலும் மணியும் முத்தும் பவளமுமாகக் கொணர்ந்து கல்விக் கரையில் விரிக்கின்றன.கம்பக் கவிக் கடலையும் அதன் ஆய்வுப்பரப்பையும் ஒருங்கு கண்டு அனுபவித்துக் கடைந்தெடுத்த அமுத(கலச)ம் இதோ!

கம்பன் கவிதையை ஆழ்ந்து சுவைத்து ஆய்வுலகுக்குக் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக எடுத்துக்காட்டிக் கொண்டிருப்பவர் டாக்டர் ச.சிவகாமி. அதிலொரு வளர்ச்சியையும் விகசிப்பையும் கணிக்க முடியும். கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் முதுகலை மாணாக்கராக இருந்த போது, கம்பன் கவிச்சுரங்கத்தை அகழ்ந்து இவர் செய்த ஆய்வேடு, ‘அனுமன் ஆய்வும் வழிபாடும்’ (1974). அன்று அது இவருக்கு முதல் வகுப்பைத் தேடித்தந்ததுடன் அமைந்துவிடவில்லை; அண்மையில் (1997), ‘கங்கை’யில் மறுபதிப்பாகவும் வந்து சிறப்பைப் பெற்றுத் தந்தது. முதுகலை ஆய்வேடாயினும், அது, இன்றைய பல முனைவர் பட்ட ஆய்வேடுகளைவிடத் தகுதியானது.

எங்கள் பேராசிரியர் டாக்டர் ச.வே.சுப்பிரமணியன் அவர்களின் ஆய்வு நெறிவழி நிற்றல் என்பது அவரது ஊக்குதலுக்குட்பட்ட எல்லா மாணாக்கரிடமுமுள்ள அணுகுமுறையாகும். ‘ஆய்வடங்கல்’ என்ற ஒரு நோக்கு அவரிடம் முகிழ்த்தது, அவர் மாணாக்கரிடம் வெளிப்பட, முதலில் ‘சிலப்பதிகார ஆய்வடங்கல்’ (இரா.காசிராசன், 1973) வந்தது. கம்பனுக்கு அத்தகு நூலொன்றை ஆக்குதலைத் தன் சிரமேற்கொண்டு உழைத்து, தேனீயாகத் தேடித் திரட்டி, சிவகாமி படைத்த ‘கம்பன் ஆய்வடங்கல்’ (1978) ஆய்வு அகலத்திலும் ஆழத்திலும் சிறந்ததுடன், பின்பு, அவருக்குக் ‘கம்பன் மாணாக்கி’ (1986) என்ற தகைமை விருதையும் பெற்றுத் தந்தது.

ஆராய்ச்சியாளர் ஒவ்வொருவரும், ஆய்வில் புகுமுன், தம் ஆய்வுப் பொருள்பற்றிய இத்தகு ஆய்வடங்கலொன்றை உருவாக்கல் நலமும் தேவையுமாகும் எனும் எண்ணம் தமிழாய்வுலகில் புகுந்து பரந்து பல ஆய்வடங்கல்களைத் தந்ததை இக்கோட்பாட்டின் வெற்றிச் சிறப்பு வெளிப்பாடு எனல் தகும்.

ஆய்வுப்பட்டம் பெற்றோமா—பணியமர்த்தம் பெற்றோமா—'செயல் மறந்து வாழ்த்துவமே' எனச் சரிந்து உட்கார்ந்துவிடும் பலரிடையே, இவர் வேறுபட்டு நின்று, தொடர்ந்து கம்பன் ஆய்வில் ஆர்வம் காட்டி, நூலும் (இராமாயணக் குறியீடுகள், 1992), கட்டுரைகளும் (சான்று: பெண்ணியப் பார்வையில் கம்பராமாயணம், தமிழக மகளிர் கருத்தரங்கு, 13.10.1993) எழுதி வருகிறார்.

ஆய்வுத் தாகம் தீராததால், கம்பன் பற்றித் தொடர்ந்து திரட்டி வந்த பல குறிப்புகளும், தரவுகளும், தகவல்களும், எழுதி வந்த பல ஆய்வுரைகளும், ஒரு நூற்றாண்டின் கம்பனாய்வை எடுத்துக்காட்டும் கொள்கலமாகத் தற்போது தந்துள்ளார். இதற்கு, டி.லிட்.. என்ன – அதற்கு மேல் ஏதேனும் பட்டமிருந்தால் அதை வழங்கலாம். 'கை வண்ணம் இங்கும்' கண்டேன்.

பத்து இயல்களும், சில பின்னிணைப்புகளுமாக இக் 'கம்பன் அமுது' அமைகின்றது. கம்பர், பதிப்புகள், மொழிபெயர்ப்புகள், ஆய்வுகள், இலக்கிய உலகில், இராமாயண உலகில், புகழேணிகள், புகழ்ப்பூக்கள், ஆய்வுக் களங்கள், நிறைவுரை என்னும் தலைப்புகளைத் தொடர்ந்து, பின்னிணைப்பில், கம்பன் ஆய்வுகளின் நூல்வரிசையும் (ஆசிரியர் அகரவரிசையுடன்), கம்பன் பற்றிய தேர்ந்த கட்டுரைகள், ஆய்வேடுகள் வரிசையும் அமைகின்றன. இவற்றிற்குள் நுழைந்து வெளிவரும்போது ஒரு அருங்காட்சியகத்தைப் பார்த்த பிரமிப்பும் நிறைவும் ஏற்படுகிறது. இது வெறுமொரு பரந்த பறவைப் பார்வையன்று. பல இடங்களில் ஆழ்ந்து செல்கின்றது. சிங்கநோக்காக முன்பின் கருத்துகளை இணைத்துச் செல்கின்றது. இது, முன் நூற்றாண்டுக் கம்பன் ஆய்வு பற்றிய ஒரு பின்நோக்கு; 21–ஆம் நூற்றாண்டுக் கம்பன் ஆய்வுகட்கொரு முன்னோடி; வழிகாட்டி.

'கம்பர்', அறிமுகமாகவும், ஆய்வுமுகமாகவும் அமைகின்றது. கம்பனின் தன்மையென்ன, திறமையென்ன; அவன் கவிக்கோயிலின் அழகும் அணியும் என்னென்ன; அறம்–கற்பு–உறவு எனும் பாவிகங்கள் எவ்வாறு வேராக விழுதாகப் பொருந்தியுள்ளன; காப்பிய மாந்தரை அவன் கையாளும் பாங்கு எவ்வாறுள்ளது; உளவியல் அறிஞனாக, இறையியல் உணர்ந்தோனாக, சமூகவியல் தெரிந்தோனாக அவன் எவ்வாறெல்லாம் வெளிப்படுகின்றான்; அவன் கண்ட தமிழின் பன்முகங்கள் யாவை; அவன் தீட்டிய வாழ்வியல் ஓவியத்தின் வண்ணங்கள் எங்ஙனம் மிளிர்கின்றன; மொத்தத்தில், கம்பனின் பல்பரிமாணங்கள் யாவை என்பதை இவ்வியல் வழி அறிய முடிகிறது.

இன்று எளிதாக நம் கைப்படும் கம்பன் காவியம், கடந்து வந்த பதிப்பு முயற்சிகள் பல. அவற்றின் வரலாறு, பதிப்பு வகைகள், அவை எழுந்ததன் நோக்கம், மூலப் பதிப்புகளின் தனித்தன்மை, உரைப் பதிப்புகளின் சிறப்பு, முன்னோடிகளாகத் தனித்து – உயர்ந்து நிற்கும் பதிப்பாசிரியர் – உரையாசிரியர்கள்; படல – பாடல் எண்ணிக்கை வேறுபாடுகள்; பாடபேத நுட்பம்; பதம் பிரிக்கு அமைந்துள்ள மர்ரே ராஜம் பதிப்பின் மாண்பு; பைபிள்

தாளில் ஒரே தொகுதியாகக் கம்பனின் இராமாவதாரத்தைப் பதிப்பித்து வெளியிட்ட கம்பன் கழகப் பாங்கு; வையாபுரியாரின் கம்பன் பதிப்புப்பற்றிய கோட்பாடுகள், சுருக்கப்பதிப்புகள்; உரைநடைப்பதிப்புகள் (வசனம்) – என்பன இரண்டாமியலில் தெளிவாக்கப் பெற்றுள்ளன. இவ்வியலின் பின்னிணைப்புகள் இந்நூலாசிரியரின் உழைப்பையும் ஆய்வுத் தெளிவையும் தெற்றெனக் காட்டுகின்றன.

ஒரு சிறந்த படைப்பின் உயர்வு, தானெழுந்த மொழியில் பரவலாகப் பயிலப்படுவது மட்டுமல்ல; அண்மை – சேய்மை மொழியினரையும் அவ்வம் மொழி வாகனமேறிச் சென்றடைதலாகும். கவிக்கொண்டல் கம்பனின் இராமாயணம் ஏறத்தாழ 30 மொழிபெயர்ப்புகள் பெற்றுள்ளமையை, இந்நூலின் மூன்றாமியல் விதந்தோதி, பட்டியலையும் வழங்குகின்றது. மொழிபெயர்ப்புகளின் செவ்வியும் சீர்மையும், சுவைபுலப்பட எடுத்து மொழியப் பெற்றுள்ளன. பாடப்பகுதியாக அமைந்ததால் பதிப்புகள் எவ்வாறு அதற்குத் தகத் தோன்றினவோ, அவ்வாறே, ஆங்கில மொழிபெயர்ப்பும் பாட நோக்கில் எழுந்தது சுட்டப்படுகிறது. கம்பன் ஆர்வலரும், பிறமொழி வல்லுநரான சுவைஞரும் பெயர்ப்புப்பணியைச் சிரமேற்கொண்டு ஒரு பெருவேள்வியாகவே செய்துள்ளனர். பி.எஸ்.சுந்தரம், எஸ்.மகராஜன், வி.எஸ்.முதலியார், சி.இராஜகோபாலாச்சாரியார், எல்லிஸ் பாதிரியார் ஆகியோரின் முயற்சி பற்றிய தகவல்கள் வியப்புக் கலந்த மகிழ்வைத் தருகின்றன.

'ஆய்வுகள்' எனும் பகுதி இந்நூலுக்கும் ஆய்வு மையமாகும். கம்பன் ஆய்வில் ஈடுபாடுடையோரனைவரும் கவனம் கொள்ள வேண்டியது இப்பகுதி. என்ன ஆய்வுகள் செய்யப்பட்டிருக்கின்றன, காலவாரியாகவும், வகை வாரியாகவும் அதன் வழிநிலையும் வளர்ச்சியும் என்ன, அறிமுக நோக்கு சுவை நோக்கு போன்று அணுகுபவரின் போக்குகள் எவை, தொடக்க கால ஆய்வுகளுக்கும் பிற்கால ஆய்வுகளுக்குமுள்ள வேறுபாடு என்ன, கம்பனாய்வில் முன்னிற்கும் அறிஞரும் ஆர்வலரும் யார் எவர், ஆய்வை வளர்த்த இதழ்க்களங்கள், அறக்கட்டளைகள், நிறுவனங்கள், சிறப்பாகக் கம்பன் கழகங்கள் எவையெவை, பல்கலைக்கழகப் பட்டங்களுக்காக உருவான ஆய்வேடுகளின் பான்மை என்ன, விழா மலர்கள் அளித்த ஆய்வுத் தளம் எது எனப் பன்முகப் பார்வை இங்கு அமைகின்றது. தொட்ட இடமெல்லாம் கவியூற்று பிலிற்றும் கம்பத்தேனில் மூழ்கியும், மயங்காது, மூலபாட ஆய்வு, கால ஆராய்ச்சி, அமைப்பியல் – உவமை, உத்தி, கற்பனை, குறியீடு, பண்பாடு, பாத்திரம், யாப்பு, நடப்பியல், ஒப்பியல், பெண்ணியம் எனப் பலவாக ஆய்வுகள் வெளிப்பட்டுள்ளன. முதலியலில் நூலாசிரியர் காட்டியது போன்று, கம்பனை, ஒரு அரசியலறிஞனாக, அறிவியல் அறிந்தவனாக, உளவியல் வல்லுநனாக, சமூகவியல் பார்வையாளனாக, தத்துவ ஞானியாக... உணர்ந்தோரின் கருத்துகள் இதில் பதிவாகியுள்ளன. இயல் சுற்றிலமையும் கருத்துக் கோவை, கம்பனாய்வின் கனிச்சாறு.

கம்பனுக்குப்பின் எழுந்த பல்வேறு கவிஞரையும், அவர் படைப்புகளையும் கம்பன் கவிதை வெகுவாகப் பாதித்தது. கம்பக் கவியின் செல்வாக்கில் தோய்ந்த கவிஞர் மேத்தாவையும், சிறுகதையாசிரியர் புதுமைப்பித்தனையும் விளக்கிக் காட்டுகின்றது, 'இலக்கிய உலகில்' எனும் இயல். இராமாயணக் கருத்தும், காட்சியும், கம்பனின் சொல்லும் அதன் அழகும் வாரியிறைத்த வண்ணங்கள் இவர்களில் பட்டுத் தெறித்ததை இவ்வியல் உயிர்ப்புடன் வடிக்கின்றது. படைப்பாளர் வெறும் பின்பற்றாளராகாது, திறனாய்வாளராகவும் வெளிப்படுவது தெளிவாக்கப் பெற்றுள்ளது. நூலாசிரியரின் பட்டறிவு இதில் வெளிப்படுகிறது.

கம்பனுக்குப் பின் எழுந்த இராமாயணங்களின் வரலாற்றை வகுக்கின்றது, 'இராமாயண உலகில்' எனும் இயல். ஒட்டக்கூத்தரின் உத்தர காண்டம் முதல் வாலியின் அவதார புருஷன் வரை, காவியமாக, நாட்டுப்பாடலாக, நாடகமாக, கவிதையாக, புதுக்கவிதையாக இராமகாதை எடுத்த பல 'அவதாரங்கள்' இங்குக் காட்சிப்படுத்தப்பெறுகின்றன. மறு ஆக்கக் காரணிகள், கதை மாற்ற நோக்கங்கள் என்பனவற்றை நூலாசிரியர் வரிசைப்படுத்துவது அவரது ஆய்வு முனைப்பை வெளிப்படுத்துகின்றது.

கம்பன் புகழ், எல்லைப்பட்டு நின்றுவிடாது, மலர் வாசமாய், தென்றலாய் பரந்து வெளிப்படக் காரணமான படிகள், தளங்கள் எவையெவை என்பதைப் 'புகழேணிகள்' என நூலாசிரியர் தொகுத்தும், பகுத்தும், வகுத்தும் தருகின்றார். கம்பன் கழகங்கள் இந்நிலையில் ஆற்றிய தொண்டு, சொற்பொழிவாளர் பங்கு, கலைகளின் கையளிப்பு என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கன. படைப்பாளரும், அரசுகளும் கூட இத்துறையில் கம்பன் புகழ் பரப்பியது இவ்வியலில் பதிவு பெறுகின்றன.

'புகழ்ப்பூக்கள்', கம்பனைப் பற்றிய புகழ் மொழிகளின் இன்பட்டியல் – பாரதியார் முதல் கண்ணதாசன் – மேத்தா – வாலி வரை, பல கவிதைகள், தம் முன் தலைமுறைக் கவிஞனைப் பரவிய பாவரிகள். 'உண்மை – வெறும் புகழ்ச்சியல்ல' என ஏற்கச் செய்யும் வாய்மொழிகள்.

'ஆய்வுக் களங்கள்' எனும் இறுதியியல், நூலாசிரியரின் கம்பனாய்வு விழைவை – வேணவாவை வெளிப்படுத்தும் களமாகும். கம்பனுக்கு எவ்வளவோ செய்யப்பட்டுள்ளது எனக் கண்டு – தெரிந்து – கணித்த பின்னும், இன்னும் வேண்டும், இன்னும் இன்னும் தேவை எனும் பெருவிருப்பின் பதிவு இவ்வியல். மேலாய்வு பற்றிய எதிர்பார்ப்பும், எதிர்கால ஆய்வு நோக்கும் இதில் புலப்படுகின்றன. ஆய்வுத் தலைப்புத் தேடித் தடுமாறும் பல புது ஆய்வாளர்க்கு இது ஒரு கையேடு.

நூலின் நிறைவாக அமையும் நிறைவுரை, கம்பனுக்கு மேலும் சிறப்புச் சேர்க்க, இன்னும் செய்யப்பட வேண்டுவன எவையெவை என முன்னோட்ட

வரைவு அளிக்கின்றது. தனிமனிதர், குழுக்கள், அமைப்புகள், அரசு எனப் பல கைகளின் நட்பு உழைப்பும் இங்கே எதிர்பார்க்கப்படுகின்றது. நூலாசிரியரின் தொலைநோக்கு இதில் வெளிப்படுகிறது.

பல பக்கங்களாக விரியும் பின்னிணைப்புகள் நூலாசிரியரின் உழைப்பையும் ஆய்வு முனைப்பையும் பதிவு செய்கின்றன. கம்பன்பால் இவர் கொண்ட பற்றும் ஈடுபாடும் தான், தனியொருவராக, இப்பெரும் பணியைச் செய்ய இவருக்கு உள–உடல் ஆற்றலைத் தந்துள்ளன என்றால் அதில் மிகை இல்லை.

கம்பன் ஆய்வில் பல படிகள் கடந்து புகழ்பெறுகின்ற இவர், மேலும் சிறப்புப்பெற்று, இந்நூற்றாண்டாய்வையும் தொடர்ந்து வளர்க்க, வளர எம் உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

அன்புடன்,

அன்னிதாமசு

ஆரியத்தோடு அரியதமிழ் ஆழம் கண்ட பேரறிஞன்
தேரும் பிரமன் படைப்பெல்லாம் திருத்தி அழகு செய வல்லோன்
யாரும் புகழக் கவியுலகில் இராஜராஜன் எனத் திகழ்வோன்
பாரில் எங்கள் கம்பனெனப் பாடிப்பாடி மகிழ்வோமே

– கவிமணி

வழிமொழி

நாரதன் கருப்பஞ் சாறாய், நல்ல வான்மீகன் பாகாய்
சீர் அணி போதன் வட்டாய் செய்தனன், காளிதாசன்
பார் அமுது அருந்தப் பஞ்சதாரையாய்ச் செய்தான்; கம்பன்
வாரம் ஆம் இராமகாதை வளம் முறை திருத்தினானே (மிகை 14)

கவிக்கடல், கவிச்சிகரம், கவிக்கொண்டல், கவிப்பரம்பொருள், கவிக்குரு, கவிச்செம்மல், கவித்தேன் என எப்படி அழைப்பினும் அத்தனையும் உண்மையே, வெறும் புகழ்ச்சியல்ல என்று உறுதிப்படுத்துபவர் கவிவேந்து கம்பர். தமிழகத்தில் இதுவரை எக்கவிஞரும் பெறாத மாபெரும் தனிச்சிறப்பொன்றும் அவருக்குண்டு. எதிர்ப்பும் பாராட்டும் ஒருங்கே பெற்ற விந்தைக்குரியவர் அவர். எதிர்ப்பிலும் புதுமை கண்டவர் அவர். இராமாயணக் கதையை ஆரிய, திராவிட இனப் போராகக் கற்பித்து இராவணனைத் தலைவனாக ஏற்றுக் கொண்டோர் தமிழினத்துக்குக் கம்பர் துரோகம் செய்துவிட்டதாக எதிர்த்தனர். இது ஒரு புறமாக மறுபுறம் ஆதிகவி வான்மீகி மீதும், வடமொழி மீதும் கொண்ட பற்றால் தமிழ்க் கவிக்கு உரிய சிறப்பை வைணவரில் ஒருசாரார் அளிக்க மறுத்தனர் (ஏ.வி.சுப்பிரமணிய ஐயர், கல்வியில் பெரியவர் கம்பர், பக். 39–64). வான்மீகியை விட கம்பர் கவித்திறம் பெரியது என்றமைக்காக மோ.வே.கோவிந்தராஜ ஐயங்கார், வ.வே.சுப்பிரமணிய ஐயர் போன்றோர் அன்று எதிர்ப்பிற்குள்ளானதும் அறியத்தக்கது.

எதிர்ப்பிற்கு எதிர்ப்பாக எதிர்நூல்களும், கண்டனங்களும் கண்ட பெருமையும் இவரைச்சாரும். ஆயின் அனைத்து எதிர்ப்புகளையும் கம்பஞாயிறு சுட்டெரித்துச் சாம்பலாக்கித் தமிழ்வானில் தனியரசு செலுத்துகிறது. இதற்குக் கம்பன் கழகங்களும் பெரிதும் துணைநின்றுள்ளன. எண்ணற்ற ஆய்வுகளும், சொற்பெருக்குகளும் கம்பர் புகழை நிலைநிறுத்துகின்றன. தமிழக எல்லை தாண்டியும் கடல் கடந்தும் கம்பர் புகழ் ஓங்கி ஒலிக்கின்றது. அவர் புகழின் அளவீடாக இந்நூல் எழுந்துள்ளது.

இன்று கம்பராமாயணம் திருமாலின் இராமாவதார பெருமை பேசும் பக்திக்காப்பியமாக ஒருபுறம் சிறக்கிறது. கவிதையாற்றலால் சமயத்தைக் கடந்து பலரையும் தன்பால் மறுபுறம் ஈர்த்துள்ளது. இதுவே கம்பர் பெற்றுள்ள பெருவெற்றிக்கு அடிப்படையாகும். குழந்தைகள், சிறுவர், இளைஞர், பொதுநிலை என அனைத்துப் பருவத்தினருக்கும் ஏற்ற வகையில் கம்பராமாயணம் மறு ஆக்கமாக, உரைநடையாக, சுருக்கமாக, நாடகமாக எனப்பல வடிவங்களில் தமிழ் நெஞ்சங்களைக் கவர்கிறது. கம்பருக்கு எழுந்துள்ள பல்வேறு பிள்ளைத்தமிழ் முதலான படைப்பு இலக்கியங்களும்

தமிழர் அத்தெய்வமாக்கவிக்கு வழங்கிய காணிக்கை எனலாம். அறிஞர் தம் ஆய்வுகளால் கல்வியாளரிடையே கம்பராமாயணச் செழுமையை விரிக்க, கம்பன் கழகங்கள் பொதுமக்களிடையே அதன் புகழ் பரப்பும் பணியைச் சிறப்பாகச் செய்கின்றன. கற்றோர் அவையைவிட, பொதுமக்கள் அவையிடமே கம்பன் செல்வாக்கு மிகுந்துள்ளது என்பதும் உண்மை.

'தேரழுந்தூரில் உள்ள மிகப் பெரிய கோவில் ஸ்ரீ ஆமருவிப் பெருமாள் கோவில். அதனுடைய கோபுரத்தின் அடிப்பாகத்தில் ஒரு சிறு கர்ப்ப கிருஹம் போல் செய்து, அதில் கம்பரின் உருவச் சிலையும் அவருடைய மனைவியின் உருவச் சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. பெருமாளைச் சேவித்துக் கொண்டு நிற்கும் அந்தச் சிலைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் செய்யப்பட்டவை என்பது தெளிவு. மிகப் பழமையான அந்தச் சிலைகளுக்கு அபிஷேக ஆராதனை நடைபெற்று வருகின்றன' (கு.அழகிரிசாமி கட்டுரைகள், ப.94). 'நாட்டரசன் கோட்டையில் உள்ள கம்பர் சமாதி மணலை எடுத்து நீரிலிட்டு குழந்தைகள் பிறந்ததும் அந்த நீரை முதல் அமுதாகப் புகட்டி வரும் வழக்கம் இன்றும் அம்மக்களிடையே உளது' (மா.வரதராஜன், கம்பர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டே, ப.215) என்பன கம்பருக்குத் தமிழகம் தந்துள்ள மதிப்பினைச் சுட்டுகின்றன. இந்தியப் பெருந்தலைவர்கள் காந்தியடிகள், நேரு போன்றோராலும் பாராட்டப்பட்ட பெருமையுடையது கம்பராமாயணம் என்பதும் நினைக்கத்தக்கது. 'இலங்கையில் கம்பன் படத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்று விழா கொண்டாடப்படுகிறது. இந்த நிகழ்ச்சியை அங்குள்ள வானொலி நிலையம் நேரடியாக ஒலிபரப்புகிறது' எனக் கடல்கடந்த கம்பன் புகழை, நேரில் கண்ட பழ.பழனியப்பன் (தினமணி 10.4.1998) கூறுகிறார். நெல்லை மாவட்டக் கம்பன் கழகம் வெளியிட்டுள்ள 'இலங்கையில் கம்பராமாயண அடிச்சுவடுகள் – ஆராய்ச்சிப் பயணக் கட்டுரை' எனும் நூலும் கம்பன் புகழ் நாடுகடந்த பெருமையது என்பதனை மெய்ப்பிக்கின்றது.

மதுரை, டோக் பெருமாட்டி கல்லூரியில் இளங்கலை பயின்றபோது, தமிழ் மொழித்தாளுக்குப் பாடமாகச் 'சிறியன சிந்தியாதான்' நூல் தேர்வு செய்யப்பட்டிருந்தது (1970). அதன் நடையழகு என்னைக் கவர்ந்து, கம்பராமாயணத்தின் மீது ஓர் ஈர்ப்பைத் தோற்றுவித்தது. பின் முதுகலைத் தமிழுக்காக, கேரளப் பல்கலைக் கழகம் சென்றபோது அதில் தேர்ச்சி பெற ஆய்வேடென்று அளிக்கும் கட்டாயம் நேர்ந்தது. அதற்காக, கம்பராமாயணத்தில் தான் செய்ய வேண்டும் என்ற முடிவில் அனுமன் ஆய்வினை எடுத்துக் கொண்டேன். அப்பொழுது (1972–74) கம்பரின் கிட்கிந்தா காண்டம் முழுமையும் எங்களுக்குப் பாடமாக அமைந்திருந்தது. இவ்வாறு கம்பனைக் கற்கத் தொடங்கிய நான் அதன் கவியழகில் இன்றும் திளைத்துக் கொண்டிருக்கிறேன். இதற்கு எனது பெருமதிப்பிற்குரிய

பேராசிரியப் பெருந்தகை டாக்டர். ச.வே.சுப்பிரமணியன் அவர்களின் விருப்பின் பேரில் தொடங்கி, அவரே தமது தமிழ்ப்பதிப்பகம் வழி வெளியிட்ட 'கம்பன் ஆய்வடங்கல்' (1978) பெரிதும் துணையாயிற்று என்பதும் உண்மை. அவ்வப்போது நிகழ்த்திய இராமாயணச் சொற்பொழிவுகள், வெளியிட்ட கட்டுரைகள் என்பன கம்பன் ஆர்வம் நாளும் குறைவுபடாமல் வளர்ந்து கொண்டே செல்ல உதவின.

இந்நிலையில் சில ஆண்டுகட்கு முன்னர் மேனாள் சென்னை, கம்பன் கழகச் செயலரும், இந்நாள் காரைக்குடி கம்பன் கழகச் செயலாளருமான கம்பனடிசூடி, திரு. பழ.பழனியப்பன் அவர்கள் கம்பன் ஆய்வடங்கலைத் தற்காலம் வரைக்குமாக விரித்துத் தருமாறு அன்புடன் வேண்டினார். எனது சூழலில் அதனை நிறைவேற்ற இயலாவிடினும் ஏதேனும் ஒருவகையில் அதற்கு ஒரு மாற்று செய்ய எண்ணினேன். அதன் விளைவே 'இருபதில் கம்பன்'. 1998இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில், அன்னை சொர்ணம்மாள் அறக்கட்டளை கருத்தரங்கில் உரைத்த 'கம்பன் ஆய்வுகள்' இதற்கு வழிகாட்டிற்று.

எனது பேராசிரியரின் எண்ணச் செயற்பாடுகளான இருபதில் சிறுகதை, எண்பதில் தமிழ், எண்பத்தொன்றில் தமிழ்.... போல்வன என் சிந்தனையைத் தூண்ட, 'இருபதில் கம்பன்' படைக்கும் எண்ணம் எழுந்தது. 1901 முதல் 2000 வரையிலான ஒரு நூற்றாண்டுத் தமிழ் கம்பருக்கு அளித்துள்ள இடம் என்ன, இலக்கிய உலகில், பொதுமக்களிடையே என முழுநிலையில் கம்பராமாயணம் பெற்றுள்ள செல்வாக்கினை, பல்வேறு கோணங்களிலுமாகக் கணித்துரைக்க இயலுமா என்பன போன்ற வினாக்களுக்கு விடைகாண முனைந்ததன் பயனாக 'இருபதில் கம்பன்' எழுந்துள்ளது. சென்ற இருபதாம் நூற்றாண்டில் தமிழர் கம்பருக்கு அளித்துள்ள மதிப்பு, அவரைப் போற்றியுள்ள முறைமைகள், ஆய்வுலகம் காட்டியுள்ள அக்கறை, புதுமை, வேகம் போல்வன இதனுள் அறிந்த வரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

இருபதாம் நூற்றாண்டில் கம்பராமாயணம் எப்படியெல்லாம் கையாளப்பட்டுள்ளது என்பதைக் காட்டுதல் இந்நூலின் அடிப்படையிலக்காயினும் தேவை கருதி முன்னூற்றாண்டின் தரவுகளும் இணைக்கப்பட்டுள்ளன. இருபதில் பரந்துள்ள கம்பக் கடலின் கரையினைத் தொட்டுவிட்டேன் என்றோ, முழுமையாக அளவிட்டு விட்டேன் என்றோ கூறஇயலாது. இயன்றவரை முயன்றுள்ளேன்; கிடைத்த வரையில் தரவுகளை விடாது இணைத்துள்ளேன் என்றளவில் மட்டுமே மனநிறைவு கொண்டுள்ளேன். எனினும் என் அறிவிற்கு அப்பாற்பட்ட நிலையில் விடுபட்ட ஆய்வு நூல்கள் பல இருக்கலாம்; பல அரிய கட்டுரைகளும் என் பார்வைக்குட்படாதிருக்கும்; ஆய்வேடுகளின் தொகுப்பும்

நிறைவுடையனவல்ல; பிற எத்தனையோ அருமையான தகவல்களும் விடுபட்டிருக்கலாம்; கம்பன் ஆய்வடங்கல்போன்று ஆய்வு நூல்களுக்கும் கட்டுரைகளுக்கும் அவற்றின் உள்ளுறை பற்றிய விளக்கம் அளிக்க இயலவில்லையே எனும் குறைபாடுகளும் மனத்தை அரிக்கின்றன.

காப்பியப்புனைதிறன் (ச.வே.சுப்பிரமணியன்), காப்பியங்களில் மகளிர் (சரளா இராஜகோபாலன்), காப்பியங்களில் மயில் (பாக்யவதி சங்கரலிங்கம் வெளியிடப் படாத முனைவர் பட்ட ஆய்வேடு), காப்பியங்களில் உவம உருபுகள் (பா.முருகேசுவரி, வெளியிடப்படாத முனைவர் பட்ட ஆய்வேடு) என்பன போன்ற கம்பனை உள்ளடக்கிய பொதுவான காப்பிய ஆய்வுகளையும் உட்படுத்தும் பொழுதுதான் கம்பன் தகவுக்கு ஒரு முழுமை கிடைக்கும் என்ற உணர்வும் எழுகிறது.

ஆகவே அறிஞருலகம் ஒரு நூற்றாண்டில் ஒரு கவிஞர் பெற்றுள்ள பெருமைகளை அளவிடுதற்கு இந்நூல் ஒரு முன்னோடி என்றளவில் மேற்கூறிய குறைகளிலிருந்து விலக்களிக்க வேண்டுகிறேன்.

மிகச் சிறந்த கம்பனாய்வுகள் பல இருபதில் தோன்றி இருபத்தொன்றின் ஆய்வுகளுக்கு வழிகாட்டியாயுள்ளன; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கம்பன் பணி மிகுந்த பாராட்டிற்குரியது; வான்மீகியாரையே தமிழராகக் கருதுமளவிற்குத் (தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை, 1966) தமிழர் உள்ளங்களில் கம்பர் கோலோச்சுகிறார்; பெண் கல்வி சிறந்துள்ளமையால் பெண் ஆய்வாளரும், பேச்சாளரும் ஓரளவு அறிய வருகின்றனர்; கம்பர் புகழ் பரவலுக்குக் கல்வியாளரை விட கம்பன் கழகங்களின் பணியே மிகுதியானது; அண்மைக் காலத்தில் கல்வியாளரின் கம்பனாய்வுப் பணியில் தொய்வு காணப்படுகிறது; கம்பரைப் பாட்டுடைத் தலைவராய் ஏற்று கம்பரந்தாதி (சிவஞான சுவாமிகள்), கம்பர் பிள்ளைத்தமிழ் (நா.மீனாட்சி சுந்தரம், முத்து சம்பந்தன்), கம்பர் திருப்பள்ளி எழுச்சி (க.கி. இராமசாமி) எனப் புதுப்படைப்புகள் எழுவது ஒரு நிலையாக, அவரைத் தெய்வமாகவே ஏற்றுக் கொண்டுள்ள பிறிதொரு நிலைப்பாடு (கம்பன் மலர் வணக்கம்– கம்பன் அடிப்பொடி) இருபதாம் நூற்றாண்டிற்குரிய பெருஞ் சிறப்பு; இந்நூற்றாண்டிலும் தமிழர் தம் கம்பன் பணி சிறந்தோங்கும் என்பன இந்நூல் தரும் பொதுக்கருத்துகளில் சில.

முயற்சியும் உழைப்பும் இருந்தால் போதாது; தூண்டுகோல் மிக மிகத் தேவையாகும். 'இருபதில் கம்பன்' வெளிவர என்னை அவ்வப்போது தூண்டி உற்சாகப் படுத்திக்கொண்டே இருந்தவர்கள்; இறைவன் எனக்களித்துள்ள பொக்கிஷங்களுள் இருவர்; சில ஆண்டுகளாகச் செய்ய வேண்டும், செய்ய வேண்டும் என்று கூறிக் கொண்டே இருந்த என்னை அதற்கொரு முற்றுப்புள்ளியிட்டு இன்று நூலாக்கமாக அதனை மாற்றித் தந்த

பெருமையாளர்கள் என்றும் என் வணக்கத்திற்கும் போற்றுதற்கும் உரிய பேராசிரியப் பெருந்தகை டாக்டர் ச.வே.சுப்பிரமணியம் அவர்களும், கம்பன் கண்ட நட்பு உறவாக விரிவடைந்தது போல் நட்போடு நெருங்கி இன்று உடன்பிறப்பாக உயர்வுகாட்டும் எனதருமை தமக்கை அன்னிதாமசு அவர்களும் ஆவர். கல்வியரங்கில் எனக்குக் கிடைக்கும் பாராட்டுக்களையெல்லாம் தமக்கே கிடைத்தன போல் எண்ணிப் பூரித்து வாழ்த்தி மகிழும், வள்ளுவர் உணர்த்தும் அன்பு நெஞ்சங்கள் எனக்கு வாழ்த்துரையும் அணிந்துரையும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். இவர்தம் அன்பிற்கும் வாழ்த்திற்கும் தலை வணங்குகின்றேன். இந்நூலுக்குப் பிள்ளையார் சுழியிட்ட கம்பனடிசூடி பழ.பழனியப்பன் அவர்களும் இங்கு நன்றியுடன் நினைத்தற்பாலராவார். முதலாவது அனைத்துலக இராமாயண, மகாபாரத ஆராய்ச்சி மாநாட்டின் (கோலாலம்பூர் 1999) ஆய்வுக்கட்டுரைச் சுருக்கங்களை அனுப்பி உதவிய, மலாயாப் பல்கலைக்கழக, இந்திய ஆய்வியல்துறைப் பேராசிரியர் முனைவர் வி.சபாபதி; மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆய்வேடுகள் குறித்த பட்டியலை நிறைவு செய்ய உதவிய அதன் இலக்கணத்துறைப் பேராசிரியர் முனைவர் தூ.சேதுபாண்டியன்; நூலாக்கத்திற்குத் தேவையான உதவிகளை அவ்வப்போது அளித்துதவிய நிறுவன நூலகர் திருமதி இரா.பார்வதி; மிக்க பொறுப்புடனும் பொறுமையுடனும் நூலைச் சிறப்புற கணினி செய்தளித்துள்ள திரு.ஷ.ஜீவானந்தம்; என் விருப்பம் போல் நூலை வடிவமைத்து வெளியிட்டுள்ள அமுதநிலையத்தார் ஆகியோருக்கும் என் அன்பும் நன்றியும்.

ச.சிவகாமி

கண்டிலம் கேட்டிலம் காவியம் ஒன்று
காசினி மேலிது போற்பிறி தென்று
தண்டமிழ் வாணர்கள் உளங்களி கூரத்
தசரதன் சேய்ரகு ராமனின் காதை
அண்டரும் அமுதினைக் கைவிட்டு வினவ
அணிநலம் சுவைநலம் பாநலந் தோய
எண்டிசை போற்றநன் கியற்றிய கம்பன்
எனும் பெரி யாய்பள்ளி எழுந்தரு ளாயே

க.கி.இராமசாமி

உள்ளே

கம்பர்		17
பதிப்புகள்		52
மொழிபெயர்ப்புகள்		76
ஆய்வுகள்		95
இலக்கிய உலகில்		151
இராமாயண உலகில்		163
புகழேணிகள்		168
புகழ்ப்பூக்கள்		187
ஆய்வுக்களங்கள்		193
நிறைவுரை		197
பின்னிணைப்பு –	கம்பன் ஆய்வுகள்	
	நூல்கள்	200
	நூலாசிரியர் வரிசை	228
	தேர்ந்த கட்டுரைகள்	232
	ஆய்வேடுகள்	252

கம்பர்

'கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்று பாட்டுக்கொரு புலவன் பாரதியை மார்தட்டச் செய்த (பாரதி பாடல்கள் – ஆய்வுப் பதிப்பு, பாடல் 240:3) பெருமையுடையது கம்பராமாயணம். இந்திய மொழிகள் அனைத்திலும் புகழ்பெற்று இந்திய இலக்கியமாகத் திகழும் சீருடையது இராமாயணம். அதன் படைப்பாளர் எண்ணற்றோருள்ளும் முதன்மைச் சிறப்புறும் மூவருள் (கம்பர், வால்மீகி, துளசிதாசர்) முன்னிற்பவராகத் தமிழில் இராமகாதை படைத்த கம்பர் மாண்புறுகிறார். கி.பி. பத்தாம் நூற்றாண்டினராகக் கருதப்படும் கம்பர் தம் இராமாயணத்திற்கு இட்டபெயர் 'இராமாவதாரம்' என்பதாம். எனினும் 'கம்பன்' என்றாலே அது அவர் படைத்த இராமாயணத்தைக் குறித்து நிற்றல் அதன் புகழுக்கு ஓர் விளக்கம்.

தமிழில் விளங்கும் தன்னிகரற்ற இலக்கியப் படைப்புகளின் முன்வரிசையை அணிசெய்வது; தமிழின் முதல் ஆய்வுநூலைப் பெற்ற பெருமைக்குரியது; கல்வியாளர், பொதுமக்கள் என இருபாலாராலும் போற்றப்படும் சிறப்புடையது; எதிர்ப்பியக்கம் ஒருபுறம் நிலவிக் கொண்டேயிருப்பினும் தமிழகத்திலும் அதற்கப்பாலும் மிக்க புகழுடன் விளங்குவது; எண்ணற்ற வழிநூல் கண்டது; கழகங்கள் வழி தமிழுள்ளங்களைக் கொள்ளை கொண்டது; பின் தோன்றல்கள் பலருக்கும் வழிகாட்டியானது; தோற்றம் முதல் இன்றுவரை தனக்கென ஒரு மெய்யன்பர் கூட்டத்தைப் பெற்றிருப்பது; இவற்றிற்கெல்லாம் மேலாக எண்ணற்ற ஆய்வுகளைப் பெற்று காலந்தோறும் தமிழன்னைக்கு விருந்து படைப்பது எனப் பலவாறான சிறப்பிற்குரியது கம்பராமாயணம். கம்பரைத் தனிப்பெரும் புலவராய் ஓங்கச் செய்த கூறுகளுள் சிலவற்றையும், அவரை இன்னார் என வெளிப்படுத்தும் கூறுகளையும் கம்பராமாயணத்தின் வழி அறிவிக்க முற்படுகிறது இக்கட்டுரை.

கம்பராமாயணம்

கம்பர் தமக்கு மூலநூலாக வால்மீகியின் இராமாயணத்தைச் சுட்டிடினும், தமது படைப்பை அதன் மொழிபெயர்ப்பாக மொழிந்திடினும் (10), ஆய்வாளர் வழி நூலாகவே அதனைக் கொள்வர். தமிழில் எழுந்துள்ள முதனூல், மூலநூல் தான் கம்பராமாயணம் என வலியுறுத்துவோரும் உண்டு. (கு.திருமேனி, கம்பனுக்குக் கதை கொடுத்தவர் வான்மீகரா?) எனினும் கம்பர் தமது காப்பியம் மொழிபெயர்ப்புத்தான் என்பதை,

அன்னாரினொடு போயின தானை அளந்து கூற
என்னால் அரிதேனும் இயம்பு வான்மீகன் என்னும்
நல்நான் மறையான் அது நாற்பது வெள்ளம் என்னச்
சொன்னான்; பிறர் யார் உணர்ந்து கொடுக்க வல்லார் (8025)

என்பது போன்று வெளிப்படுத்துகிறார். ஆறு காண்டங்களில் 118 படலங்களில் 10368 பாடல்களுடன் 1293 மிகைப்பாடல்களையும் இது கொண்டுள்ளது (சென்னை கம்பன் கழகப் பதிப்பு, 1976).

கம்பர் தமது இராமாயணத்தைத் தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் மாற்றி இராமகாதைக்குப் புத்துயிர் தந்து மெருகூட்டினார் என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை. இத்தன்மைக்குத் தமிழகத்தில் இராமாயணம் தொடர்பாக வழங்கப்படும் சுமார் 100 வழக்குக் கதைகள்; 35 நாட்டுப்புற நாடகங்கள், கதைப் பாடல்கள்; 80 பழமொழிகள்; 20 விடுகதைகள்; அவருக்கு முன்னெழுந்த தமிழ் இராமாயணங்கள்; பிற இலக்கியங்களில் அமைந்த இராமாயணப் பதிவுகள் என்பனவும் துணைநிற்கின்றன. எனவேதான் கம்பராமாயணம் மொழிபெயர்ப்போ, தழுவலோ அன்று மூலமே எனும் கருத்து ஆதரவு பெறுகிறது. தமிழ் இலக்கியத்திற்குக் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவிலேயே இலக்கணம் வகுத்த தொல்காப்பியத்தின் விதிமுறைகள் அதிலும் பின்பற்றப்பட்டிருப்பது இக்கருத்திற்கு மேலும் வலுசேர்க்கிறது.

கம்பராமாயணத்திற்கு எதிரான பிரச்சாரத்தைத் திராவிட இயக்கத்தார்த் திட்டமிட்டு உருவாக்கி வளர்த்த போதும், கம்பரசத்தை நஞ்சாக்கியளித்த போதும், தீபரவட்டுமெனத் தாண்டவமாடிய போதும், எதிர்நூல் படைத்து (இராவண காவியம்) இன்புற்ற போதும் அவர்களது நோக்கம் எதிர் விளைவே கண்டது.

ஓலை எரியும் தாளெரியும்
உள்ளத்து எழுதி வைத்து நிதம்
காலை மாலை ஓதுகவி
கனலில் வெந்து கரிந்திடுமோ?

எனும் கவிமணி தேசிக விநாயகம் கூற்றே உண்மையானது; நிலையானது. இன்று தமிழகம் மற்றும் அயல்நாடுகளில் தோன்றியுள்ள சுமார் ஐம்பது கம்பன் கழகங்கள் அதன் பெருமையைப் பட்டிதோறும் பறைசாற்றுகின்றன. எதிர்ப்பு அலைகளை அடக்கி, தடைச்சுவர்களைத் தகர்த்து இன்று தமிழகம் கம்பக் கடலாடிக் களிக்கின்றது. தமிழ்க்கவிச்சக்கரவர்த்தியாக, உலகப் பெருங்கவிஞருள் ஒருவராகப் போற்றப்படும் கம்பரின் இவ் இமாலய வெற்றிக்கு அவரது படைப்புத் திறன் முதற் காரணமாகிறது.

கம்பர் தம் காப்பியத்துள் ஆங்காங்கே கவிதைக்கும் கவிஞருக்கும் உவமை, வருணனை வழி இலக்கணம் காட்டுகிறார். அவையனைத்தும் அவர் படைப்பிற்கும் பொருந்தி நிற்றலை உரையாசிரியரும் (உ.வே.சாமிநாதையர்), திறனாய்வாளரும் (ச.வே.சுப்பிரமணியன், கம்பன் இலக்கிய உத்திகள், பக்.5–27) வெளிப்படுத்தியுள்ளனர். கவிதைப்

பண்பிணை, இயல்பிணை இராமனின் அம்பாக வடித்துக் காட்டும்,

நல்இயல் கவிஞர் நாவில் பொருள் குறித்து அமர்ந்த நாமச்
சொல்என, செய்யுள் கொண்ட தொடை என தொடையை நீக்கி
எல்லையில் சென்றும் தீரா இசைஎன பழுது இலாத
பல் அலங்காரப் பண்பே காகுத்தன் பகழி மாதோ (7293)

எனும் பாடலை இவண் சான்றாக்கலாம். தமிழ்க் கவிக்குத் தானே இலக்கணமும் இலக்கியமுமாய் நின்று சிறக்கிறது கம்பராமாயணம்.

படைப்பு நோக்கம்

அனுமன், பரதன், இலக்குவன், குகன், தயரதன் போன்று இராமன் மீது கம்பர் கொண்ட மாளாக் காதலே இக்காப்பியப் படைப்பிற்கு அடிப்படை நோக்காக, இலக்காக அமைகிறது. இதனை அவரின் அவையடக்கப் பாடல்கள் மிகத் தெளிவாக (4,6) இயம்புகின்றன. கம்பரின் ஆளுடை நாயகனாக இராமன் சுட்டப்படுதலும் (8627) இதனைக் குறிக்கும்.

சைவ, வைணவ ஒருமைப்பாட்டினை வலியுறுத்த இக்கதையைக் கம்பர் தேர்ந்தார் எனக் கொள்வதற்கும் பேரிடன் உண்டு. 'அரன் அதிகன்; உலகு அளந்த அரி அதிகன் என்று உரைக்கும் அறிவிலோர்க்குப் பரகதி சென்று அடைவு அரிய பரிசே' (4470) என இருவருக்குமிடையே வேற்றுமை பாராட்டுவாரை அறிவிலார் என்றும் அவர்கள் முக்திநிலை பெறுதல் அரிது எனவும் விளம்புகின்றார். 'மாமாயக் கூத்தனாக' இராமனைச் சுட்டி (7584) வருணனையிலும் இவர் தம் இணைவைக் காட்டி இன்புறுத்துகிறார். நீறு அணிந்த கடவுளாகிய சிவன் போன்று வெளுத்திருந்த மேகம் கடல் நீர் மேய்ந்தபின் திருமகளைத் தன் மார்பில் உடைய திருமாலின் நிறத்தைப் போன்று மாற்றம் கொண்டதாகக் (13) கூறுகிறார். இராமனின் அவதாரநிலையிலும் இவ்விணைவு,

மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த காரணன் – கைவில் ஏந்தி
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி
வந்தான் (5884)

என வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிவமைந்தரின் புகழும் பலவாறாகப் பேசப்பட்டுள்ளது. 'மயில் ஊர் கந்தனை அனையவர் கலை தெரி கழகம்' (79) என இளைஞரும், 'முருகற் செவ்வியர்' என இராம இலக்குவரும் (3774) உவமிக்கப்படுதல்; இலக்குவன் இளங்குமரனாதல் (7512), முருகன் செவ்வியான் ஆகப் பரதன் சுட்டப்படுதல் (2148), கும்பகருணனை எதிர்த்து நிற்கும் அங்கதனை, 'குமரன் உற்ற

சீற்றமும் தானும் நின்றான்' எனக் காட்டுதல் (7459); வெந்திறல் வேல் கொடு சூர் ஆடும் வீரச் சுந்தரன் (3600); முருகன் தந்த அத்தளிரியல் பாகத்தான் (3917) என்பன போன்று முருகவேளும், அரிதாக ஐங்கரக்கரி (7879) என விநாயகப் பெருமானும் சிறப்பிக்கப்படுதல் இக்கருத்துக்கு அரணாகும்.

கம்பரைச் சைவ சமயம் சார்ந்தவராகக் கருதுதலையும், காப்பியத்துள் சிவன் பெறுமிடத்தைத் தனிப்பெரு நூலாகத் தொகுத்து விரித்துரைத்துள்ளதையும் (ராய.சொக்கலிங்கம், கம்பனும் சிவனும்) கூட இவண் இணைத்து நோக்கலாம்.

காப்பியக் கொள்கைகள் (பாவிகம்)

இலக்கியம் வாழ்க்கைக்குப் பயனுடையதாய் அமைய வேண்டும் என்பதில் கம்பர் மிகுந்த அக்கறை கொண்டவராகக் காணப்படுகிறார். வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அடிப்படைப் பண்புகள் சிலவற்றைத் தம் காப்பியக் கொள்கைகளாக்கிக் கதை நெடுகிலும் அவற்றைப் படரவிட்டுள்ளார். காப்பியத்தின் உயிர் நாடியாக அவை திகழ்கின்றன.

1. அறம் : அறவழி நிற்றலையே வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொளல் வேண்டும் என்பதை,

அறம் வெல்லும் பாவம் தோற்கும் (4929, 9574)
வெல்லாது அறத்தினைப் பாவம் (8234)
அறத்தினைப் பாவம் வெல்லாது (9109)

எனப் பன்னிப்பன்னிக் கூறுகிறார். இதனை வலியுறுத்துவதற்காக இது தம் கருத்து மட்டுமல்ல அறிஞர் அறிவுரையுமாம் என்பதை 'அறம் தலை நின்றார்க்கு இல்லை அழிவு எனும் அறிஞர் வார்த்தை' (9173) என உணர்த்துகிறார். அறமே முடிவற்றது, என்றும் நிலையானது என்பதனை 'அறத்திற்கு ஈறு உண்டோ' (5136) என வினவி 'அறமும் ஈறு இன்றால்' (5138) எனப் பேசுகிறார். 'ஊனம் இல் அறநெறி' (126) எனப் புகழ்கின்றார்.

முதன்மைக் கதை மாந்தர்களை அறத்தொடு தொடர்புபடுத்தியே காட்டுகின்றார். 'மண்ணிடை யாவர் இராகவன் அன்றி மாதவம் அறத்தொடும் வளர்த்தார்?' (97); 'தொல் அறச் சான்று என நின்றவன்' (10267) எனப் பெருமிதம் கொள்ளும் கம்பர் அவனை 'அறம் அன்னான்' (4692) 'இறையவன் இராமன் என்னும் நல் அற மூர்த்தி' (9166), அறம் வளர்க்கும் கண்ணாளன் (9903), அறம் உன்னுவான் (9874) எனப்பலபட பேசுகிறார். இலக்குவனை, 'அறத்தின் இன்னுயிர் அனையவன்' என்றும் 'அறநிலை வழாதாய்' (8521) எனவும் காட்டுகின்றார். அனுமனை அறவன் (5512) எனப் போற்றுபவர், சீதையை அறம் கொள் கொம்பு (5860) ஆகவும்

சுமித்திரையை, 'அறம் தானே என்கின்ற அயல் நின்றாள்' (2369) ஆகவும் புகழ்கின்றார். அறங்கள் நாறும் மேனியரான (3937) இராம இலக்குவரைக் கும்பகருணன், அறப்பெருந்துணைவர் (7404), அறம் என நின்ற நம்பர் (7405), அறம் தரு சிந்தையோர் (8840) எனப் பாராட்டுவதும் சுட்டத்தக்கது. எதிர்த்தலைவன் இராவணன் கூட சீதையை 'அறம் தரும் செல்வம் அன்னீர்' (7646) என விளிப்பதும் இலக்குவனை இராவணனிடம் அவன் ஒற்றன் சாரன் என்பான், 'அறக்கண் அல்லது ஒரு கண் இலன் ஆகி' என அறிமுகப்படுத்துவதும் (6881) நோக்கத்தக்கன. 'அறம் துணை ஆவது அல்லால் அரு நரகு அமைய நல்கும் மறம் துணை ஆகி, மாயாப் பழியொடும் வாழமாட்டேன்' (9105) என வீடணன் உரைப்பதும் உன்னத்தக்கது.

எதிர் நிலை மாந்தரான அரக்கரை, 'அறங்கொளாதவர்' (3030) 'அறத்துறைத் திறம்பினர்' (4248), 'அறத்தைத் தின்று அருங் கருணையைப் பருகி வேறு அமைந்த மறத்தைப் பூண்டு, வெம்பாவத்தை மணம் புணர் மணாளர்' (9304) என ஏசுகிறார். 'அறம் தலை நின்றவனாக' இராமனைச் சுட்டியவர் (6381) 'அறம் தலை நின்றிலாத அரக்கன்' என இராவணனைக் (3532) குறிக்கின்றார். இராமன் அழகில் தன்னை இழந்த சூர்ப்பணகை அவனைக் கவர்வதற்காகத் தன்னை, 'ஆய்வுறு மனத்தேன் ஆகி, அறம் தலை நிற்பது ஆனேன்' என இயம்புவதும் எண்ணற்பாலது.

அறத்தின் பெருமையை,

ஆய்வினை உடையவர் ஆகி, அறம் பிழையாதார்க்கு எல்லாம்
ஏய்வன நலனே அன்றி, இறுதி வந்து அடைவது உண்டோ?
மாய்வினை இயற்றி, முற்றும் வருணன் மேல் வந்த சீற்றம்
தீவினை உடையார் மாட்டே தீங்கினைச் செய்தது அன்றே
(6668)

எனப் பேசுகிறார். அறத்தின் வழி நிற்போர்க்கு எப்பொழுதும் நன்மையே கிடைக்கும் என்பதனை வருணன் மீது விட்ட இராகவன் அம்பு அவன் மீது குற்றமிலாமையால் அவனை விடுத்து தீவினை புரிந்தார் பக்கமே சென்று தீங்கிழைத்ததன் வழி நிறுவுகிறார். 'தீயது தீயவர்க்கு எய்தல் திண்ணம்' (5106) என்றும் வலியுறுத்துகிறார். மாயமான் குரல் கேட்டு இராமன் பால் சீதை துரத்த இலக்குவன் அவள் பாதுகாப்பிற்குச் செய்வது அறியாது கையறுநிலையில், 'அறம் தனால் அழிவு இலது ஆகல் ஆக்கலாம்' (3336) என மனந்தேறிச் செல்வது கொண்டும் விளக்குகிறார்.

அறம் எது என்ற வினாவிற்கும் ஆங்காங்கே விடை தருகிறார் கம்பர். பிறருக்கு உதவுதல் பேரறம் எனும் கருத்தை 'உடைந்தவர்க்கு உதவான் ஆயின் உள்ளது ஒன்று ஈயான் ஆயின் அடைந்தவர்க்கு அருளான் ஆயின் 'அறன் என் ஆம்?' (6572) என்பதில் புலப்படுத்துகிறார். அறத்துள்

ஈகை முதலிடம் பெறுதலை 'ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர் ஈட்டி வைத்த பாவ பண்டாரம்' (6857) போல்வனவற்றில் (51,67,159) காட்டுகிறார். முதல்நாள் போரில் தோல்வி கண்ட இராவணனுக்கு இராமன், அறத்தினால் அன்றி அமரர்க்கும் அரும்சமம் கடத்தல் மறத்தினால் அரிது என்பது மனத்திடை வலித்தி (7266) என அறிவுறுத்துவதும் படையிலானை 'இன்று போய் போர்க்கு நாளைவா' (7271) எனப் போர் அறம் காட்டுவதும் எண்ணற்பாலன. மற்றும் இந்திரசித்து மீது போர் தொடுக்கச் செல்லும் இலக்குவனுக்கு,

> *தம்பியைத் தழுவி, 'ஐய தாமரைத் தவிசின் மேலான்*
> *வெம்படை தொடுக்கும் ஆயின், விலக்குவது அன்றி, வீர*
> *அம்பு நீதுரப்பாய் அல்லை; அனையது துரந்த காலை,*
> *உம்பரும் உலகும் எல்லாம் விளியும், அஃது ஒழிதி' (8936)*

என நினைவூட்டுவதும் நவிலற்பாலது. தன் பகை அழிவிற்காகப் பிறரைப் பலியிடல் கூடாது எனும் நல்லறம் இங்கு உணர்த்தப்படுகிறது.

காப்பியம் இரு அரச இனத்தவரிடையே நிகழும் போரினைக் குறிப்பதாதலின் அரசியலறமும் பெரிதும் பேசப்படுகிறது. தன்னுயிர் போன்று மன்னுயிர் காக்கும் தயரதன் அவன் நாட்டு மக்கள் எல்லாம் உயிராக உறைவது ஆகிய உடலாகச் (177) சிறப்பிக்கப்படுகிறான். சிறந்த ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் அவன் 'வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர் செய்' எனக் காத்து இனிது அரசு செய்கின்றான் (179) என்பார். இராமனுக்கு முடிசூட்டு நாள் குறித்த வேளையில் தயரதன் வேண்டுதல் படி வசிட்டன் இராமனுக்கும் (1413–1427), தன்னால் அரசனாக்கப்பட்ட சுக்கிரீவனுக்கு இராமனும் (4121–4131) அரசியல் அறம் உணர்த்துதல் குறிக்கத்தக்கது.

இலக்கியம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக நிற்றல் வேண்டும் என்ற கோட்பாட்டினரான கம்பரிடம் வாழ்வியல் அறம் மலிந்து நிற்றல் இயல்பே. நல் வாழ்க்கையறத்தைக் கம்பர் தமது கோசலத்தைக் காட்சிப்படுத்துகையில் காட்டுகிறார். தன்னைக் கோசலை ஐயுறுகின்றாளோ என எண்ணிய பரதன் உரைக்கும் வஞ்சினம் அறத்திற்கு எதிரான மறத்திற்கு, ஒவ்வாத வாழ்க்கை நெறிக்கு நீண்ட பட்டியலிடுகிறது (2199–2217). கைகேயியின் செயலை அவன், 'அறம் தனை வேரறுத்து அருளைக் கொன்றனை' (2149) எனக் கண்டிப்பதும் எண்ணத்தக்கது. பிறன்மனை நயத்தலாகிய பாவம் மனையறம் ஆகாது என்பதற்கு 'அறம் தொலைவுற சீதையை மனத்து அடைத்த' (9937) இராவணனே பெருஞ்சான்றாகிறான்.

அறவழி நின்றோர் வெற்றிபெறும் பொழுது அவ்வறமே கூத்தாடுவதாகக் காட்டிக் களிக்கின்றார் கம்பர். மறம் புரியும் இராவணன்

நாட்டில் இனி அறம் தழைக்கப்போவதை, இலங்கையில் அனுமன் சீதையைத் தேடும் பொழுது நிலவு தோன்றுவதன் வழி உணர்த்துகிறார்.

தீண்ட அருந் தீவினை தீக்கத் தீந்து போய்
மாண்டு, அற உலர்ந்தது மாருதிப் பெயர்
ஆண்தகை மாரி வந்து அளிக்க, ஆயிடை,
ஆண்டு அறம் முளைத்தென முளைத்தது இந்துவே (4886)

என்பது அப்பாடல். சம்புமாலியை வதைத்த அனுமனைக் கண்டு, 'இன்று இங்கு இவனாலே சரிந்தது அரக்கர் வலி' என்று எண்ணி அறமும் தளிர்த்ததால்' (5598) என இன்புறுகிறார். முளைத்து தளிர்த்த அறம் கூத்தாடி மகிழ்ந்ததைக் கும்பகருணனின் வீழ்ச்சியில் 'அறத்தொடு வேதங்களும் கூத்தாடின' (7618) என இணைப்பார்.

அறத்தை மீறுவோரின் நிலையை, முதல் நாள் போரில் தோல்வி கண்ட இராவணனிடம்,

'அறம் கடந்தவர் செயல் இது' என்று உலகு எலாம் ஆர்ப்ப
நிறம் கரிந்திட, நிலம் விரல் கிளைத்திட நின்றான்
இறங்கு கண்ணினன், எல் அழி முகத்தினன், தலையன்
வெறுங்கை நாற்றினன், விழுதுடை ஆல் அன்ன மெய்யன்
(7265)

எனச் சுட்டுவார். விழுதுகள் பல பரப்பி நிற்கும் ஆலமரம் போன்ற பருத்த உடலும் வலிமையும் கொண்ட இராவணன், உடல் கறுத்து, ஒளி இழந்த முகத்தினனாய், தலைகவிழ்ந்து, கால்களால் நிலத்தில் கோலமிட்டு வெறுங்கையுடன் நாணிச் செயலிழந்து தன் பகைவன் முன் அவமானப்பட்டு நிற்கிறான். அறம் பிழைத்தோரின் முடிவு இதுதான் என உலகம் ஆரவாரம் செய்கிறது என்பதாக இக்காட்சி அமைகிறது.

இங்கு இராவணன் ஆலமரமாகச் சுட்டப்படுதலும் பொருள் பொதிந்ததாகக் காணப்படுகிறது. ஆலமரம் நீண்ட நெடுங்காலம் வலிமையுடன் வாழும் ஒன்றாயினும் அதன் கீழ் பிற தழைக்க முடியாதது போல அவனின் கீழ்யாரும் உயர்வடைய முடியாது; அறத்தைக் கொன்ற மறத்தின் பின் செல்வோருக்கும் வாழ்வில்லை என்பதனை இது தெளிவாக்குகிறது. இராவணனுடன் இணைந்த அனைவரும் அவனின் முன்பே முடிதலும் நோக்கத்தக்கது. அறம் பிழைத்தோரைவிட, அவருக்குத் துணை நின்றோர் முதலில் தண்டிக்கப்படுவர் எனும் கருத்தையும் உள்ளுணர்த்துகிறது. 'வாழ்மை தான் அறம் பிழைத்தவர்க்கு வாய்க்குமோ' (6374) என அறமறந்தார் வாழ்க்கை அவலமும் அழிவுமே என்பதை வலியுறுத்துகிறார்.

2. கற்பு : அறன் வலியுறுத்தலுக்கு இணையாகக் கம்பரால் போற்றப்படும் ஒழுக்கமாகக் கற்பு அமைகிறது. காப்பியத் தொடக்கமாக அமையும் முதற் பாடலே (12) கோசல மகளிரின் கற்பைப் புகழ்ந்துரைக்கக் காணலாம். ஆணாதிக்கத்தின், உச்சத்தைத் தமிழ்ச் சமுதாயம் எட்டிய காலச் சூழல் கம்பர் காலம் போலும் என எண்ணத்தக்க வகையில் கற்பு பற்றிய அவரது விளக்கங்களும், காட்சிகளும் அமைகின்றன. கற்பு எனும் திண்மை (10017), கற்பு எனும் அவ்வரம்பு (2176), கற்பு எனும் இருஞ்சிறை (3459), திட்டியின் விடம் அன்ன கற்பு (7351) எனக் கற்பு பேசப்படுகிறது. கற்பு எனின் மன உறுதி என்பதை, "நமனை இன்று இவன் கண்ணிடை நிறுத்துவென் என்னும் கற்பினாள்" (7576) என்பதிலும் அறியலாம். பெண்களிடம் உள்ள மிக்க வலிமையுடைய பண்பு கற்பு; அதுவே அவர்களது பெருமைக்கு, புகழுக்கு, பண்பு அளவீட்டிற்கு அளவு கோலாக அமைகிறது; பெண்ணுக்கு வேலியாகவும் நிற்கிறது எனக் கருதுகிறார் கம்பர். எனவேதான் கற்பினைக் கண்ணிலேயே நஞ்சினைக் கக்கும் திட்டிவிடம் எனும் பாம்பிற்கு உவமையாக்குகிறார். கற்பினை எரியோடு இணைத்து கற்பு எனும் பொங்கு வெந்தீ (10042); தீயைச் சுட்டது ஓர் கற்பு எனும் தீயினாள் (5840) எனக் காட்டுவதுடன் அதனை, 'கனிந்து உயர் கற்பு எனும் கடவுள்' (10040) எனத் தெய்வத்தன்மை பொருந்தக் காட்டுவதும் எண்ணற்பாலன.

'குலம் பொறை கற்பு இவை சுமந்த கோசலை' (2196); 'மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்' (1560) என்பனவற்றால் பெண்ணின் இன்றியமையாப் பண்பாக இதனை உணர்த்துகின்றார். 'அரியை ஈன்ற ஒப்பு எழுத ஒண்ணாத கற்புடையாள்' (10175), 'கற்பு உறுத்திய கற்புடையாள்' எனக் கோசலையும் (1620) அருந்ததி கற்பின் (5207) என அருந்ததியும் கற்பிற்கு எடுத்துக்காட்டாகின்றனர். தம் வாழ்க்கைத் துணைவரின் சொற்படி நிற்றலே பெருங்கற்பு என்பதை வலியுறுத்துவதாக, 'தங்கள் நாயகரின் தெய்வம் தான் பிறிது இலை என்று எண்ணும் மங்கைமார் சிந்தை போல் தூயது' (408) என்பது அமைகிறது. தன் பிரிவினை ஏற்க மறுக்கும் கோசலையிடம் இராமன், 'அருங் கற்பினோய் பொய்த்திறத்தினன் ஆக்குதியோ... நம் வேந்தனை நீ' (1619) எனக் கேட்பதிலும் இதனை அறியலாம். இத்தகு அருங் கற்புடை மானமங்கையரால் (9947) காவல் திண் கற்பு அமைந்தோரால் (2858) தான் நாட்டில் அறமும் மழையும் தவறாது பொழிவதாகவும் கம்பர் கருதுவதை, 'மாதரார் அற்பின் நின்றன அறங்கள் அன்னவர் கற்பின் நின்றன காலமாரியே' (90) என்பதில் புலப்படுத்துகிறார். கற்புடை பெண் அருங்கலம் (10257) என்பது அவரது துணிபு.

கதைத் தலைவி சீதையைக் கற்பினாள் (3351), அருங்கற்பினாள் (5884), கேடு அருங் கற்பினாள் (5767), வான் உயர் கற்பினாள் (6039),

மறு இல் கற்பினாள் (3357, 5333), நவையில் கற்பினாள் (5109), படி ஏழும் தலை மேல் கண்ட கற்பினாள் (6065), அலகில் கற்புடை சானகி (7350), கற்புடையவள் (6274), தருமக் கற்பின் தெய்வம் (8903) என்று இயம்பி மகிழும் கம்பர் அவளை, 'தேவர்க்கும் தேர்வு அரிய தெய்வக் கற்பின் பேர் மகள்' (9927); கற்பின் அரசி (3649,10011), பொருஇல் கற்புடைத் தேவி (4513), கற்பு அழியாக் குலமகள் (5061), கற்புத்தவம் (5140), கற்பின் காவலோ (5143), கற்பினுக்கு அணி (9994), கற்பின் வாழ்வு (10012) எனப் பலவாறாகப் பாராட்டியுரைப்பதில் பெரு விருப்பு காட்டுகிறார்.

கதைப்போக்கில், காப்பியப்படைப்பில் தாம் கற்பிற்கு அளித்துள்ள முதன்மைச் சிறப்பைத் தவறாது பலவிடங்களிலும் சுட்டிச் செல்வதும் இங்கு நவிலத்தக்கதாகும். இரவில் காட்டுக்குள் புகுந்த சீதை, இராம இலக்குவரைக் குறிப்பிடும் பொழுது,

தையல் தன் கற்பும், தன் தகவும், தம்பியும்
மையறு கருணையும் உணர்வும் வாய்மையும்
செய்ய தன் வில்லுமே சேமமாகக் கொண்டு
ஐயனும் போயினான், அல்லின் நாப்பணே (1886)

எனப் பாடுகிறார். இங்கு இரவுப் போதில் அவர்களுக்குத் துணையாயவற்றுள் சீதையின் கற்பினை முதலில் சுட்டியிருப்பது நோக்கத்தக்கது. இதுபோன்றே சீதையைத் தேடி இலங்கை சென்ற அனுமனை, 'ஆயிடை அணங்கின் கற்பும், ஐய நின் அருளும், செய்ய, தூய நல் அறனும் என்று இங்கு இனையன தொடர்ந்து காப்ப' (6044) எனக் காட்டி இங்கும் சீதையின் கற்பினை முன்னிறுத்துகிறார். மட்டுமின்றிச் சீதையை, 'வினைகளைக் கற்பின் வென்ற விளக்கு' (7635) எனவும் பாராட்டுகிறார். கற்பிற்கும் எரிக்கும் உள்ள தொடர்பினைச் சீதையின் செயல்களிலும் வெளிப்படுத்துகிறார்.

தன்னிடம் வந்து தனக்கு உயிரளித்து உணர்வூட்டிய அனுமன் வாலில் தீ வைத்த செய்தியைக் கேட்ட சீதை, 'நீயே உலகுக்கு ஒரு சான்று; நிற்கே தெரியும் கற்பு; அதனின் தூயேன் என்னின் தொழுகின்றேன்; எரியே அவனைச் சுடல் என்றாள்' (5937). அவள் வேண்டுதல் ஏற்கப்பட்டதை அனுமனும், 'சனகன் பாவை கற்பினால் இயன்றது' (5935) என உணருகின்றான்.

இராவணனுக்கு அறமுரைக்கும் வீடணன்,

கோ நகர் முழுவதும் நினது கொற்றமும்
சானகி எனும் பெயர் உலகின் தம்மனை
ஆனவள் கற்பினால் வெந்தது அல்லது ஓர்
வானரம் சுட்டது என்று உணர்தல் மாட்சியோ (6145)

என, இலங்கை எரியுண்டது அனுமனால் அன்று; சீதையின் கற்புத் தீயினால் தான் என உறுதிபடக் கூறுகிறான். இலங்கை மாந்தரும், 'மயில் இயல் சீதை தன் கற்பின் மாட்சியால் எயிலுடைத் திருநகர் சிதைப்ப எய்தினன்' (5819) என முன் மொழிந்திருக்கக் காணலாம். பின்னாளில் மாலியவானும் இதனை ஏற்றுரைக்கக் காணலாம் (9294). இறுதியில் தன் கற்பின் தூய்மையை அவளும் எரிமூழ்கியே காட்ட வேண்டியிருந்த போது அதனை, 'தீய்ந்தது அவ் எரி அவள் கற்பின் தீயினால்' (10036) எனக் கனல்கிறார்.

அருந்ததி அனைய கற்பின் காதலாள் (3527) ஆன சீதை "அசோக வனச் சிறையில், அருஞ் சிறையின் மீட்ட நாள் இல்புகத் தக்கலை என்னில் யானுடைக் கற்பினை எப்பரிசு இழைத்துக் காட்டுகேன்?' (5247) அவ் இராமனுக்கு என ஏங்குவதும் அனுமனிடம் உடன் வரமறுக்கும் பொழுது, 'இற்பிறப்பும் ஒழுக்கும், இழுக்கம் இல் கற்பும், யான் பிறர்க்கு எங்ஙனம் காட்டுகேன்?' (5361) எனக் கவலைப்படுவதும் எண்ணத்தக்கன.

அசோகவனத்தில் சீதையைப் பார்த்த அனுமன், சீதையின் கற்பிற்கு எவ்விதக் குறையும் நேரவில்லை என்பதை 'காசுண்ட கூந்தலாள் கற்பும், காதலும் ஏசுண்டது இல்லையால்' (5136) எனத் தெளியும் பொழுது, 'கேழ் இலாள் நிறை இறை கீண்டதாம் எனின் ஆழியான் முனிவு எனும் ஆழி மீக்கொள ஊழியின் இறுதி வந்துறும்' (5139) என நவில்கிறான். சீதையின் கற்பிற்குச் சிறிது அழிவு நேரினும் இராமனின் சினத்தால் இவ்வுலகமே அழிந்துவிடும் எனும் அவன் கருத்து பெண்மையின் கற்பிற்குக் காப்பியம் அளிக்கும் சிறப்பினை வெளிப்படுத்துகின்றது. சீதையைக் கண்டு திரும்பும் அனுமனைப் பார்த்த அளவில் குறிப்பினால் உணரும் கொள்கையனான இராமன், 'வண்டு உறை ஓதியும் வலியள் மற்று இவன் கண்டதும் உண்டு அவள் கற்பும் நன்று', எனக் கொண்டதாகக் (6029) கம்பர் தருவார். மற்றும் அனுமன் 'கற்பு எனும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன்' (6035) என நவில்வதும் இணைத்துக் கருதத்தக்கது. கற்பின் வலிமையை உணர்த்த விரும்பிய கம்பர் அதன் எல்லையாய் வான் கற்பிற்கு ஒப்பு இல்லாதவளான சீதை (10097) வானவரை ஏவல் கொள்வதும் (5937) அனுமனுக்கு அழியா வரம் நல்குவதும் (5298, 10007) எனக் காட்டுகிறார்.

மானிடப் பிறவியில் மட்டுமின்றிக் கதைமாந்தராக இடம்பெறும் வானவர், குரக்கினம், அரக்கர் எனப் பிறவற்றிலும் இக்கற்பு வலியுறுத்தப்படுவதும் சுட்டத்தக்கது. வாலியின் மனைவி தாரையை விதவைக் கோலத்தில் காட்டுவதும் (4320) தம் துணைவர் மறைந்தவுடன் அவர் சிதையில் உடன் அரக்கியரும் மறைதலும் (8368), இராவணனுடன் மண்டோதரி உயிர் பிரிதலும் (9946), தன் கணவன் கரன் வீழ்த்தப்பட்டது அறிந்த அவன் மனைவி,

பெருந்திருக்கழித்தல் ஆற்றாள், கணவனைக் கொன்று
பேர்ந்தோன்
கருந்தலைக் கலத்தின் அல்லால் கடனது கழியேன்' (8407)

என வஞ்சினமுற்றிருப்பதும் இதனை உணர்த்துகின்றன. தேயும் கற்பினாள் (2757) எனச் சூர்ப்பணகையை அறிமுகப்படுத்துவதுடன் மூக்கறுபட்ட அவளைக் கண்ட இலங்கை மக்கள் 'கற்பு இழந்தாள் எனத் தமையன் கரன் இவள் உறுப்புக் குறைத்தான் போலும்' எனக்(3098) கூறுவதும் இவண் உரைக்கத்தக்கது.

பிறன்மனை நயந்த பொருந்தாக் காமமே இராவணனின் அழிவிற்கும் காப்பிய மலர்ச்சிக்கும் அடிப்படையாதலும் இங்குக் கூறற்பாலது. 'பெண்கள் பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்' (41), 'மங்கையரால் வரும் காமம் இல்லை எனின் கடுங்கேடு எனும் நாமம் இல்லையே' (1427) என்பதுடன் கன்னியை அழி செயக் கருதினோனையும், குருவின் பத்தினியை நோக்கியவனையும் பெரும் பாவிகளாகக் (2211) குறிக்கிறார். காப்பிய மையக் கரு தேவமகள் வேகவதியின் வசையுள் (சாபம்) அடங்கியிருப்பதையும் வீடணனின்,

தீயிடைக் குளித்த அத் தெய்வக் கற்பினாள்
வாயிடை மொழிந்த சொல் மறுக்க வல்லமோ?
'நோய் உனக்கு யான்' என நுவன்றுளாள் அவள்
ஆயவள் சீதை, பண்டு அமுதின் தோன்றினாள் (651)

எனும் மொழி வழி உணர்த்துகிறார்.

3. உறவுகள் : உயிரினங்கள் எல்லாவற்றின் வாழ்க்கையிலும் உறவுகள் இன்றியமையாத இடம் பெறுகின்றன. மனித வாழ்க்கை உறவுகளைச் சுற்றியே அமைந்துள்ளது. ஒருவரின் வாழ்க்கை வெற்றிக்கும் தோல்விக்கும் உறவுகளின் பங்கு குறிப்பிடத்தக்களவு சிறப்பிடம் பெறுகிறது. இல்ல உறவுகள் சமூக உறவுகளுக்கு இட்டுச் செல்வதாக, வழி நடத்துவதாக அமைதல் சமூக ஒப்புரவிற்கும் ஒருமைப்பாட்டிற்கும் மிகத் தேவை என்பதைக் கம்பர் வலியுறுத்த விரும்புகிறார். இதற்காகவே தம் காப்பியத்தைப் பத்தாயிரம் பாடல்களுக்கு மேற்பட்டதாக விரித்தார் எனவும் கொள்ளலாம். இதனைக் கதைப் போக்கில் கதை மாந்தர் வாயிலாக உணர்த்துகிறார். உறவின் பெருமையை அவர் தலைமை மாந்தரிடம் மட்டுமின்றி எதிரணியினரிடமும் மாண்புறச் செய்திருப்பது சுட்டற்பாலது. கதைத் தலைவன் இராகவனின்,

குகனொடும் ஐவர் ஆனோம் முன்பு; பின், குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம்; எம் உழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனோம்
புகல் அரும் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை
(6507)

எனும் மொழியில் புலப்படுத்துகிறார். இப்பாடலுள் கம்பர் பல கருத்துகளைப் புதைத்துள்ளார். அவற்றுள் நட்பு உறவாதல், இல்ல உறவு சமூக உறவாக விரிவடைதல், உள்ளங்கள் கனிந்து ஒன்றாதல் என்பன இங்கு விளக்கம் பெறத்தக்கன.

அ. நட்பு உறவாதல் : மேற்கண்ட பாடலில் இராமன் சுட்டும் குகன், சுக்கிரீவன், வீடணன் ஆகியோர் அவனுடைய நண்பர்களாகவே இணைகின்றனர். ஆனால் உடன் பிறப்புகளாக ஒன்றிவிடுகின்றனர். நட்பை விட உடன் பிறப்புணர்வே பெரியது, உயர்ந்தது என்பது அவரின் எண்ணம் போலும். இதனை இராமனோடு தொடர்புடையோரும், நண்பராக இணைந்தோரும் மனமுவந்து ஏற்றுக்கொள்வது மிகத் தெளிவாகக் காப்பியத்துள் விளக்கம் பெற்றுள்ளது. சான்றிற்கு இராமன் – குகன், நட்பைச் சுட்டலாம். சீதை தன் தனிமைத்துயரின் போது,

ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு, 'எம்பி நின் தம்பி; நீ
தோழன்; மங்கை கொழுந்தி' எனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி (5091)

மயங்குகிறாள். குகனைப் பரதன், 'இன் துணைவன் இராகவனுக்கு; இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்' எனக் கோசலையிடம் அறிமுகப்படுத்தியவுடன் (2367) அவள் அவர்களை, 'நைவீர் அலீர் மைந்தீர்.... களிறு அனைய காளை இவன் தன்னொடும் கலந்து நீவிர் ஐவீரும் ஒருவீர் ஆய், அகல் இடத்தை நெடுங்காலம் அளித்தீர்' (2368) என வாழ்த்துவதும் நோக்கத்தக்கன. முதலில் பரதன் மீது ஐயம் கொண்டாலும் பின் அருகில் அவனைப் பார்த்தவுடன் தெளிந்து வந்ததன் நோக்கம் அறிந்ததும் 'ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ' (2337) எனத் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறான். அவனையும் உடன் வந்தோரையும் இராமனிடம் அழைத்துச் சென்று, இராமனின் எண்ணத்தைத் (தன் உடன் பிறந்தார் நண்பருக்கும் உடன் பிறந்தார்) தனதாக்கிக் காட்டுகிறான். இராமன் சுக்கிரீவனை, 'பரதன் நீ' எனப் பாராட்டுதலும் (4401) குறிக்கத்தக்கது. தயரதன் சடாயு நட்பால், சடாயு இராம இலக்குவரைத் தன் மைந்தராகவும் சானகியை மருமகளாகவும் ஏற்று துணையிருத்தலும் (2731) அவன் மறைந்தபின் அவனுக்கு இராம இலக்குவர் ஈமக்கடன் ஆற்றுதலும் (3540) இணைத்துக் காணத்தக்கன.

இராவணன் – வாலி நட்பிலும் இராவணன் உறவு சார்பு காட்டுவதை அங்கதன் இராமனால் தூது அனுப்பப்படுகையில் காண்கிறோம். வாலியின் மைந்தன் அங்கதன் என அறிந்தவுடன் இராவணன் அவனிடம்,

உந்தை என் துணைவன் அன்றே? ஓங்கு அறச் சான்றும் உண்டால்
நிந்தனை இதன்மேல் உண்டோ, நீ அவன் தூதன் ஆதல்
தந்தனென் நினக்கு யானே வானரத்தலைமை; தாழா
வந்தனை; நன்று செய்தாய், என்னுடை மைந்த (6998)

எனத் தன் அரவணைப்பைக் காட்டுகிறான். மறைந்த நண்பனின் மகனுக்கு வேண்டியதைச் செய்வது தன் கடமை எனவும் கருதுவதை அவன் கூற்று உணர்த்துகிறது.

ஆ. இல்ல உறவு சமூக உறவாக விரிவடைதல்: இராமனின் நண்பர் பலதரப்பட்டோராக, பல சமூகத்தினராக அமைகின்றனர். குகன் ஏழை வேடுவன்; சுக்கிரீவன் உணர்ச்சி வயப்படுபவன், அதனால் தவறுகளும் செய்பவன், இராமனுடன் இணைத்து எண்ணத்தக்க அறிவோ, ஆற்றலோ கொண்டவனல்லன், நண்பனையே ஐயப்படும் தெளிவற்றவன், குரக்கினம் சார்ந்தமை இதற்குக் காரணமாகலாம்; வீடணன் மாற்றானின் தம்பி, அரக்கர் குலத்தவன். எனினும் இவர்கள் நட்பால் ஒன்றுபடுகின்றனர். நண்பர் சுற்றத்தைத் தம் சுற்றமாக ஏற்றுக்கொள்கின்றனர். தம்மால் இயன்றவழி ஒருவருக்கொருவர் துணைநிற்கின்றனர். தனித்தனியே அவரிடமமைந்த இல்லவுறவு இந்நட்பெனும் பெரும் பொருளால் வெளிப்போந்து கிளை பரப்பி மாற்றாரையும் அரவணைத்துக்கொள்கிறது. எனவே ஓரில்லம் பல இல்லங்களின் இணைவான சமூகமாக உருக்கொள்கிறது. தனது முடிசூட்டினைக் காணவந்த நண்பர்களை வழியனுப்பும் பொழுது இராமன், 'நினைவதற்கு அரிது நும்மைப் பிரிக என்றல்; நீவிர் வைப்பும் எனது; அது காவற்கு இன்று என் ஏவலின் ஏகும்' என்றான் (10363) என்பதில் இதனைக் காணலாம். இது மேலும் தெளிவுபடும் வகையில் விபீடணனின் செயல் அமைவதை எடுத்துக்காட்டாக்கலாம். அனைவரும் இராமனிடம் விடைபெற்ற பின் வீடணன்,

குகனைத் தன்பதியின் உய்த்து, குன்றினை வலம் செய்தேரோன்
மகனைத் தன் புரத்தில் விட்டு, வாள் எயிற்று அரக்கர் சூழ
ககனத்தின் மிசையே ஏகி, கனை கடல் இலங்கை புக்கான்
(10366)

எனக் காட்டுவார் கம்பர். தன் நண்பனின் நண்பர்களைத் தனக்கும் உறவாக்கி அவர்கள் தேவையையும் மனமுவந்து நிறைவேற்றும் வீடணனின் செயல் இதனால் ஏற்படும் மற்றொரு பயனான அன்பின் விரிவையும் காட்டுகிறது. தயரதன் மறைவு அறிந்து இறக்கத் துணிந்த நண்பன் சடாயு, பின் அவன் மைந்தர்க்காக அந்நினைவு ஒழித்தலும் (2717–2719) இதன்பாற்படுவதே. தன்னைச் சந்திக்க வந்த சுக்கிரீவனிடம் அவன் குடிமக்கள் நலத்தை இராமன் விசாரிப்பதும் (4396), சுக்கிரீவன் மாளிகையில் மணியாசனத்தில் அமர மறுத்த இலக்குவன் நிலை கண்டு அங்குக்

கூடியிருந்த மைந்தர், முதியோர், மகளிர் அனைவரும் நொந்து தளர்ந்ததும் (4378) இக்கருத்தை மேலும் உறுதிபடுத்தக் காணலாம்.

இ. உள்ளங்கள் கனிந்து ஒன்றாதல் : நட்பு உறுதிப்பட்டு உறவுப் பாலம் வலுவடையும் போது அங்கு இணையும் உள்ளங்கள் அனைத்தும் ஒத்த கருத்தினவாய் ஒன்றாகக் காண்கிறோம். மற்றவரின் இன்ப துன்பங்கள் அனைத்தும் தமதேயாய் உணர்கின்றனர். நட்புக்காகச் சுக்கிரீவன் தன் படை அனைத்தையும் இராம – இராவணப் போரில் ஈடுபடுத்துகிறான். சீதையை எண்ணி இராமன் மனம் தளரும் போதெல்லாம் அவனை ஆற்றுவித்தலும் அவன் பணியாகிறது (3910–3918, 6020–6022). சீதையின் பிரிவால் அவன் படும் துயர் கண்டு முதலில் அதனை முடிக்க வேண்டுகிறான் (3918). வீடணனின் உதவியின்றேல் அரக்கரின் மாயையை அழித்துச் சீதையை மீட்டல் என்பது இராம இலக்குவர்க்கு இயலாத செயல் என்பதும் உண்மையே. ஒன்றிய உள்ளத்தின் வெளிப்பாடுகளுக்கு இவை போதுமான சான்றுகளாம். இராவணனை ஒழிக்காது திரும்பிய சுக்கிரீவனின் புலம்பலைக் கம்பர்,

காட்டிலே கழுகின் வேந்தன் செய்தன காட்ட மாட்டேன்
நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்க மாட்டேன்
கேட்டிலேன் இன்று கண்டும், கிளி மொழி மாதராளை
மீட்டிலேன்; தலைகள் பத்தும் கொணர்ந்திலேன், வெறுங்கை
வந்தேன் (6933)

என்றும் ‘உயிர் சுமந்து உழலா நின்றேன்’ என்றும் பிறவாறும் காட்டுவார் (6934–6936).

உறவுகளுக்கிடையே உடன்பிறப்பு நேயம் மிக இயற்கையானதாகும். எனினும் நேயம் பகையாக மாறுதலும் உண்டு. இம்மாற்றம் அழிவைத் தரும்; உடன்பிறப்பின் ஒன்றிய அன்புநிலை உலகையே தன் கீழ்க் கொணரும் ஆற்றலுடையது என்பதைக் கம்பர் மிக அழகாகத் தம் காப்பியத்துள் அறிவிக்கிறார். தயரதன் புதல்வர் நால்வரின் ஒருவருக்கொருவர் போட்டியிடுவதாக அமையும் அன்புச்சுழல் அனைவரும் அறிந்த ஒன்றே. இதனோடு ஒப்ப பறவை, குரங்கு, அரக்கர் இனத்திலும் காட்டி உடன் பிறப்பு அன்பினைத் தம் காப்பியக் கொள்கையாக்குகிறார் கம்பர். வானுலகைக் காணும் விருப்பில் உயர உயரப் பறந்த சடாயுவை விண்ணில் கதிரவன் எரிக்கத் தொடங்க, ஆற்றாத அண்ணன் சம்பாதி தன் சிறகைத் தம்பிக்குப் போர்வையாக்கிக் காத்தான்; சிறகிழந்தான் (4700–4702). தனக்குக் கூற்றுவனை அழைத்து வந்த தம்பி சுக்கிரீவனுக்காக வாலி இராமனிடம், ‘மது அருந்தி இவன் தன்னிலை மறந்து தவறிழைப்பின் அதனைப் பொருட்படுத்தாது மன்னித்தல் வேண்டும்; தண்டித்தல் கூடாது’ (4068) என்பதுடன்,

இன்னம் ஒன்று இரப்பது உண்டால்; எம்பியை உம்பிமார்கள்
தன் முனைக் கொல்வித்தான் என்று இகழ்வரேல்
தடுத்தி தக்கோய்
முன்முனே மொழிந்தாய் அன்றே, இவன் குறைமுடிப்பது ஐயா
பின் இவன் வினையின் செய்கை அதனையும் பிழைக்கல்
ஆமோ (4069)

எனத் தம் தம்பியைப் பிறர் குற்றஞ்சாட்டுதல் கூடாது எனத் துடிக்கும் பேருள்ளம் கல்லையும் கனிவிக்கும் தன்மையது. அண்ணனைக் கொல்வித்த சுக்கிரீவனும் அவன் வீழ்ந்தவுடன், 'உடன் பிறப்பு எனும் பாசத்தால் பிணிப்புண்ட அத்தம்பியும் பசுங்கண் நேசத்தாரைகள் சொரிதர நெடுநிலம் சேர்ந்தான்' (4011) என்பார். இங்கும் பகை ஒழிந்து அன்பே நிலைபெறுவதைப் புலப்படுத்துகிறார்.

வாலி போன்றே தன்னைப் பிரிந்து பகைவனுடன் இணைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கும் தம்பி விபீடணனை இராவணனிடம் இருந்து பாதுகாக்கக் கும்பகருணனும் இராமனிடம் வேண்டுவதும் (7627) கூறத்தக்கது. தன் தம்பி அக்ககுமாரனை அழித்த இலக்குவனை அழிக்காமல், 'நகர்க்கு இனி வாரலென்; வாழ்வும் வேண்டேன்' என்று இந்திரசித்து (8010) வஞ்சினம் உரைப்பதும் உடன்பிறப்பு நேயத்தின் வலிமையைக் காட்டுவதாகும். இதனையே இராமன் 'தம்பி உடையான் பகை அஞ்சான்' (9183) என உறுதிப்படுத்துகிறான்.

வாழ்க்கையின் செழுமைக்கு நட்பும், உடன்பிறப்பும் துணையாவது போல் அதன் சீர்மைக்கு, நேர்மைக்குப் பெற்றோர் – பிள்ளை உறவு சிறப்பாக அமைதலும் வேண்டற்பாற்று எனும் பொது உண்மையையும் கம்பர் தம் காப்பியத்துள் இணைத்துள்ளார். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என இராமன் காடேகுதலும், தந்தையின் கட்டளைப்படி அங்கதன் இராமனிடம் தொண்டு புரிதலும், இராவணனுக்காக 'வெற்றி உனது ஆக விளையாது ஒழியின் என்னைப் பெற்றும் இல்லை; யான் நெறி பிறந்தும் இலென்' (6130) என்ற இந்திரசித்து முதலான அவன் மைந்தர் அனைவரும் போரில் வீழ்தலும் என ஒருபுறம் அமைகிறது. மறுபுறம் இராமன் காடேகும் சூழலால் தயரதன் உயிரிழக்கிறான்; அதற்குக் காரணமான மனைவியையும் துறக்கிறான். இந்திரசித்து மறைந்த உடன் அவனின் உடல் கண்டு இராவணன், 'எனக்கு நீ செய்யத்தக்க கடன் எலாம், ஏங்கி ஏங்கி, உனக்கு நான் செய்வதானேன், என்னின்யார் உலகத்து உள்ளார்?' எனத் துடிக்கிறான் (9224). மூலக்கதை மாந்தரிட மட்டுமின்றிக் கிளைக்கதையிலும் பெற்றோர் மகன் உறவுச் சிறப்பைக் கண்தெரியாத சல போசன முனிவர் – மகன் சுரோசனன் (1677–1692) வழி உயர்த்துகிறார்.

உறவுகள் வாழ்க்கைச் சோலையில் இன்பம் நுகர மட்டுமல்ல; மனவளமும் பொருள்வளமும் தடுமாறுகையில் அது வீழ்ச்சியாக மாறிவிடாது தடுத்து நிறுத்தற்குமாம் என்பதையும் கம்பர் தெளிவாக்கியுள்ளார். பரதன் கைகேயியின் முறையற்ற செயலைக் கண்டிப்பதும், இராமன் காடேக வேண்டும் என்பதறிந்ததும் சினங்கொண்டெழுந்த இலக்குவனை இராமன் அடக்குவதும், திடீரெனத் தகுந்த பாதுகாப்பின்றி இராவணன் மேல் பாய்ந்த சுக்கிரீவனுக்கு அவன் அறிவுறுத்தலும் எண்ணத்தக்கன. சிறியோர் வழி தவறும்போது மூத்தோர் கண்டித்தல் அவர் தம் பொறுப்பு என்பதனைப் பாட்டன் பேரன் உறவில் அமையும் மாலியவான், இராவணன் உரையாடலில் புலப்படுத்துகிறார் (6817–6827). மூத்தவர் பிழைபுரிந்தாலும் அதனைத் திருத்த முனைதல் இளையவர் கடமை என்பதும் இராவணனுக்குத் தம்பி கும்பகர்ணனும் (7350–7361), மகன் இந்திரசித்தும் சீதையை விட்டுவிட (9118–9121) வேண்டுதலில் காட்டுகிறார்.

> *ஆதலால் அஞ்சினேன் என்று அருளலை; ஆசைதான் அச்*
> *சீதைபால் விடுதி ஆயின், அனையவர் சீற்றம் தீர்வர்*
> *போதலும் புரிவர்; செய்த தீமையும் பொறுப்பர் உன்மேல்*
> *காதலால் உரைத்தேன் என்றான் உலகெலாம் கலக்கி*
> *வென்றான் (9121)*

என்று கம்பர் இந்திரசித்தின் வாய்மொழியில் பணிவையும் அன்பையும் விரவிப் பெரியோரிடம் எதிர்க்கருத்துரைக்கும் நெறியை வெளிப்படுத்துகிறார். இங்குத் தன் மேல் உள்ள காதலால் தன் மனைவியையும் அவளால் பெற்ற மைந்தனையும் தயரதன் துறந்ததால் அவர்களுக்கு ஏற்பட்ட இழிவினை, குறையினை நீக்க இராமன் அவனிடம், 'தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும், தாயும் தம்பியும் ஆம் வரம் தருக' எனத் (10079) தாழ்ந்து வேண்டுதலும் சுட்டத்தக்கது.

பெற்றோர், உடன் பிறந்தோர், நண்பர் என இம் மூன்று உறவுகளே வாழ்க்கைப் பாதையைப் புற உலகில், சமுதாயத்தில் உயர்ந்தோங்கச் செய்வதில் பெரும்பங்காற்றுகின்றன என்பதைக் கம்பராமாயணம் தெளிவாக்குகிறது. கணவன் மனைவியர் உறவு அகவாழ்க்கையாதலாலும், ஆணை முன்னிறுத்திய சமுதாயமாதலாலும் பிற உறவுகளின் பெருமையை வலியுறுத்தல் போல் இதில் அமையவில்லை. காப்பியத்தின் முதல் திருப்பு முனையாகக் கைகேயி தயரதனிடம் பெறும் வரம்; நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு எனச் சீதை இராமனைப் பின்தொடர்தல்; வாலிக்குத் தாரை இராம – சுக்கிரீவர் நட்பினை அவனுக்கு முன்பே அறிந்து வாலி – சுக்கிரீவர் போரைத் தடுத்துரைத்தல்; இராவணன் மறைவால் மண்டோதரியும் மரணத்தைத் தழுவுதல் என இவ்வுறவில் பிணக்கும், நெருக்கமும், அக்கறையும், அவலமும் வெளிப்படினும் ஏனையவற்றைச் சிறப்பித்தலிலேயே

கம்பர் அதிக அக்கறை காட்டுவதாகத் தோன்றுகிறது. தன்னைப் பிரிந்த சீதையைத் திரும்பப் பெற வேண்டும் என்ற துடிப்பை விட, அதனால் ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்க வேண்டும் என்ற உணர்வே இராமனிடம் மேலோங்கி நிற்றலைச் சீதை மீட்சியின் போது,

உன்னை மீட்பான் பொருட்டு, உவரி தூர்த்து, ஒளிர்
மின்னை மீட்டுறு படை அரக்கர் வேர் அற
பின்னை மீட்டு, உறுபகை கடந்திலேன்; பிழை
என்னை மீட்பான் பொருட்டு இலங்கை எய்தினேன் (10014)

எனச் சினப்பதில் காணலாம். பொதுவாக நோக்குமிடத்து உறவுகள் எக்குலத்தினர், எப்பண்பினர் ஆயினும் உள் அன்பு பிணைக்க வாழுதல் வாழ்க்கைப் பயிர்க்கு உரமாக நீராக வேலியாக அமைந்து இன்றியமையாமை பெறுவது காப்பியத்துள் நன்கு சிறப்பிக்கப்பட்டுள்ளது.

காப்பியக் கட்டமைப்பு

கிளைக்கதைகளும், துணைக்கதைகளும் இடைமிடைய நீண்ட நெடுங்காப்பியமாய், இதிகாசமாய் மலர்ந்துள்ள கம்பராமாயணத்தின் பெரு வெற்றி அதன் தொய்வற்ற கதைப்போக்கு, முரண்படா கதை மாந்தர் பண்பு நலன், உணர்ச்சி பொங்கும் நாடகத்திறன், கற்பனை வளத்தின் எல்லை, உவமைகளின் பேராற்றல், கவித்துவத்தின் உச்சம், உளவியலின் ஆழமான வெளிப்பாடு, முன்னிகழ்வும் பின்னிகழ்வும் எவ்விதத்திலும் முரணாகாவாறு திறம்பட கொண்டுகூட்டியமைதல் சந்தப்பாக்களின் இசைநயம், தமிழ்க்கடலின் ஆழ அகலங்களை வெளிப்படுத்தும் சொல்லாட்சிப் பெருமை, தமிழ்ப் பண்பின் மாட்சி, உயரிய கோட்பாடுகள்.... எனப் பலவற்றால் எதனாலும் அசைக்க வியலாவாறு ஆழ வேரூன்றியுள்ளது. 'கல்வியில் பெரியவன் கம்பன்'; 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' எனும் வழக்குகள் தமிழ்ச் சமுதாயத்தில் அவர் கற்றோரவையிலும் மற்றோர் அவையிலும் பெற்ற விருதுகள். இவை அவரது படைப்புத்திறனுக்கு நற்சான்றாய், சாட்சியாய் விளங்குகின்றன.

கரைசெறி காண்டம் ஏழு, கதைகள் ஆயிரத்து எண்ணூறு
பரவுறு சமரம் பத்து, படலம் நூற்றிருபத்தெட்டே
உரை செயும் விருத்தம் பன்னீராயிரத்து ஒருபத்தாறு
வரம்மிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற்றாறே

எனத் தனியன் ஒன்று (மிகை.25) ஒட்டக்கூத்தரின் உத்தரகாண்டத்தையும் உள்ளடக்கிப் பேசுகிறது. தண்டி நவிலும் காப்பிய இலக்கணத்திற்கு ஏற்ப கம்பரின் இராமாயணம் அமைந்து சிறக்குமாற்றைச் ச.வே.சுப்பிரமணியனின் 'காப்பியப் புனைதிறன்' விளங்குகிறது. காப்பியக் கட்டமைப்பை உருவாக்கும் கூறுகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே சிறப்பித்துரைக்கும்

நூல்கள் பலவும் எழுந்துள. சான்றிற்கு மா.ராசமாணிக்கனாரின் கம்பர் யார்?, எஸ்.வையாபுரிப்பிள்ளையின் கம்பன் காவியம், அ.சீனிவாசராகவனின் காவிய அரங்கில், இரா.திருமுருகனின் கம்பன் பாடிய வண்ணங்கள், தெ.ஞானசுந்தரத்தின் காப்பிய விருந்து, அ.சா.ஞா.வின் இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும் என ஓரிரண்டைச் சுட்டலாம்.

கம்பரின் தன்னிகரற்ற தலையாய புகழுக்குக் கலங்கரை விளக்கங்களாய்ப் பொருண்மையிலும் வெளியீட்டிலும் அமைவனவற்றுள் சிலவற்றை இனிக் காணலாம்.

கதைமாந்தர் அறிமுகம்

கற்பவரின் கற்பனைக்குப் பெரு விருந்து படைக்கும் காப்பியக் களங்களுள் கதைமாந்தர் அறிமுகம் ஒன்றாகும். முதன்மை மாந்தராயினும் துணை மாந்தராயினும் அவர்களை முதன் முதலாக அரங்கேற்றும் பொழுது கம்பர் தரும் அறிமுகவுரை, கதைப்போக்கிற்கு உறுதுணையாய் உள்ளுணர்த்துவதாய் அமைகிறது. அனுமன் பற்றிய முதல் உரை 'காலின் மா மதலை' (3752) என்பதாகும். காற்றின் வலிமையான பெரிய மகன் என்பது இதன் பொருள். மிக எளிய அறிமுகம்; ஆனால் பொருளாழம் மிக்க கூற்றாகும். காற்றானது மிக்க வலிமையானது; அதன் வேகம் அளவிடற்கரியது; அது நுழையாத இடமில்லை; தென்றலாய்த் தாலாட்டவும் கூடும், புயலாய்ச் சீறவும் செய்யும்; காற்று இல்லை எனில் இவ்வுலகம் இல்லை எனும் இத்தனைச் சிறப்புகளும் ஒருங்கே அனுமனிடம் பொருந்தியுள்ளன. அவன் இல்லை எனில் இராமாயணம் இல்லை என்னுமளவிற்கு மிக உயரிய இடத்தினை அவன் பெற்றுள்ளான். அவனுடைய ஆற்றல் பகைவனாம் இராவணனையும் 'வலி என்பதும் உளதே? அது நின்பாலது மறவோய்... மெலிவு என்பதும் உணர்ந்தேன்; எனை வென்றாய்' (7197) எனப் புகழச் செய்துள்ளது. பிரம்மாத்திரத்தால் உயிரிழந்த இலக்குவன் முதலானோரும், பின்பு வீடணன் மீது இராவணன் ஏவிய வேலை இலக்குவன் தன் மார்பிடை ஏற்று மீண்டும் மரணத்தைத் தழுவியதாலும் உயிர்ப்புடன் மீட்சி பெற உதவியதும், பரதனை எரிவீழ்தலினின்று காப்பாற்றியதும் அவனின் விரைவுத் தன்மையால் தான் என்பதும் காப்பியம் உணர்த்தும் உண்மை. அவனுடைய வேகத்தைக் கம்பர்,

தந்தை வேகமும் தனது நாயகன் தனிச்சிலையின்
முந்து சாயகக் கடுமையும் பிற்பட முடுகி
சிந்தை பின் வரச் செல்பவன், குகற்கும் அச்சேயோன்
வந்த வாசகம் கூறி, மேல் வான் வழிப் போனான் (10152)

என வருணிக்கிறார். அவன் சுக்கிரீவன், இராம இலக்குவர்

முதலானோர்க்குத் தென்றலாய், அருமருந்தாய் இதமளிக்கிறான். போர்க்களத்தில் பகைவரிடையே அவன் புயலாய்ப் பரவியதை,

தாள்களால் பலர், தடக்கைகளால் பலர், தாக்கும்
தோள்களால் பலர், சுடர் விழியால் பலர், தொடரும்
கோள்களால் பலர், குத்துகளால் பலர், தம்தம்
வாள்களால் பலர், மரங்களினால் பலர் – மடிந்தார் (5522)

எனக் காட்டுவார். இங்ஙனம் 'காலின் மா மதலை' என்ற மூன்றே சொற்களில் காப்பியத்துள் அனுமன் பெறும் பங்கினை முழுமையாக உணர்த்தியுள்ள கவியாற்றல் சுவைத்து இன்புறத்தக்கது.

கம்பரின் இம்மகத்துவத்தை மிகச் சிறு கதைமாந்தரான தாரையிலும் காட்டலாம். தாரையின் அறிமுகம் முதற்கண்,

ஆயிடை தாரை என்று அமிழ்தின் தோன்றிய
வேயுடைத் தோளினாள் இடை விலக்கினாள்
வாயிடைப் புகைவர, வாலி கண் வரும்
தீயிடை, தன் நெடுங் கூந்தல் தீகின்றாள் (3956)

என்பதாக அமைகின்றது. இங்கு அமிழ்தமும், நெடுங்கூந்தல் தீகின்றமையும் ஆழ்ந்து நோக்கத்தக்கன. அமிழ்தம் உயிர் காப்பது. இங்குத் தாரைத் தன் கணவனாம் வாலியின் உயிர் காக்கத் துணிகின்றாள். போருக்கழைக்கும் தம்பி சுக்கிரீவன் குரல் கேட்டு ஓடும் வாலியை அவனுக்கு நிகழவிருக்கும் அழிவிலிருந்து காக்க முனைகிறாள். மற்றும் காலந்தாழ்த்தும் சுக்கிரீவனை ஒழிக்கக் கடுங்கோபத்துடன் வரும் இலக்குவனிடமிருந்து அவனையும் அவன் குலத்தையும் காப்பாற்றும் அமிழ்தாகவும் செயல்படுகிறாள். அமிழ்தம் தூய்மையானது; அது யாவர்க்கும் நன்மையே பயக்கும் என்பதையும் தன் கணவனைக் கொன்றாரிடத்தும் காட்டும் அன்பால் நிறுவுகிறாள். கூந்தல் எரிவு தீய சகுனமாகக் கருதப்படுவது; முடி இழத்தல் விதவையர் குறியீடாகவும் விளங்குவது. தாரையின் துணைவன் வாலியின் வீழ்ச்சியும் அவளது விதவைக் கோலமும் எனக் காப்பிய நிகழ்வின் முன் சுட்டாக இது அமைகிறது. கம்பர் தம் மாளிகையின் ஒவ்வொரு செங்கல்லையும் மிகுந்த அக்கறையுடன் அடுக்கியுள்ளார் என்பதற்கு இது எடுத்துக்காட்டாம்.

உளவியல் வல்லமை

புராணக் கதைக்கு உயிரூட்டம் அளிக்கும் கூறுகளுள் ஒன்று அதனை நடப்பியலுக்குப் பொருந்தக் கூறுதலாகும். கதை நிகழ்வில் புராணச் சார்பினை ஏற்றுக்கொண்ட கம்பர், கதைமாந்தர் உணர்வுகளை வடிப்பதில் உளவியலுக்கு மிகுந்த சிறப்பளித்துக் கதைக்கு நடப்பியல் வண்ணம் பூசி புதுமெருகு ஊட்டியுள்ளார். 'இன்பமும் துன்பம் தானும் உள்ளத்தோடு இயைந்த அன்றே' (3166) உடல் சிந்தை வசம் அன்றோ (1150) எனத் தம்

உளவியல் அறிவை நேரிடையாக வெளிப்படுத்தும் கம்பர், கதை மாந்தரின் உணர்ச்சி வெளிப்பாட்டில் அதனைச் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

தான் சிறைமீட்கப்பட்டதை அறிந்தவுடன் மகிழ்ச்சிக் கடலில் நீந்திய சீதை அம்மகிழ்ச்சியை, நினைத்தது ஒன்றும் சொல்வது ஒன்றுமாக வெளிப்படுத்துவதைக் கம்பர், 'மழலைப் பணிமொழி நுனித்தது ஒன்று, நுவல்வது ஒன்று ஆயினாள்; கனித்த இன்களி கள்ளினின் காட்டுமோ?' (9974) என வியக்கிறார். இன்பத்தின் உச்சத்தில் சொல் தடுமாறும் உளவியல் பாங்கினை இதனில் காட்டுகிறார். இதுபோன்றே துன்பத்தின் விளிம்பில் துடிக்கும் பொழுது அறிவு செயற்படுதலில்லை என்பதை இராமன் பிரிவில் நகரமாந்தரின் நிலையாக, 'துக்கம் நின்று அறிவைச் சூறையாடவே' (1801) என்பார். மீண்டும் வீடணனின் வாய்மொழியாகவும் இதனை, 'துன்பம் கோளுறக் குலுங்கி உள்ளம் தேறுவது அரிது; செய்கை மயங்கினென்; திகைத்து நின்றேன்' (8925) என அறிவிக்கின்றார்.

வாழ்க்கைப் பயணத்தில் பெரும் வீழ்ச்சியைச் சந்திக்கும் பொழுது கடந்த காலத்தை எண்ணி வருந்துதல் மனித மன இயல்பு. இதனை இறுதிப்போரின் போது தன் படைக்கலன்களால் இராமனை அழிக்க முடியாது தோல்வியைத் தழுவி நின்ற, இராவணன் 'அந்நாள் வீடணனார் சொல் நினைவுற்றான்' (9836) என்பார். தசரதன் இராமன் காடேகும் பொழுது தன் சாபவரலாற்றை (1677–92) நினைவுகூர்தலையும் இணைத்துப் பார்க்கலாம். முன்னை வாழ்வையும் பின்னை நிலையையும் ஒப்பிட்டு நோக்குதலும் இயல்பாகிறது. இதற்கு வாலிவதை கண்ட தாரை 'நீறு ஆம் மேருவும், நீ நெருக்கினால்; மாறு ஓர் வாளி உன் மார்பை ஈர்வதோ?' (4108) எனப் புலம்புதலைச் சான்றாக்கலாம்.

ஏதேனும் ஒன்றைப் பார்த்து மிரண்ட அச்சம் நெஞ்சத்தைக் கவ்வும் பொழுது அதிலிருந்து மீளுவது மிகவும் கடினம்; அது நினைவில் அவ்வப்பொழுது தோன்றி வருத்திக் கொண்டேயிருக்கும். இதனை, வானரப் படைகளின் ஆற்றலைக் கண்ட அச்ச நெருப்பு இடு நெஞ்சரான (5483) இராக்கதர் நிலையை, 'நினைக்கும் தோறும் திடுக்கிடும் நெஞ்சினார், கனைக்கும் தோறும் உதிரங்கள் கக்குவார்' (6800) என வருணிக்கையில் உணர்த்துகிறார்.

சினம் முழுமையாக உள்ளத்தை நிறைத்து ஆளும் பொழுது மிகுந்த மதிப்பிற்குரியதாகப் போற்றியவைகூடத் துச்சமாகக் கருதப்படுதலைப் பலவிடங்களில் பேசுவார். 'எம்பியே இறக்கும் என்னில், எனக்கு இனி, இலங்கை வேந்தன் தம்பியே புகழ்தான் என்னை? பழி என்னை? அறம் தான் என்னை?' (8241) என நாகபாசத்தால் கட்டுண்ட இலக்குவன் நிலை கண்ட இராமனின் நிலை காட்டி அவனும் இதற்கு விதிவிலக்கல்ல என உணர்த்துகிறார்.

இன்பமாயினும் துன்பமாயினும் நெஞ்சை நெகிழ்விக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுது அதனைக் காணும் பலரும் பலவிதமாகத் தத்தமக்குத் தோன்றியவாறு அதுபற்றிக் கருத்துரைத்தலும் உளவியலின்பாற்படும் உலகியற்கையாகும். இதனையும் கம்பர் காப்பியத்துள் ஆங்காங்கே இயன்றவிடந்தோறும் எடுத்துக் காட்டியுள்ளார். இவற்றைப் பேசுகையில் அதில் ஓர் தனிச்சுவையே கம்பர் கொள்வதும் சிறப்பாக வெளிப்பட்டுள்ளது. சீதையின் திருமணத்திற்காக இராமன் முன் சிவன் வில்லைக் கொணர்ந்த பொழுது அதனைக் கண்ட மிதிலை நகர மாந்தர் உணர்வுகளின் சொற்கோவையில் (693–696),

ஞான முனிக்கு ஒரு நாண் இலை என்பார்,
கோன் இவனின் கொடியோன் இலை என்பார்
மானவன் இச்சிலை கால் வளையானேல்
பீன தனத்தவள் பேறு இலள் என்பார் (696)

என்பதனைச் சான்றாக்கலாம். மகிழ்ச்சியில் வெடிக்கும் மொழிகள் (1084–1103); துன்பத்தில் துடிக்கும் துவளும் சொற்கள் (1789–1796) எனப் பிறவும் நோக்கத்தக்கன.

அளவற்ற வெற்றிகள் மனத்தில் ஆணவத்தையும் வளர்க்கும் என்பதற்கு இராவணன் வாழ்வே சான்று. பாட்டனின் அறிவுரையை மனம் கொள்ளாது தனது வெற்றித்திமிரினை,

ஒன்று அல பகழி என் கைக்கு உரியன; உலகம் எல்லாம்
வென்றன; ஒருவன் செய்த வினையினும் வலிய; வெம்போர்
முன் தருக என்ற தேவர் முதுகு புக்கு அமரில் முன்னம்
சென்றன; இன்று வந்த குரங்கின் மேல் செல்கலாவோ? (6830)

எனக் காட்டுகிறான். உலகையே வென்று, வானவரையும் அடக்கிய தனக்குக் குரங்குகள் ஒரு பொருட்டல்ல என இறுமாப்பு கொள்கிறான். 'நெஞ்சம் தருக்கினர் கெடுவர் என்றால் தத்துவநிலையிற்று அன்றே' (3267) எனவும் இதனை உறுதிப்படுத்துகிறார். இங்ஙனம் கம்பர் படைப்பில் தொட்ட இடம் தோறும் உளவியல் ஊற்று உள்ளடங்கி இருக்கக் காணலாம். கம்பராமாயணத்தில் இவ்வியல் மிக விரிந்த ஆய்விற்குப் பெருங்களனாகும். அதன் முடிவுகள் கம்பரை மிகப் பெரிய உளவியலறிஞராக உலகிற்குப் பறைசாற்றும்; கம்பரின் வெற்றிக்கு அவரின் இவ்வறிவும் உறுதுணையாவது தெள்ளத் தெளிவாகும்.

கடவுள் கொள்கை

பரம்பொருள் ஒன்று; அது சிவன், திருமால், பிரம்மன் என மூவரினும் உயர்ந்தது; அதுவே ஆதியானது, முதன்மையானது; அது இராமன் எனக் கொள்ளும் கம்பர், முப்பெரும் தெய்வங்களின் இயக்கமும் அவனால்

நிகழ்வதாகக் கருதுகிறார். இதனைச் சீதையின் மீட்சியின் போது பிரமதேவனின் வாய்மொழியாக (10050–10062) வலியுறுத்துகிறார். மற்றும் வேண்டியோர்க்கு வேண்டியாங்கு அருள்புரிதல் அத்தெய்வத்தின் இயல்பு என்பதை யுத்த காண்டத்தில் கடவுள் வாழ்த்தாக, தம் கடவுள் கொள்கையாகக் காட்டுகிறார்.

ஒன்றே என்னின், ஒன்றே ஆம்;
பல என்று உரைக்கின், பலவே ஆம்;
அன்றே என்னின் அன்றே ஆம்;
ஆமே என்னின், ஆமே ஆம்
இன்றே என்னின், இன்றே ஆம்
உளது என்று உரைக்கின் உளதே ஆம்
நன்றே நம்பி குடி வாழ்க்கை
நமக்கு இங்கு என்னோ பிழைப்பு? அம்மா! (6059)

சமயப் பொதுமையைச் சுட்டி அமையும் இப்பாடலும், 'உலகம் யாவையும் தாம் உளவாக்கலும், நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா அலகு இலா விளையாட்டு உடையார் அவர் தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே' (1) என்பதான கம்பரின் முதற்கவியும் எண்ணற்பாலன. எத்தனை பெயர் கொண்டு எத்தனை வடிவத்தில் இறைவனை வழிபட்டாலும் அவை அனைத்தும் திருமாலின் அவதாரமான இராமனையே குறிக்கின்றன என்பது கம்பரின் கடவுள் பற்றிய எண்ணமாகும். மாலியவான் அனுமனை 'என்னோ, கோள் இலா வேதம் கூறும் இறைவர்கள் மூவர் என்பது? எண் இலார் எண்ணமே தான்; அறைகழல் அனுமனோடும் நால்வரே முதல்வர் அம்மா' (8844) எனப் பாராட்டுவதும் இணைத்துக் கருதத்தக்கது. வேதங்களை அங்கங்கே பெருமைப்படுத்தும் கம்பர்(3) இராமனை வேதநாயகன்(5869), 'வேத வேந்தனாக'ப் (10066) போற்றுவதும் குறிக்கத்தக்கது.

தமிழ்ப்பற்று

கம்பரின் தமிழ்ப்பற்று பிற கவிஞரினின்றும் முற்றிலும் மாறுபட்டது. சொற் சித்திரங்களால் தமிழ் வெறி காட்டாது தமிழுக்கு ஆக்கம் தருவதாக, வளப்படுத்துவதாக அவரின் தமிழ்த் தொண்டு அமைந்து தனித்தன்மை காட்டுகிறது. இயன்றவிடங்களிலெல்லாம் தமிழைச் சிறப்பித்தல், தமிழ் மரபைப் போற்றுதல், புதிய சொற்களை உருவாக்குதல், பிறமொழிச் சொற்களுக்குத் தமிழாக்கம் தருதல் என்பதாக அவரின் தமிழ்ப்பற்று உயர்ந்துள்ளது.

முத்தும் முத்தமிழும் தந்து முற்றலால் பாண்டியநாடு கம்பருக்குச் சொர்க்க பூமியை விட உயர்வாகிறது (4645). வண்தமிழுடைத் தென்திசை (4522), தமிழ் முனி (8942), இனிய தென் தமிழ்நாடு (4644), தண் தமிழ்த் தென்றல் (3546), தன் பால் தழுவும் குழல்வண்டு தமிழ்ப்பாட்டு இசைக்கும்

தாமரை (3736), தென் தமிழ்நாட்டு அகன் பொதியில் திருமுனிவன், தமிழ்ச் சங்கம் (4474), இது தமிழ் முனிவன் வைகும் இயல் தருகுன்றம் (10123) என வருணனைகளில் தமிழைப் போற்றியுள்ளார்.

தமிழ் மரபைப் போற்றுதல் பலவாறாகப் பரந்துபட்டமைகிறது. சீதையை அவளிருந்த மண்ணோடு தொடாது இராவணன் கடத்துதல், சீதை – இராமன் காதல் மணம், தாரை விதவை நிலை எனத் தமிழ்ப்பண்பாடு பாராட்டுதல் அதில் ஒரு கூறாகும். காப்பியத்தை 'உலகம் யாவையும்' எனத் தொடங்கிப் பாட்டியல் மரபு காக்கின்றார். போர்க்களக் காட்சிகளில் தமிழிலக்கண மரபைப் பேணுதலும் குறிக்கத்தக்கது. போரில் வெற்றி பெறுவதற்குக் கொற்றவையை வழிபடும் தமிழ் மரபை, இந்திரசித்தை வீழ்த்தி வென்று வந்த இலக்குவனைக் கண்ட இராமனை, 'தம்பி கொற்றவை தழிஇய பொன் தோள்மலை நோக்கும்' என்றுரைத்து (9183) நினைவூட்டுகிறார். வாலி சேய் தூசி செல்ல (9174) என அங்கதன் முன்னணிப்படையினருக்குத் தலைமை தாங்கிச் செல்வதைக் காட்டுகிறார். 'உழிஞையைத் துடைக்க நொச்சி உச்சியில் கொண்டது உன் ஊர்' எனும் நிகும்பன் கூற்றில் மதில் போரினை உணர்த்துகிறார். போரில் ஏற்படும் அழிவுகளை அல்லது மறச் செயலை 'நூழில்' எனல் மரபு. இதனைக் கம்பர் 'நூக்கிய களிறும் தேரும் புரவியும் நூழில் செய்ய' (7162,8053), 'வெய்தினின் உற்றதானை முறைவிடா நூழில் வெம்போர் செய்தன'(8413) எனக் காட்சிப்படுத்துகிறார்.

அகப்பொருளிலக்கணத்தையும் சிறப்பிப்பதை இராவணன் கூற்றில் காணலாம். காமத்தால் தோன்றும் அவத்தைகள் பத்து என்பது (காட்சி, வேட்கை, உள்ளுதல், மெலிதல், ஆக்கம்செப்பல், நாணுவரையிறத்தல், நோக்குவதெல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு) பொய்; அதனை விட அதிகமான துன்பத்தைத் தான் அனுபவிப்பதாகச் சீதையிடம்' 'பாயிரம் உணர்ந்த நூலோர் காமத்துப் பகுத்த பத்தி – ஆயிரம் அல்ல போன ஐ இரண்டு என்பர் பொய்யே' (7645) என மொழிகிறான். தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல் எண்ணுங்காலைக் கிழத்திக்கு இல்லை (1064) எனும் தொல்காப்பியச் சிந்தனையைச் சூர்ப்பணகையின் கூற்றில் (2776) தருகிறார். எடுத்த கதையின் மூலம் வடமொழியாயினும் அதனை இயன்றளவு தமிழுக்குரியதாகக் காட்ட வேண்டும் என்ற கம்பரின் வேட்கையையே இவை காட்டுகின்றன.

நாகம் (யானை–6285), வீரை (கடல்–6283), கஞ்சுகன் (சட்டையணிந்த போர் வீரன்–6798), கந்துகம் (பந்து – 6917), அயிர் (நுண்மணல்–7190) என்பன போன்ற பழந்தமிழ்ச் சொற்களைப் பயன் கொண்டு அவை மறையாது காக்க முனைந்துள்ளார். கோவலன் கண்ணகியை ஆருயிர் மருந்தே என வருணிப்பதைக் கருத்தில் கொண்டு தானும் 'தாரமாம் அருமருந்து' (3852) என நவின்று இளங்கோவடிகளுக்குச் சிறப்புச் செய்கிறார். இவண்

பாரதியார், 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று பாடியதற்குக் கம்பர் அனுமனைப் பாராட்டும் போது, 'செவிக்குத் தேன் என இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்' (4966) என வழிகாட்டியிருப்பதையும் எண்ணலாம்.

செல்வத்திற்கு அதிபதியாதலால் குபேரன் 'தனதன்' (10093), பாதுகாப்பவன் 'அரணியன்' (6366), இராவணின் மைந்தன் 'இராவணி' (8162, 8163), அருகில் உள்ளோர் 'நணியர்' (6787), உன்னுடைய அண்ணன் 'நுமையன்' (10076), ஓவியம் போன்ற செயலற்ற நிலை 'ஓவினேன்' (9978), ஒன்றைப் போன்று அமைவதால் 'போலியை' (10011), இறுதி ஆசையை உணர்த்தும் 'கடைக்கூட்டு' (7624), வீரத்தை உடையவன் வீரதை (6939), குருதி 'கறைநீர்' (7192), உடல் முழுவதும் போரில் ஏற்பட்ட காயங்களால் 'உதிரப் போர்வையான்' (7556), சிறுமையுடைய செயல் 'சிற்றியல்' (8998), வெற்றி பெறுபவர் 'வெற்றியர்' (7660), போரில் பின் வாங்குவோர் 'பின்றலினோர்' (8306), பிள்ளைமை (மழலை, 6142), வரவற்று (6368, வரக்கூடியது), ஆதர் (அறிவிலிகள் 6459), வினையம் (செயல் 9300), இனையர் (இவர்கள் 9300) என்பன போன்று எண்ணற்ற புதிய சொற்களை உருவாக்கித் தமிழுக்கு வளம் சேர்த்துத் தம் தமிழ்ப்பற்றைப் பெருமைப்படுத்தியுள்ளார்.

தமிழ் மொழிபெயர்ப்பு வரலாற்றில் கம்பரின் பங்கும் குறிப்பிடத்தக்க தொன்றாகும். பல வடசொற்களை அவர் தொல்காப்பிய விதிமுறைக்கேற்ப (வடசொற் கிளவி வட எழுத்து ஒரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே – 884) தமிழ்ப்படுத்தியும், மொழிபெயர்த்தும் வழிகாட்டியுள்ளார். இலக்குவன், விடணன், இந்திரசித்து, தயரதன், ஆனி (ஹானி–துன்பம் 6272) போல்வன முதல்நிலைக்குச் சான்றுகளாகும். கனகன் (இரணியன்; 6222), மானுட மடங்கல் (நரசிங்கம், 6319), வேதத்து உச்சியின் மெய்ப்பொருட் பெயர் (நமோ நாராயணாய, 6208), உயிருக்கு நேயம் (ஜீவகாருண்யம், 6385), இசிகப்படை (இஷீகாஸ்திரம், 9064), அருளின் வேலை (கருணைக்கடல் 6415), வேள்வியின் பகைஞன் (6552), மாபெரும் பக்கன் (6554), மகரக் கண்ணன் (8408), நேமிப்புள் (சக்கரவாகம், 6834), குடப்பெருஞ் செவிக் குன்றம் (கும்பகருணன் 9815), சூரியன் பகை (பானுகோபன், 6553), வச்சிரத்து எயிற்றவன் (வச்சிரநந்தன், 6098) என்பன மொழிபெயர்ப்புக்கு எடுத்துக்காட்டுகளாம். கம்பரைத் தமிழுக்கும் தமிழருக்கும் எதிரியாகக் காண்போர் அவரின் இத்தமிழ்ப் பணியை உணராமலேயாம் என்பது இவற்றால் வெளிப்படை.

தமிழ் தந்த அகத்தியனை, 'நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்' (2666); 'என்றும் உள்ள தென் தமிழ் இயம்பி இசை கொண்டான்' (2677); தமிழ்த் தலைவன் (2287) எனப் பாராட்டி அவர் புகழ்பாடும் (2667–

2671) கம்பர் எண்ணம் அவரை முன்வைத்துத் தமிழைப் போற்றுவதே என்பதும் கூறத்தக்கது. ஏற்கெனவே தமிழில் இராமாயண நூல்கள் எழுந்திருக்க தாமும் அதனைப் படைக்க முனையும் பொழுது அது பிறவற்றினின்றும் தனித்து நின்று வெற்றி பெற வேண்டுமானால் அது உண்மையில் ஓர் தமிழ்க் காப்பியமாகவே மலர வேண்டும் என்று தமிழ்மக்கள் உளமறிந்த உளவியலறிஞர் கம்பர் என்பது இவற்றால் எளிதாகப் புலனாகும்.

வாழ்வியல் சிந்தனை

எப்பொருளைப் பாடினும் கற்பார் பயன்பெறு வகையில் வாழ்க்கை மேம்பாட்டிற்குரிய கருத்துகளை இடமறிந்து, சூழலுணர்ந்து இயல்பாகப் புகுத்தி உணர்த்துதல் பெருங்கவிஞரின் பண்பாகும். இவ்வகையிலும் கம்பர் தம் வெற்றிக் கொடியை ஏற்றியுள்ளார். அவரது கருத்துரைகளில் முன்னிற்பது அவரின் கல்விக் கோட்பாடாகும்.

கல்வி : வாழ்க்கையை நேர்வழியில் செலுத்தவும் சிறப்புடன் வாழவும் அடிப்டையாவது கல்வி என்பது கம்பரின் அசையாத நம்பிக்கையாகும். பல வகையான அறிவுகளைப் பெறுதலால் அறியாமை இருள் அகல்கிறது (89); அறிவுடையோர் புலமக்களாகப் (7422) பெருமையடைகின்றனர். 'வாசகம் வல்லார் முன் நின்று யாவர் வாய்திறக்க வல்லார்' (895) என வினவும் கம்பர் கல்வியின் இன்றியமையாமையை,

ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து, எண் இல் கேள்வி
ஆகும் முதல் திண் பணை போக்கி, அருந்தவத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பி, தருமம் மலர்ந்து
போகம் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே (167)

என எடுத்துரைக்கிறார். கல்வி என்பது ஆலம் வித்து போன்றது; அது முளைத்து வளரும் பொழுது கணக்கற்ற கேள்வி ஞானம் எனும் உறுதியான கிளைகள் எழுகிறது; அரிய தவமாகிய இலைகள் தழைக்க அன்பு எனும் அரும்பு தோன்றுகிறது; அது அறமாகிய மலராகி இன்பம் எனும் கனியாகக் கனிந்து வாழ்க்கையைப் பொருளுடையதாக்குகிறது. மனம் அன்பெனும் ஏரால் பண்படுகிறது; தவமாகிய வலிமையால் எதனையும் சாதிக்கும் திறன் துளிர்விடுகிறது; அன்பும் மனவலிமையும் இணைய அறமாகிய மலர் மலர்ந்து மணம் பரப்புகிறது. அறமே வாழ்க்கையாவதால் அங்கு இன்பத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. கல்வியே இவற்றிற்கு அடிப்படை என்பதைக் கம்பர் இப்பாடலால் வலியுறுத்துகிறார். வாழ்க்கைச் சிறப்பிற்குப் பெண்களும் கல்வி கற்பதை விரும்புகிறார் (67). 'காதைகள் சொரிவன, செவி நுகர் கனிகள்' என்று (82) கேள்வியறிவு பெறுவதற்கு நல்ல கதைகள் துணையாவதைக் காட்டுகிறார். 'கற்றிலன் ஆயினும் கேட்க' எனும் வள்ளுவர் வாய்மொழியை நினைவூட்டுகிறார்.

'அஞ்சில் ஐம்பதில் ஒன்று அறியாதவன்' என இளமைக் கல்வியை வேண்டும் கம்பர் (4273) கல்லாமையால் வரும் அழிவினையும் 'கேடு உற்றாலும் உணர்வரோ உணர்வு இலாதார்' (6693) எனக் காட்டுகிறார். தங்களுக்கு வருகின்ற அழிவினைக் கூட அறிய இயலாத இவர்களுக்கு அறிவு புகட்டினும் பயனில்லை என்பதையும் 'கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போயிற்று' (388) என நவில்கிறார். இக்கல்வி நோக்கா மதியிலிகள் பிறர் அறியா வகை செய்யும் தீமைகள் ஒன்று பலவாகப் பெருகும் தன்மையது (3152) எனவும் எச்சரிக்கின்றார்.

கல்விச் செல்வத்தின் சிறப்பினை உறுதிசெய்ய தன் கதை மாந்தரில் உயர்வுடையோரை அவர்தம் கல்விப் பெருமையால் சிறப்பிக்கிறார். எண் இல் நுண் நூல் ஆய்ந்தே கடந்தான் – தயரதன் (172); கலைகளின் பெருங்கடல் கடந்த கல்வியான் அறிவின் மேல் உள்ளான் – இராமன் (20,83,0447); கலைத் தருமம் நீ அலது இல் எனும் தன்மையால் – பரதன் (2983); கல்விக்கண் மிக்கோன், கவிஞரின் அறிவு மிக்கோய் – வீடணன் (6774,7402); அறிவன் – அனுமன் (6447) என்பனவற்றைச் சான்றாக்கலாம். இராவணனுக்கு அவ்வப்போது அறிவுரை பகரும் மாலியவானை 'மதிநெறி அறிவு சான்றவ' னாகக் (6817) காட்டுதலும் நவிலத்தக்கது.

பெண்மையும் ஆண்மையும் : வாழ்வியல் சிந்தனைகள் நூல் எழுந்த காலச் சமுதாயத்தை எதிரொலித்தல் இயற்கை. அவ்வகையில் கம்பரும் அன்றைய பெண்கள், ஆண்கள் இயல்பினை உணர்த்தியுள்ளார். பெண் என்பவள் ஆணுக்குப் போகப் பொருள் என்பதனைச் சீதை இராமன் திருமணக் கோலத்தை வருணிக்கையில் 'ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்' (1244) என்பது கொண்டு அறியலாம். 'செஞ்சொற் கவி இன்பம்' சீதை என (502) அவளைக் கம்பர் அறிமுகப்படுத்துதலும் இங்கு எண்ணத்தக்கது. எனவே இவர்களுக்கு அரசியலில் இடம் மறுக்கப்பட்டுள்ளது (6077). பெண் சொல்வழி ஆடவர் நடப்பது இகழ்ந்துரைக்கப்பட்டது (1790, 8773). மகளிர் மென்மை இயல்பினர் ஆதலின் (2266) அவரை ஒறுத்தலும் (8871) வதைத்தலும் (8872) கடியப்பட்டது. பெண் கொலை பெரும் பழியாகும் (8873). கணவன் இறந்தபின் எரிமூழ்குதலும், கைம்மை நோற்றலும் போற்றப்பட்டன. கணவன் உயிருடன் இருக்கையில் அவன் உரிமை மகள் தன் கலன் கழித்தல் மறுக்கப்பட்டது (3920). இவையும் ஆணுக்காகவே பெண் என்பதைக் காட்டுகின்றன. கடவுள் ஊர்திகள் கூட மங்கலம் இழந்த மகளிர்க்கு இடமளிப்பதில்லை (8699) என்பதும் சுட்டத்தக்கது.

'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' எனும் தொல்காப்பியத் (1044) தமிழரின் கருத்தில் கம்பர் தமிழகத்திலும் மாற்றமில்லை (4654). மகளிர்க்குப் பாதுகாவலர் ஆடவர், அது அவர்களது கடமையாகும் (2207). காதலியோடு

ளிமூழ்கி விண்ணடைந்த சரபங்க முனியின் செயலை (2628) இவண் நினைவுகூரலாம். போர்த் தொழிலை ஆண் தொழிலாகப் பலவிடத்தும் (5983, 6079, 9021, 4285) பேசுகின்றார். போர்க்களத்திலிருந்து விலக்கப்படுபவருள் பெண்டிரையும் ஒருவராகக் குறிக்கும் தமிழ்மரபினை இதில் உணர்த்துகிறார்.

பெண்ணுக்கு அருங்கலம் எனச் சீதையையும் (4167), ஆடவர் திலகனாக இராமனையும் (4654) வருணித்தாலும் பெண்மைக்குச் சான்றாகத் தாரையையும், ஆண்மைக்குச் சான்றாகப் பரதனையும் கம்பர் ஏற்பதாகத் தோன்றுகிறது. வால்மீகியின் கருத்திலிருந்து மாறுபட்டுத் தாரையைக் கைம்மைக் கோலத்தில் காட்டுதலும், தற்கொண்டானைப் பேணி, தகைசான்ற சொற் காத்தவளாதலும், வானர குலத்தைக் காப்பவளாகவும் அமைதல் இவ்வெண்ணத்திற்கு அடிப்படையாகிறது. கம்பர் வேண்டிய பெண் கல்வி இவளிடம் பொருந்த உள்ளது. 'எத்தாயர் வயிற்றினும் பின் பிறந்தார்கள் எல்லாம் ஒத்தால் பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ?' (3977) என இராமன் பரதனைப் புகழ்தலும் சுக்கிரீவனைப் பரதன் எனப் பாராட்டுதலும் (4401) கம்பர் இராமனை 'விரதம் பூண்டு, உயிரினோடும் தன்னுடைய மீட்சி நோக்கும் பரதன் போன்று இருந்தான்' (9178) எனப் பேசுதலும், 'நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்?' (2220) எனக் கோசலையும், 'நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்' (2332) எனக் குகனும் பாராட்டியுரைத்தலும் பரதனுக்குக் கம்பர் தனிப்பெருமையளித்தலை வெளிப்படுத்துகின்றன.

பொதுவாக ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும்; அதன் மக்கள் எத்தகையர் என்பனவற்றைத் தம் கோசல நாட்டு வருணனையில் விளக்கி நிற்கும் கம்பர் ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கும் வழி காட்டுகிறார்.

தாய் ஒக்கும் அன்பின், தவம் ஒக்கும் நலம் பயப்பின்
சேய் ஒக்கும் முன்நின்று ஒரு செல்கதி உய்க்கும் நீரால்
நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும் நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவு ஒக்கும் எவர்க்கும் அன்னான் (171)

எனத் தயரதனைச் சான்றாக்குகிறார். பிறரிடத்துத் தன்னலமற்ற அன்பு செலுத்தும் தாயாகவும், மற்றவர்க்கு நலம் புரிதலில் செய்தவமாகவும், பெற்றோருக்கு, குடும்பத்திற்கு, சுற்றத்திற்கு நற்கதியருளும் மகனாகவும், பிறர் துன்பம் துடைக்கையில் நோய் தீர்க்கும் மருந்தாகவும் எங்கும் எப்பொழுதும் எதனைச் செய்தாலும் நன்கு சிந்தித்து அதன் விளைவுகளை எண்ணிச் செயல்படும் அறிவாகவும் வாழ வேண்டும் என்பது கம்பர் வாழ்விற்கு அளிக்கும் விளக்கம் எனவும் கொள்ளலாம். ஒவ்வொருவரிடமும் அன்பு, அருள், செயல் திறனுடன் கூடிய வேகம், குற்றம் களைதல், நல்லறிவு அனைத்தும் ஒருங்கிணைந்திருக்க வேண்டுகிறார்.

நல்லொழுக்க வாழ்வை வற்புறுத்தும் கம்பர் (69, 2398) நல்ல குணங்களை அழிக்கும் தீய சக்தியாக உலோபத்தைக் குறிக்கிறார் (363). ஈதலறம், பிறருக்குத் துணை நிற்றல் (9579), பொறுமை (6661) எனப் பிற நற்பண்புகளையும் ஆங்காங்கே காப்பியத்துள் இழைத்துள்ளார். 'பிறந்து இறந்து போய்ப் பெறுவதும் இழப்பதும் புகழே' (1472) என்றுரைத்து 'இசைபட வாழ்வாரே வாழ்வார்' எனும் வள்ளுவர் வாக்கிற்குத் துணை நிற்கிறார்.

கவிதைச் சிற்பி

கம்பரின் வெளியீட்டுத் திறன் கம்பராமாயணத்தை மாபெரும் கலைக் கோயிலாகக் காட்சிப்படுத்துகிறது. ஒப்பாரும் மிக்காரும் இல்லாக் கவியரசாக அவர் இன்றும் தனியரசு செலுத்துவதற்கு இத்திறமையே பெரிதும் துணையாகிறது. அவரின் இத்திறமைக்குச் சான்றாக ஒருசில கூறுகளில் ஒன்றிரண்டை இவண் காணலாம். இவை கம்பரின் மேதைமைக்கு, படைப்பாற்றலுக்கு, ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற நிலையில் அமைகின்றன.

1. சொல்லாட்சிச் சிறப்பு : சொல் தேர்ச்சியும் அவற்றை அடுக்கித்தரலும் சொற்சுவை, பொருட்சுவை நிறைந்து கற்பாரை வியக்கவைக்கின்றன. இராமனைக் குறிக்கும் அஞ்சன ஞாயிறு (1977), நீல் நிற ஞாயிறு (9580), கருஞாயிறு (2610, 6838) கருநிறக் களிறு (6750), சீதையைத் தவம் செய்த தவமாம் தையல் (6037) திருவின் முகத்துத் திரு அனாள் எனல் (5340), வீடணப்பசு (9566), கொதிக்கும் கண்ணர் (5495), கைம் மதில் (3649), மாலைப்பிறைப் பிள்ளை (3198), உவகைத் தேன் உண்டாள் (5139), முற்றிய ஞாயிறு போலும் முகத்தாள் (அயோமுகி 3584), சிவந்த குன்றின் மேல் நின்று குதித்தன பகலவன் குதிரை (6591), நீர்க்கோல வாழ்வு (7426), வில்லாளரை எண்ணின் விரற்கு முன் நிற்கும் வீரன் (இந்திரசித்து 8006), பூவர்க்கம் இமையோர் தூவ (8599), வாலியாம் பூக்கவர்ந்து உண்ணியும் போலும் (கும்பகர்ணன், இராமனிடம் 7552) என இவை வானத்து நட்சத்திரங்களாய் அளவிடற் கரியனவாய்க் காப்பிய மெங்கும் பரவிக் கிடக்கின்றன. கம்பர் தம் சொல் விளையாட்டை,

தெறித்த வன்தலை, தெறித்தன செறி சுடர்க் கவசம்
தெறித்த பைங்கழல், தெறித்தன சிலம்பொடு பொலந்தார்
தெறித்த பல்மணி, தெறித்தன பெரும் பொறித்திறங்கள்
தெறித்த குண்டலம்; தெறித்தன கண்மணி சிதறி (5520)

வெருண்டனர், வியந்தனர், விழுந்தனர், எழுந்தார்
மருண்டனர், மயங்கினர், மறிந்தனர், சிறந்தார்
உருண்டனர், உலைந்தனர், உழைத்தனர், பிழைத்தார்
சுருண்டனர், புரண்டனர், தொலைந்தனர், மலைந்தார் (5578)

எனப் பாடல் முழுவதுமாகக் காட்டுவதும் எண்ணிறந்தன.

2. வருணனை உயர்வு : ஒன்றினை வருணிக்கும் பொழுது வினாவாகத் தொடுத்தல், தன்னால் முழுமையாகக் கூறல் இயலாதெனல் (4511, 5268, 5281) என்பன பரவலாக அமைகின்றன. இராமனின் கணையாழி கண்ட சீதையின் நிலையை,

இறந்தவர் பிறந்த பயன் எய்தினர் கொல் என்கோ?
மறந்தவர் அறிந்து உணர்வு வந்தனர் கொல் என்கோ?
துறந்த உயிர் வந்து இடை தொடர்ந்தது கொல் என்கோ?
திறம் தெரிவது என்னை கொல், இந்நல்நுதலி செய்கை? (5291)

என்பதில் இரு கூறுகளும் இணைந்துநிற்கக் காணலாம். இத்தன்மையும் குறிப்பிடத்தக்களவு காணப்படுகிறது (4852).

3. அடை ஆழம் : நுணுகி ஆய்ந்து ஆய்ந்து அடைகளை அமைத்துள்ள திறம் தம் காப்பிய உருவாக்கத்திற்கு எவ்வளவு தூரம் கம்பர் உழைத்துள்ளார்; சிந்தித்துள்ளார் என்பதனைத் தெளிவாக்குகிறது. 'நோக்கத் தெளிவுடைத்தம்பி' என்பது இலக்குவனுக்கு அவரமைக்கும் அடைகளுள் ஒன்று. மாயமானை உண்மையான மானாகக் கருதி இராமனே மயங்க, இலக்குவன் அதனைக் கண்டளவிலேயே, அதன் உண்மையறிந்து, 'வெய்ய வல் அரக்கர் வஞ்சம் விரும்பினார் வினையின் செய்த கைதவமான் என்று, அண்ணல் காணுதி கடையின்' (3298) என்பது, இவ்அடைமொழிக்கு இலக்குவன் முற்றிலுமாகப் பொருந்துவதைக் காட்டுகிறது. 'முனிவினும் முளைக்கும் அன்பான்' (4329) எனவரும் பிறிதொரு அடை இலக்குவனின் பண்பு விளக்கமாகவும் பொருந்தக் காணலாம்.

4. உவமைக் கடல் : கம்பரிடம் கற்பாரை வியந்து நிற்கச் செய்யும் கூறுகளுள் அவரின் உவமையாற்றலும் ஒன்று. உவமைகளை அடுக்கடுக்காக எடுத்துரைத்தல் அவரின் பெருவிருப்பமாகத் தென்படுகிறது. ஒரு பொருளுக்கு ஒரு உவமை என்பதில் அவர் மனம் நிறைவடைவதில்லை எனத் துணிந்து கூறலாம். வருணனையிலும் இக்கூறு நிறைந்திருத்தல் கருதத்தக்கது. சான்றிற்கு,

நஞ்சினின், நளிர்நெடுங்கடலின், நங்கையர்
அஞ்சன நயனத்தின், அவிழ்ந்த கூந்தலின்
வஞ்சனை அரக்கர்தம் வடிவின், செய்கையின்
நெஞ்சினின் இருண்டது – நீல வானமே (4151)

எனும் பாடலைச் சுட்டலாம். இத்தகு உவமைகள் ஒன்றிற்கு மேற்பட்ட பாடல்களாக விரிந்து நிற்பதும் (5844–5847) உண்டு.

கதைமாந்தர் இயல்பிற்கேற்ப உவமையமைக்கும் அழகும் கவர்ந்திழுக்கும் ஒன்றாகும். பஞ்சவடி வந்தடைந்த இராம இலக்குவர்

சீதைக்குச் சடாயு பாதுகாவலாக நிற்பதை, 'சேக்கையில் பாம்பைப் பார்க்கும் பறவையின் பார்க்கின்றான்' (2731) என உவமிக்கின்றார். முதல் நாள் போரில் இராவணன் விட்ட வேலால் உணர்வு மயங்கிய இலக்குவனை எடுத்துச் செல்லும் அனுமனை, 'ஆண்தகை ஆயினும், அனுமன் மகவு கொண்டு போய் மரம் புகும் மந்தியை நிகர்த்தான்' (7229) எனக் காட்சிப்படுத்துகிறார்.

5. உயர்வு நவிற்சிப் பெருமை : கம்பரின் பேருள்ளம் கற்பனை வானில் சிறகடித்துப் பறப்பதால் எதனையும் மீவியற்கை தோன்ற, உயர்வு நவிற்சியுடன் படைத்தல் பெருகிக் காணப்படுகிறது. எடுத்துக்கொண்ட பொருண்மை புராணத்தன்மையது ஆதலின் காப்பியப் போக்கில் இது இயல்பாய்ப் பொருந்துகிறது. இராமன் ஒடித்த வில்லான கார்முகத்தின் பெருமையை உணர்த்த,

உறுவலி யானையை ஒத்த மேனியர்
செறி மயிர்க் கல் எனத் திரண்ட தோளினர்
அறுபதினாயிரர், அளவு இல் ஆற்றலர்,
தறி மடுத்து, இடையிடை தண்டில் தாங்கினார் (668)

என உரைத்திருப்பது ஓர் சான்றாகும். 'தோளொடு தோள் செலத்தொடர்ந்து நோக்குறின் நாள் பல கழியுமால்' (7382) எனக் கும்பகருணனைக் கண்டு இராமன் வியத்தல் பிறிதொரு சான்றாகும். இத்தகு உயர்வு நவிற்சிக் கற்பனைகளைக் கம்பர் வருணனைகளில் மிகுதியாகக் கையாண்டுள்ளார்.

6. தற்குறிப்பேற்றத் தகவு : கற்பனையின் உச்சங்களை எட்டிப்பிடித்துள்ள கம்பருக்கு அவற்றை வெளிப்படுத்தத் தற்குறிப்பேற்றம் பெருவாய்ப்பளித்துள்ளது. பம்பைப் பொய்கையில் செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் அன்னங்கள், சீதை சென்ற இடத்தை அறிந்துரைக்க இயலாத தம்மால் இராமனின் திருமுகத்தைப் பார்க்க இயலாது என்று தம்மைத்தாமே மாய்த்துக் கொள்ள தீப்புகுந்தன போல் தோன்றுகின்றனவாம்.

அரிமலர்ப் பங்கயத்து அன்னம், எங்கணும்
'புரிகுழல் புக்க இடம் புகல்கிலாத யாம்
திருமுகம் நோக்கலம் இறந்து தீர்தும்' என்று
எரியினில் புகுவன எனத் தோன்றும் ஈட்டது (3715)

என்பது அவ் அழகிய பாடல். இத்தகு பாடல்கள் பலவும் கம்பராமாயணத்துள் செறிந்துள்ளன.

7. குறியீட்டுப் பொலிவு : கவிஞரின் அறிவாற்றலைப் புலப்படுத்துவதில் குறியீடுகளும் பெரும் பங்காற்றுகின்றன. மரபுக் குறியீடு, தனிக்குறியீடு, கதைமாந்தர் பண்பு விளக்கக் குறியீடு, முரண் குறியீடு, உணர்ச்சி விளக்கக் குறியீடு, நிகழ்ச்சிக் குறியீடு, கூற்று உரை தரும்

குறியீடு, பொருள் குறியீடு எனப் பலவாக இவை காப்பியம் முழுமையும் பரவியுள்ளன. சான்றிற்கு ஒன்றை மட்டும் நோக்கலாம்.

போர்க்களத்தின் உச்சக்கட்டத்தில், தன் தோல்விகளுக்கெல்லாம் வழிகாட்டியவன் வீடணனே என முனிந்த இராவணன் போர்க்களத்தில் அவன் மீது வேல் எறிய அதனை இலக்குவன் தாங்கிக் கொள்கிறான். அதனைக் கண்ட அரக்கர் கோன் 'வென்றி என் வயம் ஆனது. வீடணப் பசுவைக் கொன்று இனிப் பயன் இல்லை' (9566) என மீள்கிறான். இங்குப்பசு என்பது வீடணனுக்கு மிகப் பொருத்தமான குறியீடாகும். முரட்டுத்தன்மையுடன் போர்த்தொழிலில் பெருவிருப்புடன் திகழும் காளைக்கு எதிரான அமைதியான பண்புடன் பால் சுரந்து உயிர்கட்கு நல்கி உயர்வளிக்கும் நிலையில் தெய்வமாகப் போற்றப்படுவது பசு. கம்பர் சொற்களைத் தேடி திறனறிந்து ஆழமறிந்து கையாளுகிறார் என்பதை இதற்குரிய விரிந்த விளக்கம் உணர்த்தும்.

அ) அறத்தின் பாற்பட்டு சீதையை விடுத்துப் போராகிய அழிவினின்றும் தன்னையும் தன் குலத்தையும் காத்துக்கொள்ளும்படி இராவணனிடம் வேண்டல். ஆ) பசுவின் பால் கன்றிற்கு மட்டுமின்றி உலகுக்கும் பயன் தருவது. தன் இனத்தவர்க்கு அறிவுரையாகிய பால் வழங்கினான். ஏற்க வேண்டியவர் ஏற்கவில்லை; மானிடர்க்கு அவன் கருத்துதவியாகிய பால் நல்கினான்; ஏற்றனர். வாழ்வு பெற்றனர், வீடணனின் உதவியின்றி இராம இலக்குவர் இந்திரசித்தின் மாய மந்திர தந்திரங்களை, கும்பகர்ணனை, மூலபலத்தை அழித்திருத்தல் இயலாது என்பது வெளிப்படை. இவை பசுவின் பால் தரும் பண்புடன் இணைந்து செல்கின்றன. இந்திரசித்தை வீழ்த்திவந்த இலக்குவனை நோக்கி இராமன்,

ஆடவர் திலக! நின்னால் அன்று; இகல் அனுமன் என்னும்
சேடனால் அன்று; வேறு ஓர் தெய்வத்தின் சிறப்பும் அன்று
வீடணன் தந்த வென்றி ஈது (9185)

எனப் போற்றுவது இவண் காட்டத்தக்கது. இ) பதியாகிய இராமன் முன் பசுவாகிய வீடணன் சென்றடைந்தான் எனினும் பொருந்தும் எனப் பல்பொருள் பரந்து சிறப்பிக்கின்றன.

8. பாங்காயின பிற : கற்பாருக்கு இலக்கிய இன்பம் நல்கும் அனைத்துக் கூறுகளையும் தம் காப்பியத்துள் அடக்கிய கம்பர் அதன் நீட்சி, மருட்சியை உருவாக்கா திருப்பதிலும் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளார். காப்பியக் களம் அயோத்தி, வனம், கிட்கிந்தை, இலங்கை எனப் பலவாக அமைதலினால் ஒரிடத்து நிகழ்வனவற்றை அக்காலையில் பிறவிடத்து நிகழ்வது யாது என எண்ணும் கலைஞர்க்கு அவ்வப்போது தேவையான இடங்களில் அடை, உவமை, வருணனை அல்லது கூற்று வழி உணர்த்துகிறார். சான்றிற்கு ஒன்று: சிறை செய்யப்பட்ட சீதை உயிருடன்

இருக்கிறாளா? எப்படி இருக்கிறாள் என்ற கேள்விக்குக் கூதிர்காலத்தில் கலக்கமுற்ற மயில்களைக் காட்டுகையில் 'மஞ்சு உறு நெடுமழை பிரிதலால், மயில் அஞ்சின மிதிலை நாட்டு அன்னம் என்னவே' (4259) எனப் பதிலிறுக்கிறார். உயிருடன் அவள் இருப்பினும் துன்பத்தால் துவண்டுகொண்டிருக்கிறாள் எனக் காட்டுகிறார். இத்தகு காட்சிகளும் காப்பியத்துள் நிறைந்து பொதிந்து கம்பராமாயணத்தை அழகுபடுத்தியுள்ளன.

நீண்ட கதையமைப்பால் நிகழ்ந்தனவற்றைக் கற்பார் மறந்துவிடல் கூடாது என்பதற்காக அவ்வப்போது உவமை (3463, 4280), வருணனை (7659), கூற்று (8942), வாயிலாக நினைவூட்டும் உத்தியை மிகுதியாகக் கொண்டுள்ளார்.

ஈரம் நீங்கிய சிற்றவை சொற்றனள் என்ன
ஆரம் வீங்கு தோள் தம்பிக்குத் தன் அரசு உரிமைப்
பாரம் ஈந்தவன், 'பரிவு இலன், ஒருவன் தன் இளையோன்
தாரம் வெளவினன்' என்ற சொல் தரிக்குமாறு உளதோ? (3854)

என்பது போன்று அவை மிக இயல்பாகக் கதையோடு ஒன்றி நின்று நினைவூட்டுகின்றன. அவ்வப்போது நிகழ்ந்தவற்றைக் கதைப்போக்கில் தொகுத்துரைத்தலும் (5300–5321) காப்பிய உத்தியாகச் சிறந்துள்ளது. இத்தொகுப்பு கேட்போர், சூழல் இவற்றிற்கு ஏற்ப விரிவோ, சுருக்கமோ கொள்கின்றது. கூறியது கூறலாக அமைந்து அதுவே கதைப்போக்கிற்குத் தடங்கலாக அமையாதவாறு சுருங்கவுரைத்தல் (2722, 3778) மிகுதியாக அமைந்துள்ளது குறிப்பிடற்பாலது. காப்பியத்தின் முடிவில் அனுமன் பரதனுக்கு நிகழ்ந்தவற்றை விவரிக்கு முகமாக (10210–10236) அமையும் தொகுப்பு காப்பியக் கட்டமைப்பில் அதன் நிறைவினை உணர்த்தும் உத்தியாகப் பொருந்துகிறது.

கம்பரின் நினைவாற்றலும் காப்பியத்துள் பளிச்சிடும் ஒன்றாம். பலவிடங்களில் இதன் பெருமை சுவைஞரை வியந்து நிற்கச் செய்கிறது. இராமன் காடேகுவதை, 'பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான் மையோ, மரகதமோ, மறிகடலோ, மழைமுகிலோ, ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகுடையான்' (1926) எனக் காட்டியவர், சீதையின் பிரிவின் பின் அதனை நினைவுகூர்ந்து 'தாமரைச் செங்கணான், தம்பியும், தானும், சிந்தையின் மங்கையும் அவ்வழி அன்று வைகினான்' (4406) எனமாற்றியமைக்கிறார். உடலால் சீதை பிரிந்தாலும் இராமனுடன் உள்ளத்தால் ஒன்றி நிற்பதையும் இதனால் உணர்த்தி விடுகிறார்.

கதை, கதைமாந்தர், கதை நிகழ்வுகள் எனப் பலவும், இயல்புக்கு மாறான மீவியற்கையுடன் அமையினும் அவற்றைத் தருகின்ற முறையில் கம்பர் உலகியல்பினை வருவிக்க முனைந்துள்ளதும் அவருக்குப் பெருமைதரும் ஒன்றாம். சான்றாக அனுமன் செய்யும் போரில் அவனது

பிறப்பான குரக்கியல்பு,

> *வாரிக் குரை கடலில் புக விலகும்; நெடுமரத்தால்*
> *சாரித்து அலைத்து உருட்டும்; நெடுந்தலத்தில் படுத்து அரைக்கும்*
> *பாரில் பிடித்து அடிக்கும் குடர்பறிக்கும் படர்விசும்பின்*
> *ஊரில் செல, எறியும், மிதித்து உழக்கும், முகத்து உதைக்கும்*
> *(7886)*

என வெளிப்படக் காணலாம்.

நிகழ்ச்சியை வருணிக்கையில் அதனை அப்படியே கற்பார் கண்முன் காட்சிப்படுத்தும் சொல்லாற்றல் கம்பருக்குக் கைவந்த கலை. வீடணன் மேல் இராவணன் எறிந்த வேலை, அடைக்கலம் புகுந்த அவனைக் காப்பதைக் கடனாகக் கொண்ட

> *இலக்குவற்கு முன் வீடணன் புகும்; இருவரையும்*
> *விலக்கி, அங்கதன் மேற் செலும்; அவனையும் விலக்கி,*
> *கலக்கும் வானரக் காவலன்; அனுமன் முன் கடுகும்*
> *அலக்கண் அன்னதை இன்னது என்று உரை செயல் ஆமோ?*
> *(9561)*

என்பது போன்று உள்ளத்தைப் பிணிக்கும் காட்சிப்பாடல்கள் எண்ணிறந்தன. தமிழிலக்கிய உலகில் கம்பர் கொண்ட வெற்றிக்கு இவையும், உணர்ச்சிகளை உருவாக்கும் மெய்ப்பாட்டுச் சித்திரங்களும் வழி வகுத்துத்தந்தன என்பதில் சற்றும் மிகையில்லை. இடனறிந்து முன்னிகழ்வைப் பின்சுட்டல் பின்னிகழ்வை முன்சுட்டல் போன்ற பிறவும் துணையாயின.

பம்பைப் பொய்கையை வருணிக்கும் கம்பர் அதனைக் 'கற்பகம் அனைய அக்கவிஞர் நாட்டிய சொற்பொருள் ஆம் எனத் தோன்றல் சான்றது' (3713) எனப் பாராட்டுவார். அது அவருக்கும் சாலப் பொருந்தும்.

கம்பர் யார்

எந்த ஒரு படைப்பாளியும் விரும்பியோ, விரும்பாமலோ எப்படியேனும் தம்மைத் தம் படைப்புள் இனங்காட்டிவிடுவர். ஏதேனும் ஒரு கதைமாந்தர், கதை நிகழ்ச்சி, ஏதேனும் ஒன்றைத் திரும்பத் திரும்ப பலவிதமாகக் கூறுதல் போன்றவற்றில் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ வெளிப்படுவர். அம்முறையில் கம்பராமாயணத்தில் வெளிப்படும் கம்பர் யார் எனக் காண விழைந்த பொழுது கீழ்க்கண்ட எண்ணங்கள் வெளிப்பட்டன.

1. தமிழ், அகத்தியர், வள்ளுவர் மீது மாளாக் காதல் கொண்டவர். தமிழ்ப்பற்றும் அகத்தியர்பற்றும் தனித்து முன் காட்டப்பட்டுள்ளன. திருக்குறளின் தொடர்களையும், கருத்துகளையும் பெருமளவு கையாண்டும் அவ்வப்போது உரையாசிரியராகப் (8272) பொலிந்தும் தம் வள்ளுவக் காதலைத் தெரிவிக்கிறார். வள்ளுவரை எப்படியெல்லாம் தம் நூலுள்

கம்பர் போற்றியுள்ளார் என்பதனை மிக விளக்கமாகவும், தெளிவாகவும் ச.தண்டபாணிதேசிகர் தம் 'வள்ளுவரும் கம்பரும்' நூலுள் பேசியுள்ளார். ஆய்வாளர் கருத்துக்கு இந்நூல் அரணாகும்.

2. கல்வியிற் பெரியவர் கம்பர். தமக்கு முன் தோன்றிய தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்து தோய்ந்தவர். வடமொழிப் பயிற்சியும் மிக்கவர் என்பதுடன் அதன் பற்றாளர் என்பதிலும் ஐயமில்லை. உளவியல் அறிவும் நிறைந்தவர்.

3. அரசியல் அறிவு மிக்கவர் என்பது மட்டுமின்றிச் சிறந்த சமூகச் சிந்தனையாளரும் ஆவர் என்பதை அவரது இன்பக் கனவுலகான கோசலமே மெய்ப்பிக்கும்.

4. தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலுக்குக் காப்பியத்துள் அவரளித்துள்ள இடம் அவரைச் செய்ந்நன்றி மறவாத பண்பாளராக வெளிப்படுத்துவது அனைவரும் அறிந்ததாம்.

5. வாழியர் அந்தணர், வாழி நல் அறம் (5168), கரியமாலினும்... பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால் (1413), அறநெறி அந்தணாளரின் (2201), உறையுளை எரித்தோன் பாவி (2205), அந்தணர்க்கு ஆகும் நாம் அரக்கர்க்கு ஆகுமோ (4249), அறம் தவா நெறி அந்தணர் தன்மையை மறந்த புல்லர் வலி தொலையேன் எனின் இறந்து போகினும் நன்று (2649) என்பன போன்ற தொடர்களால் அந்தணர் மீது மிகுந்த மதிப்புடையவர் என்பது தெளிவாகிறது.

6. ஊழின் மீதுள்ள தம் நம்பிக்கையை, 'எக்குலங்களின் யாவரே ஆயினும் இருவினை எல்லோருக்கும் ஒக்கும் ஊழ்முறை அல்லது வலியது ஒன்று இல்' (5039) என்பது போன்றவற்றால் நிறுவுகிறார். மறுபிறப்பில் நம்பிக்கை கொள்வதை, 'நல்வினைப் பயன்கள் எல்லாம் மாறிய பிறப்பில் தேடி வருவபோல்' (395); 'மாசுஉறு பிறவி போல வருவது போவது ஆகி' (488) என்பனவற்றால் அறியலாம். விதியிலும் ஆழ்ந்த நம்பிக்கை பெற்றிருந்ததை, 'பிறவியின் இன்ப துன்பம் தான் விதிவயம் என்பதை மேற்கொளாவிடின் மதிவலியால் விதிவெல்ல வல்லமோ,' (3508) என்பதாலும், பிறவிடத்தும் இதனை வலியுறுத்தியிருப்பதாலும் (3146, 3510) தெரியலாம்.

7. வறுமைத் துன்பத்தை அணு அணுவாக அனுபவித்தவர் என்பதும் உணர முடிகிறது. தமது கற்பனைக் கோசலத்துள் உழவரை 'வறியவர்க்கு உதவி, மிக்க விருந்து உண மனையின் உய்ப்பார்' (51) எனக் காண்பதும், சிலர்க்கு 'பழங்கணோடு இரந்தவர் பரிவு தீர்தர வழங்கவும் பொழுது போம்' (159) என நவில்வதும், பூவையரிடம் 'பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால் வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்தும் அன்றி விளைவன யாவையே' (67) என வியப்பதும், 'வண்மை இல்லை ஓர் வறுமை

இன்மையால்' (84) என மொழிவதும் இவற்றிற்கெல்லாம் மேலாக 'எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ' (166) எனப் பொதுவுடைமை பேசுவதும் வறுமைத்தாக்கத்தின் விளைவே எனக் கருத இடமளிக்கின்றன.

8. அனைவரும் மதிக்கும் உயிரினை 'உயிர் கள்' எனல் (3844), மகிழ்ச்சிப் பெருக்கினை 'கனிந்த இன்களி கள்ளினில் காட்டுமோ' (9974) என வியத்தல், அன்பின் ஆரவாரத்தை 'ஒரு கள்ளின் தோன்றிற்றன்றே' (10202) எனக் காட்டல், தாம் பெரிதும் போற்றும் தமிழை உவமமாக்கித் 'தமிழ்நிகர் நறவம்' (4557) எனப் போற்றுதல் முதலானவற்றை நோக்கும் பொழுது கள்ளுண்டு களித்தலில் பெருவிருப்புடையராய் இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

நிறைவு

இராமனின் மேனியழகை வருணிக்கும் கம்பர்,

தோள் கண்டார், தோளே கண்டார், தொடு கழல் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார், தடக்கை கண்டாரும் அஃதே
வாள் கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்? (1081)

என்பார். கம்பர் காப்பியக் கடலுள் புகும் அன்பர் நிலையும் அதுவே. எண்ணற்ற ஆய்வுகள் கம்பராமாயணத்துக்கு எழுந்துள்ளன. எனினும் அவை யாவும் முழுமையாகக் கம்பரின் அறிவை, திறமையை, மாட்சிமையைப் புலப்படுத்தியுள்ளன எனக் கூறஇயலாது. கம்பரின் கம்பன் அள்ள அள்ளக் குறையாத ஆழ்கடல்; சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டாத இன்னமுது; தொட்டனைத்து ஊறும் இன்பக் கேணி; நூலுக்கு இலக்கணம்; அறிவுச் சுரங்கம்; தமிழின் தமிழரின் நற்பயன். அதன் ஒவ்வொரு பாடலும் முத்துடைச் சிப்பி. அறிவுச் சூரியராம் கம்பரின் காப்பியப் பெருமை இக்கட்டுரையில் சிறிதளவே தொட்டுக் காட்டப்பட்டுள்ளது. முழுமையை அறியும் பொழுது வியப்புக்கடலிலிருந்து மீளல் இயலாது என்பது பேருண்மை.

இதயத்தை விரிவாக்கி இன்பம் சேர்க்கும்
எந்நாளும் அழியாத அன்பை ஆர்க்கும்
விதமொத்த நடையழகில் வியப்பைக் கூட்டும்
வெவ்வேறு வருணனைகள் சிறப்பைக் காட்டும்
பதத்துக்குப் பதம் உயர்ந்த பண்பை ஆக்கும்
பக்குவமாய் அஞ்ஞான இருட்டை நீக்கும்
கதை சொல்லும் வேகத்தில் கருத்தை ஈர்க்கும்
கம்பன் செய் ரசவாதக் கலைதான் என்னே!

– கம்பன்மலர் (கம்பன் கழகம், கோவை) 1984

பதிப்புகள்

தமிழிலக்கிய உலகில் பழந்தமிழ் நூல்களுள் பலரால் பலவாறாகப் பதிப்பிக்கப்பட்ட பெருஞ்சிறப்புடையது கம்பராமாயணம். படலம், படலங்கள், காண்டம், காண்டங்கள், முழுமை, மூலம், மூலமும் உரையும், சுருக்கம், வசனம் எனப்பல இயல்புகளுடையதாக இதன் பதிப்புகள் அமைகின்றன. அறிந்த வரையில் 1842இல் 'பிரகலாதன் சரித்திரம் என்கிற நரசிங்க விஜையம்' எனும் இரணியன் வதைப் படலமே முதலாவதாக வெளிவந்துள்ளது. கல்விக் களஞ்சிய அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்ட இந்நூலின் பதிப்பாசிரியர் யார் என்பது தெரியவில்லை. வீரராகவ முதலியார் இதற்கு உரை வரைந்துள்ளார்.

தமிழின் முதல் அச்சு நூலுக்கும் (டௌட்ரினா கிறிஸ்டா – Doutrina Christa 1578) கம்பனின் முதல் அச்சுப்பதிப்பிற்குமிடையே சுமார் மூன்று நூற்றாண்டுக் கால இடைவெளி காண்கிறோம். கம்பன் காவியம் அளவில் மிகப் பெரியதாய் இருக்கின்றமையும் அச்சில் பதிப்பிக்கும் வாய்ப்புகள் அக்காலச் சூழலில் மிகக் குறைவாய் அமைந்திருந்தமையும் இதற்குக் காரணங்களாகும். கம்பராமாயணம் பெரும்பான்மையும் பகுதிபகுதியாகவே பதிப்பிக்கப்பட்டுள்ளமை இதனை வலியுறுத்தும். பதிப்பாசிரியர் பலர் ஓரிரு காண்டங்களுடன் தம் பதிப்புப் பணியை நிறுத்திக் கொண்டமையையும் இவண் கருதலாம் (பார்க்க : பின்னிணைப்பு 2).

திருவேங்கடாசல முதலியாரின் பாலகாண்டப் பதிப்பு 1843 இல் வெளிப்போந்து கம்பன் பதிப்புகளுக்கு முன்னோடியாகியுள்ளது. ஆய்வாளரின் நேரடிப் பார்வையில் அறியப்பட்ட இவ்விளக்கம் வையாபுரிப்பிள்ளையின் கம்பன் காவியத்துள்ளும் (ப.70) ஏற்கப்பட்டுள்ளது. ஆனால் நூலின் இறுதியில் உள்ள கம்பராமாயணப் பதிப்பு விவரத்தில் (ப.170) பதிப்பு ஆண்டு 1840 எனக் குறிக்கப்பட்டுள்ளதால் இதில் சிறு குழப்பமுள்ளது. எனினும் இவரது முயற்சியை முதன்மையானதாகக் கொள்வதில் தவறில்லை.

இதன் பின் கம்பராமாயணப் பதிப்புகள் ஓரளவு வேகம் கண்டுள்ளன. தனித்தனி காண்டங்கள், காண்ட இணைவுகள், முழுமை காட்டும் தொகுதிகள் எனச் சுமார் 80 பதிப்புகள் அச்சுவாகனம் ஏறியுள்ளன. இவற்றுள் இருபதிற்கு மேற்பட்டவை முழுமை பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது (பார்க்க : பின்னிணைப்பு – 1). முதல் பதிப்பாசிரியரையே முதல் முழுமைப் பதிப்பாசிரியராகவும் வையாபுரிப் பிள்ளை சுட்டியுள்ளார் (ப.170). சுப்பராய முதலியாரும் சுப்பராயபிள்ளையும் இணைந்து (1858), கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை (1861–1864) என இதன் தொடர்ச்சியமைகிறது.

புங்கத்தூர் கந்தசாமி முதலியாரின் பதிப்பாகக் கம்பரின் பால, ஆரண்ய, கிட்கிந்தா, சுந்தர, யுத்த காண்டங்கள் கிடைக்கின்றன. இவர் முதல் மூன்று காண்டங்களைப் பதிப்பித்துள்ளதாக மர்ரே ராஜம் பதிப்பு முன்னுரையால் அறிகிறோம். எனவே இவராலும் கம்பராமாயணத்துக்கு முழுமையான பதிப்பு 1863–1864 ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ளதாக ஊகிக்கலாம். இவரோடு இந்நூல் பதிப்புகள் சிலவற்றிற்கு ஒருங்கிணைந்து செயல்பட்ட வி.கோவிந்தபிள்ளையையும் முழுமைப் பதிப்பாளராக மயிலை. சீனி.வேங்கடசாமி (பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழிலக்கியம், ப.220) குறிப்பிட்டுள்ளார். மற்றும் இவர் (மேற்படி.ப.389) 1886 இல் இருபகுதியாகக் கம்பராமாயணம் வெளிவந்துள்ளதாகவும் கூறியுள்ளார். இது முன் சுட்டிய வி.கோவிந்தபிள்ளையின் பதிப்பா அல்லது வேறுபட்டதா என்பது அறியுமாறில்லை. புங்கத்தூர் கந்தசாமி முதலியாரும், வி.கோவிந்தபிள்ளையும் தனித்தனியாகவும் இந்நூற் பதிப்பில் ஈடுபட்டிருந்ததைப் பின்னிணைப்பு – 2 உணர்த்தும். இவற்றின் பின் 1884–85 இல் தேவராச கவிராயர், 1896இல் மயிலை சண்முகம் பிள்ளை ஆகியோர் பதிப்புகள் வெளிவந்துள்ளன.

சென்னை ராஜதானி பாடசாலைப் புத்தக சங்கத்தார் 1878 இல் பாலகாண்டம் மூலம் கம்பராமாயணப் பதிப்பில் முனைந்துள்ளனர். அயோத்தியா, ஆரணிய, கிட்கிந்தா காண்டங்கள் வெளிவந்துள்ளன. 1873 இல் திருமழிசை முத்துசாமி முதலியார் பால முதல் சுந்தர காண்டம் வரை பதிப்பித்துள்ளதும் அறிய வருகிறது. இவ்விருவராலும் யுத்தகாண்டம் உட்பட்ட முழுமைப் பதிப்பு வெளிவந்திருக்குமோ என்ற ஐயப்பாட்டிற்கு விடைகாண வழியில்லை. சென்னை ராஜதானி பாடசாலைப் புத்தக சங்கத்தார் 1868–1883 ஆம் ஆண்டுகளில் பள்ளி மாணவர்களுக்கான பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரையிலான சுருக்கப் பதிப்பு ஒன்று வெளியிட்டுள்ளதாக வையாபுரிப்பிள்ளை நவில்வதும் (முன்சுட்டியது ப.175) எண்ணத்தக்கது. சா.வ.திருவேங்கட நாயுடு பெயரில் பால, யுத்த – உத்தர காண்டங்களுக்கான பதிப்புகள் அறிய வருகின்றன. இவரும் முழுமையாகப் பதிப்பித்திருக்கலாம் என எண்ண இடமுண்டு.

இப்பழம் பதிப்புகளின் பின் இருபதாம் நூற்றாண்டின் முதல் முழுமை பதிப்பாக 1911 இல் அ.சுந்தரநாதபிள்ளையின் இரு தொகுதிகள் அமைகின்றன. தொடர்ந்து நூற்றாண்டின் இறுதிவரையிலும் குறிப்பிடத்தக்க சிறந்த பதிப்புகளாக வை.மு.கோ, உ.வே.சா. நூல்நிலையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மர்ரே ராஜம், சென்னை கம்பன் கழகம், கம்பன் அறநிலை முதலானவை அமைகின்றன.

காண்டவாரியான பதிப்புகளில் பால காண்டமே மிகுதியாக வெளிவந்துள்ளது (20). பிற காண்டங்கள் முறையே அயோத்தி (9), ஆரணிய (10), கிட்கிந்தா (9), சுந்தர (9), யுத்த (2) என அமைகின்றன.

எம்.ஆர்.கந்தசாமிக் கவிராயர் மற்றும் எஸ்.வெங்கடராயுலு நாயுடு, சோடசாவதானம் சுப்பராயசெட்டியார், பி.ஆர்.கிருஷ்ணமாச்சாரியார் மற்றும் பண்டித சவரிராயபிள்ளை, வை.மு.சடகோபராமானுஜாசாரியார், டி.என்.சேஷாசலம், கு.அழகிரிசாமி முதலியோர் குறிப்பிடத்தக்கவராவர். ஒருசில படலங்களுக்கான பதிப்பில் வையாபுரிப்பிள்ளையும் பெ.நா.அப்புசாமியும் இணைந்து 1937இல் பதிப்பித்த பாலகாண்ட (முதல் ஏழு படலங்கள்) வெளியீடு சுட்டத்தக்கது. இத்தகையன மிகக் குறைவே. பதிப்பாசிரியர்களை நோக்கும்பொழுது ஒன்றுக்கு மேற்பட்டோர் இணைந்து கம்பராமாயணப் பதிப்பில் ஈடுபடுவதும் பின் அவர்கள் தனித்துப் பதிப்பில் ஈடுபட்டுள்ளதும் அறிய வருகின்றன. திருவேங்கடாசல முதலியாருடன் இணைந்து ஆரணிய காண்டத்தை 1844இல் பதிப்பித்த சேமங்கலம் இராமசாமி முதலியார் பின் 1870 இல் தனித்து அதனை வெளியிட்டுள்ளது சான்றாகும். 1924 இல் பால காண்டத்தைத் தனித்துப்பதிப்பித்த நமசிவாய முதலியார் 1925 இல் சுந்தர காண்டத்திற்கு மயிலை சண்முகம் பிள்ளையுடன் இணைந்து செயல்பட்டிருப்பதும் குறிக்கத்தக்கது. அறிந்த வரையில் ஒரே பெண் பதிப்பாசிரியராக ருக்மணி தேவி அமைகிறார். தொல்காப்பிய முதல் பதிப்பாசிரியரான மழவை மகாலிங்கையர் பால காண்டத்தைப் பதிப்பித்துள்ளமை சுட்டத்தக்கது. இலங்கையைச் சார்ந்த அ.குமாரசாமிப்பிள்ளை, தி.த.கனகசுந்தரம் பிள்ளை ஆகியோரும் கம்பன் பதிப்பில் ஈடுபட்டுள்ளனர். கிறித்துவரான பண்டித சவரிராயபிள்ளையும் இதில் ஆர்வம் காட்டியது குறிக்கத்தக்கது. தொடக்கத்தில் ஒருவர், இருவர் என இருந்த பதிப்புநிலை இருபதின் நடுக்கூறு முதல் குழுவாகப் பலர் இணைந்து செயல்படும் தன்மையாக மாறியது சுட்டத்தக்கதாகும்.

ஒருவரின் பதிப்பினைப் பின்பற்றி மற்றவரும் பதிப்பிக்கும் போக்கு கம்பராமாயணப் பதிப்பு வரலாற்றின் தொடக்க முதல் இன்று வரை காணப்படுகிறது. புங்கத்தூர் கந்தசாமி முதலியார் போன்று சுப்புராய முதலியாரும், சுப்பராய பிள்ளையும் இணைந்து பாலகாண்டத்தினைத் திருவேங்கடாசல முதலியாரின் பதிப்பினை அடியொற்றிப் பதிப்பித்துள்ளனர். இராசகோபால பிள்ளை தம் ஆரணிய காண்ட பதிப்பிற்குத் திருவேங்கடாசல முதலியாரும் சேமங்கலம் நாராயணசாமி முதலியாரும் இணைந்து பதிப்பித்த பதிப்பைத் துணை கொண்டுள்ளார். சென்னை, கம்பன் கழகப் பதிப்பு மர்ரே ராஜம் வெளியீட்டை அடியொற்றியது. கம்பன் அறநிலைப் பதிப்பும் இதனைப் பின்பற்றியுள்ளதுடன் தேவையான இடங்களில் சென்னை, கம்பன் கழகப் பதிப்பினையும் மேற்கொண்டுள்ளது. அச்சான நூல்களுடன் மற்றும் நாற்பதுக்கும் மேற்பட்ட சுவடிகளைக் கொண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு அமைந்துள்ளது குறிக்கத்தக்கது.

உ.வே.சா. நூல் நிலைய வெளியீடான பாலகாண்டப் பதிப்புரையில், 'நிலையத்தில் உள்ள கம்பராமாயணக் கருப்பொருள் பொழிப்புரை என்பவற்றைக் கொண்ட ஏட்டுச் சுவடிகளில் கண்ட சில உரைப்பகுதியில் பொருத்தமான இடங்களில் 'ஒரு பழையவுரை' எனக் காட்டப்பட்டுள்ளன' (VI) எனக்குறித்துள்ளனர். இதனால் கம்பராயணத்துக்கு ஒரு பழைய உரை இருந்திருக்க வாய்ப்பமைகிறது. ஆனால் அது முழுமையானதா? எத்தன்மையது என்பது போன்ற வினாக்களுக்கு விடை தெரியவில்லை. கம்பராமாயணத்தை நூறு பாடல்களில் சுருக்கித்தரும் 'கம்பராமாயணக் கருப்பொருள் மூலமும் உரையும் – ஆங்கிலேய மொழிபெயர்ப்புடன்' எனும் நூலொன்றும் ஊ.புஷ்பரத செட்டி அண்டு கம்பெனியாரால் 1910 இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதுவும் அதுவும் ஒன்றா அல்லது வேறா என்பதும் அறியப்படவில்லை.

தொடக்க காலப் பதிப்புகள் சில அரும்பதவுரை, குறிப்புரை, பதவுரை போன்றவற்றுடன் தோன்றியுள்ளன. அரும்பதவுரையும் குறிப்புரையும் கொண்ட பதிப்புகள் எல்லா அரும்பதங்களுக்கும் உரை நவில்கின்றன எனக் கூற முடியாது. அங்கொன்றும் இங்கொன்றுமாக மிகச் சிறிதளவே காட்டுகின்றன. வெ.நா.ஸ்ரீநிவாஸய்யங்கார் வெளியீட்டில் பால, ஆரணிய காண்டங்கள் குறிப்புரை கொண்டுள்ளன. ஏனைய மூலம் மட்டுமே. டி.கே.சி.யின் பதிப்பு முதல்பகுதி அரும்பதவுரையாகவும், இரண்டாம் மூன்றாம் பகுதிகள் பதவுரையாகவும் அமைகின்றன. வை.மு.கோ, உ.வே.சா, அண்ணாமலை, கம்பன் அறநிலைப் பதிப்புகள் விரிவான விளக்கமான உரைகளைத் தந்துள்ளன. அறிந்த வரையில் மயிலை சண்முகம் பிள்ளை முதலுரையாசிரியராகவும் கிடைப்பனவற்றுள் வை.மு.கோபால கிருஷ்ணமாசாரியாரின் உரையே முதன்முதலில் எழுந்த முழுமையான விரிவான உரையாகவும் தெரிகின்றன. வை.மு.கோ, உ.வே.சா.உரைகளை அப்படியே தேவையான இடங்களில் கம்பன் அறநிலைப் பதிப்பு கொண்டிருப்பது (ப.8) சுட்டத்தக்கது. காண்ட அளவில் 1861இல் பாலகாண்டத்திற்கு எழுந்த உரையே முதல் உரையெனக் கொள்ளலாம். இதன் உரையாசிரியர் யாரெனத் தெரியவில்லை. சுந்தர காண்டத்திற்கு 1864 இல் வி.கோவிந்த பிள்ளையும், 1889இல் அயோத்தியா காண்டத்திற்குச் சேஷசாஸ்திரியும் உரையெழுதியுள்ளனர். சோடசாவதானம் சுப்பராய செட்டியார் 1904 இல் அயோத்தியா காண்டத்திற்கு உரை யெழுதியுள்ளார். இவர்களைக் குறிப்பிடத்தக்க பழைய கம்பன் உரையாசிரியர் எனக் கொள்ளலாம்.

பிற்காலப் பதிப்புகளில் பதிப்பாசிரியர் பலர் குழுவாக இணைந்து செயல்பட்டது போன்றே அவற்றின் உரையாசிரியரும் குழுவாக ஒருங்கிணைந்துப் பணியாற்றியுள்ளனர் (பார்க்க :கம்பன் உரையாசிரியர்). மிகச் சிறந்த உரையாசிரியர் என்ற பெருமை கலாநிலயம்

தி.என்.சேஷாசலத்திற்கு உரியதாகும். கலாநிலயம் தொகுதி ஒன்று முதல் ஏழுவரையிலும் பால காண்டம் முதல் கிட்கிந்தா காண்டம் அரசியற்படலம் வரையிலுமான சுருக்கம் இவரது உரையுடன் அமைந்துள்ளது. இவரது உரையின் ஒவ்வொரு பகுதியும் தனித்தனிக் கட்டுரையாக வடிக்கப்பட்டுள்ளன. கவிநயம், கதைமாந்தர் பண்புநலன்களை இந்திய, உலக மொழி இலக்கியங்களுடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ள திறனும் இயன்றவிடந்தோறும் முன்பின் பகுதிகளை இணைத்து அதன் சிறப்பினை மிகுவிக்கும் வல்லமையும் உரை முற்றுப் பெறாமைக்கு ஏங்கச் செய்கின்றன. கலாநிலயம் இதழில் தொடர்ந்து வெளிவந்த இவ்வுரை நூலாக வெளிவருவது மிக இன்றியமையாததாகும்.

கம்பராமாயணம் அயோத்தியா காண்ட விளம்பரப் பகுதியில் 'அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர், வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25 கட்டுரைகளில் விளக்கப்பட்டுள்ளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' என்ற நூலிற் கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற்கு ஒவ்வாதனவென்று 25 கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கிறது' (கலாநிலயம் 14.7.32) என்று அமைவது ஒருவாறு அவரது உரையின் போக்கைத் தெளிவுறுத்தும். இன்று கிடைப்பருமையான அவரது உரையின் ஒரு பகுதி சான்றிற்காகக் கீழே தரப்பட்டுள்ளது :

செய்தனர்கண் மானிட ரெனத்திசை யனைத்தும்
எய்தநகை வந்ததெரி சிந்தினக ணெல்லா
நொய்தவர் வலித் தொழினுவன்ற மொழி யொன்றோ
பொய்தவிர் பயத்தையொழி புக்க புகலென்றான்

(மானிடர் இது செய்தனர் என்பதைக் கேட்டவுடன், திசையனைத்தும் கேட்கும்படி ஒரு பெருஞ்சிரிப்பு வந்தது. இருபது கண்களும் நெருப்புப் பொறி சிந்தின. மனிதர் வலிமை மிகவும் அற்பமானது; ஆகலின் நீ உரைத்த மொழி ஏற்றுக்கொள்வதற்கு உரிய தொன்றோ? பொய்யை ஒழித்துப் பயத்தை நீக்கி நடந்ததை உள்ளபடி சொல் – என்றான்.)

இதற்கு விடை கரனுக்கு ஒருகால் உரைத்துப் பயின்றிருக்கிறாள் ஆதலின் அரக்கியின் மொழிகள் மாரியெனப் பொழிகின்றன. பயந்திலள் இவள் ஆதலால் ஒளிப்பதற்கு ஒன்றுமில்லை. இராமனையே மிக நயந்தவள் ஆதலால் அவன் வடிவழகையும் வலிமைத்திறத்தையும் மறைத்தொன்றும் பொய்புகல நேர்ந்திலள். எனினும் தன்மீது பழியின்றிப் புக்க புகல்வதாயின் பொய்யினைத் தவிர்க்கவும் இயலாது. எனின், மெய்துவக்கிப் பொய்யே முடிக்கின்ற இவ்வஞ்சமகள் சொற்றிறம் சாலச் சூழ்ச்சிவாய்ந்திருக்கின்றது. இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல் தோன்றிய அத்துன்னருங்

கொடுமனக் கூனி, முன் தன் சொல்லாற்றல் கொண்டே கைகேசியின் தூய மனத்தைக் கலைக்க வேண்டி நேர்ந்தது. மற்று, மேலைநாள் உயிரொடு பிறந்து தான் விளைகாலம் ஓர்ந்து உடனுறை கடிய நோயனாள் இச்சூர்ப்பணகை இன்று தன் சொல்லாற்றல் கொண்டு கலைக்க வேண்டுமென்று தலைப்படுகின்றாள். இராவணன் தலைகளை உடைக்கின்ற வகையில் இவ்விருவர் சூழ்ச்சிகளுக்கும் முடிவு ஒன்றே. கூனுடைய கொடியவள் கூற்றும் காமுகக் கள்வி இவ்வரக்கியின் கூற்றும் பயனளவில் குளகமாயிற்று எனலாம். அன்றியும், நிருதர் கோன் நாசமாகும் செய்கையில் கூனி விட்டதினின்று பதின்மூன்று வருடங்களுக்கப்பால் சூர்ப்பணகை தொடர்கின்ற இது அந்தாதியும் போல்கின்றது.

இவ்விருவரும் முனைந்த தெல்லாம் தசமுகன் முடிவிற்கே விளைந்ததானாலும் அங்கு அக் கைகேசி தன் தோழியின் நோக்கமும் இங்கு இவ்விராவணன் தங்கையின் நோக்கமும் வேறு வேறாகி அமைகின்றன. இருவர் சூழ்வினைகளுக்கும் இலக்காகி நின்றவன் இராமன் ஆயினும் பண்டைநாள் தன்னைப் பாணிவில்லாலடித்து விளையாடியவனான இராமனைக் கெடுக்கப்புக்கனள் கூனி. சூர்ப்பணகையோ தன் கொடி மூக்கினை அரிந்த பின்னும் இராமனை அடைதற்கே அவாவுகின்றனள். குரோதத்தின் கொடுமையை மந்தரையிடத்தும் காமத்தின் பேதைமையைச் சூர்ப்பணகையிடத்தும் காணலாம். ஆதலின் மந்தரையின் சூழ்ச்சியுள் நுழைந்துருவிய நுண்மை, சூர்ப்பணகையின் சொற்களில் தோன்றவில்லை. சிற்றுளி கொண்டு அவள் கைகேசியின் மனத்தினைச் செதுக்கினாளென்னின் இவள் இராவணன் மனத்திற்கோர் பெருஞ் சம்மட்டி கொண்டு வருகின்றாள். இது வேண்டப்படுவதுமன்று. காமத்திற்கு மெழுகென மெலியவல்ல இவ்வரக்கனை இணக்க இத்துணை பாடு எற்றுக்கு? இப்பேதை யரக்கிக்குப் பித்தேறிக் கிடக்கின்றது. இல்லையேல் இராமன் ஏவினானென, தன் மூக்கொடு முலையையும் கடிந்த இலக்குவன்பாற் சென்று தன்னை மணங்கொள்ளுமாறு வேண்டியிருப்பாளோ? இன்னபெற்றியளாதலின் இச்சழக்கி, மந்தரையின் நுண்மதி வன்மைக்கு எள்ளளவேனும் இணையாக மாட்டாள்: கோசலையும் சீதையும் இராமனும் தனக்கொரு கொடுமை செய்வார் என்று எண்ணவும் அரியளாய் அமைந்தவள் கைகேசி என்பதுணர்ந்து, "ஆம், இவர் மிகக் கொடியவர் ஆதலின் உனக்குக் கொடுமையே செய்வார்" என்று எவ்வளவுதான் வற்புறுத்தினாலும் அவள் ஏற்கமாட்டாள் என்பதையும் தேர்ந்து, "நல்லவரே அவர், ஆயினும், உனக்கு இதனால் இன்னல் நேராமல் தீராது" என்று எடுத்துக்காட்டுபவளாய் மந்தரை,

அறநி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்
மறநினைந்துமை வலிகில ராயினு மனத்தால்
இறலு றும்படி யியற்றுவ ரிடையறா வின்னல்

(அறமும் அருளும் நிரம்பிய அருந்தவசிகளுக்கும், பெறுவதற்கரிய செல்வத்தைப் பெற்ற பின்பு எண்ணம் வேறாகிவிடும். அதுவுமின்றி, இந்த இராமனும் சீதையும் கோசலையும் உனக்கும் பரதனுக்கும் கொடுமைகள் செய்ய வேண்டுமென்று கருதியே உங்களைத் துன்புறுத்தமாட்டார்களாயினும் அவர் செய்கின்றவைகளெல்லாம் உங்கள் மனம் உடையும்படியான இன்னல்களாகவே முடியும்.)

என்று கூறுகின்ற நுட்பத்திற்கிணையான வொன்றைச் சூர்ப்பணகை அனையவர் சிந்தித்துரைத்தலரிது. ஸீஸரின்பால் நேயம் மிக உடைய ப்ரூட்டஸ், தன் மனத்தைத் தானே கலைத்துக்கொண்டு பொது ஜன அபிப்பிராயத்தையும் வஞ்சிக்கும் வகை நாடினனாய்,

"ஸீஸரைப் பற்றி உண்மையாக உரைக்குங்கால் அவனது பகுத்தறிவினும் மனோவிகாரங்கள் ஆட்சி கொண்ட நாள் யான் என்றும் அறிந்திலேன். ஆயினும் என்! அடக்கமெல்லாம் இள ஆசையின் ஏணியே போல்வதென்பது உலகறிந்ததொன்று. ஏறுபவன் அதற்கு முகங்கொடுத்து நோக்குகின்றனன்; மற்று, அவனே உச்சிப்படியை எய்தியபின்னர், தான் ஏறியவத் தாழ்ந்த படிகளை அவமதித்தவனாய் அவ்வேணிக்குத் தன் முதுகைத் திருப்பி மேகத்தின் பால் தன் நோக்கத்தைப் போக்குகின்றனன். ஸீஸரும் அப்படியே செய்யலாம். எனின், செய்ய மாட்டாதபடி தடுத்திடு – அவன் இப்போதிருப்பதற்கு இச்சண்டை இயையும் வண்ணம் அமையவில்லையாதலின் அதனை இம்மாதிரி உருப்படுத்து. அவன் ஏதாயிருக்கின்றானோ அது அதிகப்படுமாயின் இந்த இந்த முடிவுகளுக்குப் பாய்ந்துவிடும். ஆதலின் பொரித்த பின்னர்த் தன்னினத்திற்கிணங்கத் தீயதாய் வளருமொரு அரவின் முட்டையெனக் கருதி ஓட்டிலேயே கொன்று விடுக."

என்று சூழ்ந்தானென ஷேக்ஸ்பியர் வகுத்தற்கிணையாகவே கம்பர் கூனியின் வாயில் வரவழைத்த சொற்கள் அமைந்திருப்பதன் அருமை வியத்தற்குரியது.

சூர்ப்பணகைக்கு இத்துணைச் சூழ்ச்சியொன்றும் வேண்டா, அவள் அறியவும் அறியாள். ஆதலின் முதலில், இராமனது எழிற்சுவை தன் நாவில் ஊறஊறவும், அவ்வீரனது பேராற்றல் இராவணன்றன் செவிகளைச் சுடச்சுடவும் இவை விளம்பினாள்.

பாடவேறுபாடுகள், இடைச்செருகல்கள்

பிற இலக்கியங்களைக் காட்டிலும் கம்பராமாயணத்துக்கு மிகுதியாகப் பாடபேதங்களும் இடைச்செருகல்களும் இருப்பதை அதன் பதிப்புகள் சுட்டுகின்றன. உ.வே.சா., அண்ணாமலை, மர்ரே ராஜம், கம்பன் கழகம் முதலிய பதிப்புகளைப் பார்த்தால் இது தெளிவாகும். இவற்றிற்கிடையே

கூடப் படல எண்ணிக்கைகள், பாடல் எண்ணிக்கைகள் வேறுபட்டு அமைகின்றன. சான்றாக, சந்திர சயிலப்படலம் என்றொரு படலம் ராஜம், கம்பன்கழகப் பதிப்புகளில் காணப்படுவது, உ.வே.சா, வை.மு.கோ, அண்ணாமலைப் பதிப்புகளில் இல்லை. பாலகாண்டம் ராஜம் பதிப்பில் 24 படலங்கள், கம்பன் கழகப் பதிப்பில் 23 படலங்கள், பிறவற்றில் 22 படலங்கள் என உள்ளது. குலமுறை கிளத்துப் படலம் ராஜம் பதிப்பில் வரலாற்றுப்படலம் என அமைந்துள்ளது. இப்படிப்பட்ட மாறுபாடுகள் மிக அதிகமாக உள்ளன.

உ.வே.சா. நூல்நிலையச் சுந்தர காண்டப் பதிப்புரையில், 'இப்பதிப்பில் அச்சுப் புத்தகங்கள் பலவற்றுள் திருவடி தொழுதபடலத்துள் காணப்பெறும் மதுவனச் செய்தி விடப்பெற்றுள்ளன. சில சுவடிகள் இதற்கெனவே மதுவனப்படலம் என்ற பெயரால் தனிப்படலத்தையும் பெற்றுள்ளன. இச்செய்தி தென்னாட்டில் வழங்கும் வால்மீகி இராமாயணத்திலும் அத்யாத்ம இராமாயணத்திலும் உள்ளனவே. எனினும் கம்பர் தம் இராமாயணத்தை நடத்திக் கொண்டு செல்லும் முறைமைக்கும் அவர் அனுமனிடம் கொண்ட பெருமைக்கும் அனுமன் இராமபிரானை விரைவில் காணவேண்டும் என்று கூறிய கொள்கைக்கும் (1255) பிறநேர்மைகளுக்கும் ஒப்ப இவ்வரலாறு கம்பர் கருத்துக்கு ஒவ்வாதது என்று கருதப்பட்டது (ப.x)' எனும் கூற்று இம்மாறுபாடுகளுக்கான காரணத்தை ஒருவாறு உணர்த்துகின்றன. பதிப்பாசிரியர் ஒவ்வொருவரின் கம்பர் பற்றிய கருத்திற்கேற்ப விடுபாடுகளும் மிகையும் தோன்றியுள்ளன என்பது தெளிவு.

பொதுநிலையில் நோக்கினும் ஒவ்வொரு காண்டத்திலும் அமைந்துள்ள படல எண்ணிக்கையும் படலப் பெயர்களும் படலத்தின் தொடக்கச் செய்யுட்களும், முடிவுச்செய்யுட்களும் பெரும்பாலான பிரதிகளில் வெவ்வேறு வகையில் உள்ளன. ஒரு பிரதியில் ஒரு படலமாகக் காட்டப்படுவது மற்றொரு பிரதியில் இரண்டாகவோ, மூன்றாகவோ பிரிந்து காணப்படுகிறது என்று ராஜம் பதிப்பு முன்னுரையில் (ப.9) கூறப்படுவதும் இங்குச் சுட்டத்தக்கது. கம்பனின் ஆரம்பகாலப் பதிப்புகள் சிலவற்றில் ஒட்டக்கூத்தரின் உத்தரகாண்டமும் யுத்தகாண்டத்துடன் இணைத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளதும் குறித்தற்பாலது.

கம்பனின் மொத்தப் பாடல் எண்ணிக்கையை வ.வே.சு.ஐயர் – 10569, வெ.ப.சுப்பிரமணிய முதலியார் – 12000, உ.வே.சா–10418, அண்ணாமலை – 10534, சென்னைக் கம்பன் கழகம், கம்பன் அறநிலை 10368 வ.கமலக்கண்ணன் – 9972 (உலகப் பெருங்கவிஞர் கம்பர்) எனக் கூறுகின்றனர். டி.கே.சி. 1514 பாடல்களைத்தான் கம்பர் பாடல்களாகத் தருகின்றார். ஒரு பதிப்பில் கம்பர் பாடலாகக் கூறப்படுவது மற்றொரு பதிப்பில் மிகைப்பாடலாகக் கொள்ளப்பட்டுள்ளது. "எல்லாப் பிரதிகளிலும் இருப்பினும் மர்ரே அண்டு கம்பெனி, சென்னைக் கம்பன் கழகம் ஆகிய

இரு பதிப்புகளிலும் இருப்பினும் பதிப்பு ஆசிரியர் குழு, ஏற்றுக் கொள்ளாத பாடல்கள் வாட்குறி இடப் பெற்றுள்ளன' எனும் கம்பன் அறநிலைப் பதிப்புக்குறிப்பு இதனைப் புலப்படுத்தும். 'கம்பன் காவியத்தில் இத்துணை மாறுபாடுகள் நிகழ்ந்ததற்கு முதல் காரணம் இது மக்கள் இலக்கியமாக விளங்கி வந்துள்ளமையேயாகும். பலர் இராமாயணப் பிரசங்கத்தையே தம் வாழ்க்கைத் தொழிலாக மேற்கொண்டிருந்தனர். பொதுமக்களை இன்புறுத்தும் பொருட்டுச் சில நூதனக் கதைகளையும், நகைச்சுவையான செய்திகளையும் இடையிடையே இவர்கள் இணைக்கலாயினர். மேலும் வான்மீகத்திலுள்ள சில கதைகள் கம்பனில் இல்லாதிருப்பது குறையென எண்ணி வடமொழிப் பயிற்சியுள்ள சிலர் சில பகுதிகளைச் செய்யுள் வடிவில் சேர்த்திருக்கக் கூடும். பிற்காலத்தில் வெள்ளியம்பலத் தம்பிரான் என்பவர் சில புதிய பாடல்களைப் புகுத்தினார் என்றும் புலவர்கள் கூறியுள்ளனர்' (ராஜம் பதி, பால.முன்னுரை, ப.8) என்ற கருத்தும் சிந்தித்தற்குரியது.

தி.த.கனகசுந்தரம்பிள்ளை வெளியிட்ட பாலகாண்டப் பதிப்பிலும், வாணிவிலாசத்தில் வெளிவந்த கிட்கிந்தாகாண்டப் பதிப்பிலும் மிகைப்பாடல்கள் தனியே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. வை.மு.கோ, ராஜம், உ.வே.சா, அண்ணாமலை, கம்பன் கழகம், கம்பன் அறநிலை முதலிய பதிப்புகளில் மிகைப்பாடல்கள் பெருமளவு (1293) எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இடைச் செருகல்களை நீக்கும் முறையை ராஜம் பதிப்பினர், 'பழம் பிரதிகள் பலவற்றில் இல்லாது சில பிரதிகளில் மட்டும் காணப்படுகின்ற பாடல்களையும் கதைக்குத் தொடர்பில்லாது இடைப்பிறவரலாக உள்ள கவிகளையும் பிற்காலத்தில் சேர்க்கப் பெற்றவை என எளிதில் ஊகித்து விலக்கலாம்' எனக் (பால.முன்னுரை, ப.9) கூறுகின்றனர். அச்சு நூல்களில் இடம்பெறாத கம்பன் பாடல்களாகக் கருதப்பட்டவை சி.கணேசையர் பி.ஆர்.கிருஷ்ணமாச்சாரியார், அ.க.வைத்தியலிங்க உபாத்தியாயர் போன்றோரால் செந்தமிழ் இதழில் (தொகுதி 2,3,5,6,16,18) தொகுத்துரைக்கப்பட்டுள்ளதும் நவிலற்பாலது.

கம்பனில் மலிந்து காணப்படும் மற்றொரு கூறு பாட வேறுபாடுகளாகும். 'இக்காலத்துப் போல் அக்காலத்து அச்சின்மையால் ஒன்றைப் பார்த்து ஒன்றாகப் பலபிரதிகள் செய்யப்படுமிடத்து எழுதுவோர் யாவரும் தக்க நல்லறிவு வாய்ந்தவராகஇராமை பற்றி உள்ளதை யுள்ளபடியே படித்து எழுதுவது அருமையாதலும் அறிஞர் பிரதி செய்யினும் ஒவ்வோரிடத்து வேறொரு சொல் எழுத்தில் வந்து விடுவது முதலியன இயல்பேயாதலாலும், ஏட்டுப் பிரதிகளைப் படிக்கும் அறிஞரும் படித்துச் செல்கையில் ஒரெழுத்தை மற்றொரு எழுத்தாக மாறுபடக் கருதிப் படித்தலும், படிப்போர்கள் தத்தமது அறிவுக்கு ஏற்பச் சிற்சிலவிடத்து இவ்வண்ணமிருப்பின் நலமென்று கருதித் திருத்துவதும் பாடபேதங்கள் மிகுவதற்குக் காரணம், என வை.மு.கோ. (அயோத்தி, ப.7) கூறுகிறார்.

நீ. கந்தசாமிப் பிள்ளை பாட வேறுபாடு பற்றிக் கூறுவதோடு உண்மைப் பாடங்களைக் காணும் வழிக்குக் கம்பராமாயணப் பதிப்புக்குழு ஒன்றின் நடை முறை போன்று கற்பனைக் காட்சி ஒன்றும் அமைத்திருக்கிறார் (உங்கள் கம்பன், 1959).

பிறபதிப்புகளைப் பின்பற்றியமையும் புதிய பதிப்புகளிலும் புதிய பாடவேறுபாடுகள் உட்புகுவதை, 'இன்று கோவைக் கம்பன் அறநிலை வாயிலாக வெளிவருகிற இப்பதிப்பு மர்ரே அண்டு கம்பெனியார் மேற்கொண்ட பாடல் முறையையும் ஓரளவு (வேண்டுமான இடத்தில்) சென்னைக் கம்பன் கழகத்தார் மாற்றிய சில பகுதிகளையும், சில பகுதிகளில் புதிய பாடபேதங்களையும் கொண்டு வெளிவருகிறது' (ப.8) என்பதால் அறியலாம். 'கடந்த ஆயிரம் ஆண்டுகளில் கம்பராமாயணம் பலவாறாக மாறுபட்டு வந்துள்ள நிலைமையைக் காணும் போது கம்பநாடர் இயற்றியருளிய உண்மைக் காப்பியத்தை உள்ளபடி உலகம் காண்பது அரிது என்பது எங்கள் ஆராய்ச்சியால் கண்ட துணிவு' என உ.வே.சா.நூல் நிலையத்தார் தம் சுந்தரகாண்டப் பதிப்புரையில் (ப.XII) கூறியிருப்பதும் கருதற்பாலது.

பழம்பதிப்புகள் சிலவற்றிலும் பாடவேறுபாடு காணும் முயற்சி அமைவதை என்.பொன்னம்பலப் பிள்ளை உரையுடன் வந்த ஸ்ரீமத் கம்பராமாயணம் கிட்கிந்தாகாண்டம் (பம்பை – துந்துபிப் படலம், 1907) பதிப்பின் வழி அறியலாம். செந்தமிழ் இதழ் தொகுதிகளில் (1903–1905) இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம் எனும் தலைப்பில் சி.கணேசையர் கட்டுரை வரைந்துள்ளார். அதில் 1903 வரை வெளிவந்துள்ள அச்சுப் பிரதிகளில் இல்லாது ஏடுகளில் காணப்படும் பாடல்களைத் தொகுத்து அவற்றின் பாட வேறுபாடுகளை ஆராய்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. அண்ணாமலைப் பதிப்புகளில் பின்னிணைப்பாகப் பாட வேறுபாடு மிக விரிந்த அளவில் விளக்கப்பட்டுள்ளது. 3,18,489 பாட வேறுபாடுகளைக் காட்டியுள்ள இப்பதிப்பு பாடவேறுபாடு இல்லாத பாடல்கள் 11 மட்டுமே எனச் சுட்டுவதும் அறியத்தக்கது (யுத்த. ஆறாம்பாகம், ப.VIII).

சந்தி பிரித்தல் : கம்பன் பதிப்புகளில் அடுத்து எண்ணத்தக்கது பதம் பிரித்துப் பதிப்பித்தலாகும். இம்முயற்சியை முதலில் வ.வே.சு. ஐயர் தமது பாலகாண்டச் சுருக்கப் பதிப்பில் (1917) மேற்கொண்டார். இதற்கு மிகுந்த எதிர்ப்பு எழ அதனை உரிய வகையில் மறுத்துரைத்துள்ளார் (பாலபாரதி ஆக 1925) என ம.பொ.சிவஞானம் இயம்பியுள்ளார் (விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, ப.114). விரிந்த ஆராய்ச்சிக் கட்டுரையையும் அது உட்கொண்டுள்ளது. மர்ரே ராஜம் பதிப்பும் முழுநிலையில் இவ்வாறே அமைந்த போதும் எதிர்ப்பு எழுந்துள்ளது. எனினும் இன்றைய பதிப்புகள் இதனைப் பின்பற்றுகின்றன; வரவேற்பும் பெற்றுள்ளன. அண்ணாமலைப்

பதிப்பில் முதலில் யாப்பமைதிக் கேற்ப சந்தி பிரிக்காமலும் பின் பிரித்தும் அமைக்கப்பட்டுள்ளமை சுட்டற்குரியது. ‘சந்தமே பாடல்களுக்கு உயிரானபடியால், அதனைக் குறைவு படுத்தல் இழுக்காகும் என்றெண்ணிச் சீர்களை மட்டும் பிரித்துக் காட்டிப் பாடல்களின் ஓசைப்பயனைக் கெடுக்காது பாதுகாக்கப் பெற்றுள்ளது. அடிகளின் இறுதிகளில் மட்டும் பொருளும் ஓசையும் கெடாத முறையில் சந்திகள் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன என்பது உ.வே.சா.பதிப்பு அமைப்பாகும்.

எஸ்.வையாபுரிப்பிள்ளை பதிப்பு நெறி

‘தமிழ் மக்களது பண்பாட்டின் உச்சநிலையை அறிவதற்கு இவ்வரிய காப்பியம் பெரிதும் பயன்படுவது. தமிழ்க் கவித்துவத்தின் பேரெல்லையை உணர்வதற்குத் தக்க கருவியாயுள்ளது இப்பேரிலக்கியம். தமிழ் இலக்கியத்தின் சிகரமாய் அமைந்துள்ளது இப்பேரிதிகாசம். தமிழ் மொழியின் வளத்தையும் இதன் பெருமை முதலியவற்றையும் உணர்த்தி நாம் இன்றும் கையாளுதற்குரிய மூலநிதியைத் தருவது இவ்உலகு புகழ் பெருங்காப்பியம். இவ்வாறெல்லாம் பயன்பட வேண்டுமாயின் ஆராய்ச்சிப் பதிப்பு ஒன்று கம்பனுக்கு இன்றியமையாதது’ என உரைத்த வையாபுரிப்பிள்ளை (முன்சுட்டியது,ப.79) அது அமைய வேண்டிய முறைமைக்கும் வழிகாட்டியுள்ளார். அதனை மீண்டும் இங்கு எடுத்துரைத்தல் பொருத்தமாகும்.

“முதலாவது நாம் செய்ய வேண்டுவது, அச்சுப் பதிப்புகள் அனைத்தையும், ஏட்டுப் பிரதிகளில் கிடைக்கக் கூடியனவற்றையும் ஒருங்கு தொகுத்தலாம். ஏட்டுப்பிரதிகள் சேகரிப்பது பற்றி நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டுவது ஒன்று உண்டு. தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரதேசத்திற்கும் உரிய ஏடுகளைப் பெறுவதில் நாம் முயல வேண்டும். தமிழ்நாடு என்று சொல்வதில் திருவிதாங்கூர், இலங்கை, யாழ்ப்பாணம் முதலிய இடங்களையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். இங்ஙனம் பிரதேசவாரியாகச் சேர்க்கும் ஏடுகளில் காலத்தால் மிகப் பழமையானவை நமக்குப் பெரிதும் பயன்தருவன ஆகலாம். ஆகவே இங்குக் கூறியதை ஞாபகத்தில் வைத்து ஏடுகள் சேகரிக்க நாம் முயலுதல் வேண்டும்.

அடுத்தபடியாக இந்த ஏடுகளைப் பொருத்தமான நியதிகளைக் கையாண்டு வகைப்படுத்தி வைத்தல் வேண்டும். ஓர் ஊரிலுள்ளாரை எடுத்துக் கொண்டால் இன்ன இன்ன மரபை, இன்ன இன்ன குடும்பத்தை, இன்ன இன்ன நிலையைச் சார்ந்தவர்கள் என்று பிரித்து உணருகிறோமல்லவா? அது போல இவ்வாறு வகைப்படுத்துதலில் மிக்க கவனம் செலுத்துதல் வேண்டும். மேல்நாட்டுப் பதிப்பாளர்கள் மேற்கொண்டுள்ள முறைகள் நமக்கு மிகவும் பயன்படுவனவாகும். ஷேக்ஸ்பியரைக் குறித்தும் சாஸரைக் குறித்தும் இவர்கள் மூல பாடத்தை நிர்ணயிப்பதற்குக் கையெழுத்துப் பிரதிகள் முதலியவற்றை வகைப்படுத்திப்

பயன்படுத்தியுள்ள முறையே இங்கு நான் கருதுவது. இரண்டொரு நூல்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். ஷேக்ஸ்பியர் பதிப்புப் பற்றி ஜான்ஸன் எழுதியுள்ள முகவுரை நன்கு கற்றுத் தெளிதற்குரியது. இது போலவே க்ரெக் (W.W. Grege) என்னும் ஆசிரியர் இயற்றியுள்ள The Calculus of Variants என்ற நூலும் நமது முயற்சிக்குப் பெரிதும் பயன்படுவதாகும். நமது நாட்டிலும் மகாபாரதப் பதிப்புப்பற்றி ஆசிரியர் வி.எஸ்.ஸுக்தாங்கர் எழுதிய முன்னுரை நமக்கு ஒரு சிறந்த வழிகாட்டி. சமீபத்தில் பர்த்ருஹரியின் சதகத்ரயம் சுமார் 300 பிரதிகளுக்கு மேல் ஒப்பிட்டு நோக்கிப் பதிப்பிக்கப்பட்டுள்ளமையை நம்மிற் பலரும் அறிந்திருக்கலாம். இப்பதிப்பு முறையும் நமக்கு ஒருவாறு பயன்படக்கூடியதே.

பின்பு, ஏட்டுப் பாடங்கள் பரிசோதிக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு பரிசோதிப்பதற்கு ஏடுகளை வாசிப்பதில் தக்க பயிற்சியுடையவர்களே உரியர். பயிற்சியற்றவர்கள் ஏடுகளை வாசிப்பதால் பெரும் பிழைகள் நேரிடுதல் கூடும். பயிற்சி என்ற அளவில் ஏடுகளை வாசித்தல் மட்டும் அன்று, அது போதுமானதல்ல. செய்யுளோசை பொருள் முதலியவற்றைக் கவனித்தல் வேண்டும். செய்யுளிலக்கணம் முதலியவற்றிலும் தக்க பயிற்சியுடையாரே இதற்கு உதவக்கூடியவர்கள். இத்தகுதியுள்ள ஒருசிலர் ஏடுகளை வைத்துக்கொண்டு பாடபேதங்களை யெல்லாம் குறித்துத் தொகுத்தல் அவசியமாகும். இப்பாடபேதங்களும் இன்னஇன்ன பிரதிகளில் உள்ளன என்று பிரதிகளின் பெயர்களுடன் குறிப்பிடுதல் வேண்டும்.

பாடபேதங்கள் அனைத்தையும், இடைச் செருகல்கள் அனைத்தையும், நாம் ஆராய்ச்சிப் பதிப்பில் கொடுத்துவிடுவது அவசியமாகும். நாம் மேற்கொள்ள வேண்டும் பாடங்கள் எவை என்பதைத் திட்டமாக வரையறுத்துணர்தல் வேண்டும். பிறபாடங்களையும், அவை பற்றிய விவரணங்களையும் ஆராய்ச்சிகளையும் ஆராய்ச்சிக் குறிப்பு என்ற தனிப்பகுதியில் சேர்த்துவிடுதல் வேண்டும். இப்போது அச்சில் வழங்கும் செய்யுட்கள் பிரதிகளின் உதவியாலும், பிறவகை ஆராய்ச்சியாலும் இடைச்செருகல் என உணரப்படுமாயின், அவற்றை உரிய இடங்களின் அடிக்குறிப்பாகக் கொடுத்துவிடுதல் நலம். அதிகப்படியாயுள்ள ஏனைச் செய்யுட்களும், பாட பேதங்களும், ஆராய்ச்சிக் குறிப்புக்களும் ஒவ்வொரு காண்டத்திற்கும் இறுதியிலே ஒருசேரத் தொகுத்து விடலாம் என்று தோன்றுகிறது. எனவே, நூற்பகுதி ஒன்று, ஆராய்ச்சிக் குறிப்புப்பகுதி ஒன்று என இரண்டு பகுதிகள் இப்பதிப்பில் அமைக்கலாம் என்று கருதுகிறேன்.

ஒரு விஷயம் நாம் மனங்கொள்ளுதற்குரியது. கம்பன் மேற்கொண்ட பாடம் ஒன்றேயாகத்தான் இருக்கக்கூடும். அவனது இராமாயண மூலப் பிரதியும் ஒன்றேயாகத் தான் இருத்தல் கூடும். அதினின்றும் பிறந்தனவே

தமிழ் நாட்டிலுள்ள ஏனைப் பிரதிகள் அனைத்தும். ஆகவே அவன் தந்துள்ள மூலபாடத்தை நிச்சயிப்பதுதான் நமது பெருமுயற்சி. இதை விடுத்துச் 'சிறந்த' பாடத்தைக் காணுவோம் என்று முயலுதல் அறிஞர்கள் சிலருக்கு உகந்ததாயிருப்பினும், கம்பனது உண்மையான பாடத்தைக் காணுவதாகாது. ஆனால் பலஇடங்களில் சிறந்தபாடமும் மூலபாடமும் ஒன்றாகவே அமைதலும் கூடும். இங்கே கூறிய முயற்சியைக் கடைபோக முற்றுவித்தல் மிக அருமையாயிருப்பினும் அதுவே செய்யத்தக்கது. அதுவே கம்பனை நமக்கு உள்ளபடி உணர்த்துவது. இப்பணியைச் செய்து முடித்தற்கு அருமை என்று கருதி நாம் கைவிடுதல் தகாது. வள்ளுவர்,

அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

என்றனர். அவரது பொன்மொழியே நமக்கு வழிகாட்டியாக அமைதல் வேண்டும்.

மேற்கூறியபடி தெரிந்தெடுத்த உண்மையான மூலபாடத்தை நூற்பகுதியில் அமைத்தலோடு, இப்பகுதியிலுள்ள செய்யுட்களை ஓசை கெடாதபடி சந்தி பிரித்தலும், பொருள் விளக்கத்திற்கு வேண்டும் குறியீடுகளை அமைத்தலும் இப்பதிப்பில் நாம் கையாள வேண்டும் முறைகளுள் சிலவாகும். மேலும் நூற்பகுதியின் அடிக்குறிப்பில் பட்சாந்தரமாகக் கொள்ளக்கூடிய பாட பேதங்களுள் முக்கியமானவற்றைக் கொடுத்து விடுவதும் பயன்படுவதாகலாம். மிக இன்றியமையாததான குறிப்புரையையும் அடிக்குறிப்பாகச் சேர்த்தல் நலமாம்.

ஒவ்வொரு காண்டத்தின் முன்பும், கம்பன் அமைத்துள்ளவாறு நயம் தோன்ற எழுதிய கதைச்சுருக்கமும், அவ்வாறே ஒவ்வொரு படலத்தின் முன்பும் அப்படலத்திற்குரிய கதைச்சுருக்கமும், படலப் பொருளின் விவரணமும் சேர்ப்பது வாசகர்களுக்குப் பயன்படலாம் என்று தோன்றுகிறது. அன்றியும் ஒவ்வொரு படலத்திலும் உரிய இடங்களில் தலைப்புக்கள் கொடுத்துக் கதைத்தொடர்ச்சியை எளிதில் அறிந்து கொள்ளுமாறு செய்தலும் அவசியமாம். இங்குக் கூறிய அம்சங்களெல்லாம் பாடபேத ஆராய்சி செய்யும் அறிஞர்களைக் கருதியல்ல. பொதுமக்களுக்கும் இப்பதிப்புச் சிறிதளவேனும் பயன்படுதல் வேண்டும் என்ற நோக்கமே இவற்றை அமைக்கப் போதிய காரணமாகும்.

ஆராய்ச்சிக் குறிப்புப் பகுதிக்குப் பின்பு, அனுபந்தப் பகுதி ஒன்றும் அமைத்தல் வேண்டும். அதில் அபிதான விளக்கம், செய்யுள் முதற்குறிப்பு முதலிய அகராதிகள் இடம் பெறவேண்டும். இறுதியாக, வான்மீகி கூறியுள்ளபடி இராமாயணக் கதைச் சுருக்கமும் கொடுத்தல் அவசியமாகும்.

இப்பதிப்பிற்குப் பூர்வாங்கமாக ஒரு விரிந்த முன்னுரை அமைக்க வேண்டுவது மிகமிக இன்றியமையாததாம். அதில் இப்பதிப்பிற்கு உதவிய ஏட்டுப் பிரதிகளின் விவரங்கள், ஏட்டுப்பிரதிகளின் இனப்பாகுபாடுகள், ஏட்டுப்பிரதிகளின் வகைகளில் ஒன்றற்கொன்றுள்ள தொடர்பு, முற்பதிப்புக்களின் விவரங்கள், மூலபாடத்தைக் கண்டு கொள்ளுதற்குக் கையாண்ட முறைகள், கதை வேறுபாடுகளின் விவரங்கள், வரலாறுகள், மிகைச்செய்யுட்கள், சில பிரதிகளில் காணா தொழிந்த செய்யுட்கள், பாடபேத ஆராய்ச்சியிலுள்ள இடையூறுகள், இடைச்செருகல்களின் விசாரணை, உத்தேசபாடங்கள், முதலியபொருள்கள் பற்றி விரிவாக ஆராய்ந்தெழுதப்படுதல் வேண்டும்' (மேற்படி பக். 74–78).

வையாபுரிப்பிள்ளையின் இக்கருத்துகளைப் பின்வந்தோர் குறிப்பாக அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் கம்பன் அறநிலையும் பெரிதும் போற்றியுள்ளனர்.

குறிப்பிடத்தக்க சில பதிப்புகளின் சிறப்புக்கூறுகள்

வை.மு.கோவின் பதிப்பு பதவுரை மற்றும் விசேடவுரை கொண்டது. பாடவேறுபாடு, இலக்கணக் குறிப்பு, ஒப்புமைப் பகுதி, மேற்கோள் முதலியன காட்டுகிறது. நூலாசிரியர் வரலாறு, சிறப்பு, காலம் பற்றிய பிறர் கூற்றுகளும் உண்டு. நூன்முகம், செய்யுள் முதற்குறிப்பகராதி, அரும்பதவகராதி, பிழைதிருத்தம் ஆகியனவும் உள்ளன.

ஆழ்வார் திருநகரிச் சுவடி கொண்டு பதிப்பிக்கப்பட்டதில் அதிகமாகப் படலப் பெயர்களிடையே வேறுபாடு காணப்படுகிறது. இதன் முதல் வெளியீடு 1937 இல் பாலகாண்டத்தின் முதல் ஏழு படலங்களை எஸ்.வையாபுரிப்பிள்ளையும், பி.என்.அப்புசாமி ஐயரும் இணைந்து பாடவேறுபாடு, அரும்புதவுரை முதலியவற்றுடன் பதிப்பித்ததாகும்.

உ.வே.சா. உரையுடன் அமையும் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையப் பதிப்பு பதவுரை, விசேடவுரை, இலக்கணக்குறிப்பு, ஒப்புமைப்பகுதி, மேற்கோள், பாடவேறுபாடு, புராண வரலாறுகள், காப்பியத்திற்கண்ட அறிவுரைகள், மூதுரைகள் முதலியன பெற்று இலங்குகின்றது. முன்பகுதியில் நூன்முகம் பதிப்புரை அமைய பின்பகுதியில் செய்யுள் முதற்குறிப்பகராதி, அரும்பத முதலியவற்றின் அகராதி, பிழைதிருத்தம் ஆகியன அடங்கியுள்ளன. 'கதைப் போக்கில் இவர் கையாளும் செய்திகள் பலவற்றிற்கு அத்யாத்ம ராமாயணம் ஆதாரமானதென்பது புலனாகின்றது. அத்தகைய விடயங்கள் ஆங்காங்கே விசேடவுரையில் காட்டப்பெற்றுள்ளன' என்று பாலகாண்ட முகவுரையில் காணப்படுகிறது. தொடக்கத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்துள்ளது. எனினும் இருவராலும் அவரவர் நோக்கில் தனிப்பதிப்புகள் வெளிவந்து கம்பனை அணிசெய்துள்ளன.

டி.கே.சி. பதிப்பில் இரண்டாம் பகுதியில் கடவுள் தத்துவம் பற்றிய கட்டுரையும், மூன்றாம் பகுதியில் ராஜாஜியின் முன்னுரையும் அமைந்துள்ளன. பாடல்களுக்கு அவற்றின் சந்தம் பற்றிய குறிப்பும் உள்ளது. இவரது பதிப்பு மிகுந்த எதிர்ப்புக்குள்ளானதைக் 'கம்பராமாயணச் சிதைவின் கண்டனத் தொகுதி' எனும் நூல் காட்டும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பின் உரை பொழிப்புரையுடன் குறிப்புரையும் இணைந்ததாக உள்ளது. மேற்கோள் இலக்கணக் குறிப்பு, இடைச் செருகல்கள், பாடலுள் காணப்படும் கதைகள் முதலியன உள. ஒவ்வொரு படலத்தின் ஆரம்பத்திலும் கதை நிகழ்ச்சி, பாத்திரங்கள் பற்றிய சிறு குறிப்புகள், கவிநயம் சிறந்த பகுதிகள், வான்மீகியுடன் வேறுபடுமிடங்கள் முதலியன சுட்டப்படுகின்றன. பிற்சேர்க்கையாக ஒவ்வொரு பாடலுக்கும் உள்ள பாட வேறுபாடுகள் தெளிவாக விரிவாகக் காட்டப்பட்டுள்ளன. பாட்டு முதற்குறிப்பகராதியும் உண்டு. சுந்தர காண்டத்தை முதன்முதலில் பதிப்பித்துள்ளனர். அதன் முன்னுரையில் கம்பரின் காலம், வரலாறு, நூல் பற்றிய சிறு ஆய்வும் உள்ளது. கம்பரின் காலமாகப் பத்தாம் நூற்றாண்டின் இறுதி சுட்டப்பட்டுள்ளது.

கம்பராமாயணத்தின் ஆறு காண்டங்களும் ஒரே தொகுதியாக, பாடல்களின் எண்ணிக்கையும் தொடர்ச்சியாக அமைந்த முதல் பதிப்பு எனும் பெருமையைச் சென்னைக் கம்பன் கழகப் பதிப்பு கொள்கிறது. அந்தந்தப் படலங்களின் நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்பு பொருள் மாலையில் உள்ளது. அரும்பதவுரையுடன் கூடியது. ஒவ்வொரு காண்ட முடிவிலும் அதற்குரிய மிகைப்பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. படலக் குறிப்பகராதி, பாடல் முதற் குறிப்பகராதி என்பனவும் தரப்பட்டுள்ளன.

கம்பன் அறநிலை வெளியீட்டில் உரை, விளக்கம், மேற்கோள், இலக்கணக்குறிப்பு என்ற வகையில் முதல் 450 பாடல்கள் எழுதப் பெற்றுள்ளன. கம்பனுடைய பாடல்களில் எவ்வளவு சிறந்த இலக்கணக் குறிப்புகள் உள்ளன என்று எடுத்துக்காட்டி அதுபோல் பிறபாடல்களுக்கும் கற்பாரைக் காணத் தூண்டியுள்ளது. படலந்தோறும் சுருக்கமான முன்னுரையுள்ளது. சொற்பொருள் நோக்கில் சீர்பிரித்துப் பாடல்கள் தரப்பட்டுள்ளன. பதவுரையின் பின் தேவையான பாடல்களுக்கு மட்டும் விளக்கவுரையும் அதன் சிறப்புரைப்பதாக அமைந்துள்ளது. ஆறுகாண்டங்களுக்கும் தொடர் எண் அமைகிறது. பால, அயோத்தியா காண்டங்களுக்குப் பிற இந்திய மொழி இராமாயணங்களுடனான ஒப்புமை, முரண், விடுபாடுகள், புதிய இணைப்புகள் ஆகியன மிக விரிவாக அ.அ.மணவாளனால் எழுதப்பட்டுள்ளன. எல்லாக் காண்டங்களுக்கும் இது அமைந்திருப்பின் மேலும் சிறந்திருக்கும். ஒவ்வொரு காண்டத்தையும் அ.ச.ஞானசம்பந்தன் திறனாய்வுப் பார்வையில் அறிமுகம் செய்திருப்பதும்

குறிப்பிடத்தக்கது. இறுதியில் செய்யுள் முதற்குறிப்பகராதியுடன், குறிப்புரையுடன் மிகைப்பாடல்களும், அருஞ்சொல்லகராதியும் அமைகின்றன. இப்பதிப்பினை இன்று வர்த்தமானன் பதிப்பகம் வெளியிடுகிறது.

கம்பராமாயணச் சுருக்கங்கள்

கம்பன் காவியத்தில் தேவையான கதைப் பகுதிகளை மட்டும் கொண்டு வருணனை போன்ற பகுதிகளை நீக்கிச் சுருக்கமாக அமைக்கும் பணியும் குறிப்பிடத்தக்களவு நடைபெற்றுள்ளது. இத்தகைய சுருக்கங்கள் (முப்பதிற்கும் மேற்பட்டவை) அனைத்தும் அரும்பதவுரையுடனோ அன்றி விரிவான உரையுடனோ அமைந்துள்ளன. சிறுபகுதிகளுக்கு மட்டும், காண்டங்கள் அடிப்படையில், காவியம் முழுமைக்கும் என இச்சுருக்கங்கள் அமைந்துள்ளன.

பெயரறியப்படாத யாரோ ஒருவர் கம்பராமாயணம் முழுமையையும் 100 பாடல்களில் சுருக்கித் தந்துள்ள 'கம்பராமாயணக் கருப்பொருள் – மூலமும் உரையும், ஆங்கிலேய மொழிபெயர்ப்புடன்' (1910) நூல் இவ்வகையில் முதலாவதாகத் தோன்றுகிறது. வ.வே.சுப்பிரமணிய ஐயரின் பாலகாண்டச் சுருக்கம் (1917) அடுத்து அமைகிறது. வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் கம்பராமாணச் சாரங்கள் கம்பன் காவியம் முழுமைக்கும் அமைந்த சிறந்த சுருக்கங்களாகும். எஸ்.நல்லபெருமாளின் கம்பன் காவியச் சாரங்களும் அ.சே.சுந்தரராஜன் (கம்பர் கவிதைக் கோவை), சொ.முருகப்பன் (இராமகாதை), சாமிசிதம்பரனார் (கம்பராமாயணம் – தொகுப்பு) பி.ஜி.கருத்திருமன் (கம்பர் கவியும் கருத்தும்), கவித்தலம் துரைசாமி மூப்பனார், (ஸ்ரீமத் கம்பராமாயண அருங்கவி விளக்கம்), நாமக்கல் கம்பன் கழகம் மு.இராமசாமி (இராமாவதாரம் – கம்பன் கவிமலர், 1986) ஆகியோரின் நூல்கள் இங்குக் குறிப்பிடத்தக்கன. ஜி.வி.கிருஷ்ணசாமி ஐயர், 'ஷேக்ஸ்பீயரது இனிய கவிகள் (Beauties of Shakespeare) என்ற புத்தகம் போலக் கம்பராமாயணத்தின் இனிய கவிகளைத் தொகுத்து வெளியிட்ட புத்தகம் இல்லையே என்று வருந்தி அது வெளியாகும்படி ஈசுவரனைப் பிரார்த்தித்தேன். அந்தப் பிரார்த்தனைப் பயனடைந்தாற் போல இன்று வந்த செந்தமிழ்ப் பத்திரிகையில் 'கம்பராமாயண இன்கவித் திரட்டு' ஆரம்பிக்கப்பெற்றிருப்பதைக் கண்டு அதிசயமும் ஆனந்தமும் அடைந்தேன்' என்ற கூற்று (கம்பராமாயணசாரம் – யுத்தகாண்டம், வெ.ப.சு. முதலியார், முன்னுரை, ப.XXXII) இத்தகு சுருக்கங்களின் தேவையை வலியுறுத்தக் காணலாம்.

கம்பராமாயண வசனங்கள்

கம்பன் வாக்கினைப் படித்து இன்புற முடியாதோர்க்கு உதவும் நோக்கில் கம்பன் வசனங்களும் பெருகியுள்ளன. சிறுவர்களுக்கும் கி.மா.பக்தவத்சலன் – இராமாயணக் கதைகள்), இளைஞர்களுக்கும் (சொ.முருகேச முதலியார் – இளைஞர்க்கான கம்பராமாயணக் கதை)

ஏற்றவகையில் இவ்வசனங்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. நாடக வடிவில் தெ.துரைசாமி (கம்பநாடகம்) அமைத்துள்ளார். ந.கி.இராமசாமியின் 'கோசலை நாட்டு வள்ளல்' திரைப்படம் ஒன்றினுக்கு நேர்முக வருணனை செய்வது போன்ற அமைப்பில் புதுமையாக அமைந்துள்ளது. பொதுநிலையில் பெரும்பான்மை வசன நூல்கள் கம்பனை உரைநடையில் தருவதாகவே அமைகின்றன. திருமுருக கிருபானந்த வாரியார் (கம்பராமாயண விரிவுரை), மு.ரா.கந்தசாமிக் கவிராயர் (இராமகாதை), நா.சி.இராமசாமி ஆகியோர் தங்கள் நூல்களில் தங்களின் எண்ணங்களையும் கலந்து சுவைபடத் தருகின்றனர். வசன நூல்கள் வான்மீகத்தையும் கம்பனுடன் இணைத்துக் கூறும் போக்குக் காணப்படுகிறது (முத்தையா முதலியார் – இராமாயணசாரம், சுவாமி சித்பவானந்தர் – அறம் வளர்த்த நம்பி, கி.மா.பக்தவத்சலன் – இராமாயணக் கதைகள்). கம்பனை வசன வடிவில் வெளியிட்ட முதல்வராகத் திருச்சிற்றம்பல தேசிகர் (1815) அமைகிறார். கம்பனை முழுமையாகப் பதிப்பித்த மயிலை சண்முகம்பிள்ளை அதற்கு வசனத்தையும் இரு பகுதிகளாக 1888 இல் வெளியிட்டுள்ளார். இத்தகு உரைநடைகள் நூற்றுக்கு மேல் எழுந்துள்ளன.

சில செய்திகள்

கம்பனுக்கு இதுவரை வெளிவந்துள்ள பதிப்புகளைக் கண்ணோட்டம் விடும்பொழுது பெற்றவை:

தமிழில் திருவள்ளுவ மாலையில் உள்ள ஒரு பாடலால் (30) இந்நூல் சீராமகதை என்று வழங்கப்பட்டமை தெரியவருகிறது. மற்றும் கம்பராமாயண அச்சுப்புத்தகங்களில் காணப்பெறும் காப்பு முதலிய செய்யுட்களிலும் தற்சிறப்புப் பாயிரச் செய்யுட்களிலும் இராமன் திருக்கதை, இராமகாதை, காகுத்தன் கதை, இராமன் கதை, மாக்கதை, இராமகதை, இராமாவதாரம் முதலிய பெயர்களால் இந்நூல் குறிக்கப்பெற்றுள்ளது. சிலர் இராமாவதாரம் என்ற பெயரே கம்பர் இந்நூலுக்கு இட்டபெயர் என்றும் கூறுவர். எனினும் இராமாயணம் என்னும் பெயராலேயே இந்நூல் பெரியோர்களால் தொன்றுதொட்டு வழங்கப்பெற்று வருகின்றது என்ற உண்மையைத் தக்கயாகப் பரணி உரையாசிரியர் வாக்காலும் (163) தெரிந்துகொள்ளலாம். அன்றியும் இப்பொழுது நாட்டில் கிடைக்கப்பெறும் சுவடிகளில் ஒன்றேனும் இராமாயணம் என்ற பெயரையன்றி வேறு எப்பெயரையும் பெற்றில்லாமையானும் நாடெங்கும் கம்பராமாயணம் என்ற பெயர் கொண்டே வழங்கி வருவதாலும் அப்பெயரையே இப்பதிப்பும் மேற்கொண்டுள்ளது. ஓர் சுவடியில் சுந்தரகாண்டம் சௌந்தர்ய காண்டம் என்றே குறிக்கப்பட்டுள்ளது (உ.வே.சா.நூல் நிலையம், சுந்தரகாண்டம்–பதிப்பு முன்னுரை ப.XVI-XVIII).

கம்பனுக்கான முதல் ஏட்டுப்பிரதி கி.பி.1578 என்பர். "இவற்றுள் தலையாயதொரு சுவடி ஸ்ரீ இரத்தினக் கவிராயர் வீட்டுப் பிரதி. கி.பி.1743இல்

தொடங்கி கி.பி.1777இல் முடிவு பெற்றது. இதன் முடிவில் 'நாலு தேசங்களிலுமுள்ள இராமாயணச் சுவடிகள் 49ஐப் பாடம் வைத்துக்கொண்டு சோதித்துக் கொல்லம் 918ஆம் ஆண்டு முதல் 953ஆம் ஆண்டு ஏவிளம்பி வருஷம் ஆவணி மாதம் 9ந் தேதி வரை பிழை திருத்தி இராமாயணம் திருவேங்கடம் எழுதி வைத்த ஏடு. 977ஆம் ஆண்டு கோட்டாற்றில் வைத்திய நாதன் செட்டியார் இராமாயணம் வாசிக்க வைத்த போதும் இராமாயணம் இராமசாமியும் ஒருதரம் பிழை பார்த்தான் என்ற குறிப்பு காணப்படுகிறது'' (மேற்படி ப.VII). இதன்மூலம் பாட வேறுபாடு ஆய்வு செய்து ஆய்வுப் பதிப்பாக அமைக்கும் பணி பதினெட்டாம் நூற்றாண்டிலேயே, ஏட்டுப்பதிப்பிலேயே தோன்றிய உண்மை வியப்பைத் தருகிறது. கம்பனுக்கு உண்மைப்பாடம் வழங்குவதில் அன்று பலரும் ஆர்வம் கொண்டிருந்தமையை இது உணர்த்துகிறது.

"எண் 398 ஒரு பழைய குறிப்புரையாகும். இதில் மூலம் இல்லாவிட்டாலும் எடுத்துக் கொள்ள வேண்டிய பாடல்களையும் விட வேண்டிய பாடல்களையும் திட்டப்படுத்துவதற்கும் பொருளின் அருமையைக் காண்பதற்கும் இது பயன்பட்டது. இப்பதிப்பில், உரைப்பகுதியில் பழைய உரையென்று குறித்திருப்பன இச்சுவடியிலிருந்து எடுக்கப்பட்டனவே. இவ்வுரைச் சுவடியைப் பற்றி ஸ்ரீ ஐயரவர்கள் எழுதிவைத்துள்ளதாவது : 'பரம்பரையாகக் கேட்டு வந்தவர் பாடம் சொல்லியபோது ஒருவர் குறித்ததாகத் தெரிவதால் இது நூலின் பெருமையைக் காட்டக்கூடியது... பழைய கருத்து விளங்குவதாக உள்ளது... இவ்வுரைக்கு ஏற்ற பாடங்கள் பழைய கையெழுத்துப் பிரதிகளில் காணப்படுகின்றன. இவ்வரிசை (குடி இட வரிசை) சார்ந்த பழைய காகிதப் பிரதியும் உண்டு. இவையாவும் ஒருவகையின. தேவனாம் பட்டணம் திருவேங்கட முதலியார் குமாரர் சடகோப முதலியார் சித்திரபானு – விப ஆண்டுகளில் (கி.பி.1889–93) எழுதிய பழைய காகிதப் பிரதியொன்று மேலே காட்டிய சுவடியோடு பெரும்பான்மை ஒத்தும் சிறுபான்மை வேறுபட்டும் 1326 செய்யுட்களைக் கொண்டதாய் உள்ளது'' (மேற்படி VIII). இதனின்றும் கம்பனுக்கு உரை தோன்றிய வரலாறு; அது பாடவேறுபாடு அறியவும் பயனாதல்; கம்பனுக்குக் காகிதச் சுவடிகளும் உள என்பனவற்றை அறியலாம்.

தமிழகத்து வெளியேயும் கம்பன் சுவடி வழக்கிலிருந்தமையை, 'யாழ்ப்பாணம் வண்ணார் பேட்டை வெள்ளாழன் முருகன் அம்பிகை பாகன் என்றவரால் தாருண வருஷம் பங்குனி மாதம் எழுதப் பெற்றதும் ஸ்ரீ ஐயரவர்களால் ஆலங்குடிப் பிரதி என்று குறிக்கப் பெற்றதுமான...' (மேற்படிVIII) எனும் குறிப்பு தருகின்றது.

பொதுவாக முதலில் சுந்தரகாண்டத்தைப் பதிப்பித்துப் பின் ஏனையவற்றைத் தொடரும் பழக்கமும் வழக்கில் நிலவியதை அறிய முடிகிறது.

உ.வே.சாமிநாதையரைப் போன்றே வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியாரும் பதிப்பு தோறும் திருத்தங்கள் செய்துள்ளார். இதனை, 'இரண்டாம் பதிப்புப் பதிப்பிக்க நேர்ந்த பொழுது முதற்பதிப்புப் பதிப்பித்த பின்னர் அவ்வப்போது கிடைத்த பாடபேதங்களுள் குறித்து வைத்திருந்தனவற்றோடு, தமிழ் லெக்சிகன் ஆபீஸ் தலைமைப் பதிப்பாளரான திருவாளர் ராவ்ஸாஹெப் எஸ்.வையாபுரிப் பிள்ளையவர்கள் பி.ஏ.,பி.எல்., அன்போடு கொடுத்துதவிய ஏட்டுப்பிரதிகளை வைத்து ஒப்பு நோக்கியதாற் கிடைத்தவற்றையும் சேர்த்தேன். மீண்டும் இரண்டு பதிப்புகள் நேர்ந்தன. 3ஆம் பதிப்பில் திருவாளர் ராவ்ஸாஹெப் எஸ்.வையாபுரிப் பிள்ளையவர்களும், சென்னை ஸ்ரீ பி.என்.அப்புஸ்வாமி ஐயரவர்களும் பரிசோதித்துப் பாடபேதங்களுடன் முதல் ஏழு படலங்களை மாத்திரம் வெளியிட்ட பிரதியும், ஸ்ரீ உ.வே.ராவ்ஸாஹெப் மு.ராகவையங்கார் ஸ்வாமிகளால் பரிசோதிக்கப் பெற்று ஸ்ரீ உ.வே.பெரியன் வே.நா.ஸ்ரீநிவாஸய்யங்கார் (ஆழ்வார் திருநகரி) ஸ்வாமியால் பிரகரிக்கப்பட்ட பாலகாண்டப் பிரதியும் மற்றும் கிடைத்த பிரதிகளும் நோக்கியதாற் கிடைத்த பாடபேதம் முதலியவைகளைச் சேர்த்துள்ளேன். இன்னும் பல பிரதிகள் கொண்டு சோதித்தால் சிறந்த பாடங்கள் கிடைக்கும். அன்றியும் பரிசோதித்தற்கு ஏற்ற துணைக் கருவிகளும் நிரம்ப இல்லாமையால் பூர்ண திருப்தியுண்டாகுமாறு பாட பேதங்களைக் குறிக்க இயலவில்லை' (பாலகாண்டம். முன்னுரை V-VI) என்பது கொண்டறியலாம். மற்றும் தொடக்ககாலப் பதிப்பாசிரியர் பெற்ற இன்னல்களும், செய்த முயற்சிகளும், இடையறா கடின உழைப்பும் இதனால் வெளிப்படுகின்றன.

தொகுப்புரை

மூலம் மட்டும், உரையுடன், பாடவேறுபாடு, மிகைப்பாடல்களை வெளிப்படுத்துதல், பிறமொழி இராமாயணங்களுடனான ஒப்பியல், ஆய்வு நோக்கு எனக் கம்பன் பதிப்பு வரலாற்றின் வளர்ச்சியை அளவிட முடிகிறது.

பொதுமக்களும் பயனடையும் வகையில் சந்திபிரித்து வெளியிடப்பட்ட பதிப்பு நிலை தொடக்கத்தில் எதிர்ப்பிற்குள்ளான போதிலும் அது இன்று மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளதை உணரமுடிகிறது.

நாடு விடுதலைக்குப் பின் தொய்வடையத் தொடங்கிய கம்பன் பதிப்புப்பணி தற்பொழுது புதுவேகம் கொண்டிருப்பதை அறிய முடிகிறது.

அண்மைப் பதிப்புகள் கம்பன் முழுமைக்குமாகச் சிறப்பளித்து அமைவதும் பாராட்டத்தக்கது. அவற்றுள் கம்பன் அறநிலை தனிச்சிறப்புப் பெறுகிறது. இன்றும் கம்பன் பதிப்புகளில் தலைமைச் சிறப்புடன் விளங்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு இதற்கு அடிப்படை எனில் மிகையில்லை.

பின்னிணைப்பு – 1

கம்பன் பதிப்புகள் (முழுமை)

எண்	காலம்	பதிப்பாசிரியர்	பகுதிகள்	இயல்பு
1	1840–1843	திருவேங்கடாசல முதலியார்	?	மூலம்
2	1858	சுப்பராய முதலியார் & சுப்பராயபிள்ளை	?	மூலம்
3	1861–1864	கோமளபுரம் இராச கோபாலப்பிள்ளை	?	மூலம்
4	1863–1864	புங்கத்தூர் அ.கந்தசாமி முதலியார்	?	மூலம்
5	1884–1885	தேவராச கவிராயர்	2	மூலம்
6	1885–1887	சாத்தம்பாக்கம் கிருஷ்ணசாமி முதலியார்	2	மூலம்
7	1896	திருமயிலை சண்முகம் பிள்ளை	?	உரை
8	1894 முதல்	வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்	7	உரை
9	1911	அ.சுந்தரநாதபிள்ளை	2	மூலம்
10	1914	அ.இரங்கசாமி முதலியார் & சன்ஸ்	2	மூலம்
11	1914–1928	தி.சி.பார்த்தசாரதி ஐயங்கார்	2	மூலம்
12	1926	க.இராமரத்ந ஐயர்	?	மூலம்
13	1929	வித்துவான் இராமசாமி நாயுடு	?	உரை
14	1942	மு.இராகவையங்கார் (வெ.நா.ஸ்ரீநிவாஸையங்கார் வெளியீடு ஆழ்வார் திருநகரிப்படி)	பால	குறிப்புரை
	1944–1954	பக்ஷிராஜையங்கார் (வெ.நா.ஸ்ரீநிவாஸையங்கார் (வெளியீடு, ஆழ்வார் திருநகரிப்படி)	அயோத்தி – யுத்தம் வரை	குறிப்புரை
15	1953–1955	டி.கே.சிதம்பரநாத முதலியார்	3	அரும்பதவுரை
16	1955–1970	அண்ணாமலைப் பல்கலைக் கழகம் (பதிப்புக்குழு)	16	குழுவினர் உரை
17	1957–1963	உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்	10	உ.வே.சா. உரை
18	1958–1959	மர்ரே எஸ்.இராஜம் (பதிப்புக்குழு)	9	மூலம்
19	1976	சென்னை, கம்பன் கழகம் (பதிப்புக்குழு)	1	மூலம், குறிப்புரை

20	1984–1986	பூவண்ணன்	8	தெளிவுரை
21	1993	கோவை, கம்பன் அறநிலை (பதிப்புக்குழு)	8	குழுவினர் உரை
22	1998	சென்னை, திருமகள் நிலையம்	?	மூவருரை
23	1999	சென்னை, கங்கை புத்தக நிலையம் (அ.ச.ஞானசம்பந்தன் & தெ.ஞானசுந்தரம்)	6	குறிப்புரை

பின்னிணைப்பு – 2

கம்பன் பதிப்புகள் (காண்டங்கள்)

எண்	காலம்	பதிப்பாசிரியர்	காண்டம்	இயல்பு
1	1843	திருவேங்கடாசல முதலியார்	பால	மூலம்
2	1844	திருவேங்கடாசலமுதலியார் & சேமங்கலம் நாராயணசாமி முதலியார்	ஆரணிய	மூலம்
3	1845	அ.மழவை மகாலிங்கையர்	பால	?
4	1857	சுப்பராய முதலியார் & சுப்பராயபிள்ளை	பால	மூலம்
5	1859	இராசகோபாலபிள்ளை	சுந்தர	மூலம்
6	1861	எஸ்.கிருஷ்ணசாமி முதலியார்	பால	உரை
7	1862	கோ.இராசகோபாலபிள்ளை	கிட்கிந்தா	மூலம்
8	1863	புங்கத்தூர் கந்தசாமி முதலியார்	ஆரணிய	மூலம்
9	1863	புங்கத்தூர் கந்தசாமி முதலியார் & வி.கோவிந்தபிள்ளை	யுத்த (2 பகுதிகள்)	மூலம்
10	1864	புங்கத்தூர் கந்தசாமி முதலியார் & வி.கோவிந்தபிள்ளை	கிட்கிந்தா	மூலம்
11	1864	புங்கத்தூர் கந்தசாமி முதலியார் & வி.கோவிந்தபிள்ளை	சுந்தர	மூலம்
12	1864	புங்கத்தூர் கந்தசாமி முதலியார்	பால	மூலம்
13	1870	கோ.இராசகோபாலபிள்ளை	ஆரணிய	மூலம்
14	1870	சேமங்கலம் இராமசாமி முதலியார்	ஆரணிய	மூலம்
15	1871	வி.கோவிந்த பிள்ளை	சுந்தர	உரை
16	1873	திருமழிசை முத்துசாமி முதலியார்	பால–சுந்தர	மூலம்

17	1878	சென்னை ராஜதானிப் பாடசாலைப் புத்தக சங்கம்	பால	மூலம்
18	1884	சென்னை ராஜதானிப் பாடசாலைப் புத்தக சங்கம்	ஆரண்ய	மூலம்
19	1884	சித்தூர் வீராசாமி நாயுடு	பால	?
20	1886	சாத்தம்பாக்கம் கிருஷ்ணசாமி முதலியார்	பால	?
21	1886	செ.ரா.பா.புத்தக சங்கம்	அயோத்தி	மூலம்
22	1888	செ.ரா.பா.புத்தக சங்கம்	கிட்கிந்தா	மூலம்
23	1889	சேஷ சாஸ்திரி	அயோத்தி	உரை
24	1900	எம்.ஆர்.கந்தசாமிக் கவிராயர் & எஸ் வெங்கடராயுலு நாயுடு (இவர்கள் பால.அயோத்தியா, சுந்தர காண்டங்களுக்கும் உரையெழுதியிருப்பதாக இந்நூல் முகவுரை தெரிவிக்கிறது)	ஆரண்ய	உரை
25	1900	காணியம்பாக்கம் முருகேச முதலியார்	சுந்தர	மூலம்
26	1902	க.வ.திருவேங்கடநாயுடு	பால	மூலம்
27	1902	க.வ.திருவேங்கட நாயுடு	யுத்த(உத்தர)	மூலம்
28	1903	ஈ.இரத்தினவேலு முதலியார்	ஆரணிய	?
29	1904	இராமசாமி நாயுடு	பால	உரை
30	1904	தக்கோலம் இராமசாமி நாயுடு	அயோத்தி	சோடாசாவதானம் சுப்பராய செட்டியார் உரை
31	1905	எம்.ஆர்.கந்தசாமிக் கவிராயர்	ஆரண்ய	உரை
32	1907	பண்டிட் பி.கே.கிருஷ்ணமாச்சாரியார்	பால	மூலம்
33	1907	பி.ஆர்.கிருஷ்ணமாச்சாரியார் (ஆங்கில முகவுரையுடன்)	சுந்தர	மூலம்
34	1910	பி.ஆர்.கிருஷ்ணமாச்சாரியார் & பண்டித சவரிராயபிள்ளை	கிட்கிந்தா	மூலம்
35	1918	அ.குமாரசாமிப்பிள்ளை & தி.த.கனகசுந்தரம் பிள்ளை	பால	உரை
36	1919	மயிலை சண்முகம் பிள்ளை	அயோத்தி	உரை
37	1919	மு.ரா.அருணாசலக்கவிராயர்	கிஷ்கிந்தா	மூலம்

38	1922	இராமசாமிநாயுடு	பால	ஸ்ரீநிவாஸ முதலியார் உரை
39	1922	வை.மு.சடகோபராமானுஜாசாரியார் & சே.கிருஷ்ணமாசாரியார் & வை.மு.கோ.	கிட்கிந்தா	உரை
40	1924	வை.மு.சடகோபராமானுஜாசாரியார் & சே.கிருஷ்ணமாசாரியார் & வை.மு.கோ.	சுந்தர	உரை
41	1924	நமசிவாய முதலியார்	பால	மூலம்
42	1925	திருமயிலை சண்முகம் பிள்ளை & நமசிவாய முதலியார்	சுந்தர	மூலம்
43	1930	டி.என்.சேஷாசலம்	பால	உரை
44	1936	வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார்	ஆரணிய	வை.மு.சட கோபராமா னுஜாசாரி யார் & சே.கிருஷ்ண மாசாரியார் உரை
45	1943	மகாபூஷணமையங்கார்	அயோத்தி	?
46	1949	எஸ்.கலியாண சுந்தர ஐயர்	பால	குறிப்புரை
47	1951	ருக்மணி தேவி	அயோத்தி	குறிப்புரை
48	1958	கு.அழகிரிசாமி	பால,அயோத்தி	மூலம்
49	1965	கு.அழகிரிசாமி	சுந்தர	மூலம்
50	1993	கோ.வில்வபதி	பால	உரை
51	1997	சி.என்.நாச்சியப்பன்	?	?
52	1999	நர்மதா பதிப்பகம்	பால	அனுஜன்
53	1999	நர்மதா பதிப்பகம்	அயோத்தி	அனுஜன் தெளிவுரை
54	?	சி.த.முத்தையா பிள்ளை	கிட்கிந்தா	?
55	?	முனுசாமி முதலியார்	கிட்கிந்தா	?

• இவ்வட்டவணைகள் கம்பன் ஆய்வடங்கல் (ச.சிவகாமி), கம்பன் காவியம்(எஸ்.வையாபுரிப்பிள்ளை) ஆகிய நூல்களின் பட்டியல்களைத் துணை கொண்டுள்ளன.

பின்னிணைப்பு – 3

கம்பன் உரையாசிரியர்

எஸ்.கிருஷ்ணசாமி முதலியார் (1861, பால)
வி.கோவிந்த பிள்ளை (1871, சுந்தர)
சேஷ சாஸ்திரி (1889, அயோத்தி)
வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் (1894 முதல்)
மயிலை சண்முகம் பிள்ளை (1896 முதல்)
எம்.ஆர்.கந்தசாமிக் கவிராயர் & எஸ்.வெங்கடராயுலு நாயுடு (1900, பால–சுந்தர)
இராமசாமி நாயுடு (1904, பால)
சுப்பராய செட்டியார் (1904, அயோத்தி)
அ.குமாரசாமிப் பிள்ளை & தி.த.கனகசுந்தரம்பிள்ளை (1918, பால)
ஸ்ரீ நிவாஸ முதலியார் (1922, பால)
வை.மு.சடகோபராமானுஜாசாரியார் & சே.கிருஷணமாசாரியார் & வை.மு.கோ (1922 – கிட்கிந்தா, 1924 – சுந்தர, 1936 – ஆரணிய)
டி.என்.சேஷாசலம் (1930–பால)
உ.வே.சாமிநாதையர் (1957–1963)
பூவண்ணன் (1984–1986)
கோ.வில்வபதி (1993, பால)
எம்.நாராயணவேலுப்பிள்ளை & வ.த.இராமசுப்பிரமணியம் & துரை இராசாராம் (1998–2001)
அனுஜன் (1999, பால, அயோத்தி)

அண்ணாமலைப் பல்கலைக்கழக உரையாசிரியர் குழு (1955–1970)
ரா.பி.சேதுப்பிள்ளை, மு.இராகவையங்கார், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், கோ.சுப்பிரமணிய பிள்ளை, லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார், ஏ.சிதம்பரநாதச் செட்டியார், பி.ஸ்ரீ.ஆச்சாரியார், நீ.கந்தசாமிப்பிள்ளை, ஏ.சி.பால்நாடார், தி.கி.இராமாநுஜ ஐயங்கார், ச.தண்டபாணி தேசிகர், செ.வேங்கடராமச் செட்டியார், க.வெள்ளை வாரணார், உ.பழநி, பி.எஸ்.இராமாநுஜாசாரியார், ஈ.எஸ்.வரதராஜையர், மே.வீ.வேணுகோபாலப்பிள்ளை, புரா.புருடோத்தமநாயுடு.

கம்பன் அறநிலை விளக்கஉரைக் குழு (1993)
அமுதன், அரங்கசாமி, நா.அரங்கநாதன், மு.இராமசாமி, எஸ்.கே.இராமராசன், ம.ரா.போ.குருசாமி, வே.சிவசுப்பிரமணியன், வி.இரா.சிவராசன், அ.ச.ஞானசம்பந்தன், தெ.ஞானசுந்தரம், தரணிபாஸ்கர்.

• உ.வே.சாமிநாதையர் நூல்நிலைய வெளியீடு சுட்டும் பழைய உரை பற்றிய தெளிவில்லை.

மொழிபெயர்ப்புகள்

தமிழ்த் தாயின் தவப்புதல்வர் கம்பர், தமக்கும் தமிழுக்கும் உலக அரங்கில் மொழிபெயர்ப்புகள் வழி பெருமை சேர்த்துள்ளார். திருக்குறள், சங்க இலக்கியம், பாரதியார் எனப் பலவாக மொழிபெயர்ப்புகள் பெற்றுள்ள தமிழிலக்கிய வரிசையில் கம்பராமாயணமும் இணைந்துள்ளது. தமிழ்ப் பண்பாட்டின் கருவூலம்; சங்கப் புலவரின் வாழ்வியல் சீர்மை; திருக்குறளின் விளக்கம்; சிலம்பின் சமயப் பொறை; பக்திப் பாவலரின் உருக்கம்; தமிழ் மொழியின் ஆழ, அகலத்தின் அளவுகோல்; காப்பியக் கட்டுக்கோப்பில், அமைப்பில் தன்னிகரற்ற பெருமை; கதைமாந்தர் பண்புநலன் காட்டலில் மாசுமறுவற்ற உன்னதநிலை; தொடக்கமுதல் இறுதிவரை இடையறாது திறமையாக இழைக்கப்பட்டுள்ள இலக்கியத்திறன் போல்வன இச்சிறப்பை நல்கியுள்ளன. கம்பராமாயணத்துக்கு இதுவரை எழுந்துள்ள மொழிபெயர்ப்புகள் பற்றியும் ஆங்கில மொழியில் அது அமைந்துள்ள முறை பற்றியும் இதில் காணலாம்.

மொழிபெயர்ப்பு

ஒரு மொழியில் உள்ளவற்றை மற்றொரு மொழிக்குச் செலுத்துதல் அல்லது போக்குதல் என்பது மொழிபெயர்ப்பாகிறது. இது ஒன்றிலிருந்து ஒன்றிற்கு இடமாறுதலைக் குறிக்கிறது. இம்மொழிபெயர்ப்புப் பற்றிப் பலர் தங்கள் விளக்கங்களை நல்கியுள்ளனர். பொதுநிலையில் மூலநூலின் முழு உணர்வினையும் கருத்துகளையும் நிகழ்வுகளையும் உரையாடல்களையும் சிறிதும் விடுபடாமலும், அதிகப்படுத்தாமலும் மாற்றாமலும் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மாற்றுதலை உண்மையான மொழிபெயர்ப்பாகக் கொள்ளலாம். எனினும் கூட்டியும் குறைத்தும் சுருக்கியும் விரித்தும் பெயர்த்தமைப்பதும் மொழிபெயர்ப்பாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

கம்பனின் பழைய மொழிபெயர்ப்புகள்

கம்பனை மேனாட்டினருக்கு அறிமுகப்படுத்திய முன்னவராகத் திருக்குறளை மொழிபெயர்த்த, சென்னையில் சென்னைக் கல்விச் சங்கம் (1812, The College of Fort St.George) தோற்றுவித்தோரில் ஒருவரான எல்லீஸ் பாதிரியார் அமைகிறார். 1981 இல் காரைக்குடி கம்பன் கழகம் வெளியிட்டுள்ள விழாமலரில் இவர் மொழிபெயர்த்த கம்பன் கவிகளுள் 24 இடம் பெற்றுள்ளன. இவை பாலகாண்டம் முதலாக யுத்தகாண்டம் ஈறாக அமைகின்றன (இணைப்பு–1, காண்க). ஆனால் இம்மொழிபெயர்ப்பு தொடர்பாகப் பிற செய்திகள் – தேர்ந்த கவிகள் மட்டும் தானா? மொழிபெயர்த்த மொத்தப் பாடல்கள் எவ்வளவு? மொழிபெயர்ப்பின் நோக்கம், பின்புலம் என்ன? வெளியிடப்பட்டதா போன்ற குறிப்புகள் அறியுமாறில்லை.

1870 இல் எப்.ஏ. பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக, திருக்குறள் முதலான பிற இலக்கியங்களின் இணைவுடன் கம்பனின் ஒரு சிறு பகுதி மொழிபெயர்ப்பு காணப்படுகிறது. இதுபோன்று 1900 இல் மெட்ரிகுலேசன் பாடத்திட்டத்திற்காக வி.வேங்கட ஸ்ரீனிவாசன், டி.ஆர். ராமநாத ஐயர், மற்றொருவர் என மூன்று மொழிபெயர்ப்புகள் தோன்றியுள்ளன. 1889இல் வெளியிடப்பட்ட சென்னைக் கிறித்துவக் கல்லூரி ஆண்டு மலரில் 'Translations from the Sundarakandam of Kamban's Tamil Ramayana' (P.525) இடம் பெற்றுள்ளதும் கவனிக்கத்தக்கது. இக்கல்லூரியின் 1900 ஆம் ஆண்டு மலரில் அ.மாதவையாவின் 'Scenes from the kambaramayana' (Pp 622-629) காணப்படுவதும் குறித்தற்குரியது.

1910இல் வெளிப்போந்த கம்பராமாயணக் கருப்பொருளின் 100 பாடல்களும் உரைநடையில் ஆங்கில மொழி பெயர்ப்பினைப் பெற்றிருப்பதும் இங்குக் குறிக்கத்தக்கது. நூல் எழுந்த காலத்தையும் அதன் மொழி பெயர்ப்பாளரையும் அறிய இயலாதது வருந்தற்பாலது.

எனினும் அண்டை மாநில மொழிகளான பிற திராவிட மொழிகளில் இவற்றிற்கு முன்பே மொழிபெயர்ப்புகள் தோன்றியிருக்க வாய்ப்புண்டு. 'மலையாளக் கோயில்களில் கம்பராமாயணம் பிரசங்கம் செய்யப்படுகிறது. அதற்கு மானியம் வழங்கப்படுகிறது. தெலுங்கில் சுந்தரகாண்டம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது' எனும் குறிப்பு (வெ.ப.சுப்பிரமணிய முதலியார், கம்பராமாயண சாரம் – அயோத்தியா காண்டம், முன்னுரை); 'பாவைக் கூத்திற்கு இராமாயணம் உயிர்நிலையாக இருந்து வந்தது. சென்னை மாகாணத்தைச் சேர்ந்த மலையாள மாவட்டத்தில் உள்ள மக்கள் பத்திர காளியோடு கம்பராமாயணம் நெருங்கிய தொடர்பு கொண்டது என நம்பி வருகின்றனர். மலையாள நாட்டில் வழங்கும் கதையின் மூலமாகக் கம்பனைச் சிவபெருமானாக அவர்கள் போற்றுகிறார்கள். அங்குக் கம்பராமாயணமும் மூன்று வகையாக வழங்குகிறது' எனும் கூற்றும் (தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், கம்பநாடகம்); 'கம்பராமாயணக் கல்விக்கென ஒரு அறக்கட்டளை நிறுவப்பட்டிருந்ததை ஏற்றுமானூர்கோயில் ஆவணம் தெரிவிக்கிறது. இன்றும் தோல்பாவைக் கூத்துவழி பாலக்காடு மாவட்டத்தில் கம்பராமாயணம் சுவைக்கப்படுகிறது' எனும் மொழியும்[1] போல்வன இக்கருத்திற்கு அடிப்படையாகும்.

---

1. In Temple like Ettumanoor even today there is a record to show that there has been an endowment allotted to the study of Kambaramayanam. In what way the study was conducted there is still unknown. In Palghat district even today Kambaramayanam enjoys unstinted popularity through the medium of the institution of Tolpavakkuttu (Olappava Kuttu). -S.K. Nayar, Kambaramayanam - Balakandam - Vol I, Preface, 1967

அறிய வரும் மொழிபெயர்ப்புகள்

இன்று கன்னடம், தெலுங்கு, மலையாளம் எனும் திராவிட மொழிகளிலும்; இந்தி, சமஸ்கிருதம் எனும் வட இந்திய மொழிகளிலும்; ஆங்கிலம், பிரஞ்சு எனும் மேலை மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளமை அறிய வருகிறது (இணைப்பு – 2 காண்க). இவ் ஆறு மொழிகளிலும் சுமார் 30 மொழிபெயர்ப்புகள் மலர்ந்துள்ளன. மலையாளமும்(11), ஆங்கிலமும் (12) அதிகமான மொழிபெயர்ப்புகளைப் பெற்றுள்ளன. சமஸ்கிருதமும் இந்தியும் இரண்டும் ஏனையவற்றில் ஒன்றுமாக அறிய வருகின்றன. இவ்வெண்ணிக்கை மேலும் உயர்ந்து நிற்றலுக்கு இடனுண்டு. சரசுவதிராமநாதனின் இந்தி மொழிபெயர்ப்பு மைய அரசின் விருது பெற்றதும் இங்குக் குறிக்கத்தக்கதாம் (தினமணி 3.8.99). பூதலப்பட்டு ஸ்ரீ ராமுலு ரெட்டி என்பார் கம்பராமாயணம் முழுவதையும் செய்யுள் வடிவிலேயே தெலுங்கில் மொழிபெயர்த்து இரு பகுதிகளாக 1950, 1953 இல் வெளியிட்டார் எனக் குன்றக்குடி பெரிய பெருமாள் கூறியுள்ளார் (தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள்,ப.570)

வ.வே.சு.ஐயர் சுமார் 4000 கம்பன் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளதாகத் தி.வைத்தமாநிதி அறிவிக்கிறார். ஐயரின் 'Kambaramayana - A Study' நூலுள் ஏறத்தாழ 500 பாடல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன என்பதும் இவண் எண்ணத்தக்கது. புதுதில்லி மோதிலால் பனார்சிதாஸ் நிறுவனத்தார் அ.வெ.சுப்பிரமணியனை முதன்மை பதிப்பாசிரியராகக் கொண்டு பிறிதொரு முழுமையான கம்பன் மொழி பெயர்ப்பினைக் கொண்டு வரவிருப்பதும் அறியத்தக்கது. (கம்பன் காப்பியம் கதை மாந்தர் கூற்று, ப.VI) எனவே, ஆய்வாளரின் கவனத்திற்கு எட்டாத மொழிபெயர்ப்புகள் மற்றும் சில, பல இருத்தற் கூடும்.

மொழிபெயர்ப்பு அடிப்படை

'The more I read Kamban the more I become enthralled with the lilt and music of his language, lie wonderful similies his sense of the dramatic and poignant and above all, with the morals that he lavishly spreads throughout his great work I began translating' என்று கம்பனை ஆங்கிலத்தில் முழுமையாக, தமிழ்நாடு அரசு மொழிபெயர்ப்புத் திட்டத்தின் கீழ் மொழிபெயர்த்துள்ள பி.எஸ்.சுந்தரம் கூறுவது அனைத்து கம்பன் மொழிபெயர்ப்புகளுக்குமே அடிப்படை எனலாம். இதனை உறுதிப்படுத்துவதாக மற்றொரு மொழிபெயர்ப்பாளரான வி.எஸ்.முதலியாரின் 'but my love of Kamban and the fact that I being in my 80th year and in poor health it is a case of now and never with me, have made me embark on it and the present book is the result of this venture on my part' (Kambaramayanam,

Preface) எனும் மொழி அமைகிறது. கம்பரின் கவித்துவமே அவர் படைப்பின் மொழி பெயர்ப்புகளுக்கு அடிப்படையாதலை இவற்றால் உணரலாம்.

மொழிபெயர்ப்பு இயல்புகள்

அறிந்துள்ள மொழிபெயர்ப்புகளின் வழி ஆங்கிலத்தில் கம்பராமாயணம் முழுமையாகக் கவிதை வடிவில் பி.எஸ்.சுந்தரத்தால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மலையாளத்தில் எஸ்.கே.நாயரின் இம்முயற்சி பால, அயோத்தியா, ஆரண்ய காண்டங்களில் அமைந்துள்ளது. யுத்த காண்டம் வரையிலுமான முழுமை பெற்ற நிலை அறியப்பட வேண்டியதாகும். இவ்விரு மொழிகளும் (மலையாளம், ஆங்கிலம்) கம்பராமாயணத்தின் உரைநடை வடிவினை முழுமையாகக் கொண்டுள்ளன. ஏனையவற்றில் சுருக்கம் அல்லது பகுதி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கன்னட மொழிபெயர்ப்பு எஸ்.மகராஜனின் ஆங்கில மொழிபெயர்ப்பின் வழி அமைந்திருப்பது சுட்டற்பாலது. பல மொழிபெயர்ப்புகள் உரைநடையும் கவிதையும் இணைந்த வடிவிலும் உள (V.S. Mudaliar, Kambaramayanam).

பல மொழிபெயர்ப்புகள் கம்பனின் பெருமையை முன்னுரையில் உணர்த்தியுள்ளன. பாலபாரதி எஸ்.டி.எஸ்.யோகி தமது 'Kambaramayanam-Seeta Kalyanam' (in English verse) முன்னுரையில், 'Kamban! Thou distant lonely star that shine brighter than all revolving orbs of art, we need thee come again have to part we will shrine thee, above all other shrine. A sacred sanctum where the soul may roam thine own society hath built this temple where fancy may find her native dimple. Beauty her home and truth it's highest dome Master! Let Ramarajya dawn on earth because today man is at war with man and modern scientific miracles fan, the flames of Ravanan's murdering mirth. Beloved welcome to the soulful Test, for peace is the hostess and joy the guest' என்றுரைத் திருப்பதைச் சான்றாக்கலாம்.

கம்பனுக்கும் வால்மீகிக்கும் இடையே அமையும் வேறுபாடுகளைச் சுட்டல் (S.N.Sriramadesikan - Kambaramayanam in Sanskrit - Balakandam); மாற்று மொழியிலான எழுத்துப்பெயர்ப்புடன் தரல் (S.K.Nayar, Kambaramayanam - Malayalam); கதை மாந்தர் அறிமுகம் அளித்தல் (R.K.Narayanan - The Ramayana - A shortened modern prose version of the Indian epic) என்பது என்பனவற்றையும் சிறப்பு நிலையில் காண்கிறோம்.

சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள சி.ராஜகோபாலாச்சாரியாரின் அயோத்தியா காண்ட ஆங்கில மொழிபெயர்ப்பு யுனெஸ்கோவின் தொகுப்பிற்காகப் பெறப்பட்டது (Unesco Collection of Representative works - Indian series) என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மொழிபெயர்ப்பில் கம்பராமாயணம்

மொழிபெயர்க்கப்படும் பொழுது கம்பராமாயணம் எப்படி அமைந்துள்ளது என்பதை ஆங்கில மொழிபெயர்ப்பு வழி நோக்குவதாக இப்பகுதி அமைகிறது. மொழிபெயர்ப்பு என்பதே பெருஞ்சிக்கலான பணியாக அமைய பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களடங்கிய ஒரு காப்பியத்தை முழுமையாக மொழிபெயர்த்தல் என்பது ஒரு இமாலய சாதனையாகும். கம்பனுக்குக் குறிப்பிடத்தக்க ஆங்கில மொழிபெயர்ப்புகளாக நான்கு அமைகின்றன. அமெரிக்கத் தமிழறிஞர் ஜி.எல்.ஹார்ட்டின் ஆரண்ய காண்ட (மொழிபெயர்ப்பு தகவல் உதவி, திருமதி ரூபா ராபர்ட்ஸ், கொலம்பியா பல்கலைக்கழக ஆய்வு மாணவர்) பற்றிய பிறதகவல்கள் அறிய இயலவில்லை என்பதும் இவண் கூறப்பட வேண்டியதாகும்.

சி.ராஜகோபாலாசாரியார் அயோத்தியா காண்டத்தை மட்டும் (1961) கவிதை வடிவில் மொழிபெயர்த்துள்ளார். முன்னுரையில் கம்பர், வால்மீகி, துளசிதாசர் இடையே அமையும் வேறுபாடுகளைத் தந்துள்ளார். படலத் தலைப்போ, உட்தலைப்புகளோ இன்றி மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது. படல வேறுபாடு சுட்ட 1,2,3 எனத்தொடர் எண்கள் வழங்கப்பட்டுள்ளன. அவரது மொழிபெயர்ப்பாற்றலுக்கு,

> When thus warm - hearted Kaikeyi spoke
> The evil woman exclaimed -
> It seemed in this crook - back maid
> All deadly sins conspired and joined
> To take concrete shape -
> "Gone my dear, is everything!
> Gone is importance
> Gone is opulence
> Indigence is your lot and Kausalya thrives
> For she is wise" (P.31)

எனும் பகுதியைச் சான்றாக்கலாம். நூலின் இறுதியில், இடம் பெறும் கதைமாந்தர் மற்றும் சிறப்புச் சொற்களுக்குத் தகுந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

வி.எஸ்.முதலியார் (1970) கதைத் தொடர்பு அறாத வகையில் தேர்ந்த

---

2. My book 'Kambaramayanam - Ayodhya Kandam', published in Ap 1969 and 'Hiranya Vadai Padalam' Published with my booklet on 'Kambaramayanam - Portrayals' in 1963 are reproduced at the appropriate places in the present book.

V.S. Mudaliar, Kambaramayanam, Palaniappa Bros, Madras, 1970, p.ii

கவிகளை மொழிபெயர்த்து அவற்றை உரைநடையால் இணைத்துள்ளார். இந்நூல் இவரின் முந்தைய இரு மொழிபெயர்ப்புகளை உள்ளடக்கியதாக நிற்றலும் கூறத்தக்கது.[2] மிக எளிய நடையிலேயே சிறப்பாக மொழிபெயர்த்திருப்பது பாராட்டற்பாலது. கவிதை நடை மொழிபெயர்ப்பின் போது அதற்குரிய மூலபாடற்குறிப்பும் அமைந்துள்ளது. உட்தலைப்புகளையும், ஆங்காங்கே தேவையான விளக்கங்களை அடிக்குறிப்பிலும் காணலாம். இவர் மொழிபெயர்ப்பின் செழுமைக்குப் பின்வரும் பகுதியைச் சான்றாக்கலாம்.

Sita Lamenting her fate in Asokavana

Here, in Asokavana is Sita with a pale lustreless emaciated body unslept eyes and a woe-begone face. She bewails her fate and imagines all sorts of things except the right one for Rama not coming to her rescue. Says she to herself:

> Hearing that I rated Lakshmana
> Hath Rama forsaken me
> For a foolish woman? (Katchi Padaḷam. St.14)
> Or hath the bad karma
> Of a previous birth overtaken me?
> In my absence who will serve
> Food for my lord and how can he (St. 15)
> The guests greet? Oh! can there be
> A cure for distress such as mine? (Page 210)

கம்பராமாயண மொழிபெயர்ப்பில் தம் பட்டறிவினை வி.எஸ்.முதலியார், 'I may mention here that as I went along with the work of translation I found that, while one could by Kambans grace achieve a tolerable translation of the narrative part of the poem, it was next to impossible to reproduce the gorgeous apparel, the rhythm and condense and the cascade of jewelled epithets, which embellish his descriptive stanzas and similes. But to exclude on this account such stanzas from a book of translation is to do an injustice to Kamban, and so it is that my translation with all its imperfections of some of these inimitable stanzas also finds a place in this book, I hope the great Kambaramayanam scholars will bear with me and not judge them too harshly (pii) என மொழிந்துள்ளது நோக்கற்பாலது.

எஸ்.மகராஜனின் மொழிபெயர்ப்பு (1972) காண்ட வாரியாக, உட்தலைப்பிட்டுக் கதைத் தொடர்ச்சியை எடுத்துக்காட்டி, மிகுதியும்

உரைநடைக்கே சிறப்பளித்துள்ளது. இவர் இடையிடையே தமது விமர்சனக்கருத்துகளுக்கும் இடமளித்துள்ளார். "Kamban who has the incomparable ability to get out of the human shell, now looks at the three from inside the tender heart and through the anxious eyes of the bird and says :

Jatayu watched the three
as the mother bird would watch
her fledglings inside the nest

It is through this ability that kamban succeeds in endowing this imaginary and legendary character with life, passion and vigour and in bridging the gulf between Man and Bird" (p.53) எனும் பகுதியை எடுத்துக்காட்டாக்கலாம்.

பி.எஸ். சுந்தரத்தின் மொழிபெயர்ப்பு முழுமையான, கவிதை வடிவிலான பெருமைக்குரியது என்பதுடன் அண்மைக் காலத்தில் (1991) எழுந்தது என்பதும் சுட்டத்தக்கது. கம்பன் போன்ற பழமையான, பல பதிப்புகளைக் கொண்ட நூல்களில் எப்பதிப்பினைப் பின்பற்றுவது என்ற சிக்கல் முதற்கண் எழுகின்றது. படலப் பிரிவுகளிலும் பாடல்களிலும் பல வேறுபாடுகளை அவற்றிடையே காண்பதால் இது தோன்றுகிறது. இந்நூல் பெரிதும் சென்னை, கம்பன் கழகப் பதிப்பினை அடியொற்றித் தேவையான இடங்களில் மட்டும் வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியாரின் பதிப்பினைத் துணை கொண்டுள்ளது. பாடல்களுக்குக் கம்பன் கழகப் பதிப்பின் தொடர்எண் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு காண்டத்திற்குமான விரிவான முன்னுரை பிறமொழியினருக்குச் சிறந்த அறிமுகமாக அமைகின்றன. அதில் தொடரும் கதை, கதைமாந்தர் இயல்பு, காண்டத்தின் சிறப்புக் கூறுகள், இலக்கியநயம் என்பன விளக்கப்பட்டுள்ளன. படலத் தலைப்புகள் கருத்தை உள்வாங்கிய நிலையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மந்திரப்படலம், 'The Council', மந்தரை சூழ்ச்சிப் படலம் 'Manthara's Plot' என்பன போன்று அவை அமைந்துள்ளன. பகுதி என்பதை உணர்த்தும் படலம் என்ற சொல் ஆங்கில மொழியின் இயல்புத்தன்மை கெடாதிருக்க நீக்கப்பட்டுள்ளது.

காப்பியங்களில் இட, உருவ, இயற்கை வருணனைப் பகுதிகள் இடம்பெறுதல் அதன் தனிச்சிறப்பாகும். பொதுவாகக் கதையோடு தொடர்புறாதுத் தனித்து நிற்கும் வருணனைகள் மொழிபெயர்ப்பில் நீக்கப்படல் உண்டு. அனைத்துப் பாடல்களையும் மொழிபெயர்த்தல் எனும் தன்மையால் இந்நூல் அவற்றையும் உள்ளடக்கியுள்ளது. கதையோடு ஒன்றிநிற்கும்

வருணனைகளும் மூலத்தின் வெளிப்பாட்டை மொழிபெயர்ப்பிலும் தர முனைந்துள்ளன. பரதனின் படையெழுச்சி கண்டு சினமுற்ற குகனின் தோற்றம்,

கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன், விழிக்கும் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்கும் கொம்பினன்
'கிட்டியது அமர்' எனக் கிளரும் தோளினான் (2311)

எனக் காட்டப்படுவது,

A dagger in his belt, biting his lips
Blunt of speech, fiery-eyed
With a tabor and a long horn
Shoulders burgeoning at the thought of war.

என மொழிபெயர்ப்பிலும் வெளிப்படுகிறது.

இயற்பெயரின்றிச் சிறப்புப் பெயர்களால் கதைமாந்தர் காப்பியத்தில் சுட்டப்படும் பொழுது, தெளிவு மற்றும் எளிமை கருதி இயற்பெயரையே தரும் பாங்கு இதில் பின்பற்றப்பட்டுள்ளது. புளிஞர் கோமான், புளிஞர் வேந்தன் (2346, 2347) என்பன 'Guha' எனத் தரப்பட்டிருப்பதைச் சான்றாக்கலாம்.

இயன்றவிடந்தோறும் அடைகளை இணைத்தே பாடுதல் காப்பியமரபு. அவற்றை மொழிபெயர்க்க இயலாத சூழலில் அவை விடுபடுகின்றன; அல்லது சொற்பெயர்ப்பின்றிக் கருத்துப்பெயர்ப்பு மட்டும் அமைகின்றன. 'பூவிரி பொலன் கழல் பெருஇல் தானையான்' என்பது (2303) 'The ankleted hero with his pearless army' என மாற்றம் கண்டுள்ளது. இங்குப் பூவிரி பொலன் எனும் பெயரடைகள் விடுபட்டுள்ளதை அறியலாம். 'எழுவினும் உயர்ந்த தோளாய்' என்பது 'O doughty prince' எனக் கருத்துப் பெயர்ப்பாக (2335) அமைகிறது.

விரிந்த செய்தியை அதன் கருத்து மாறாது சுருக்கமாக மொழிபெயர்ப்பதும் இந்நூல் பண்பாகக் காணப்படுகிறது. 'முழுது உலகு அளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும் வழுவினன்; அதனை நீக்க மன்னனைக் கொணர்வான்' என்றான் (2335) என்பது, 'I have come to set aright the strange things done by my father, and take Rama back' எனப் பெயர்க்கப்பட்டுள்ளதைச் சான்றாக்கலாம். கவிதைப் பண்போடு மொழிபெயர்க்கவேண்டும் என்ற கொள்கையால் இத்தன்மை இடம்பெறுகிறது எனலாம். மூலத்தின் முழு உணர்வினையும் அப்படியே பிறிதொரு மொழிக்கு, குறிப்பாகக் கவிதையிலிருந்து கவிதைக்கு மாற்ற இயலாது என்பதற்கும்

இது சான்றாகிறது.

தவிர்க்க இயலாத மாற்றங்கள் செய்யும் பொழுது அடிக்குறிப்பில் விளக்கம் தருவது இம்மொழிபெயர்ப்பின் இயல்பாகும். 'காவிரி நாடு அன்ன கழனி நாடு ஒரீஇ' எனக் கோசலநாடு மூலத்தில் (2303) குறிப்பாகச் சுட்டப்பட, 'Left Kosala resembling the Kaveri Land' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; அடிக்குறிப்பில் 'The Kingdom of Ayodhya according to Kamban, was as fertile as the Kaveri delta, noted for being the granary of the south' என விளக்கம் தரப்பட்டுள்ளது.

இவ்வாறு அடிக்குறிப்பில் விளக்கம் அளிப்பது பண்பாட்டு மரபுகளை மொழிபெயர்ப்பதிலும் அமையக் காணலாம். இராமன் தன் தந்தைக்கு நீர்க்கடன் செய்வதை இதற்குச் சான்றாக்கலாம்.

விண்ணுநீர் மொக்குளின் விளியும் யாக்கையை
எண்ணி, நீ அழுங்குதல் இழுதைப் பாலதால்
கண்ணின் நீர் உகுத்தலின் கண்டது இல்லை; போய்
மண்ணுநீர் உகுத்தி, நீ மலர்க் கையால் என்றான் (2453)

என்பது,

It is foolish to cry over
Life which resembles a drop of rain
Water from your eyes won't bring him back
Cleanse him with water from the kusagrass.

என மொழியாக்கம் கண்டுள்ளது. அடிக்குறிப்பு, 'Offerings to the dead are made in the form of water poured through kusagrass' என விரித்துரைக்கிறது. இங்கு மூலத்தில் குறிப்பாகச் சுட்டியநிலை, தெளிவு நோக்கி வெளிப்படையாக இயம்பப்பட்டுள்ளது.

உவமைகளை மொழிபெயர்த்தலும் மொழிபெயர்ப்பாளருக்கு அறைகூவல் விடும் இயல்பிற்றாகும். இம்மொழிபெயர்ப்பு இதிலும் சிறந்தே விளங்குகின்றது.

இடிபடு முழக்கம் பொங்க இன மழை மகர நீரை
முடிவு உற முகப்ப, ஊழி இறுதியின் மொய்ப்ப போல
கொடியொடு வங்கம் வேலை கூம்பொடு படர்வ போல
நெடிய கை எடுத்து நீட்டி நீந்தின நெடுங்கை வேழம் (235)

Like the thunder clouds at dissolution
which had drunk up all the seas waters
And as if a sea was covered with masts
the elephants, trunks raised, swam the river

என மொழிபெயர்க்கப்பட்டுள்ளதைச் சான்றாக்கலாம். சுருக்கமாக அமையும் உவமைகளை உருவகமாக மாற்றித்தரும் போக்கும் இதில் காணப்படுகிறது. 'மொய்புலி அன்னான் ஓர் பின்னவன் நின்றான் என்றிலன்' (2318) என்பது 'Nor of that other, the tiger beside him' எனவும் 'கைவீரக் களிறு அனைய காளை இவன்' (2368) என்பது 'with this powerful tusker' எனவும் மாற்றம் பெற்றுள்ளமை சான்றாகும்.

கதை நவிலும் இலக்கியங்களில் கதை மாந்தரின் உணர்வுகளைத் துல்லியமாக மொழிமாற்றம் செய்தலும் இன்றியமையாததாகும். அதிலும் இம்மொழிபெயர்ப்பு வெற்றிபெற்றுள்ளதை,

> *அஞ்சன வண்ணன் என் ஆர் உயிர்நாயகன் ஆளாமே,*
> *வஞ்சனையால் அரசு எய்திய மன்னரும் வந்தாரே*
> *செஞ்சரம் என்பன தீ உமிழ்கின்றன, செல்லாவோ?*
> *உஞ்சு இவர் போய்விடின் 'நாய்க்குகன்' என்று என்னை*
> *ஓதாரோ? (2316)*

எனும் குகனின் சீற்றம்,

> Look how the treacherous usurper has come
> Who has done out of his kingdom my dear liege dark-hued
> Shall red arrows not fly belching fire?
> Should he escape, won't they call me cur?

என இம் மொழிபெயர்ப்பிலும் சீறுகிறது.

மூல மொழியின் தனிப்பண்புக் கூறு சிதையாமல் மொழி பெயர்த்தலும் தலையாய பண்பாக வேண்டப்படுகிறது. இதிலும் இம்மொழிபெயர்ப்பாளர் தேர்ச்சி பெற்றிலங்குவதை, 'கங்கையும் இராமற் காணும் காதலது என்ன மாதோ' (2352) எனுமிடத்து 'Ganga leaving her bank as if she too had a myst with Rama' எனத் தந்திருப்பதில் பெறலாம்.

இங்ஙனம் காப்பியத்தின் பல்வேறு கூறுகளும் மிகுந்த கவனமுடன் மொழிபெயர்க்கப்படும் பொழுது மூலத்தினைப் படிக்க வேண்டும் என்ற உணர்வை எழுப்ப வேண்டும் என்ற கருத்தை இம்மொழிபெயர்ப்பு நன்கு நிறைவேற்றியுள்ளது. தாகூர், கீதாஞ்சலியின் ஆங்கில மொழிபெயர்ப்புக் குறித்து, 'வங்காளக் கவிதையில் தாம் அமைத்த கருத்தின் நிறைவை ஆங்கிலத்தில் தம்மால் அமைக்க முடியாததைப் பற்றித் தம்மைத்தாமே குறைபட்டுக் கொள்வதாகத் தெரிவிப்பர்.[3] இதனை நோக்க பி.எஸ்.சுந்தரத்தின் கம்பராமாயண மொழிபெயர்ப்பு மூலத்திற்கு முற்றிலும் நேர்மையானதாக, ஏறக்குறைய அனைத்துக் கூறுகளிலும் இணையாக அமைந்து கம்பருக்குப் பெருமை சேர்த்துள்ளது. மொழிபெயர்ப்பிற்குத் தாம்

3. ஆர்.வீரபத்திரன், கலையும் கவிதையும், 1955, ப.143

பின்பற்றிய கம்பன் கழகப் பதிப்பில் உள்ள படலப்பாடல்களுக்கிடையே உள்ள உட்தலைப்புகளையும் மொழிபெயர்த்திருப்பின் இன்னும் சிறப்புற்றிருக்கும்.

நிறைவுரை

ஓரளவு குறிப்பிடத்தக்க மொழிபெயர்ப்புகள் எழுந்துள்ள போதிலும் கம்பரின் பெருமைக்கு இவை போதா. இந்திய மொழிகள் மற்றும் பிரெஞ்சு, ரஷ்யன், ஜெர்மன் போன்ற குறிப்பிடத்தக்க உலக மொழிகள் அனைத்திலும் பி.எஸ்.சுந்தரத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு போன்ற முழுமை மொழிபெயர்ப்புகள் தோன்ற வேண்டும். தமிழக அரசே இத்திட்டத்தினை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும். இது நிறைவேறின் அதுவே கம்பருக்குத் தமிழகம் காட்டும் செய்ந்நன்றியாகும்.

இணைப்பு – 1

எல்லிஸ் பாதிரியார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த கம்பன் கவிகளில் சில (அமரர் வி.ஜி.ஸ்ரீநிவாசன் உதவியது)

நீற ணிந்த கடவுணிறத்த வான்
ஆற ணிந்துசென் றார்கலி மேய்ந்தகிற்
சேற ணிந்தமு லைத்திரு மங்கைதன்
வீற ணிந்தவன் மேனியின் மீண்டவே (ஆற்றுப்)

The clouds which were of the colour of the god who is covered by grey ashes while proceeding on their way, having arrived and grazed on the waters of the ocean, return like the young Goddess of felicity on whose breast is rubbed the yellow paste of the sweet smelling agil and like the dark body of him who is adorned by her splendor.

பம்பி மேகம் பரந்தன பானுவான்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்
அம்பி னாட்டுது மென்றகன் குன்றின்மேல்
இம்பர் வாரி யெழுவது போன்றவே (ஆற்றுப்)

The clouds collecting spread abroad, and it seemed as if Mount Imeiyam, the father-in-law of Siven being over-heated by the sun, the ocean had raised itself to this region to bathe the broad mountain in its waters.

புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்வன தாரைகள்

உள்ளி யுள்ள வெலாமுவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே (ஆற்றுப்)

Beholding the renowned and mighty mountain shining like gold, the clouds poured down their streams like pensilc threads of silver, bounteous as the generous, who, from the impulse of their own minds, dispense their gifts with delight.

தலையு மாகமுந் தாளுந் தழீஇயதன்
னிலைநி லாதிறை நின்றது போலவே
மலையி னுள்ளவெ லாங்கொண்டு மண்டலான்
விலையின் மாதரை யொத்ததவ் வெள்ளமே (ஆற்றுப்)

Embracing atonce the head, the breast and the feet, and stopping for an instant only, the flood, having collected together everything buoyant within the mountain, swept it away, as a woman who sells her favours for a price sweeps away the wealth of her paramours.

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்த
மெல்லையின் மறைக ளாலு மியம்பரும் பொருளி தென்னத்
தொல்லையி னொன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற் பரந்த தன்றே
(ஆற்றுப்)

The flood having it's birth in the mountains went forward to mix with the ocean; even as the meaning so difficult to be obtained from the illimitable scriptures, which in ancient times received but one interpretation, but having spread through various paths, are now by every sect variously interpreted, thus spread the flood.

ஆறுதன் னுடன்வரு மஞ்சொன் மாதரை
யூறுகொண் டலைக்கத்தன் னுயிர்கொண் டேகினான்
சோறுதன் னயலுளோர் பசிக்கத் துய்த்துளோன்
ஏறிய கதியிடை யானு மேறவே (பள்ளிபடை)

May that station in Hell be mine which is merited by the cravens who abandon to distress and affliction women, of delightful converse, the companions of their way, or by the gluttons who eat by themselves while others hunger around them.

உருளு நேமியு மொண்கவ ரெஃகமு
மருளில் வாணியும் வல்லவர் முவர்க்குந்
தெருளு நல்லற மும்மனச் செம்மையும்
அருளு நீத்தபின் னாவதுண் டாகுமோ? (மந்தரை சூழ்)

He who bears the whirling disk, (Vishnu,) he who is distinguished by the forked weapon (Siven,) and the husband of the intelligent vani (Brahma); if these three were divested of wisdom, virtue, equity, and mercy, what else would remain to them?

இனிய சொல்லின னீகைய னெண்ணினன்
வினையிற் றூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வானெனின்
அனைய மன்னற் கழிவுமுண் டாங்கொலோ (மந்தரை சூழ்)

If a prince be courteous in words, liberal in gifts, worthy of esteem, pure in all his actions, revered, victorious, and strictly adhere to the path of equity, can he ever be ruined?

சீல மல்லன நீக்கிச்செம் பொற்றுலைத்
தால மன்ன தனிநிலை தாங்கிய
ஞால மன்னற்கு நல்லவர் நோக்கிய
கால மல்லது கண்ணுமுண் டாகுமோ (மந்தரை சூழ்)

Is there any time in which the good expect protection, except when princes, forsaking all that is contrary to right, and as steady as the tongue of a gold weighing balance, support the world?

வைய மன்னுயி ராகவம் மன்னுயிர்
உய்யத் தாங்கு முடலன்ன மன்னருக்
கைய மின்றி யறங்கட வாதருண்
மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ (மந்தரை சூழ்)

Kings who are as the souls of the world and as bodies supporting all other souls, without doubt are not deficient in virtue; for when confirmed in true benevolence, are sacrifices necessary?

என்பு தோலுடை யார்க்குமி லார்க்குந்தம்
வன்ப கைப்புலன் மாசற வாய்ப்பதேன்
முன்பு பின்பின்றி மூவுல கத்தினும்
அன்பி னல்லதோ ராக்கமுண் டாகுமோ (மந்தரை சூழ்)

To corporeal beings of bone and skin, or to incorporeal beings, divested all sensual taint, the cause of burning enmity, is there anything in the three worlds, either first or last, superior to affection?

ஒருத்தலைப் பரத் தொருத்தலை பங்குவி னூர்த்தி
யெருத்தி னீங்குநின் றியல்வரக் குழைந்திட ருழைக்கும்
வருத்த நீங்கியவ் வரம்பறு திருவினை மருவும்
அருத்தி யுண்டெனக் கையவீ தருளிட வேண்டும்.
(அயோ. மந்திரப்)

Having passed my days here like the centre of a beam whose scales are equally poised with weights and goods, I anxiously desire to be relieved from the grievous afflictions with which humanity is troubled and to attain endless happiness; deign to grant this.

குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினார்
நலமுத லலியினு நடுவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினார் (அயோ-மந்திரப்)

Those who enjoy the advantages of descent from ancient greatness, knowledge of sciences, and various learning, should regard justice, although their prosperity and condition suffer by it; they who have divested themselves of fraud have truly maintained devotion.

ஓவிய மமைந்தநகர் தீயுண வுளைந்தாய்
கோவியல் பழிந்ததென வேறொரு குலத்தோன்
றேவியை நயந்துசிறை வைத்தசெய லன்றோ
பாவிய ருறும்பழி யிதிற்பழியு முண்டோ (யுத்.ராவ.மந்திரப்)

Thou hast caused a beautiful city to be devoured by the flames; is it right to desire the wife of one of another race and to detain her in captivity as if thou hadst lost every kingly quality? Is any sin the wicked commit a greater sin than this?

என்னொருவ னில்லுறை தவத்தியை யிரங்க
வன்றொழிலி னாய்மறை துறந்து சிறைவைத்தா
யன்றொழிவ தாயின வரக்கர்புக ழய்யா
புன்றொழிலி னாமிசை பொருந்தல்
புலமைத்தோ (யுத்.ராவ.மந்திரப்)

Contrary to the precepts of religion, thou hast detained in captivity and overwhelmed with sorrow, a woman who was engaged in devotion, belonging to the house of another, O perpetator of violent acts! and if in that day the glory of the Araccer was obscured, would it be wise in us to sanction so disgraceful an act?

தூயவர் முறைமையே தொடங்குந் தொன்மையோ
ராயவர் நிற்கமற் றவுண ராதியாந்
தீயவ ரறத்தினாற் றேவ ராயது
மாயமோ வஞ்சமோ வன்மை யேகொலோ (யுத்.ராவ.மந்திரப்)

The ancients followed the path of the virtuous, but besides these all the other Auner (Giants) are evil doers; the station of Gods is obtained by

virtue, but is it obtained by delusion, deceit and violence?

அறந்துறந் தமரரை வென்ற வாண்டொழிற்
றிறந்தெரிந் திடிலது தானுஞ் செய்தவ
நிறந்திறம் பாவகை யியற்று நீர்மையன்
மறந்துறந் தவர்தரும் வரத்தின் மாட்சியால் (யுத்.ராவ.மந்திரப்)

If we consider the mighty deeds by which, even after we had forsaken virtue we conquered the Gods, we shall find that they were not an effect proceeding, from any acts of devotion performed by ourselves, but from the power conferred on us by those who had forsaken evil (i.e. by the Sages and the Gods by whom we were endowed with power).

மூவரை வென்றுமூ வுலகு முற்றுறக்
காவலி னின்றுதங் களிப்புங் கைம்மிக
வீவது முடிவென வீந்த தல்லது
தேவரை வென்றவர் யாவர் சீரியோர்! (யுத்.ராவ.மந்.)

Having conquered the divine, Triad, and having received under their protection the whole world, while exulting in prosperity they are dead and have toiled in vain; who then among the conquerors of the Gods are truly great?

வினைகளை வென்றுமேல் வீடு கண்டவ
ரெனையவரென் றியம்புது மிவரதந் தீமையான்
முனைவரு மமரரு முன்னும் பின்னரு
மனையவர் திறத்தினை யாவ ராற்றினார்? (ராவ. மந்திரப்)

Who shall described those, who having overcome both good and bad works, have obtained eternal felicity? but who among these, the giants, have, from their innate wickedness at any time performed virtuous acts like the Sages and the Gods?

கோநகர் முழுவது நினது கொற்றமுஞ்
சானகி யெனும்பெய ருலகின் தம்வினை
யானவள் கற்பினா லழிந்த வல்லது
வானரம் சுட்டதென் றுணர்தல் மாட்சியோ (ராவ. மந்திரப்)

This royal city and thy former victories have been consumed by the chastity of Janaci, the mistress of the world, if not, what glory is there in the thought that they were burned by an ape?

மீனுடை நெடுங்கட லிலங்கை வேந்தன்முன்
றானுடை நெடுந்தவந் தளர்ந்து சாய்வதோர்
மானிட மடந்தையா லென்ற வாய்மொழி

தேனுடை யலங்கலா யின்று நேர்தியால் (ராவ. மந்திரப்)

It was foretold that the power of the King of Ilangei surrounded by the ocean, obtained by long penance, should decline by means of a female of the human race; know this to be now accomplished, O thou who art adorned with a wreath of sweet flowers!

முன்னி னாரெலாம் பின்னுறக் காலினின் முடுகி
நின்மி னியானது விலக்குவ னெனவுரை நேரா
மின்னும் வேலினை விண்ணவர் கண்புதைத் திரங்கப்
பொன்னின் மார்பிடை யேற்றனன் முதுகிடைப்
போக (வேலேற்ற)

Swift as the wind he left those who were in front behind him and; saying "I will ward it from thee," while the gods beholding that spear of lightning covered their eyes from pity, he received the weapon in his golden breast, so that it passed out at his back.

இளவலை நோக்கி யைய விராகவ குலத்துக் கேற்ற
வளவின மடைந்தோர்த் தாங்கி மன்னுயிர் கொடுக்கும் வண்மை
துளவிய றொங்க லாய்நீ யன்னது துணிந்தா யென்றா
லளவிய தன்று செய்தற் கடுப்பதே யாகு மன்றே (வேலேற்ற)

Beholding his brother, "O, Lord," said Ramen, the courage which gives up life to protect those who rely on them is a distinguishing trait of the Ragava race, O thou adorned by a garland of Tulasi! Thou hast dared to do this, but, though it be an act worthy of thee, it is not peculiar to thee.

புறவொன்றின் பொருட்டின் யாக்கைப் புண்ணுற வரிந்த புத்தே
ளறவனு மைய நின்னை நிகர்க்கில னப்பா லின்ற
பிறவினை யுரைப்ப தென்னே பேரரு ளாள ரென்பார்
கறவையுங் கன்று மொப்பார் தமக்கிடர் காணி லென்றான்.
(வேலேற்ற)

Even he, the divinely virtuous, who for the sake of a dove slashed his body until it became one wound, was not equal to thee; what other thing remains there then to be spoken of (in the way of comparison)? those who are justly called benevolent, when they behold the affliction of their friends, are like the cow and her calf.

(கம்பன் மணிமலர், கம்பன் கழகம், காரைக்குடி, 1981, பக்11–16)

இணைப்பு – 2

கம்பன் மொழிபெயர்ப்புகள்*

English

1. Kambaramayana (Bharat Milap), C.Rajagopalachari, 1955, Delhi, Government of India.

2. Leaves from Kamban (Rendering into English from the Tamil Ramavatara by Kamban, A Srinivasaragavan, 1955, 28, Madras, Kamban Kazhagam.

3. The Ayodhya Canto of the Ramayana as told by Kamban C.Rajagopalachari, 1961, 1970, 128, Delhi, Sahitya Akademi.

4. Kambaramayanam (A Condensed in English Verse & Prose); V.S.Mudaliar, 1970, 333+2, Madras, Palaniappa Bros.

5. The Ramayan (Suggested by the Tamil version of Kamban) R.K.Narayan, 1973, 11+171, Mysore, Indian thought Publication.

6. Kambaramayanam - Seetha kalyanam (in English Verse); S.D.S.Yogi;-;-;-;-.

7. Kamban (The script of light and sound spectacle - Translation with original);-;-;- Madras; Chinmaya yuvakendra.

8. Kambaramayanam (Hiranya Vadai Padalam or the slaying of Hiranya); V.Shanmuga Mudaliar; 1954; Tamil Culture - Vol VI No.2;-

9. Kamban; S.Maharajan; 1972;2+80; New Delhi; Sahitya Academi.

10. The Forest Book of the Ramayana of Kampan; George L.Hart; 1998;-;Berkeley; University of California

11. Kambaramayanam; P.S.Sundaram; 1991; Government of Tamil Nadu; Chennai.

12. கம்பராமாயணக் கருப்பொருள் மூலமும் உரையும் ஆங்கிலேய மொழிபெயர்ப்புடன்;–; 1910; 100+16; கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை. (Translation of Ramayana Karupporul)

French

13. Ramayana de Kampar - Sundara Kandam (Live de La Beaute); Gnanon Diagou; 1972; Pondicherry.

Hindi

14. Kambaramayanam - 1; N.V.Rajagopalan, -; 544; Patna.

15. -, Saraswathi, Ramanathan,-,-,-,-

Kannada

16. Kampan; Kusalappa Gaude; - 91; New Delhi; Sahitya Akademi (From English Translation of S.Maharajan)

Malayalam

17. Kamparudaiya Ramayana Katha; C.Cuññi Rama Menon; 1922; Trichur; Mangalothayam.

18. Vali Mostham; Ā talparru; 1933; 76;Trichur; Keralothayam Press.

19. Kamparamayana Katha;-1937;440; Kunnam-Kulam; A.R.P.

20. Kerala Pashakanam; G.Ramakrishna Pillai; 1954; 830; Trivandrum; Thiruvithankur University.

21. Kambaramayanam; Sridharunni; 1958; 276; Quilon; Sri Rama Vilasam.

22. Kerala Pasha Katyam; Kavunkal Nilakanda Pillai; 1959; 398; Quilon; S.T. Reiyar.

23. Kambaramayanam - Bala Kandam; S.K.Nayar; 1963;214; Kottayam; National Book Stall.

24. Kambaramayanam - Balakandam - Vol.1 (A Translation and transliteration in Malayalam), S.K.Nayar; 1967; Madras; University of Madras.

25. Kambaramayanam-2 (Ayodhaya Kandam - translation and transliteration in Malayalam); S.K.Nayar; 1969; 398; Madras; University of Madras.

26. Kambaramayanam - 3 (Aranya Kandam- translation and transliteration in Malayalam); S.K.Nayar; 1971; 389; Madras; University of Madras.

27. Kambaramayanam; Narayanan;-; 393; (Translation in Prose)

Sanskrit

28. Kambaramayanam in Sanskrit (Balakandam); S.N.Srirama Desikan; 1964;-

29. Srirama Caritam; S.Nilakanda Sastri;-;

Telugu

30. Kambaramayanam - 1; R.R.Reddi; 1950; 542; Chittoor, Sahitya Pracari House.

* Bibliography on Translations; S.Sivakami; International Institute of Tamil Studies; Chennai; 1983.

ஆய்வுகள்

> *எத்தனை பேர் சொன்னாலும்*
> *எல்லாம் பொருந்துவதே*
> *கம்பனுக்கு மேலோர்*
> *கவிஞன் பிறப்பதில்லை*
> *கம்பனது கவியின்றிக்*
> *கன்னித் தமிழ்தான் வாழ்வதில்லை*

எனும் கவிஞர் கண்ணதாசன் கூற்று முற்றிலும் உண்மை என்பதனைக் கம்பனுக்கு எழுந்துள்ள ஆய்வுகளின் அகலமும் ஆழமும் மெய்ப்பிக்கின்றன. தமிழுக்குக் கதியாக, தெய்வமாக்கதையாம் 'இராமாவதாரம்' படைத்த மானுடனாம் கம்பர் உலகப் பெருங்கவிஞருடன் ஒப்பவைத்துப் போற்றப்படும் பெருமைக்குரியவர். பொதுமக்களாலும் கல்வியாளராலும் ஒருங்கே போற்றப்படும் கம்பருக்கு அணி செய்யுமுகமாக நானூற்றுக்கு மேற்பட்ட அறிஞரின் ஆயிரத்திற்கு மேற்பட்ட எழுத்துரைகள் எழுந்துள்ளன.

அவை: **1. அறிமுகம் செய்தல் :** பலரும் அறியும்படியாக, கம்பராமாயணத்தின் சிறப்புகளைத் தெளியும் படியாக, இலக்கிய அறிமுகமாக அமைதல் (சுந்தர சண்முகனார் – பாலகாண்டப் பைம்பொழில்); **2. சுவைக்கச் செய்தல் :** தம் கருத்துகளை எடுத்துரைக்கு மாற்றால் மூலத்தைச் சுவைக்கச் செய்து அதன் வழி கம்பனைக் கற்கத் தூண்டுதல் (எஸ்.ராமகிருஷ்ணன்–சிறியன சிந்தியாதான்); **3. சிறப்புரைத்தல் :** கம்பராமாயணம் எவ்வகையில் தனிச்சிறப்புடையதாக அமைகிறது; பிறவற்றினின்றும் மேன்மை பெறுகிறது என்பதை விளக்கி நிற்றல் (வ.வே.சுப்பிரமணிய ஐயர் – Kambaramayana A study); **4. சிக்கல்களுக்கு விடைகாணல்:** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் இலக்கியத்தைப் பொருள் கொள்வதில் கவிஞன் கருத்தையறிவதில் ஆய்வு மேற்கொள்வதில் எனப் பல நிலைகளில், சூழல்களில் தோன்றும் சிக்கல்களை விடுவித்து அமைதி காணல் (முரு.பழ. இரத்தினம் செட்டியார் –வாலிவதம் சரியா?); **5.தெளிவு பெறல்:** பல்வேறு எண்ணங்களுக்கிடையே மிகச் சரியான போக்கினை உணர்தல் (எஸ்.வையாபுரிப் பிள்ளை: – கம்பன்; ஆராய்ச்சிப் பதிப்பு); **6. புதிய புதிய சிந்தனைகள் மலர்தல்:** பல்வகை ஆய்வுகளின் எழுச்சி மற்றும் ஆய்வுச் சூழலால் இலக்கியம் நவில்தொறும் நூல்நயம் பயக்கிறது; எனவே எண்ணற்ற புதிய கருத்துகளின் விளை நிலமாய் இராமாயணம் இருப்பதை வெளிப்படுத்தல் (ம.பொ.சிவஞானம் – கம்பனில் தேசியம்); **7. கம்பரின் தகுதியறிதல்:** கம்பரின் இயல்பு, இலக்கிய ஆளுமை, தமிழுக்கு அளித்த கொடை, இலக்கிய உலகில் அவரிடம் போன்றவற்றின் மதிப்பீடாக அமைதல் (வ.கமலக்கண்ணன் – உலகப் பெருங்கவிஞர் கம்பர்); **8. ஆய்வாளரின் மதிப்பறிதல்:** கம்பரை

ஆராய்ந்துள்ள திறனாய்வாளரின் திறனாய்வுப் போக்குகளை, முடிவுகளை மேலாய்வு செய்தல் (பாலமுருகன் – டி.கே.சி.யின் திறனாய்வுப் போக்கு); இது சில வேளைகளில் எதிர்நூலாக அமைதல் (கே.பி.சங்கர்லால்–செந்தீ, பரவட்டும்) எனப் பல்வேறு அடிப்படைகளில் அமைந்து கம்பனை மட்டுமின்றித் தமிழ் உலகையும் வளப்படுத்தியுள்ளன*.

இவை பற்றியதொரு பொதுப்பார்வையாக இக்கட்டுரையமைகிறது.

கம்பனாய்வுத் தோற்றமும் வளர்ச்சியும்

காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருள்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே – காய்வதன்கண்
உற்ற குணம் தோன்றாதாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றக் கெடும் (23)

என முனைப்பாடியார் தமது அறநெறிச் சாரத்துள் வாழ்வியலுக்கு வகுத்த இலக்கணம் ஆய்விற்குத் தேவையான அடிப்படைப் பண்பிற்கும் பொருந்தியமைகிறது.

'முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்தோனே போக்கறு பனுவல்' எனத் தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் வரைந்த பனம்பாரனார் (7–8) கூற்று கம்பருக்கும் ஏற்புடையதாதல் குறிக்கத்தக்கது.

ஆய்வு எனும் மாமணி மண்டபத்திற்கும் கால்கோளிட்ட பெருமையைத் தொல்காப்பியம் பெறுதல் உண்மை; வெறும் புகழ்ச்சியன்று. அதன் பிறப்பியல் பகுதியே இதற்குப் போதுமான சான்றாகும். தமிழ்மரபான நூலுக்குப் பாயிரம் வழங்கலில்[1] ஆய்வுத்துளிகள் இடம்பெறலை, பனம்பாரனாரின் பாயிரம் தொட்டே அறியலாம். திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரமாக அமையும் திருவள்ளுவமாலையும்[2] இணைத்துப் பார்க்கத்தக்கது.

---

* பின்னிணைப்பு – கம்பன் ஆய்வுகள்

1. ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடாய் எண்பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்தியல்பே.
காலம் களனே காரணம் என்றம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே (நன்னூல் 47,48)

2. ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி
வேதப் பொருளாய் மிக விளங்கித் – தீதற்றோர்
உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு – மாங்குடி மருதனார்

அடுத்த நிலையில் ஆய்வுப்போக்கினைச் சங்கஇலக்கியத் தொகுப்புப் பணியில் காணலாம். சங்கத் தனிப்பாக்களின் திணை, துறை வகைப்பாட்டில் அதன் தொகுப்பாளருக்குப் பெரும் பங்குண்டு எனும் பொதுக்கருத்து இதற்கு அரண் செய்யும். தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம் எனப் பழந்தமிழ் நூல்களுக்கு உரைகண்ட உரையாசிரியப் பெருமக்கள் திறனாய்வுப் போக்கிலும், விளக்கவியல் தன்மையிலும் தமது ஆய்வுநோக்கினைப் புலப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு தமிழிலக்கிய வரலாற்றில் அமைந்த ஆய்வு விதைப்பாடு, பதினெட்டாம் நூற்றாண்டில் மாதவச் சிவஞான யோகிகள் வழி முளைவிட்டது. அவரது 'கம்பராமாயண முதற் செய்யுட் சங்கோத்தர விருத்தி' தமிழின் முதல் ஆய்வு நூல் எனும் மேன்மைக்குரியதாகிறது. 'நாட்டிய பொருள் கை கூடும்' எனும் நூற்பயன் கூறும் கம்பராமாயணச் செய்யுளினை மேல் நோக்காகப் படிக்கின் எழும் குறைபாடுகளாகச் சுமார் இருபதினைச் சுட்டி, பின் ஆழ்ந்து ஆராயுங்களால் அவை நிறைவாகத் தோற்றமளிப்பதனை இந்நூல் பேசுகிறது. இது 1964இல் திருவாவடுதுறை ஆதீனத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

கம்பரின் இராமகாதை அச்சுவாகனம் ஏறத் தொடங்கிய பின் பல பதிப்புகள் வெளிப்போந்து கல்வியாளரிடையே வரவேற்புப் பெறலாயிற்று. சிறிது சிறிதாக ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் எழலாயின. சிவஞான முனிவர்க்குப் பின் 1895இல் யாழ்ப்பாணம் சதாசிவம்பிள்ளை, 'கம்பர் சரித்திரம்' படைத்துக் கம்பராமாயண ஆய்விற்கு மீண்டுமொரு தொடக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். 1897இல் சித்தாந்த தீபிகையில் திருமணம் செல்வத் கேசவராயமுதலியார் கம்பன்பற்றித் தொடர் கட்டுரைகள் எழுதியுள்ளதாகத் தெரியவருகிறது.

அறிந்த வரையில் 1900இல் சித்தாந்தத் தீபிகையில் (பக்.220–222) சி.எஸ்.பிரிட்டோ என்பவர் சொற்பொருள் நோக்கும் மொழியியல் ஆய்வாக எழுதிய 'Kampanology' பிறமொழியில் தோன்றிய கம்பன் ஆய்வில் முதலிடம் பெறுகிறது. தமிழில் செந்தமிழ் இதழின் தோற்றம், கம்பன் ஆய்விற்கும் இடமளித்து அதனைப் பயிர்செய்த பெருமை கொள்கிறது. 1902இல் அது உருவானது முதல் அறிஞர் பலர் அதில் கம்பன் கட்டுரைகளை வழங்கியுள்ளனர். அவையாவன:

1902–3	செந்தமிழ்–1	ரா.இராகவையங்கார்	இராமாவதாரம்
1903–4	விவேகபானு–2	சாமி.சரவணப்பிள்ளை	வான்மீகரும் கம்பரும்
1904–5	செந்தமிழ்–3	ரா.இராகவையங்கார்	கம்பர் குறித்த தமிழ்ப் பெருமை, கம்பர் காலம்
1905–6	செந்தமிழ்–4	ரா.இராகவையங்கார்	திருத்தக்கதேவரும் கம்பரும்

1906–7	செந்தமிழ்–5	சி.கணேசையர்	திருவள்ளுவரும் கம்பரும்
1907–8	செந்தமிழ்–6	தி.செல்வகேசவராய முதலியார்	ஒரு கம்ப சூத்திரம்
1909–10	செந்தமிழ் – 8	மு.வேங்கடசாமி நாட்டார்	கம்பர் மதம்

கம்பன் ஆய்வின் மறுதொடக்கமான முதல் பத்தாண்டுகளிலேயே பன்முகப் பார்வையினை அதில் காண்கின்றோம். 1909இல் கம்பன் ஆய்வு முழுமையான நூல் வடிவம் பெற்றதை அறிய முடிகின்றது.* சென்னை, கிறித்துவ இலக்கிய சங்கம் வெளியிட்டுள்ள தி.ஏ.இராஜரத்தினம் பிள்ளையின் 'கம்பர் சரித்திரத்தின் ஒரு பகுதி'; மற்றும் தி.செல்வகேசவராய முதலியாரின் கம்பநாடர் (அ.பாண்டுரங்கன், காப்பிய நோக்கியல் கம்பராமாயணம்,ப.8) ஆகியன இவ்வாண்டில் வெளிப்போந்துள்ளன.

அடுத்த பத்தாண்டுகளில் 1913இல் கி.பி.வெங்கட்ராமஜயரின் 'Kambar and his Art', 1917இல் செல்வகேசவராயமுதலியாரின் 'Kambar an essay' என்ற இரு நூல்கள் மட்டுமே அறிய வருகின்றன. அடுத்த 1921–1930 ஆன காலகட்டத்தில் எழுந்துள்ள ஆறு நூல்களில் சோமசுந்தர பாரதியாரின் 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' (1926) என்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும். பின் தோன்றிய கைகேயி பற்றிய ஆய்வுகள் பலவற்றிற்கு இந்நூல் அடித்தளமாகியுள்ளது. கம்பன் பெருமையைப் பாரறியச் செய்த வ.வே.சு.ஐயரின் கம்பராமாயண ஆராய்ச்சிக்கட்டுரையும் கெ.என்.சிவராஜ பிள்ளையின் 'Some Characteristics of Kamban's genius and art' என்பதும் குறிக்கத்தக்க பிறவாம். அடுத்த பத்தாண்டுகளில் மூன்று நூல்கள் மட்டுமே எழுந்துள்ளன. ரா.பி.சேதுப்பிள்ளையின் வீரமாநகர் (1932), ஏ.சி.பால்நாடாரின் கம்பர் (1939), கம்பனுக்கெனப் பாளையங் கோட்டையில் நிகழ்ந்த ஆராய்ச்சிக் கூட்டத்தின் மலர் (1939) என மூன்றுமே சுட்டத்தக்கன.

இவ்வாறாக ஆங்காங்கே ஓரிரு நூல்களாக அரங்கேறிய நிலை நாற்பதுகளில் பதினெட்டு நூல்களைத் தந்து விரைவு காட்டத் தொடங்கியது. இக்காலப் பகுதியில்தான் செகவீரபாண்டியனார் 'கம்பன் கலைநிலை' எனப்பெயரிய எட்டுத்தொகுதிகளைத் தாமே படைத்து, தாமே அச்சுக் கோத்து வெளியிட்டுச் சாதனை படைத்துள்ளார். இது கம்பருக்கு மட்டுமே கிடைத்துள்ள மாபெரும் தனிச்சிறப்பாகும். மற்றும் சி.என்.அண்ணாதுரையின் கம்பரசம் எழுந்து கம்பன் ஆர்வலரையும் ஆய்வையும் வீறுகொளச் செய்ததும் கூறப்பட வேண்டியதாகும். டி.கே.சிதம்பரநாத முதலியாரின் கம்பர் யார்? (1941), கம்பராமாயணச்

* இதுவும், இதுபோன்று இப்பகுதியில் தொடரும் செய்திகளும் மாறுதல்களுக்கு உட்பட்டன; முடிந்த முடிபன்று.

சிதைவின் கண்டனத் தொகுதி (1942), கு.பாலசுப்பிரமணிய முதலியாரின் கம்பரச ஆராய்ச்சி (1949), கம்பன் கவிதை எனும் கட்டுரைத் தொகுப்பு என்பன நவிலத்தக்க பிற நூல்களாம்.

இந்நிலையில் ஐம்பதுகளில் சுமார் 40, அறுபதுகளில் சுமார் 45, எழுபதுகளில் சுமார் 80, எண்பதுகளில் சுமார் 145, தற்பொழுது 2000 வரை சுமார் 120 எனக் கம்பன் ஆய்வுகள் பெருகி நிற்கக் காண்கிறோம். இவற்றை நோக்கும் பொழுது எண்பதுகள் கம்பன் ஆய்விற்கு மிகுந்த சிறப்பளித்துள்ளதை உணர முடிகிறது. மிக அதிகமாக உச்சநிலையில் நூல்களை வெளியிட்டுள்ள தனிஆண்டுகளாக 1988, 1993 ஆகியன அமைகின்றன.

கம்பன் ஆய்வாளர்

தமிழறிஞர் பலரையும் கம்பராமாயணம் தன்பால் ஈர்த்துள்ளது மட்டுமின்றி அவர்களைத் தாம் கண்டு சுவைத்தவற்றை நூலாக வெளியிடவும் தூண்டியுள்ளது. நானூற்றுக்கும் மேற்பட்ட கம்பன் ஆய்வாளர் காணப்படுவதும் அவர் கம்பன் ஆர்வலர் (சா.கணேசன்–கம்பன் அடிப்பொடி), கல்வியாளர் (தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், கு.திருமேனி), ஆய்வாளர் (ம.பொ.சிவஞானம்) எனும் முப்பிரிவினராக அமைவதும் கம்பன் பெருமையில் ஓர் அங்கமே.

கம்பராமாயணம் ஒரு பக்திக் காப்பியமாக, வைணவக் காப்பியமாகக் கருதப்படும் சூழலிலும் அதன் பெருமையைப் புலப்படுத்தியவருள் இசுலாமியர் (மு.மு.இஸ்மாயீல்); கிறித்தவர் (ஏ.சி.பால்நாடார்); சைவர் (அ.ச.ஞானசம்பந்தன், ச.வே.சுப்பிரமணியன்) எனப் பிற மதத்தவரும் அமைதல் கம்பர் சமய எல்லை கடந்த பொதுமையினர் என்பதற்குச் சான்றாம்.

இலக்கியமாயினும் இதன் புகழுக்கு அணிசெய்தோரில் குறிப்பிடத்தக்க பலரும் பிறதுறையினராக அமைதலும் எண்ணத்தக்கது. டி.கே.சி., எஸ்.வையாபுரிப்பிள்ளை, டி.என்.சேஷாசலம், எஸ்.மகராசன். போன்ற பலர் நீதித்துறை சார்ந்தோராவர். எஸ்.இராமகிருஷ்ணன் ஆங்கில மொழித்துறையறிஞர். பி.எல்.சாமி அறிவியல் வல்லுநர்; கிருபானந்த வாரியார், கீரன் ஆகியோர் சமயச் சொற்பொழிவாளர் ஆவர்; ம.பொ.சிவஞானம் அரசியல் வாதியாவார்; மற்றும் பழ.பழனியப்பன் தொழில் துறையாளர் ஆவார். இவ்வாறு பல்துறையினரும் கம்பரால் ஆட்கொள்ளப்பட்டமைக்கு அவர் படைப்புத்திறனே முற்ற முழுக்காரணமாகும்.

கம்பன் ஆய்விற்குக் கால் கோளிட்டவர் என்ற சிறப்பில் தி.செல்வகேசவராய முதலியார், வ.வே.சு.ஐயர், ர.இராகவையங்கார், மா.இராசமாணிக்கனார், சுத்தானந்த பாரதியார், டி.என்.சேஷாசலம், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ஏ.சி.பால்நாடார், தொ.மு.பாஸ்கரத்

தொண்டைமான், பி.ஸ்ரீ, எஸ்.மகராஜன், தெ.பொ.மீனாட்சி சுந்தரம் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.

ஒரே நூலாயினும் கம்பன் ஆய்வில் தனி முத்திரை பதித்தோராக வ.கமலக்கண்ணன் (உலகப்பெருங்கவிஞர் கம்பர், 1984),கு.கோதண்டபாணி (கம்பரும் மெய்ப்பாட்டியலும் 1971), சங்கர்லால் (செந்தீபரவட்டும், 1974), பி.எல்.சாமி (கம்பன் காவியத்தில் உயிரினங்கள், 1975), தண்டபாணி தேசிகர் (வள்ளுவரும் கம்பரும் 1975), தமிழண்ணல் (கம்ப நாடகம், 1995), இரா.திருமுருகன் (கம்பன் பாடிய வண்ணங்கள், 1981), நச்சுமுறி (கம்பன் கெடுத்த காவியம்? 1959), ராய.சொ. (கம்பனும் சிவனும் 1966) போன்றோர் அமைகின்றனர்.

சில பல நூல்படைத்துக் கம்பராமாயணச் சிறப்பை உலகறியச் செய்தோருள் சிலரும் இங்குக் குறிப்பிடத்தக்கவராவர். தொடக்கக் கல்வி மட்டுமே முடிந்த நிலையிலும் தம் தனி முயற்சியால் கம்பனை மட்டுமின்றிப் பிறமொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் கற்று கம்பனுக்குப் பெருமை சேரும் வண்ணம் கம்பன் கலைநிலையின் 15 தொகுதிகளை அளித்துத் தம் உயர்வை வெளிக்காட்டிய செகவீரபாண்டியனார் முன்னிற்கிறார். இதனைப்பற்றி முழுமையாக ஆராய்ந்த அன்புஅரசி, “இராமகதை முழுவதையும் தொடர்ந்து கூறிச் சொல்நயம், பொருள் நயம், தொடர்நயம், அணிநயம், குறிப்பு, இயைபு, ஒப்பாய்வு என்பன போன்ற பல்வேறு உத்திகளால் கம்பர் கலைத்திறத்தினைப் புலப்படுத்திக் காப்பிய அரங்கில் உலாவும் குறிப்பிடத்தக்க பாத்திரங்கள் பலவற்றின் பான்மை மேன்மைகளைச் சுட்டிச் சென்று ஐயாயிரத்து எண்ணூற்றெண்பத்தெட்டுப் பக்கங்களில் விரிந்து முடிந்த நிலையில் கம்பன் கலைநிலை தனித்துச் சிறப்புறுகிறது (ப.111). கம்பராமாயணம் பற்றி விரிவாக எழுதித் தொண்டாற்றியவர்கள் இருவர். ஒருவர் பி.ஸ்ரீ; ஆனந்த விகடனில் கிழமை தோறும் ‘சித்திர ராமாயணம்’ என்ற பெயரில் பத்தாண்டுக் காலம் எழுதி வந்தார். அவ்வெழுத்துப் பணியின் ஒரு சிறுபகுதி மட்டுமே நூலாக வெளி வந்தது. மற்றொருவர் கவிராசப் பண்டிதர் ஜெகவீரபாண்டியனார். ‘கம்பன் கலைநிலை’ என்ற தலைப்பில் திங்களுக்கு ஒரு இதழாக 1941 முதல் 1958 வரை தொடர்ந்து வெளியிட்டார். இதழாக வெளியிட்டதோடு அத்துணை இதழ்களையும் தொகுத்து 5888 பக்கம் கொண்ட 15 தொகுதிகளாகவும் வெளியிட்டார். இத்துணை விரிவான திறனாய்வு நூல் ஒரு நூலுக்கெனத் தமிழில் இதுகாறும் வந்ததில்லை; பிறமொழிகளிலும் இப்படி உண்டா என்பது பெரிதும் ஐயமே” (ஜெகவீரபாண்டியனாரின் கம்பன் கலைநிலை – ஓராய்வு ப.338) எனப் பெருமைப்படுத்தியுள்ளார்.

கம்பர் காவியத்தின் மேன்மையைத் தம் ஆய்வுத்திறத்தால், ஆழ்நோக்கால் சிறப்பித்துள்ள பிறராக நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்

பிள்ளை, தெ.பொ.மீனாட்சி சுந்தரம், எஸ்.மகராஜன், ம.பொ.சிவஞானம், எஸ்.இராமகிருஷ்ணன், மு.மு.இஸ்மாயீல், அ.ச.ஞானசம்பந்தன், ச.வே.சுப்பிரமணியன், கு.திருமேனி, பழ.பழனியப்பன் என இப்பட்டியல் நெடியது; தொடர்வது. கம்பராமாயணத்துக்கு அகராதிகள் அளித்த அ.சே.சுந்தரராஜனும் இங்கு எண்ணத்தக்கவராவார்.

இவர்கள் மட்டுமின்றிப் புதுநெறியில், புதிய கருத்துகளைத் தருதலில், ஆய்வுச் சிந்தனையைத் தூண்டுவதில், கம்பன் பெருமையை எடுத்துரைப்பதில், ஆய்வு விருந்தளிப்பதில் எனப் பலவகையிலும் சில நூறு கட்டுரைகள் கம்பன் ஆய்வை மிளிரச் செய்கின்றன*. முதுபேறிஞர் மட்டுமன்றி இளம்ஆய்வாளர் பலராலும் அவை படைக்கப்பட்டிருப்பதும் அறியத்தக்கது.

ஆய்வு இலக்கு

கம்பன் ஆய்வாளரின் கருத்துக் கருவூலங்கள் கல்வியாளரை மட்டுமின்றிப் பெரிதும் பொதுமக்களை, குறிப்பாகக் கம்பன்ஆர்வலரை முன்னிறுத்தி அமைகின்றன. சிறுவர்களுக்காக, இளைஞர்களுக்காக என எழுந்துள்ள கம்பராமாயணக் கதை நூல்களையும் இவண் நினைத்தல் பொருந்தும். வசந்தா இராமனாதனின் 'பாலர் இராமாயணம்' (1982), சொ.முருகேச முதலியாரின் 'இளைஞர்க்கான கம்பராமாயணக் கதை' (1975) என்பன சான்றுகள். வாழ்வில் எல்லாப் பருவத்தினருக்கும் எச்சூழலினருக்கும் கம்பன் ஏற்புடையது என்பது இதன் பொருளாம்.

ஆய்வுத் தூண்டல்கள்

கம்பன் காவியத்தின் சித்திரச் சிறப்பினைத் தாங்கி நிற்கும் சுவர்களாக, கண்கவர் கம்பன் ஆய்வுமாடத் தூண்களாக நிற்பவை இங்குக் கருதப்படுகின்றன. கம்பன் ஆய்வுவரலாற்றின் முற்பகுதிக்கு இதழ்களும், பிற்பகுதிக்குக் கம்பன்கழகங்களும் பெருந்துணை புரிந்துள்ளன. அவையின்றி இவ்வரலாறு முழுமை பெறாது எனத் துணிந்து கூறலாம். இவை தவிர ஆய்வேடுகளும், அறக்கட்டளைச் சொற்பொழிவு வெளியீடுகளும் பிறவும் (மலர்கள், பதிப்புகள், உரைகள்) கம்பன் ஆய்வை மேம்படுத்தியுள்ளன.

இதழ்கள்: கம்பர் காவியச் செழுமையைத் தமிழகமறிய, அதற்கென்றே 'கம்பநாடர்' என்ற திங்கள் இதழ் தோன்றியதும், அதில் தொடர்ந்து அதன் நிறுவனர் மோகனூர் கோவிந்தராஜ ஐயங்கார் கம்பராமாயணக் கட்டுரைகள் எழுதியதும் சிறப்பாகச் சுட்டத்தக்கதாகும். பாலபாரதி என்ற பெயரில் இலக்கியஇதழ் தொடங்கி வ.வே.சு.ஐயர் அதில் கம்பராமாயண ஆராய்ச்சியைத்

---

* பின்னிணைப்பு : 'தேர்ந்த ஆய்வுக் கட்டுரைகள்' காண்க.

தொடர்ந்துள்ளார். கம்பன் ஆய்வினைச் செந்தமிழ் துவக்கிய பொழுது அதற்கு உரம் ஊட்டும் வகையில் விவேகபாநு, ஆனந்த போதினி, குமரன், திருக்கோயில், கலைமகள், தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி போன்ற இதழ்களும் செயல்பட்டன. கலாநிலயம் இதழின் ஏழு தொகுதிகளிலும் அதன் நிறுவனர் டி.என்.சேஷாசலம் தனித்தனிக் கட்டுரை வடிவில் கம்பனுக்கு ஆராய்ச்சிப் பதிப்பு கண்டது, தனி முத்திரைக்குரிய பெருமைக்குரிய செயற்பாடாகும்.

செந்தமிழ் இதழுக்கு ரா.இராகவையங்கார் கம்பன் புகழ்விளக்க அமைந்தது போல், ஆனந்த போதினிக்கு தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், திருக்கோயிலுக்கு மதுரைமுதலியார் அமைகின்றனர். கெ.என்.சிவராஜபிள்ளை கவிதை வடிவில் கம்பனுக்கு ஆய்வும், பாராட்டும் இணையும் 'கம்பராமாயண கௌஸ்துபமணிமாலை'யைச் செந்தமிழில் தந்துள்ளதும் கூறத்தக்கது. ரா.பி.சேதுப்பிள்ளை, த.இராமநாதப்பிள்ளை, மு.கதிரேசன் செட்டியார் போன்ற பலர் தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி, கலைமகள் முதலான இதழ்களில் கட்டுரை வரைந்து கம்பரைத் தமிழுலகு பாராட்ட வழிசெய்துள்ளனர். Tamil Culture எனும் ஆங்கிலஇதழும் கம்பராமாயணம் தொடர்பான கட்டுரைகளை வெளியிட்டுக் கம்பன்பணி புரிந்துள்ளதும் கூறத்தக்கது. ஏ.சி.பால்நாடார், சி.ஆர்.மயிலேறு, ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார் போன்றோரின் தரமான ஆய்வுகளால் அவ்விதழ் பொலிவுற்றுள்ளது. 'கம்பன் கலைநிலை'யும் முதற்கண் திங்களிதழாக வெளிப்போந்ததும் முன்சுட்டப்பட்டுள்ளது.

இதழ்களின் இக்கம்பன்பணி இன்றும் தொடர்வதை அறிய முடிகிறது. இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் பல தொடர்ந்து நூலாக்கம் பெற்றுள்ளதையும் அன்றும் இன்றும் காண முடிகிறது. வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் கம்பராமாயணசாரம் நூல்கள் பலவும் செந்தமிழில் தொடராக வெளியிடப்பட்டபின் நூலாகத் தொகுக்கப்பட்டனவாகும். ஆய்வுக்குறிப்புகளுடன் அமையும் இந்நூல்கள் (ச.சிவகாமி, கம்பன் ஆய்வடங்கல் பக் 23–29) கம்பராமாயணச் சுருக்க நூல்களில் தலையாய இடம் பெறுவது குறிக்கத்தக்கதாம். புரசை சு.முருகேச முதலியாரின் வாலி வழக்கு (1977) முதலில் திருக்கோயில் இதழ்களில் வெளிப்போந்தது. சாண்டில்யனின் 'கம்பன் கண்ட பெண்கள்' (1979) தினமணிக் கதிரில் தொடராக இடம்பெற்றதாகும்.

தமிழகத்திற்கு வெளியேயும் இதழ்கள் கம்பன் காவியத்திற்குச் சிறப்பளித்துள்ளதை ஆந்திராவில் வெளியாகும் 'சப்தகிரி' கொண்டறியலாம். இவ்விதழில் வெளிவந்த என்.கிருபாநந்தனின் கட்டுரைகள் 'சிறையிருந்த செல்வி'யாக (1981) நூலாக்கம் பெற்றுள்ளன.

கல்வி நிறுவனங்கள் வெளியிடும் பருவ இதழ்களிலும் கம்பன் பணி சிறப்பிடம் கொள்வதை உணர முடிகிறது. கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் வெளியீடான 'Journal of the Dept. of Tamil' என்பதில் தொடர்ச்சியாக லி.ருத்ஜாயின் கம்பன்ஆய்வுகள் (1972–1974) இடம்பெற்றுள்ளமை சுட்டத்தக்கது.

கம்பன் கழகங்கள் : மிகச்சிறந்த பக்தி இலக்கியம் என்ற சிறப்பினை மீறிக் கற்போர் கருத்தைக் கொள்ளைகொள்ளும் பேரிலக்கியம் என்ற பெருமை நாளும் வளர கம்பன் கழகங்கள் களையெடுத்து நீரை வார்த்தன. 1910 இல் கம்பன் பிறந்ததாகக் கருதப்படும் தேரழுந்தூரில் முதல் கம்பன் கழகம் தோன்றியது முதல் இன்று வரை இவற்றின் பணி இன்றியமையாச் சிறப்புடன் அமைகின்றன.

கம்பன் கழகங்களின் கம்பன் பணி கம்பனுக்குப் புதிய பதிப்புகளை வெளியிடல் (சென்னை, கம்பன் கழகம் 1975, கோவை கம்பன் அறநிலை 1993); கம்பன் மலர்களாக, கம்பன் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடல் (கம்பன் ஆய்வுகள் – நூல்வரிசை காண்க); சொற்பொழிவுகளை நூலாக்கித் தரல் (வால்மீகியும் கம்பனும் கண்ட சமூகங்கள் – நா.வரதராஜுலு நாயுடு, 1987), கம்பன் ஆய்வுகளை விழாக்களில் வெளியிடல் (செஞ்சொற்கவியின்பம், சாரதா நம்பிஆரூரன், புதுவைக்கம்பன் கழகம், 1988) என்பனவற்றிலும் அக்கறை கொள்வது இங்கு உணர்த்தத்தக்கது. கம்பன் கழகங்களின் செயற்பாட்டுத் தொடக்கம் முதல் இன்று வரை இத்தகு நூலாக்கப் பணி தொடர்ந்து இடையறாது ஆண்டுதோறும் வளர்ந்து கொண்டிருப்பது நவிலத்தக்கது.

கம்பன் கழகங்கள் வெளியிடும் மலர்களை அவ்வளவு எளிதில் ஒதுக்கிவிட முடியாது. அவற்றுள் இடம்பெறும் கட்டுரைகளில் பெரும்பான்மை கருத்துக்கருவூலங்களாக, புதிய சிந்தனைகளின் வெளிப்பாடாக அமைதல் பாராட்டிற்குரியது. சான்றாக ஒரு சில இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றன.

"இரண்டாவது வரகுண பாண்டியனின் தம்பி பராந்தகவீரநாராயணன் என்பவனால் அளிக்கப்பெற்ற தளவாய்புரச் செப்பேட்டில் இடம்பெற்றுள்ள 'சுகேது சுதை சுந்தரத்தையும் ஒருங்கு முன்னாள் மடிவித்த சிறுமேனி உயர்தவத்தோன்' என்பது கொண்டு தடாகையின் வரலாறு தமிழகத்தில் வழக்கிலிருந்தது என அறியலாம்." – இரா.நாகசாமி (சுகேது சுதை, கம்பன் மணிமலர், காரைக்குடி 1977, ப.39).

'ஒவ்வொரு பண்ணுக்கும் உரிய பாடல்களின் கட்டளைகள் இன்ன என்பது கம்பன் கால வழக்காக இருந்திருக்க வேண்டும்'. – என்.வி.நாயுடு (கம்பராமாயணத்தில் சில இசைக்குறிப்புகள், கம்பன் விழா மலர், சென்னை 1976, ப.45).

கவிச்சக்கரவர்த்தி மனித சமுதாயத்தின் உயிர்நாடியான அன்பிலே திளைத்த ஒரு பெரிய நெறியை எடுத்துக்காட்டுகின்றார். இந்த வழியைப் பின்பற்றினால் 'எல்லோரும் எல்லாச் செல்வமும் எய்தலாம். மண்ணையும் விண்ணையும் அளக்கலாம்' – சு.சிவகாம சுந்தரி (கம்பனைப் போல், கம்பன் விழாமலர், புதுச்சேரி, 1988, ப.155).

வாலியின் மனவளர்ச்சியைக் காட்டாவிடின் அவனுடைய மனமாற்றத்திற்குத் தக்க சமாதானம் கூற முடியாது. அது முடியாமற் போனால் கம்பனுடைய பாத்திரப் படைப்புக்கு இழுக்கு ஏற்படும். எனவேதான் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் இந்தப் பாத்திரத்தையும் புது முறையில் படைத்துக் காட்டுகிறார். –அ.ச.ஞானசம்பந்தன் (வாலி ஒரு புதிய கண்ணோட்டம், கம்பன் விழா மலர், புதுக்கோட்டை, 1978,ப.71).

'இங்கு மயில்முறைக் குல உரிமை' என்பதைக் கேகய குலத்துக்கு உரிமையாக்காமல் பொதுவாக மன்னர்களாக வருகின்றவர்களின் உரிமை என்று பொருள் கொண்டால் புதுமையான பொருள் பல கிடைக்கும். அதாவது... அரசில் பொறுப்பாக உள்ளவன், மயிலைப் போல இருந்து அரசு புரிய வேண்டும் என்று பீஷ்மர் தருமருக்கு உபதேசிப்பதாக மகாபாரதம் சாந்திபர்வம் கூறுகிறது. அவற்றை எடுத்துரைத்து மயிலைப்போல மன்னன் இருக்க வேண்டும் என்ற இவ்வரிய பொருளையே மயில்முறை என்ற சொல்லுக்குப் பொருளாகக் கொள்க' –கீரன் (மயில் முறை குலத்து உரிமை, கம்பன் மணிமலர், காரைக்குடி 1977, பக் 37–38).

இராமாயணக் கதை நிகழ்ச்சி, தென்னிந்தியாவிற்குத் தெற்கே உள்ள இலங்கையில் நிகழ்ந்தது அன்று. இராமாயண இலங்கை, மத்தியப்பிரதேசத்தில் உள்ள விந்திய மலைக் காடுகளில் சபல்பூருக்குக் கிழக்கே பதின்மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ள நிலப்பகுதியே ஆகும் என்பர் தொல்லியல் மேதை எச்.டி. சங்காலியா (Hindu 4.10.1971). பிறன்மனை நயத்தலைப் பற்றிய குறிப்புகளும் இராமாயண நிகழ்வுகள் அனைத்தையும் வட இந்திய மண்ணிற்கே உரியவை என உய்த்துணர வைக்கின்றன –க.ப.அறவாணன் (சமூகவியல் பார்வையில் இராமாயணமும் பிறனில் விழைதலும், கம்பன் விழா மலர், புதுச்சேரி, 1988,ப.24).

கோவை, கம்பன் கழகம் தொடர்ந்து (1991 முதல்) வெளியிட்டுள்ள கம்பன் மலர் தனித்துக் குறிப்பிடத்தக்கதாகும். ஆண்டுதோறும் காண்டவாரியாக அம்மலர்கள் அமைகின்றன. அக்காண்டம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளுடன், அதுவரையில் வெளிவந்துள்ள அக்காண்ட ஆய்வுகளில் சிறந்த கருத்துகளைத் தொகுத்து தந்துள்ளமையும் சிறப்பிற்குரியதாகும்.

அயோத்தி கூனிக்கு இங்கிலாந்தில் அந்தப்புரம் (அ.அறிவொளி, கம்பன் விழாமலர், புதுக்கோட்டை 1978); கம்பன் அருளிய இராமாவதாரத்தின் யாப்பு, சந்த வேறுபாடுகள் – அட்டவணைகளுடன் (கம்பன் அடிப்பொடி, கம்பன் மணிமலர், காரைக்குடி, 1976); கம்பனில் உருக்காட்சிகள் (ந.சுப்புரெட்டியார், கம்பன் மணிமலர், காரைக்குடி, 1980); நாட்டுப்புற மக்களும் காகுத்தன் கதையும் (அ.அறிவு நம்பி, கம்பன் விழா மலர், புதுச்சேரி, 1988); இரு பேச்சுடையான் (மு.மு.இஸ்மாயில், கம்பன் விழா மலர், சென்னை 1976); சில மறு பரிசீலனைகள் (ம.வே.பசுபதி, கம்பன் விழா மலர், விழுப்புரம், 1986) எனப்பல அரிய கட்டுரைகள் கம்பன் ஆய்வினை வளப்படுத்துகின்றன.

சென்னைக் கம்பன் கழகம் 1984 முதல் ஏ.வி.எம். அறக்கட்டளைச் சொற்பொழிவு நடத்தி அந்தந்த ஆண்டிலேயே அதனை நூலாக வெளியிடலும், புதுவைக் கம்பன் கழகம் 1992 முதல் அமரர் புலவர் கீரன் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடத்துவதும் குறிக்கத்தக்கன. 1972 முதல் 1990 வரை புதுவைக் கம்பன் கழகத்தில், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற தமிழறிஞர்கள் வெளியிட்ட சிறந்த கருத்துகளின் தொகுப்பாக, 'கம்பன் கருத்துக்களஞ்சியம்' வெளியிடப்பட்டதும் உணர்த்தத்தக்கது.

ஆய்வேடுகள் : பல்கலைப் பட்டங்கள் பெறுதற்காக நிகழ்ந்துள்ள ஆய்வுகளும் கம்பன் ஆய்வு வளர வழி வகுத்துள்ளன. முதுகலை, எம்லிட், எம்பில், பி.எச்.டி என அவை அமைகின்றன. முதுகலைப் பட்ட ஆய்வேடுகளில் கேரள, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்கள் முன்னிற்கின்றன. இவற்றுள் கேரளப் பல்கலைக்கழக மாணாக்கர் ஆய்வேடுகள் கம்பனில் நட்பு (1970), கம்பனில் தாவரங்கள் (1969), கம்பன் கண்ட உயிரினங்கள்' (1968), அனுமன் ஆய்வும் வழிபாடும் (1974) என்பன நூலாக்கம் பெற்று முதுகலைத் தேர்விற்கு அனுப்பப்பட்ட நிலை சுட்டப்படத்தக்கதாகும். 1974ஆம் ஆண்டிற்கான முதுகலைத் தேர்விற்குரிய ஆய்வேடுகள் அனைத்தும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கம்பராமாயணத்தைக் களனாக்கியிருப்பதும் குறிக்கத் தக்கதாகும்.

உயராய்வு நிலையிலமைந்த ஆய்வேடுகள் பலவும் நூலுருவம் பெற்றுள்ளன. Kamban and Milton (1973), The Ramayana in Telugu and Tamil (1973), காப்பிய நோக்கில் கம்பராமாயணம் (1989), இராமாயணக் கிளைக் கதைகள் ஒப்பீடு (1989), கம்பராமாயணத்தில் நாடகக் கூறுகள் (1993) என இப்பட்டியலும் நீண்டதாகும். கல்வியாளரிடமும் கம்பன் ஆய்வு ஆழங்கால் பட்டிருப்பதை இவை உணர்த்துகின்றன. முழுமையான தரவுகள் ஆய்வேடுகளைப் பொறுத்தளவில் கிடைக்காவிடினும் கிடைத்தன கொண்டு கணிக்கும் பொழுது எழுபதுகளில் பல்கலைக்கழகங்களில் சிறப்பிடம் பெற்ற கம்பன் ஆய்வு பின் வெகுவாகக் குறைந்துள்ளதை உணரமுடிகிறது. கம்பனின் நீண்ட விரிந்த களம்; நாட்டுப்புறவியல் மற்றும் தற்கால

இலக்கியங்களின் செல்வாக்கு இக்குறைபாட்டிற்குக் காரணம் எனலாம்.

அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் : பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், கம்பன் கழகங்கள் போன்றவற்றில் நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளைகள் வாயிலாக நிகழும் சொற்பொழிவுகள் பலவும் நூலாக உலா வருகின்றமை கம்பன் ஆய்வுச் சிறப்பின் பிறிதொரு கூறாகும். இருபதின் பிற்பகுதியே இவற்றின் பெருக்கத்தைக் காட்டுகின்றன. வ.சுப.மாணிக்கத்தின் 'கம்பர்' (1965) அண்ணாமலைப் பல்கலைக்கழக சொருணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவாகும். ப.பத்மநாபன் தம்பியின் 'கம்பன் எழுத்தச்சன் இராமாயணங்கள்' (1993) உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அறக்கட்டளைச் சொற்பொழிவாகும்.

இவை தவிர ஆங்காங்கே நிகழும் சிறப்புச் சொற்பொழிவுகளின் நூலாக்கமும் இவண் கருதத்தக்கன. ஜி.சுப்பிரமணியபிள்ளையின் அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுபணிச் சொற்பொழிவு, 'கம்பராமாயணத்தின் பெருமை' (1961) என வெளிவந்துள்ளது. கீரனின் சொற்பொழிவுகள் 'இலங்கை மூவர்' (1981) என நூலேற்றம் கண்டுள்ளன. வானொலி உரைகளும் ஆய்வுரைகளாக மலர்ந்து எழுத்துருவும் காண்பதைச் ச.வே.சுப்பிரமணியனின் 'கம்பனும் உலகியல் அறிவும்' (1981) சி.பாலசுப்பிரமணியனின், கம்பர் காட்டும் இராமன் – கணவன், சகோதரன் (1970) என்பன வழி அறியலாம். ரா.பி.சேதுப்பிள்ளையின் 'கம்பராமாயணத்தில் வள்ளுவர்' கட்டுரையும் (1953) வானொலி உரையே. கோவை கலைக் கல்லூரியில் 15.02.57 அன்று நாமக்கல் கவிஞர் நிகழ்த்திய ஆண்டுவிழாச் சொற்பொழிவு 'வள்ளுவனும் கம்பனும்' எனக் கட்டுரையாக்கம் கண்டுள்ளது. இன்றும் கல்வி நிறுவனங்களிலும், கழக மேடைகளிலும் கம்பன் ஆய்வுச்சொற்பொழிவுகள் நிகழ்ந்த வண்ணம் உள. அவற்றுள் சிறுபான்மையே அச்சேறுகின்றன. அனைத்தும் வெளிவரின் கம்பன் ஆய்வு இன்னும் வளம் பெருக்கும்.

மலர்கள் : கம்பன் கழகங்கள் வெளியிட்டுள்ள மலர்கள் தவிர ஏனைய மலர்கள் இங்கு எண்ணப்படுகின்றன. பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை முன்னிட்டு வெளிவரும் மலர்களில் கம்பன் ஆய்வுகளும் குறிப்பிடத்தகுந்த இடம் பெற்றுள்ளன. ஸ்ரீகோபாலக் கிருஷ்ணமாச்சாரியர் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா மலர் மாலை (இராமபிரான் பெற்ற இருபெரு வரங்கள் – மு.இராகவஐயங்கார், 1942); கு.மதுரைமுதலியார் எழுபதாம் ஆண்டு நிறைவு விழாச் சிறப்பு மலர் (கம்பன் கண்ட கருணன், அ.நா.மகபூஷணம், 1969); கி.ஆ.பெ.விசுவநாதம் மணிவிழா மலர் (கற்பின் கொழுந்து, பூ.ஆலால சுந்தரம், 1958); புதுவைக் கல்விக் கழகத்தின் வெள்ளி விழாமலர் (கம்பரும் காப்பியச் சுவையும், ஈ.எஸ்.வரதராஜ ஐயங்கார், 1951); சைவசித்தாந்த மகா சமாஜம் பொன்விழா மலர் (கதிரவனும் கம்பனும,

நீ.கந்தசாமி, 1955); மாணவர் மன்றம் சென்னை வெள்ளி விழா மலர் (கம்பரின் நினைவாற்றல், பூ.பாலசுந்தரம் செட்டியார், 1957); திருக்குறள் கருத்தரங்கு மலர் (வள்ளுவர் வழியில் கம்பர், கு.தா்மோதரன், 1974); சிந்தாமணிச் சொற்பொழிவு நினைவு மலர் (கம்பர் முகந்தது, கி.வா.ஜகந்நாதன், 1952); அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் – இராமேச்சுரம் மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலர் (கம்பனும் சேதுவும், இரா.சேது, 1975) என்பனவற்றைச் சான்றாகச் சுட்டலாம்.

கல்லூரிகள் வெளியிடும் ஆண்டு மலர்களும் கம்பன் விருந்தளிப்பது கூறத்தக்கது. இரா.சண்முகவேலின் 'கற்பில் சிறந்தவள் கண்ணகியா, சீதையா?' (St. Johns College Palayamkottai Annual, 1972) என்பதைச் சான்றாக்கலாம். 1889 இல் வெளியிடப்பட்ட சென்னை கிறித்தவ கல்லூரி ஆண்டுமலரில் 'Translations from the Sundarakandam of Kamban's Tamil Ramayana' (P.525) இடம்பெற்றிருப்பது மிகவும் கவனிக்கத்தக்க செய்தியாகும். இக்கல்லூரியின் 1900 ஆண்டு மலரில் அ.மாதவையாவின் 'Scenes from the Kambaramayana' (Pp622-629) இடம்பெற்றிருப்பதும் சுட்டற்பாலது.

ஆய்வுக்கோவைகள்: கல்வியாளரை ஒருங்கிணைத்து ஆய்வு விருந்து பரிமாற்றம் செய்ய உதவும் வகையில் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், ஞாலத்தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றம், ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம், திருச்செந்தூர் தமிழாய்வு மன்றம் ஆகியன ஆண்டுதோறும் கருத்தரங்குகளை நடத்துகின்றன. கருத்தரங்கப் பங்கேற்பாளரிடமிருந்து முன்கூட்டியே கட்டுரைகளைப் பெற்று, ஆய்வுக் கோவை, தமிழியல் ஆய்வு, ஆய்வுச் சிந்தனைகள், ஆய்வுப் பொழில் எனத் தொகுப்பாக வெளியிடுகின்றன. அவற்றுள்ளும் பல கட்டுரைகள் கம்பன் ஆய்வினை வளர்த்துச் செல்வதைக் காண முடிகிறது (காண்க. தேர்ந்த ஆய்வுக் கட்டுரைகள் – பின்னிணைப்பு). இவற்றையும் உட்படுத்தும் பொழுதுதான் கம்பன் ஆய்வின் வளர்ச்சி முழுமைபெற்றதாகும் என்ற தன்மையில் இவை சிறப்புறுகின்றன.

இவற்றைப் பொதுவாகக் கண்ணோட்டமிடுகையில் இரு கருத்துகள் எழுகின்றன. ஒன்று புதிய புதிய பார்வைகளில், பொதுநிலை ஆய்வு வளர்ச்சிக்கு ஏற்ப கம்பன் ஆய்விலும் புதுமை படருவது பாராட்டத்தக்க செய்தியாகும். இராவணன் யார்? (பொ.பா.லோகாபிராமன், தமிழியல் ஆய்வு, 1955), கம்பன் கண்ட குரங்கினம் (ஆய்வுக் கோவை – 1983, எஸ்.உமாதேவி); கம்பரின் வேளாண்மைக் கனவுகள் (வி.ஏ.மாணிக்கம், ஆய்வுக் கோவை – 1983); கம்பர் காட்டும் போர்ச் சமுதாயம் (ஜோ.ரோசுலெட், ஆய்வுச் சிந்தனைகள்) என்பனவற்றைச் சான்றாக்கலாம், கம்பன் ஆய்வுகள் மீண்டும் மீளாய்விற்கு உட்படுவது இதில் சிறப்பாகச் சுட்டப்பட வேண்டிய செய்தியாகும்.

வ.கிருஷ்ணனின் 'கம்பராமாயணத்தில் சைவ எதிர்ப்பு' கட்டுரையைச் (ஆய்வுக் கோவை, 1995) சான்றாக்கலாம். எனினும் மரபு வழிப்பட்ட ஆய்வுகளும் மிகுதியாக இடம் பெறுகின்றன (கம்பர் காட்டும் கற்புத்திறம், அ.மாதவி, தமிழியல் ஆய்வு, 1995).

இரண்டாவதாக, கம்பன் ஆய்வுகளின் எண்ணிக்கையை பொறுத்தமட்டில் அவை குறைந்து கொண்டு வருவதை உணர முடிகிறது. 92 கட்டுரைகளை உள்ளடக்கிய ஆய்வுச் சிந்தனைகளில் (1996) கம்பன் ஆய்வு ஒன்றுகூட இல்லை. இது ஒருபுறம் கம்பன் ஆய்வில் தொய்வு தோன்றுவதையே குறிக்கிறது.

மேற்காட்டியன தவிர, கம்பன் ஆய்வுப்பணி வரலாற்றில் அதன் வளர்ச்சிக்குத் தனியார் விழைவும், பதிப்பகங்கள் கம்பன் ஆய்வு வெளியீட்டில் காட்டும் சிறப்புக் கண்ணோட்டமும் குறிக்கத்தக்கன. முன்னதற்குச் சாயபு மரைக்காயரின் 'கம்பர் ஆய்வுக் கோவை' தொகுப்பும் பின்னதற்கு மணிவாசகர், வானதி பதிப்பகங்களும் சான்றாகின்றன. அண்மைக் கம்பன் வெளியீடுகளில் வானதி பதிப்பகம் காட்டும் அக்கறை அதனைத் தனித்து நிற்கச் செய்கிறது. குறிப்பாகப் பல கம்பன் கழகங்களின் வெளியீடுகள் அதன்வழி வருவது நினைக்கத்தக்கது.

ஆய்வுப் போக்கு

கம்பராமாயண ஆய்வுகள் பன்முகப் பார்வையுடன் பல்துறை அவாவி நிற்பதை அறிய முடிகிறது. அவற்றை இனம் பிரித்துக் காணும் முயற்சியாக இப்பகுதி அமைகிறது. சுமார் 14 வகையான ஆய்வுப் போக்கினை இதில் காணலாம்.

1. மூலபாட ஆய்வியல் : கம்பனின் தொடக்க கால ஆய்வுகள் பல கம்பனால் பாடப்பட்ட பாடல்கள் யாவை? குறிப்பிட்ட பாட வேறுபாடுகள் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு அமைந்துள்ளன. இன்று அவை ஆங்காங்கே மிகச் சிறு அளவில் அமைவதும் குறிக்கத்தக்கன.

கம்பனுக்கு என்று பதிப்புகள் வெளிவரத் தொடங்கியவுடன் அதன் உருவப் பெருக்கம் காரணமாகவும், பயன்பாட்டுப் பெருக்கம் காரணமாகவும் பாடல்கள், படலங்கள் இவற்றிடையே வேறுபாடு மிகுதியானது. இதனால் தூய கம்பன் பாடல்களை அறுதியிடும் போக்கு அரும்பியது. இதில் செந்தமிழ் இதழ் மிகுந்த அக்கறை காட்டியது (ச.சிவகாமி, கம்பன் ஆய்வடங்கல், பக்.20–21). செந்துறை முத்து, பாடவேறுபாடுகள் குறித்து ஒரு கட்டுரை வரைந்திருப்பதும் (கம்பன் ஒரு திறனாய்வு – இரண்டாம் பாகம், 1980) நோக்கத்தக்கது.

இவற்றினின்றும் மாறுபட்டு, கம்பராமாயணத்தின் மூலவித்தினைத் தேடிப்பிடிப்பதில் தனித்த விழைவு காட்டிய கு.திருமேனியும் இங்குச் சுட்டப்பட வேண்டியவராவர். கம்பனுக்குக் கதை கொடுத்தவர் வான்மீகரா? (1966), கம்பராமாயணத் தோற்றம் (1982) எனும் அவரது இருநூல்கள் இதன்பாற்பட்டன. "கம்பன் பதினெண் புராணங்கள் பலவற்றையும், இராமாயணங்கள் பலவற்றையும் வான்மீகரையும் நன்கு பயின்று, சங்க காலத்துச் சான்றோர்கள் தொடங்கி ஆழ்வாராதியர்களும் தேவார ஆசிரியர்களும் தமக்கு முன் வாழ்ந்த அனைத்துத் தமிழ் இலக்கண இலக்கிய காப்பிய வழிபாட்டுநூல் புனைந்த அத்துணைச் சான்றோரும் கூறிய கருத்துகளையும் கற்றுத் தெளிந்து மரபு பிறழாமலும் காப்பியத் தலைவனின் பண்பு சிதையாமலும் இராமனைத் தாம் அமைத்த இதிகாசத்தலைமகனாக அமைத்துக் காப்பியம் புனைந்துள்ளார்" என்பது அவரது முடிபு. கம்பனில் ஆழங்கால் பட்டோர் முடிபுமாம்.

2. கால ஆராய்ச்சி : கம்பனின் தொடக்க ஆய்வுகள், தெளிவான கம்பர் வரலாறு இன்மை காரணமாக அதனை அறிவதில் ஆர்வம் காட்டின. கால ஆராய்ச்சி ஒரு முடிந்த நிலையினை எய்தாமல் கம்பர் காலம் கி.பி. 9,10,12 ஆம் நூற்றாண்டு என மூன்று கால நிலைகளில் கூறப்படுகிறது. சோமசுந்தர தேசிகர் 9ஆம் நூற்றாண்டு என (Date of Kambar, நுண்பொருள் மலர் ப.94,1937), தி.வை.சதாசிவ பண்டாரத்தார் (கம்பர் காலம், இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுகளும், ப.25, 1961), தெ.பொ.மீ (A Plea for fixing the age of Kamban, ஆய்வுக் கோவை, 1971), ஆகியோர் 10ஆம் நூற்றாண்டு என்கின்றனர். ரா.இராகவையங்கார் (கம்பர் காலம், செந்தமிழ் 1904–1905), எஸ்.வையாபுரிப்பிள்ளை (கம்பர் காலம், தமிழ்ச் சுடர் மணிகள், 1949) போன்றோர் 12ஆம் நூற்றாண்டு என முடிவு செய்துள்ளனர்.

இன்றைய ஆய்வுகள் இம்மூன்றனுள் ஒன்றனைத் தம் கருத்தாக ஏற்றுக் கொண்டு, கம்பர் காலம் பற்றிய மேலாய்வில் மிகுதியாக ஈடுபாடு காட்டவில்லை. கம்பன் கழகங்கள், தாய்க்கழகமான காரைக்குடிக் கம்பன் கழகம் வலியுறுத்தும், கம்பன் அரங்கேற்றிய நாளாக கி.பி.886, பங்குனி அத்தம் நாளை ஏற்றுக்கொண்டுள்ளன. கம்பன் கழக (காரைக்குடி) விழாக்கள் ஆண்டுதோறும் இப்பங்குனி நாளில் நிகழ்வது குறிப்பிடத்தக்கது. அருகிய நிலையில் 'கம்பர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டே' (மா.வரதராஜன், 1994) என்ற நூல் அண்மை வெளியீடாக அமைவது குறிப்பிடற்பாலது. க.கு.கோதண்டராமனின் 'கம்பனில் ஒரு காலக் குறிப்பு' (கம்பன் மலர், கோவை, 1984) கட்டுரையும் எழுந்துள்ளது.

சு.குலசேகரன் (தமிழ்ப் பொற்காலத்தில் இராமனுஜரும் கம்பரும் – காலம் & காலநிலை ஆராய்ச்சி, 1997), " பங்குனிப் பவுர்ணமி சகம் 807இல் உத்திரத்தன்றும் (23–2–886) சகம் 1107இல் அத்த நாளிலுமே

(07.03.1186) வந்துள்ளது. எண்ணிய சகாப்தப் பாடல் பங்குனி அத்த நாளையே குறித்திருப்பதால் கம்பராமாயணம் அரங்கேற்றப்பட்ட நாள் 07.03.1186 ஆகும்'' என்பார்.

முழுமை பெறாத ஏ.சி.பால் நாடாரின், 'The problem of the life and the age of Kamban' எனும் கட்டுரையில், கம்பனுக்குக் கிடைத்துள்ள ஏட்டுச் சுவடிகளில் முதன்மையானதாக கி.பி. 1578 ஆம் ஆண்டிற்குரியது காட்டப்பட்டுள்ளது.

3. அமைப்பியல் : இராமகாதையை உருவாக்குவதற்கு, அமைப்பதற்குக் கம்பன் கையாண்ட வழிமுறைகள், பயன்கொண்ட நெறிகள் போல்வன இதனுள் கருதப்படுகின்றன. கம்பன் ஆய்வு வரலாற்றின் முன்பகுதியைவிடப் பின்பகுதியில் பல ஆழமான சிறந்த ஆய்வுகள் இவ்வகையில் கிடைத்துள்ளன.

இராமாயணக் காப்பியத்தின் அமைப்புச் சிறப்பினை முழுமையாகப் பலகோணங்களில் அணுகி, அவ்வகையில் தமிழிலக்கியங்களுக்குத் தலையாய நூலாக, ச.வே.சுப்பிரமணியனின் 'கம்பன் இலக்கிய உத்திகள்' (1982) அமைகிறது. இலக்கண உத்திகள், இலக்கிய உத்திகள், யாப்பு உத்திகள், மொழிநடை உத்திகள், அணி உத்திகள், காப்பிய உத்திகள், பொருள் உத்திகள் எனப் பகுத்துத் தொகுத்துத் தெளிவாக, விரிவாக விளக்கியிருப்பதோடு நூலின் இறுதியில் 'உத்திக்கலைச் சொற்களி'ன் பட்டியலை இணைத்திருப்பது ஆய்வாளருக்குப் பெருவிருந்தாம். இவர் கம்பனுக்கு அளித்துள்ள புகழ் மொழிகள் கம்பராமாயணத்திற்கான முழுமையான விமர்சன மொழிகளாகவும் பொருந்துகின்றன.

"கம்பன் காவியக் கலைஞன், கவிவேந்தன், கவிதைச்சிற்பி, முத்தமிழ் வித்தகன், முதுமொழிப் பாவலன், வடமொழி வல்லுநன், நாற்சொல் நாயகன், அகப்பொருள் ஆற்றலன், புறப்பொருட் புலவன், பக்திக் கவிஞன், அறச் செம்மல், புராணப் புரவலன், கதைக் காவலன், உலகியல் அறிஞன், கற்பனைக் காரணன், பழமை விரும்பி, புதுமை நாடி, மரபுப் பாவலன், புரட்சிக் கலைஞன், மக்கட் கவிஞன், மானுட அன்பன், உயிரினத் தோழன், உயரின உழைப்பாளன், ஊழ்வலி உணர்ந்தவன், ஒலியாற்றல் அறிந்தவன், சொற் செவ்வி பெற்றவன், குறிப்புணர்வு உடையவன், கருத்துச் செறிவு கொண்டவன், வருணனை ஆற்றலன், காதல் சித்திரன், இயற்கை ஓவியன், வாழ்வுப் புனைவலன், சமுதாயவியல் வித்தகன், அரசியல் வல்லுநன், தெய்வமாக்கவி, கவிச்சக்கரவர்த்தி, நவரச நாடக ஆசிரியன், கருத்தாழம் உடையவன், கலைக்கோவில் படைத்தவன், சந்தங்கள் ஆண்டவன், வண்ணங்களில் விளையாடியவன், விருத்தவகை பல வடித்தவன்" (ப.1) எனும் அப்பகுதி இக்கூற்றின் உண்மையை உணர்த்தும்.

கம்பராமாயணத்தின் உயிர்நிலைப் பாட்டாக, ‘அரக்கியர் அளவு அற்றார்கள்’ (6042) என்பதனைத் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் கொண்டுள்ளார். கம்பனின் ஈற்றடிகளெல்லாம் நினைவில் பதித்து வைத்தற்குரிய சிறந்த அடிகளாகும் என்பார் ச.கணபதி முதலியார் (கம்பன் காவிய நடை, செந்தமிழ் தொகுதி–31).

கம்ப நாடகம் எனப் பொதுவாகப் பாராட்டப்படும் கம்பர் காப்பியத்தின் நாடகவியலினை வேறுபட்ட பார்வையில் எடுத்துக்காட்டி இருவர் சிறப்பித்துள்ளனர். கா.அரங்கசாமியின் முனைவர் பட்ட ஆய்வேடான ‘கம்பராமாயணத்தின் நாடகக் கூறுகள்’ (1993) முதலில் வெளிவந்துள்ளது. நாடகக் கலையுடன் ஒப்பவைத்துக் கம்பனை ஆய்வு செய்துள்ள இந்நூல் 15 வரைபடங்களில் அவற்றிற்குத் தெளிவு காட்டியிருப்பதும் அவற்றுள் ஒன்றாக இதுவரை வெளிவந்துள்ள 62 இராமாயண நாடகங்களின் விளக்கக் குறிப்பினைத் தந்திருப்பதும் நூலாசிரியரது பெருமுயற்சியைப் பறைசாற்றுகின்றன.

அனுமன் பாத்திரப்படைப்பில் கம்பர் தம்மை வெளிப்படுத்திக் கொள்வதாக நவிலும் தமிழண்ணலின் ‘கம்பநாடகம்’ அடுத்து (1995) வெளிவந்துள்ளது. இவரது பார்வையில் இராமாயணம், “மானுட வாழ்வு அடிப்படையிலான இந்நாடகம், கவிதை வழியாகக் கம்பரால் சொல்லப்படும் பொழுது, ஒரு திரைப்படத்தில் காட்சிகள் தோன்றி நகர்வது போல் காட்டப்படுகின்றன. காட்சிப் பின்னணி, நிகழிட அரங்கு, பாத்திர நடிப்பு, கதைக் கோப்பு, குறிப்பாலுணர்த்தல், அணிமை – சேய்மைக் காட்சிகள், கால, இட உணர்வைப் பொருந்தப் படைத்தல், வசனம் எனப்படும் உரையாடல் திறன், திருப்புக் காட்சிகள், நிலைப்படங்கள் (Stills), சுவை வெளிப்பாடுகள் என இத்தகையவற்றால் கம்பர் இன்றைய திரைப்படக் கல்லூரிகட்கும் பாடநூலாகுமளவு தம் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார். கம்பர் கவிதையில் நாடகப் பண்புள்ளது என்பதை விட நாடகப் பண்பே கவிதை வடிவெடுத்துள்ளது எனலாம்” என அமைகிறது.

காப்பியமாயினும், நாடகமாயினும் அதன் வெளியீட்டுச் சிறப்பிற்கு, வெற்றிக்கு இன்றியமையாததாக நிற்கும் மெய்ப்பாடுகள் குறித்து கு.கோதண்டபாணி ஆய்ந்துள்ள ‘கம்பரும் மெய்ப்பாட்டியலும்’ (1971) இங்குப் பேசப்படும் பெருமைக்குரியதாகும். ‘அரசியலில் மெய்ப்பாடுகள் பயன்பட்டதைக் காட்டும் இலக்கியமே இலதாயிற்று. இக்குறைபாட்டை நீக்கிய பெருமை, அதிலும் வெற்றி பெற்ற பெருமை கம்பருக்கே உரியது. தொல்காப்பியர் கற்பு என்பதை ஓர் ஒழுக்க முறையாகக் கொண்டாரேயன்றி ஓர் உணர்ச்சியாகக் காட்டினார் இலர். ஆனால் கம்பர் சீதையின் மெய்ப்பாடுகளில் அக்கற்பினை அனுமனின் கண்களால் காணச் செய்துள்ளார்’ என்பன போன்ற கருத்துகள் நூலுக்கு அணி செய்கின்றன.

காப்பியக் கதைமாந்தர் கூற்று எங்ஙனம் காப்பியச் சிறப்பினை மிகுவிக்கிறது என்பதைத் தம் 'கம்பன் காப்பியம் – கதை மாந்தர் கூற்று' (1995) நூலுள் புலப்படுத்தும் அ.வெ.சுப்பிரமணியன், 'கம்பன் காட்டும் களம்' (1987) எனும் மற்றொரு குறிப்பிடத்தகுந்த நூலையும் தந்துள்ளார். 'வருணனைகளில் முக்கிய பாத்திரங்களின் உணர்ச்சியை மையமாக அமைத்துப்பாடும் உத்தியைச் சிறப்பாகக் கையாண்டவன் கம்பன். இவ்வருணனைகளில் குறியீடுகளை அமைத்து இச்செயலியல் குறியீடுகளின் உதவியால் படிப்போர் எளிதாக உணர்ச்சி நிலையை உணருமாறு வழிவகுத்தான் கம்பன்' என்பது இவர் கருத்து. மரபுக் குறியீடுகளாலும் தமக்கென்ற தனித்த குறியீடுகளாலும் கம்பர் தம் இராமகாதையை அணி செய்துள்ளதைச் ச.சிவகாமியின் 'இராமாயணக் குறியீடுகள்' (1992) இயம்புகிறது.

கம்பராமாயணக் கதையமைப்பிற்கும் கவிதை வெளியீட்டிற்கும் அடிப்படையான கற்பனை, கம்பர் காவியத்தினை வளப்படுத்தியுள்ள தன்மையை, ச.வே.சுப்பிரமணியனின் 'கம்பன் கற்பனை' (1978) காட்டுகிறது. தமிழர்களுக்கெனத் தனித்த இலக்கியக் கொள்கையுண்டு என்ற கண்ணோட்டத்தில் கற்பனையைத் தமிழர்கள் எவ்வாறு நினைத்தார்கள், உணர்ந்தார்கள், வெளியிட்டார்கள், அதன் பொருண்மை நிலை என்ன, சொல் நிலை வளர்ச்சி எவ்வாறு; மேனாட்டார் எண்ணங்கள் போன்றன இதில் விளக்கம் பெற்றுள்ளன.

இங்குக் குறிக்கத்தக்க மற்றொரு நூலாக முத்து எத்திராசனின் 'கம்பர் தரும் பழமொழிகள்' (1987) அமைகிறது. 57 வகையான பழமொழிகள், 128 பழமொழிகள் 176 இடங்களில் கம்பனில் இடம் பெற்றுள்ளன. 'வெந்த புண்ணில் வேல் நுழைந்தது போல' என்பது காப்பியத்துள் 11 இடங்களில் பயில, 'உள்ளங்கை நெல்லிக்கனி' ஏழு இடங்களில் வருகிறதெனக் கணக்கிட்டுள்ளார்.

சுமார் 95க்கும் மேற்பட்ட அடைகளுடன் 682 இடங்களில் கம்பனில் இடம்பெறும் தாமரை, பாத்திரங்களின் பண்பு, புற அழகு, மெய்ப்பாடுகள், செயல்களை விளக்கி நிற்பதாகக் காட்டுவர் (கு.பகவதி அம்மாள், கம்பனில் தாமரை, முதுகலைப் பட்ட ஆய்வேடு, 1974).

'கம்பன் தனது அரிய யாப்புத் திறனைக் காட்டுவதற்காகச் செய்யுள் வளத்தை வேறுபடுத்தவில்லை. அவனது கருத்தின் இசை, செய்யுளின் கதியாக உருவெடுத்து வெளிவந்து ஒழுகுகின்றது என்றே கொள்ளுதல் வேண்டும். கட்டங்கள் தோறும் செய்யுள் வகைகளை மாற்றுவதோடு, கதாபாத்திரங்களின் இயல்புகளுக்கேற்பவும் செயல்களுக்கேற்பவும் கம்பன் தனது செய்யுட்களை வேறுபடுத்தி அமைத்திருக்கிறான்' எனும்

வையாபுரிப்பிள்ளை (தமிழர் பண்பாடு, 1949,ப.92) முதற்கொண்டு காப்பிய யாப்பின் ஆய்வு பரவலாகக் காணப்படுகின்றது.

அன்னிதாமசு, 'எண்வகைப்பட்ட பாடல்கள் கம்பரால் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் கலி விருத்தமே மிகுதியாகப் பயிலப் பெற்றுள்ளது. வை.மு.கோவின் பதிப்புப்படி கம்பனில் அமையும் கலி விருத்தங்கள் 5077, அறுசீராசிரிய விருத்தம் 3185, கலித்துறை 1805, வஞ்சி விருத்தம் 225, எழுசீராசிரிய விருத்தம் 178, தரவு கொச்சகக் கலிப்பா 86, எண்சீராசிரிய விருத்தம் 6, வஞ்சித்துறைப்பாடல்கள்5; வஞ்சி விருத்தம் வஞ்சித் துறையாகவும் அலகிட வாய்ப்பளிக்கிறது. கலி விருத்தங்களில் சில வஞ்சி விருத்தமாகவும் வேறுசில தரவுக் கொச்சகமாகவும் நிற்கும் தன்மையைப் பதிப்பாசிரியர் சுட்டுகின்றார். இத்தகைய யாப்பு மயக்கம் மிகுதியாகக் கம்ப இராமாயணத்தில் மட்டுமே அமைகின்றது. இம்மயக்கம் கம்பராலேயே ஏற்பட்டிருக்கலாம்' என முழுப்பார்வையில் (இளவேனில், 1972, 32–33) கருத்துரைக்கக் காணலாம்.

முன் கட்டுரைக்கு மாறாக, 'கம்பன் கைப்பட்ட கனிகள்' என யாப்பின் ஒரு கூறினை மட்டும் எடுத்து ஆய்ந்துள்ள ம.ரா.பூபதி (அய்வுக் கோவை 14, 1982, ப.224), 'கம்பன் பத்துவகைக் கனிவிருத்தங்களைக் கையாண்டுள்ளான். அக்கனி விருத்தங்கள் 3,4,5 சீர் அடிகளிலேயே அமைந்துள்ளன. இவற்றில் 1 இயல்விருத்தம், 8 வகை சந்த விருத்தம், 1 வண்ண விருத்தம் என அமைகின்றன. பெரும்பாலும் போர், வெகுளி ஆகியவற்றைப் பாடவும், சிறுபான்மை இரங்கலைப் பாடவும் பயன்பட்டுள்ளன. மாங்கனிகளைத் தீண்டி, விளங்கனிகளைத் தீண்டாத திருத்தக்க தேவர் போல் இன்றிக் கம்பன் இருவகை மாங்கனிகளையும் கையாண்டுள்ளான்' எனக் கூறுகிறார்.

கம்பராமாயண யாப்பினை இரா.திருமுருகன் மிக விரிவாகவும் ஆழமாகவும் ஆய்வு செய்து, 'கம்பன் பாடிய வண்ணங்கள்' (1987) எனத் தந்துள்ளார். கம்பர் பாடியுள்ளதாகக் காட்டும் 96 வகை வண்ணங்களையும் விளக்கி, கம்பன் 58 பாடல்வகைகளைக் கையாள்வதாகக் கணித்துள்ளார். வ.கமலக்கண்ணன் 'உலகப் பெருங் கவிஞர் கம்பர்' எனும் தம் நூலில் (1984) யாப்பு பற்றிக் குறிப்பிடுகையில், 'கலி விருத்தம் மிகுதியாகப் பாடப்படுகிறது. அடுத்த படியாக அறுசீர் அமைகிறது. துன்பநிலை பெருக்கிற்கும் அல்லது முடிவிற்கும் எழுசீர் விருத்தம் பயன்படுகிறது. ஏறக்குறைய 22 பாடல்களுக்கு ஒருமுறை சந்தங்களை மாற்றும் போக்குக் காணப்படுகிறது. ஒரே பாடலில் மாற்றுவதும் உண்டு. அந்நிலை சுந்தரகாண்டத்துள் காணப்படுகிறது. 6 காண்டங்களிலும் உள்ள சந்தமாற்றங்களில் ஒருவகை அலைக்கொள்கை காணப்படுகிறது. செயல்கள் நிறைந்த பால, ஆரண்ய, சுந்தர, யுத்த காண்டங்களில் சந்த மாற்றம்

மிகுதியாயும் உணர்வு மிகுந்த அயோத்தியா, கிட்கிந்தா காண்டங்களில் சந்த மாற்றம் குறைவாயும் அமைந்து அலை வடிவை உணர்த்தும். மொத்தப்பாடல்கள் 9972இல் 2541 அளவியல் சந்தங்கள், 460க்கு மேற்பட்ட சந்த வேறுபாடுகள், 24 வகை கலிவிருத்தம் – இவற்றுள் 7 கம்பனே முதன் முதலில் உருவாக்கியவை; முத்தகம், குளகம், அந்தாதி, மடக்கு, இரட்டையாப்பு முதலியனவும் பயன்படுத்தியுள்ளார்' எனத் தெளிவாக விரித்துள்ளார்.

வ.கமலக்கண்ணன் கருத்துப்படி கம்பனில் துணைப்பாத்திரங்கள் 52 பேர் ஆகும். இராமாயணத்தில் இடம்பெறும் கிளைக்கதைகளின் எண்ணிக்கையில் ஆய்வாளரிடையே வேறுபாடு காணப்படுகிறது. மு.நிலாமணி (கம்பராமாயணக் கிளைக்கதைகள், 1984), இரா.பிரேமா (இராமாயணக் கிளைக்கதைகள் ஒப்பீடு, 1989) ஆகியோர் 21 என்றும், ப.பத்மநாபன் தம்பி 23 என்றும் (கம்பன் எழுத்தச்சன் இராமாயணங்கள் 1993) கூறுகின்றனர். இடைச்செருகல்களால் கம்பன் படைக்காத கிளைக்கதைகளும் உட்புகுந்து விட்டன என இதற்கு இரா.பிரேமா காரணமுரைப்பார்.

கெ.என்.சிவராஜபிள்ளையின் 'கம்பராமாயணக் கௌஸ்துபம்' தனித்துச் சிறப்பிக்க தக்கதொரு நூலாகும். இதனை இவர் 1927 இல் நிறைவு செய்த போதிலும் குமரன், செந்தமிழ் ஆகிய இதழ்களில் சில பகுதிகள் மட்டும் வெளிவந்துள்ளன. 1979இல் மு.சண்முகம் பிள்ளை, சென்னைப் பல்கலைக்கழகம் வழி அச்சில் வாராத இந்த அருந்தமிழை வெளிக்கொணர்ந்துள்ளார்.

இதனைக் கம்பனுக்குக் கவிதைவடிவில் எழுந்துள்ள முதல் திறனாய்வு நூல் எனக் கருதலாம். முன்னுரைப் படலம் முதல் கவி இலக்கணப் படலம் ஈறாகப் பத்துப்படலங்களில் 461 விருத்தங்களாகத் தம் ஆய்வைத் தந்துள்ளார். இதனுள் மேற்கோளாகக் கம்பன் கவிகள் 39 அமைகின்றன என இதன் பதிப்பாசிரியர் சுட்டுகிறார். உவமை, வருணனை, கதைமாந்தர், மெய்ப்பாடு, வெளியீட்டுத்திறன், புலமைத்திறன், பொருள் எனப் பலவும் இதனுள் பேசப்பட்டுள்ளன.

ஆலம் பூமி பரந்ததுவோ? அவர்
நீலம் உள்ள நிரம்பியதோ? கடும்
காலனார் நிறம் கவ்வியதோ? என
மாலிருட்டின் மயத்தை வடித்தனள் (131)

என இயற்கை வருணனையும்,

அறை தரும் பரதன் தன் வாய்மொழி
மறை தரும் பல நெறிக்கும் மாதவர்
துறை தரும் பல சூழ் தொழிற்கும் ஓர்
நிறை தரும் துலாக் கோல் நிகர்க்குமே (179)

முன்நின்றாரை விலக்கி முடுகுவேல்
தன்னரும் தடமார்பினில் தாங்கிய
மன் இலக்குவன் காட்டிய மட்டிலா
இன்னருள் திறம் என்றும் ஒழிவதோ (201)

எனக் கதைமாந்தர் இயல்பும் தரும் விமர்சனப் பாடல்களைச் சான்றாக்கலாம். கவிதை வடிவில் ஆய்வுநூல் கண்டபெருமையிலும் கம்பர் முன்னிற்பது எண்ணி மகிழத்தக்கது.

4. திறனாய்வியல் : கதைமாந்தர், கதைநிகழ்வு எனும் இவற்றின் பண்புநலன், செயற்பாடு குறித்த ஆய்வுகள் இதில் எண்ணப்படுகின்றன. கம்பன் ஆய்வு வரலாற்றில் தொடக்க முதல் இன்றுவரை பரவலாக இப்போக்கு தொய்வின்றி அமைகிறது. அகலிகை, அங்கதன், அனுமன், இந்திரசித்து, இராமன், இராவணன், இலக்குவன், இலங்கைமாதேவி, குகன், கும்பகருணன், கைகேயி, கோசலை, சடாயு, சடையப்பர், சத்துருக்கனன், சபரி, சீதை, சுமந்திரன், சுரசை, சூர்ப்பணகை, தசரதன், தாரை, திரிசடை, நீலமாலை, பரதன், மண்டோதரி, மந்தரை, மாரீசன், வாலி, விசுவாமித்திரர், வீடணன் ஆகியோர் மீது ஆய்வுகள் நிகழ்ந்துள்ள போதிலும் ஒரு சிலவே சிறப்பிடம் பெறுகின்றன. இவ்வாய்வுகள் தனித்தனி கதைமாந்தரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரை இணைத்து நோக்குபவையாக உள்ளன. முதன்மை கதை மாந்தர் (இராமன், இராவணன், சீதை) இணைமாந்தர் (கைகேயி, இலக்குவன், சுக்கிரீவன்...) துணைமாந்தர் (சபரி, நீலமாலை, இலங்கை மாதேவி...) என முப்பிரிவினருமே ஆய்விற்குட்பட்டிருப்பதும் சுட்டத்தக்கது.

'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' நூல் வழி ச.சோமசுந்தர பாரதியார் கதைமாந்தர் ஆய்வினைத் (1926) தொடங்கி வைத்துள்ளார். வான்மீகியின் கதை கொண்டு கம்பராமாயணத்தை ஆராய்ந்துள்ள போதிலும் பின்னர் வந்த பல நூல்களுக்கு இந்நூல் அடிப்படை என்பதும் உணர்த்தத்தக்கது. சான்றாகத் தி.மாணிக்கவாசகத்தின் 'தெய்வக் கற்பினள் கைகேயி' நூலைக் காட்டலாம்.

அடுத்தபடியாக 1932இல் ரா.சேதுப்பிள்ளையின் 'வீரமாநகர்' இலங்கையர் கோன் பற்றியும் அவனது சுற்றம் பற்றியும் ஆராய்கிறது. பண்புநலன் ஆய்வில் மிகச் சிறந்த நூல்களை நல்கியோராக அ.ச.ஞானசம்பந்தனும், எஸ்.இராமகிருஷ்ணனும் பிற்பகுதியில் அமைகின்றனர். முன்னவரின் கம்பன்கலை தொடர்நூல்களாக அரசியர் மூவர் (1954) தம்பியர் இருவர் (மறு.ப. 1975), நாடும் மன்னனும் (நா.ப.1961) என்பன வெளிப்போந்து புகழ்பெற்றன. இவரின் 'இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்' (நா.ப.1965) பிறிதொரு குறிப்பிடத்தக்க படைப்பாகும். "இராவணனிடத்து ஏனையோர் கொண்டிருந்தது போல் பயன் கருதாத அன்பைக் கொண்டிருந்தவன் அல்லன் வீடணன். அனுமன் இலங்கையை அழித்ததும், சுக்கிரீவன் மணிமுடியைக்

கவர்ந்து சென்றதும் அவர்களுடைய ஒப்பற்ற வலிமை காரணமாக அன்று; இராவணனுக்கு அவற்றைத் தடுக்கும் திறம் இல்லாமையாலேயாம். தீங்கு தடுக்கும் திடமில்லாதவனாய் இராவணன் மாறிவிட்டதற்குத் தீமையைத் தானே வருவித்துக் கொண்டதை உணர்ந்த அறிவே காரணம். அதனாலேயே அநுமனை எதிர்க்கவோ அல்லது சுக்கிரீவனைத் தடுக்கவோ தான் முயற்சியொன்றும் செய்யாமல் வாளா விருந்தான். இவ்வாறு தன்னைத் தானே தண்டித்துக் கொள்ளும் பெருந்தகைமை பேரறிவாளர்களுக்கே பொருந்தும்' என்பன போன்ற முரண் கருத்துகளும் இதில் இடம்பெற்றுள்ள போதிலும் கம்பன் ஆய்வு வரலாற்றில் இவருக்குத் தனி இடம் உண்டு. இராவணன், இராவணேசுவரனாகச் சிறப்பிக்கப்படுவதற்கு இவரது இப்பார்வையும் துணையாகிறது (இராவணேசுவரன், தி.மாணிக்கவாசகம், 1974).

காப்பியத்தலைவியாம் சீதையைக் 'கற்பின் கனலி' (1961) வாயிலாகவும், வாலியைச் 'சிறியன சிந்தியாதான்' மூலமாகவும் காட்சிப் படுத்திய பெருமையாளர் எஸ்.இராமகிருஷ்ணனாவார். வாலிவதை தவறு என்று வலியுறுத்துவோர்க்கு அதன் தேவையைத் தெளிவுபடுத்துவதாகப் பின்னது அமைகிறது. 'சமுதாயத்துக்குச் சாத்தானாக வாய்த்திருக்கும் இராவண ஆட்சியை அழிக்க வாழ்வின் பிரவாகம் திரண்டு செல்லுங்கால், இராவணசகவாசம் என்ற குற்றம் புரிந்து, தடைமதிலென இடைவந்து நிற்கிறான். தடைமதிலைத் தயவு தாட்சணியமின்றித் தகர்த்தெறிவதைத் தவிர அறத்துக்கு வேறு வழியில்லை. கொல்லம்பு மருமத்தில் பாய்ந்த பின்பும் இராமன் பழி சூடியதை எண்ணி நாணல், குற்றத்தை உணர்ந்த பின்பு மன்னிப்பு கோரல், தம்பிக்காக வரம் வேண்டல், இராவணனை அழிக்க முடியாமைக்கு வருந்தல் முதலியன மனத்தூய்மையின் மேன்மைக்கு முன் மாதிரியாகத் திகழும். இத்தகைய வாலி 'சிறியன சிந்தியாதான்' ஆவான் என்பது அவர் எண்ணம்.

காப்பியத்தலைவன் இராமனுக்குப் பல சிறந்த ஆய்வுகள் உள. 'குடிகளிடத்தில் கொண்ட பேரன்பு, இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள் துன்பம் உறுதல் இலன் என்னும் வள்ளுவர் வாக்குக்குச் சான்றாக அமைந்துள்ளமை, மாற்றாரை மன்னிக்கும் இயல்பு, தொடர்புடையார் மாட்டுப் பேரன்பு, பெற்றோரிடத்துப் பணிவு, மனைவியிடத்துக் கனிவு, சகோதரனிடத்துக் கொண்ட நேயம் ஆகிய இராமனின் நற்பண்புகளே இராமனைக் காப்பியத்தின் உயிர்நிலை ஆக்குகின்றன' (ரம்போலா மாஸ்கரேனஸ், இலக்கியப் பொழில், 1951). 'கம்பர் காட்டிய இராமன் இருவகையினன். ஒருவன் எளிய மனிதப் பண்புடையவன்; இன்னொருவன் திருமாலின் அவதாரமான இறைமை பெற்றவன்' (வி.இராசமாணிக்கம், தமிழ்ப்பொழில் 1963) என்பன போன்று போற்றுமொழிகளே ஆய்வில்

வெளிப்படினும் 'இராமன் அறிவிற் குற்றப்பட்டவன். இராவணன் ஒழுக்கத்தில் குற்றப்பட்டவன். அறிவு வேண்டும்; அதனினும் சிறந்த ஒழுக்கம் வேண்டும் என்று காட்டுவது இராமாயணம்' (வ.சுப.மாணிக்கம், கம்பர்,1965) என்பது போன்ற இராமனின் குறைகளைச் சுட்டும் ஆய்வுகளும் உண்டு.

இப்பகுதியில் பழ.பழனியப்பனின் 'கம்பனின் விசுவரூபம்', (1983) சுட்டற்பாலது. மனிதனாகப் பிறந்த இராமன் விசுவரூப மெடுத்துத் தெய்வமாதலை, 1.தன் தவறுணர்ந்து வருந்துவது – வாலிவதம், 2. தனக்குத் தவறிழைத்த பிறரை மன்னிப்பது – இராவணவதம்; 3.தனக்குத் தவறிழைத்தவரை மன்னிப்பதோடு நன்மையும் செய்வது – கைகேயி வதம் என்பனவற்றால் நிகழ்வதாகக் காட்டுகிறார்.

"மனித வம்சத்தைப் பெற்று வளர்த்துச் சிரஞ்சீவித்துவம் கொடுக்கின்ற தாய்மை உணர்ச்சியும், தன் சௌந்தர்யத்தையும் உபகாரத்தையும், நாயகருக்குக் கொடுத்து வாழவைக்கின்ற கருணையும், கம்பருடைய சிருஷ்டியில் சீதையாக மலர்கின்றது" (என்.சண்முக சுந்தரம், தமிழ்க்கவி அமுதம், 1956); 'இளமை உள்ளமாயினும் காதலித்தவனையே மணக்க வேண்டும் என்று உறுதி நிறைந்த மிதிலைச் செல்வி; வடிவழகும், நின்பிரிவினும் சுடுமோ பெருங்காடு என வினவும் குண அழகும் நிறைந்த அயோத்தி சீதை; மகிழ்ச்சியின் எல்லை கண்டாள் தண்டகாரண்யத்தில்; இராவணனால் கவரப்பட்ட சீதை குண அழகின் எல்லையாகி அசோகவனமாகிய கோயிலில், இலக்குவன் கட்டிய பர்ணசாலையாகிய மூலத்தானத்துள் தவமும் தவம் செய்து பெற்ற அழகுத் தெய்வமாகக் கோயில் கொள்கிறாள். இக்கோயிலுக்கும் ராஜராஜன் பெருவுடையாருக்குக் கட்டிக் கொடுத்திருக்கும் கலைக் கோயிலுக்கும் ஒப்பிட்டால் ஒற்றுமை உண்டு' என்பது தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் கருத்தாகும் (தென்றல் தந்த கவிதை, 1964). இம்மரபு வழிப்பட்ட சீதை பற்றிய ஆய்வுகள் தற்காலப் பெண்ணியச் சிந்தனைகளால் மாற்றம் கண்டுவருவதும் இயம்பத்தக்கது.

ப.அருணாசலத்தின் வீடணன் (1967); ச.சிவகாமியின் அனுமன் ஆய்வும் வழிபாடும் (1974); தா.நடராஜசர்மாவின் கும்பகர்ணன் (1978), கு.திருமேனியின் மந்தரை (1983); அ.அருணகிரியின் கம்பன் காட்டும் கும்பகர்ணன் (1985); தே.வீரராகவனின் இலக்குவன் பிரியாத் தம்பி (1982); இராமாயணத்தில் தம்பியர் எனப் பிற நூல்களும் தொடர்ந்தமைகின்றன. 'இலக்குமணன் மனம் இராமன் மீது கொண்ட அன்பினாலேயே இழைத்த தொன்றெனச் சொல்லத்தக்கது. அன்பின் பேரெல்லையாகிய காதலன் காதலியது அன்பே அவனது அன்போடு ஒப்பிடக்கூடியது. இலக்குமணன் வாழ்வு ஒரு கற்பித வாழ்வு. இலக்குமணனிடத்து விளங்கிய வீரமானது அவனது அன்பிற்கு ஒரு கம்பீரத்தைக் கொடுத்து நம்மை மகிழச் செய்கிறது. தம்பித் துணைவனாகவும், மந்திரித் துணைவனாகவும் இவன் இராமனுக்குப்

பணிபுரிந்தான். மந்திரித் துணைவனாய் உதவும் போது, இராமன் நினைத்ததையே நினையாதபடி தனக்கெனத் தனிப்பாங்கு ஒன்று உண்டெனக் கருதி விஷயங்களை நுனித்து ஆராய்ந்தறிந்தது போலத் தன்னை வீரனாக நினைத்த மாத்திரத்தில் தனக்கெனத் தனிப்பாங்கொன்று உண்டு என்பதனை நன்கு உணர்ந்தவன்' எனும் வையாபுரிப்பிள்ளை கூற்று (தமிழர் பண்பாடு) இலக்குவனுக்கு மிகச் சரியான கணிப்பாகும்.

காப்பியத்தில் ஒரேயிடத்தில் தோன்றி மறையும் கதைமாந்தரிலும் கம்பன் காட்டியுள்ள அக்கறை அவன் காப்பியவெற்றிக்கு உறுதுணையாவதையும் ஆய்வாளர் புலப்படுத்துகின்றனர். 'அனுமனின் ஆற்றலை அறிய அனுப்பப்பட்ட சுரசையால் அனுமன் சூழ்ச்சித்திறன், சமயோசித அறிவு, சொல்வன்மை, அஞ்சாமை, கடமையுணர்வு, சோர்வின்மை, பொறை, சித்தாற்றல் முதலியன வெளிப்படுகின்றன. சுரசை அரக்கனாக மாறுவேடம் கொண்டிருப்பின் தன் கருத்திற்கிடையூறாக வந்தநேரத்து அனுமன் போர் புரிந்து வெற்றிவாகையோடு தன் பணி மேற்கொண்டு விரைந்து சென்றிருப்பான். இந்நிலையில் அவன் உடல்வலியொன்றே வெளிப்பட வாய்ப்புண்டு. சுரசை ஒரு பெண்ணாகையாலேயே இச்செயல் செய்ய இயலாததாகிப் பிற பண்புகள் வெளிப்பட வாய்ப்பேற்படுகிறது' (லி.ரூத்ஜாய், இளவேனில் 1973,66–67).

அகலிகை பற்றிப் பரவலாக ஆய்வுகள் எழுந்துள்ளமை சுட்டற்குரியது. கே.நாராயணரெட்டி, கம்பர் சிருட்டியிற் பிறந்த கற்பினளாக (கலாநிலயம் 25.4.35) அவளைக் காண்கிறார். அவரது பார்வையில், 'குற்றமியற்றாத இவளுக்கு நீயிட்ட சாபத்தை இவள் ஏற்றுக் கொண்டு கிடந்தனள். கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை யாதலால் தன் கற்பின் திறத்தால் கல்லுருவைத் தானே தாங்கி நீ குறிப்பிட்ட அத்தசரத ராமன் வருகையைக் கண்டு, 'அஞ்சன வண்ணத்தான் தன் அடித்துகள் கதுவா முன்னம் வஞ்சி போலிடையாள் முன்னை வண்ணத்தளாகி நின்றாள்' என்றார். இதனால் இவள் கல்லுருவானது நின்சாபத்தாலன்று. அதனின்று நீங்கியதும் தசரதராமன் திருவடித்துகளாலன்றி, அவள் கற்பின் ஏற்றத்தாலேயே என்று விசுவாமித்திரன் உரைக்கின்றான் போல் 'அடித்துகள் கதுவா முன்னம்' என்ற அடி பொருள் தருகிறது. தன்னாயகனுக்குக் குறை நேராதவாறு தமக்கிருக்கும் ஆற்றலையும் அடக்கித் துன்பம் அனுபவித்தல் கற்புள்ள பெண்களின் இயற்கை. ஆதலால் அகலிகை கல்லாய்க் கிடந்து தன் கணவன் கருத்தை நிறைவேற்றினாள். 'சொல்லினாற் சுடுவேன் அது தூயவன் வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்' என்று சீதாப் பிராட்டியும் சொல்லிப் போந்தாள். இங்ஙனம் அடங்கியிருத்தல் கற்புள்ளவர் இலக்கணம். கணவனுக்குத் தொண்டு புரிதலே கற்பரசிகள் உஜ்ஜீவனமாதலால் பலநாள் கணவனுக்குத் தொண்டாற்றுதலின்றிப் பிரிந்து கல்லாய்க் கிடந்த அவ்

அகலிகை தன் கணவன் தொண்டையே நினைத்துக் கொண்டிருந்த அவசரத்தில் 'தசரத ராமன் என்பான் கழற்றுகள் கதுவ' என்றிட்டிருந்த சாபத்தையும் மறந்து 'அடித்துகள் கதுவா முன்னம்' அக்கல்லினின்றும் எழுந்து விட்டாள் என்பது கணவன் தொண்டிலே அவட்கு இருக்கும் ஆர்த்தியும் தெரிவித்ததாகும் (ப.237).

பெருமான் மணக்கப்போகும் திருமணத்திற்குச் சுபசகுனமாக, தான் மணத்தற்குரிய பிராட்டியின் இலக்கணங்கள் அமைந்த பேரழகியாகவும் பெருங்கற்பினளாகவும் தொழும் தெய்வமாகவும் கம்பரால் இவள் காட்டப்பட்டாள். இத்தனை வகையில் கம்பர் முயன்று புதிய அகலிகையைச் சிருட்டித்தது, ஸ்ரீராமபிரான் திருமணத்தின் முன்னர்க் கற்பிழந்த தீயவளைப் பெருமான் காணுதல் வேண்டாமென்ற அன்பின் பெருக்காலாகும் (ப.266).

அகலிகைக்கும் அம்மி மிதித்தற்கும் யாதொரு தொடர்புமில்லையென்று வான்மீகர், கம்பர், ஆபஸ்தம்பர், வேதம், ஆண்டாள், பெரிய வாச்சான் பிள்ளை இவர்கள் அனைவரும் குறிப்பாகவும் தெளிவாகவும் காட்டிப் போனார். ஆதலால் அம்மி மிதித்தற்கு அகலிகையைப் பற்றிப் பேசப்படும் கதை தவறு என்றும் அசாஸ்த்ரீயமென்றும் பழியென்றும் கொள்ள வேண்டும். ஆதலால் அகலிகை கற்பினுக்கு அரசியே யாம்' (ப.287) எனத் துணிந்துரைக்கிறார்.

இராமன் வில்லொடித்த செய்தியைச் சீதையிடம் தெரிவிக்க வரும் அவள் தோழி நீலமாலை தன்னையறியாமலேயே செய்தியைப் பெருக்கி, அவளே அதைத் துரிதப்படுத்துவதில் ஒரு மயக்கம் ஏற்படுகிறது....... அவளின் இத்தன்மையினால் மறக்க முடியாத பாத்திரமாகி விடுகிறாள் (ல.சண்முகசுந்தரம், தமிழ்க்கவி இன்பம், 1959).

'பத்தாயிரம் பாடல் பாடிய கம்பன் நான்காவது தம்பிக்கு ஒரு பாடலே தந்துள்ளான் (இரு பாடல்கள் உள; 10172,10173). ஒரு வேளை பத்தாயிரத்துள் ஒருவனாக நான்காவது தம்பியைக் கருத வேண்டுமென்று கவிஞன் எண்ணினான் போலும். 'நாட்டை ஆள் நீ, தீப்புகுகின்றேன் நான்' என்று பரதன் கூறிய செய்தியை நினைக்கவும் முடியாமல் அஞ்சுகிறான் சத்துருக்கனன். அச்சத்தின் பின்னே இத்தகைய ஒரு பைத்தியக்காரத்தனம் நடைபெறுமா என்று நினைத்தவுடன் மருட்கை தோன்றுகிறது. தன் மனநிலை தெரியாமல் பேசிய பரதன் உரைகளைக் கேட்டுக் கோபமும், இவ்வளவு தவறாக நினைத்துவிட்டானே என்று நினைக்கும் பொழுது அழுகையும், தான் இராமன் தம்பி அல்லையோ என்று நினைக்கும் பொழுது இளிவரலும் ஒருங்கே தோன்றுகின்றன. இவனைப்பற்றி முழுவதும் அறிந்து கொள்ளுமாறு நாலே வரிகளில் கூறியுள்ளான் கம்பநாடன். சிறந்த கலைஞன் மிகச் சிறிய அளவில் கூட மிகப் பெரிய படைப்பைப் படைத்துக் காட்டக்கூடும்

என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டன்றோ! (அ.ச.ஞா,இன்றும் இனியும் 1968) என்பன காட்டுகளாகும்.

புகழுக்கு உயிர்கொடுத்தோன் (ச.வே.சுப்பிரமணியன், இலக்கிய நினைவுகள்), திரிசடை அரக்கர் குல மங்கையா? (எஸ்.கிருஷ்ணவேணி, மங்கையரின் மாண்பு, 1959); அடிமனம் (அ.சீநிவாசராகவன், புதுமெருகு 1961); புள்ளின் வேந்தன் (சுப. அண்ணாமலை, கம்பன் விழா மலர், சென்னை, 1976); மூன்று பேச்சுடையாள் (மு.மு.இஸ்மாயில், கம்பன் மணிமலர், காரைக்குடி, 1980); சவரி பிறப்பு நீங்குபடலம் (கு.அருணாசலக் கவுண்டர், கம்பன் மலர், கோவை 1993), கம்பர் காட்டும் கும்பகர்ணன் (து.லலிதா, தமிழியல் ஆய்வு, 1995); மயன் மகள் (ஆர்.ராதா கிருஷ்ணன், கம்பன் விழா மலர் புதுக்கோட்டை, 1978) எனும் கட்டுரைகளும் இவண் எண்ணத்தக்கன.

சிறுபாத்திர ஆய்வில் கும்பகர்ணனும் குகனும் பிறரைவிட அதிகமாக ஆய்வாளரை ஈர்த்துள்ளனர், 'இலட்சிய நட்பு, நேர்மையுள்ள வீரம், தன்னையே அன்பிற்காக அர்ப்பணித்துவிடும் தகைசான்ற தன்மை, இத்தனை பண்புகளையும் கொண்ட மாவீரன் கும்பகர்ணன். தீமைக்குத் தான் காரணமாகாவிடினும் கூட இராவணனின் தவறுக்குத் தான் ஆதரவளித்து, 'அறம் திறம்பிய செயலில் பங்கு ஏற்று அவனுக்காகப் போர் செய்ய வந்ததால், அறம் நீங்கிய காரணத்தினை யொட்டிச் செய்த போர் ஆதலால் மாற்றாரால் போரில் முறியடிக்கப்பட்டு இம்மாவீரன் மாண்டான்' (தா.நடராஜ சர்மா, கும்பகர்ணன் 1978) என்பதுவே பொதுவாகக் கும்பகர்ணன் பற்றிய கருத்தாக அமைகிறது. உடலுக்கு இராவணன் ஆன்மாவுக்கு இராமன் என்பதே கும்பகருணன் வாழ்க்கையில் வழியாகவும் முடிவாகவும் அமைந்து விட்டது என்பார் கீரன் (இலங்கை மூவர், 1981,ப.64).

குகன் பற்றிய ஆய்வுகளில் முதுகலை ஆய்வேடுகளும் மு.மு.இஸ்மாயீலின் 'வள்ளலின் வள்ளல்' நூலும் (1991) குறிப்பிடத்தகுந்தனவாம். பிற இராமாயணப் படைப்புகளில் குறிப்பாக, சிறப்பாகப் பேசப்படும் இராமாயணங்களில் குகனின் படைப்பு ஒப்பு நோக்கப்பட்டு இறுதியில் கம்பனின் குகனே ஒப்பற்றவன், உயர்ந்தவன் என்று நூலாசிரியர் முடிவுரைத்துள்ளார்.

பல கதைமாந்தரை இணைத்து ஒரே நூலில் ஆய்வு செய்யும் போக்கும் உள்ளது. அவற்றுள் ந.சுப்புரெட்டியாரின் 'கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்', தி.வை.கோபாலையரின் 'இராமாயணத்தில் தம்பியர்' (1995,1996) ஆகியவை கூறத்தக்கன.

'ஒவ்வொரு பாத்திரத்தையும் அதனதன் பெருமைக்குப் பழுதுவராமல் நடந்துகொள்ளச் செய்து, இராமகாதையை உண்மையாகவே

தெய்வமாக்கதையாக்கியிருக்கிறார்' எனும் நாமக்கல் கவிஞர் கருத்தும் இங்குக் கூறற்பாலது.

இராமாயண நிகழ்ச்சிகளில் வாலிவதம் பலரையும் கவர்ந்து அது பற்றிய ஆய்வில் ஈடுபடச் செய்துள்ளதைக் காண முடிகிறது. மாறுபட்ட கருத்துகள் தோன்றுவதற்கு இடனாக இந்நிகழ்ச்சி அமைந்தது இச்சிறப்பிற்குக் காரணமாகும். கோ.சுப்பிரமணிய பிள்ளையின் வாலிவதை (1969) வாலி இராமனைக் குற்றம் சாட்டுவது மட்டுமே கூறி இராமனின் பதிலுரைகளை முற்றிலுமாக விலக்கி அமைவதால் அவர் கருத்தை வலியற்றதாக்கி நூலையும் நிறைவடையாததாக்குகிறது. கு.திருமேனியின் வாலி (1974) புதிய பொருள்களைச் சிலவிடங்களில் சுட்டினும் வாலியே தவறுடையவன் என்ற கருத்தை முன்வைத்து அதற்குச் சார்பாக நூல் முழுமையும் அமைகிறது. முரு.பழ.இரத்தினம் செட்டியாரின் வாலிவதம் சரியா? (1975); சு.முருகேச முதலியாரின் வாலி வழக்கு (1977); கோக்கலை ராஜனின் வாலிவதம் (1995) என இவ்வாய்வு இன்றும் தொடர்கிறது. கொடைக்கானல் காந்தியின் 'இராமாயணத்தில் நக்கீரன்' (1992) வாலிவதையை தத்துவநோக்கில் கண்டு அமைதி காட்டுகிறது. இந்நிகழ்ச்சி பற்றிய கட்டுரைச் செல்வங்களும் உண்டு (பின்னிணைப்பு காண்க).

சூர்ப்பணகை சூழ்ச்சி, சீதை எரிபுகல், விடணன் அடைக்கலம் என்பன விவாதத்திற்குரிய பிற நிகழ்ச்சிகளாகத் தென்படுகின்றன. "கம்பனிலுள்ள அடைக்கலங்கள் கொடுப்பார் – பொருள் – பெறுவார் என்ற நிலையில் முறையான அடைக்கலமாகின்றன. சுக்கிரீவன், அங்கதன், விபீடணன் ஆகியோர் இராமனிடம் வாலி, கும்பகருணன் கொடுக்க அடைக்கலமாயினர். ஒருவரிடத்து மூவர் அடைக்கலப்படுதல் சிறப்பிற்குரிய தொன்றாகும். அடைக்கல நிகழ்ச்சியைக் காப்பியங்களில் கிளை நிகழ்ச்சியாகக் கொண்டு தோற்றுவாய் செய்தவர் இளங்கோவடிகள். இவ்வடைக்கலக் கோட்பாடு காப்பியக் கோட்பாட்டுக்கு ஏற்றது எனக் கொண்டு வளர்ச்சி கண்டவர் கம்பர்" எனும் அ.விசுவநாதன் சிந்தனை (கம்பனின் அடைக்கலக் கோட்பாடு, ஆய்வுக்கோவை – 1974) குறிக்கத்தக்கது. வீடணனின் அடைக்கலத்திற்கு ஏற்பும் (ப.அருணாசலம், வீடணன் 1967); எதிர்ப்பும் (நா.சிவசுப்பிரமணியன், விபீஷணன் 1975) ஆய்வாளரிடையே நிலவுகின்றன.

'அதர்மம் தொலைந்து தர்மம் தலையெடுக்க வேண்டுமென்றால், அந்தப் புனித சேவைக்கென்று தெய்வம் தேர்ந்தெடுக்கும் கருவி இவ்வாறெல்லாம் அவஸ்தைப்பட வேண்டியதுதான். இதுவே அசோகவனத்தின் மர்மம்' (ஆ.முத்துசிவன், அசோகவனம், 1956) எனச் சீதையின் அசோகவனச் சிறையிருப்புக்கு விளக்கமளிக்கப்படுகிறது. அவளது எரிபுகலுக்கு மரபு வழிப்பட்டோர் அமைதி காட்டலும் (எஸ்.ராமகிருஷ்ணன், கற்பின் கனலி, 1961) பெண்ணியச் சிந்தனையாளர் இராமனைக் குற்றவாளியாக்கலும் காணப்படுகிறது.

இதுபோன்றே சூர்ப்பணகையின் சூழ்ச்சிக்கு, 'இராவணனின் அகந்தையை அழிக்க வேண்டும் என்பது தான் சூர்ப்பணகையின் ஆசை. தன் கணவனைக் கொன்ற அவனைப் பழிவாங்கத் தன் மகனைத் தவம் செய்ய வைத்தாள். ஆனால் அறியாது இலக்குவனால் கொல்லப்பட்டான். எனவே சீதையைக் கொண்டு இராவணன் வென்றால் தன் மகனைக் கொன்றவர் அழிவர். உயிர் தப்பினால் தனக்கு இராமன் கிடைப்பான். இராவணன் அழிந்தால் தன் பழைய பழி தீரும் எனும் தன் சூழ்ச்சித்திட்டத்தை மறைமுகமாகப் பல முனைகளில் விரித்துப் போராடுகிறாள்' (சி.என்.நாச்சியப்பன், கோவலன் மாதவிபால் மனமிழந்தது ஏன்?) என்பது போன்று அமைதி காட்டப்படுதலும் உண்டு.

இரணியன் வதைப்படலம் ஆழ்வார்களைக் குறித்தெழுந்த பாகவத புராணத்திினின்றும் எடுக்கப்பட்டது. சீதையைத் தொடாமல் மண்ணொடும் கீண்டு எடுத்தான் இராவணன் என்று கம்பர் எழுதக் காரணம் கி.பி.868இல் சமணரான குணபத்திரரால் வடமொழியில் எழுதப்பட்ட சமண ராமாயணமான உத்தரபுராணத்தில் (ராமகதா: காமில்புல்கே, அத் 16) அவ்வாறே எழுதப்பட்டிருப்பதேயாகும் என்பார் செ.கோவிந்தன் (ஆய்வுக் கோவை–13, கம்பருக்குக் கதை கொடுத்தவர் வான்மீகரே, ப.146).

5.பண்பியல் : மனித வாழ்வின் சீர்மைக்கு அல்லது அழிவிற்கு அவரிடம் உள்ள பண்பு முதலிடம் வகிக்கிறது. கம்பர் காவியத்தின் வெற்றிக்கு அவர் மானிடப்பண்பினைச் செழிக்கச் செய்யும் வாழ்வியல் நூலாக அதனை அமைத்ததும் ஓர் காரணமாகும். கதை மாந்தரிடையே நிலவும் பல பண்புக் கூறுகளை ஆய்வு செய்தலும் குறிப்பிடத்தக்களவு காணப்படுகிறது. இப்பகுதியில் அமையும் ஆய்வுகள் சில, குறிப்பிட்ட பண்பினையே காப்பியத்தின் நோக்கமாக உணர்த்துதலும் நவிலத்தக்கது.

எஸ்.ஆறுமுக முதலியார் கருத்துப்படி, 'உடன்பிறப்பு நோக்கம் பாவிகப் பண்பாக அமைந்துள்ளது. இந்நோக்கம் இராமன் வீட்டில் தொடங்கி, பல்கிப் பெருகி, பரந்த நோக்கமும் விரிந்த பார்வையும் பெற்று மொழி, நிறம், குலம் முதலிய வேற்றுமைகளை வென்று செல்லுவதாகக் கம்பர் அமைத்துள்ள வகை நன்றாகக் காணப்படுகிறது' (செந்தமிழ் 1940–41) என்பதாம்.

'புலனடக்கமே இக்காப்பியத்தின் அடிப்படை. புலனடக்கத்தால் இராமன் மனிதனாகப் பிறந்து தேவனாக உயர்கின்றான். இராவணன் புலனடக்கம் இன்மையால் புலத்தியன் மரபில் தேவனாகப் பிறந்தும் கீழே சென்றுவிடுகின்றான். புலனடக்கம் செய்தவருள் அனுமனுக்கே முதலிடம் தரவேண்டும். அமரருள் வைக்கும் அடக்கம் அனுமனிடம் உள்ள காரணத்தினால்தான் அடக்கத்தின் பின்னே வருகின்ற அனைத்துப் பண்புகளையும் பெற்றுள்ளான் அனுமன் என்பதனைக் குறிப்பால் குறிப்பு

உணர்பவனாகிய இராமனால் காணமுடிகிறது. ஒன்றும் கிடைக்காத காட்டில் வாழ்ந்த இலக்குவனுடைய புலனடக்கத்தைக் காட்டிலும் அனைத்தையும் எதிரே வைத்துக்கொண்டு தொடமாட்டேன் என்று வாழ்கின்ற அந்தப் பரதனுடைய புலனடக்கத்தை நினைக்கும் பொழுது கம்பனுடைய சொல்நயம் தெரிகிறது. கொள்கை அழிந்த போது பரதன் சீறி எழுகிறான். கைகேயி அவன் தாய் என்ற உரிமை அப்பொழுது அற்றுவிடுகிறது. ஆகவே புலனடக்கம் பேசிக்கொண்டு கொள்கையை விட்டுவிடுதல் புலனடக்கம் இல்லை. அந்தப் புலன்களை வைத்துக்கொண்டு ஆள்கின்றது தான் புலனடக்கம் என்பதைப் பரதன் வாழ்வில் காண்கிறோம்' என்பர் அ.ச.ஞா. (புதிய கோணம்).

உடன்பிறப்பு நேயம், செய்ந்நன்றியறிதல், வீரம், அறம் என்பனவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. எல்.ஆறுமுக முதலியாரின் கம்பர் கண்ட தம்பியர் (இலக்கிய ஓவியங்கள், 1958); ஜெ.நாராயண சுந்தரமையங்காரின் செய்ந்நன்றியறிதலும் கம்பரும் (செந்தமிழ் 1941–1942); ம.ராதாகிருஷ்ணபிள்ளையின் 'கம்பர் கண்ட வீரம்' (உரிமையும் கடமையும், 1947) சு.சிவகாமசுந்தரியின் 'கம்பன் அறம் வெல்லும்' (அறம் வெல்லும்) என்பன முறையே இவற்றிற்குச் சான்றுகளாகின்றன. மற்றும் எஸ்.சங்கர பாண்டியன் பிள்ளையின் பொருட் கட்டுரையான 'கம்பர் காட்டும் சினம்' (1971); என்பதும் இங்கு சுட்டத்தக்கது. "கம்பரது காவியத்தின் நட்பு நெறியில் இராமனுக்குப் பறவைகளும் விலங்குகளும் உதவுகின்றன. இப்பாத்திரத்தால் காட்டிய நட்புக்கு மனித உள்ளம் மட்டுமே தேவை, மக்கட் பிறப்பன்று என்பதை நன்கு எடுத்துக் காட்டுகின்றார் கம்பர். அச்சத்தின் அடிப்படையில் உருவானது இராவணன் – வாலி நட்பு. ஆனால் இவர்களின் நட்பு இருவருக்குமே உதவவில்லை. இருவரும் அழிந்தனர். மாறுபட்ட நட்பில் அறத்தின் நட்பு வளர்வதையும் மறத்தின் நட்பு மாய்வதையும் காண்கிறோம்" என்கிறார் ஜாஸ்மின் ஆசீர். ந.சுப்புரெட்டியாரின் 'பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம்' நூலும் (1996) மனிதப் பண்பு நலன்களுக்குச் சிறப்பளித்து எழுந்துள்ளது.

6. சமூகவியல் : தமிழாய்வின் வளர்ச்சியில் ஒரு மைல்கல்லாக அமையும் பிறதுறைச் சார்பு ஆய்வுகளும் கம்பன் ஆய்விற்குச் சிறப்பளித்துள்ளன. இவ்வகை ஆய்வுகள் இந்திய விடுதலையின் பின்பே தோன்றி வளர்ந்து வருகின்றன. சாமி சிதம்பரனாரின் 'கம்பன் கண்ட தமிழகம்' (1955) இதற்குத் தோற்றுவாயாக அமைந்தது. 'தாம் காண விரும்பும் சமதர்ம சமுதாயத்துக்கான அடிப்படை அறங்கள் இராமகாதையில் இருக்கின்றன என நினைத்துத்தான் அதனைத் தேர்ந்தெடுத்தார். கம்பனின் சமதர்மச் சமுதாயத்தில் பெண் கற்பு மட்டுமின்றி ஆண் கற்பும் சிறந்து விளங்குகின்றது' (கம்பர் கவியின்பம் 1969) என ம.பொ.சி. உணர்த்துகின்றார்.

1981 இல் வெளிவந்த ச.வே.சுப்பிரமணியனின், 'கம்பனும் உலகியல் அறிவும்' நூல் 'தயரதனைப் போன்ற தந்தையாகவும் இலக்குவன் போன்ற தம்பியாகவும், கும்பகருணனைப் போன்ற அண்ணன் தம்பியாகவும், குகனைப் போன்ற நண்பனாகவும் அனுமன் போன்ற ஆருயிர்த் தொண்டனாகவும், கோசலை போன்ற தாயாகவும் மண்டோதரி போன்ற மனைவியாகவும் வாழக் கற்றுத் தருவதே கம்பன் காட்டும் உலகியல்' என எடுத்துரைக்கிறது.

நா.வரதராஜுலு நாயுடுவின், 'வால்மீகியும் கம்பனும் கண்ட சமூகங்கள்' (1987) நூல் அயோத்தி, கிட்கிந்தை, இலங்கை என்று மூன்று சமூகங்களின் மக்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த தொடர்புகள், மக்களுக்கும் அவர்களது தலைவருக்கும் இருந்த தொடர்பு, பொதுவாகச் சமூக நிலைகள் போன்றவற்றை ஒப்பு நோக்குகின்றது. க.ப.அறவாணன் கம்பராமாயணம் எழுதப் பெற்ற சமூகப் பின்புலத்தை,

1. இலங்கை மீது படையெடுக்க வேண்டிய அரசியல் சூழல், 2. வட இந்தியாவிற்கும் தென்னிந்தியாவிற்கும் இடையே அமைந்த இணக்கமான அரசியல் சமயச்சூழல், 3. சமசுகிருத மொழி மேலாண்மையில் இருந்த சூழல், 4. சமணம், பௌத்தம் ஆகிய பிராமண எதிர்ப்பு மதங்களுக்கும் சைவம் வைணவம் ஆகிய பிராமண ஆதரவு மதங்களுக்கும் இடையே ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக நடந்துவந்த ஆதிக்கப் போர் முடிவுக்கு வந்து சைவம் வைணவம் என்ற பிராமண மதங்கள் மேலாதிக்கம் பெற்ற சூழல், 5. தமிழக வரலாற்றில் ஆட்சி முன்னணியில் இருந்து வந்த பல்லவர், சாளுக்கியர், பாண்டியர் முதலானோர் பின்னணிக்குக் கொண்டு செல்லப்பெற்று, பிற்காலச் சோழர் பேரரசாக ஆட்சி செய்த சூழல்" (படைப்பாளி + சமுதாயம் = இலக்கியம், பக்.92–93) எனக் கணித்துள்ளார்.

'இராவணனது வீழ்ச்சியையும் இராமனது வெற்றியையும் விவரிக்கும் இடங்களிலெல்லாம் சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கும் தீய செயல்களே காட்டப்பட்டிருக்கின்றன. சுந்தரகாண்டத்தில் கம்பன் குரல், இராமகதையை விளக்குவதைவிட சமூகச் சீர்கேடுகளையே அதிகம் விளக்குகிறது. எனவே சுந்தரகாண்டம் என்னும் ஆலயத்தில் கம்பன் குரல் ஒரு மணி எனலாம்' எனும் வீ.அய்யனார் (சுந்தரகாண்டத்தில் கம்பன் குரல் – ஆய்வுக் கோவை–18,ப.24–29) கூற்று எண்ணத்தக்கது.

தமிழ் மள்ளர் குலத்தினைக் கம்பர் எப்படியெல்லாம் சித்திரிக்கின்றார் என்பதை அ.அறிவு நம்பி தம் 'கம்பர் காட்டும் மள்ளர் மாண்பு' கட்டுரையில் (தமிழர் பண்பாடு, சமூக ஆய்வு மன்றம், பாரதியார் பல்கலைக்கழகம், ப.104) விரிவாக விளக்குகிறார். குன்றக்குடி அடிகளார் (கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல், சமூகம்), மு.மூர்த்தி (சடங்குப் பாடல்களில் இராமாயணச் செய்திகள், தமிழியல் ஆய்வு, 1997) ஆகியோர் சிந்தனைகளும் குறிக்கத்தக்கன.

7. அரசியல் : எஸ்.இராமகிருஷ்ணனின் ‘கம்பன் கண்ட அரசியல்’ (1969), இராமகாதை சித்திரிக்கும் மூன்று வகையான கோன்மை நிலைகளை விவரிக்கின்றது. எஸ்.அப்துல் ரகுமானின் ‘கம்பனின் அரசியல் கோட்பாடு’ (1990) சிறந்ததொரு ஆய்வாகப் பளிச்சிடுகிறது. ‘புதுமையும் புரட்சியும் வாய்ந்த கம்பனின் இலட்சிய அரசியலில் அவன் காலத்துப் பிற்போக்கான கருத்துகளையெல்லாம் அவன் அஞ்சாது எதிர்த்திருக்கிறான். பல்வேறு அறிவுத்துறைகள் பெருகி வளர்ந்த வாய்ப்பினால் மேனாட்டு அறிஞர்கள் கிண்டறிந்த பல அரிய உண்மைகளைக் கம்பன் ஒன்பதாம் நூற்றாண்டிலேயே அறிந்து கூறியிருப்பது வியப்பை அளிக்கிறது. கார்ல்மார்க்ஸின் புரட்சிகரமான தத்துவத்தில் காணப்படும் பொதுவுடைமை, அரசற்ற சமூகம் போன்ற கருத்துகளின் மூலவடிவத்தை ஒன்பதாம் நூற்றாண்டிலேயே அவன் அளித்திருப்பது அவன் மேதைமையைக் காட்டுகிறது’ என இந்நூல் முடிவுரைக்கிறது.

8. அறிவியல் : அறிவியல் சார்ந்தும் கம்பனில் சில குறிப்பிடத்தக்க ஆய்வுகள் மலர்ந்துள்ளது சிறப்பாகும். கம்பன் கண்ட உயிரினங்கள் (மே.பிளாரன்சு தாசு, 1968), கம்பனில் தாவரங்கள் (கி.மோகனகுமாரி, 1969), ‘கம்பன் காவியத்தில் உயிரினங்கள் (பி.எல்.சாமி, 1975) என்பன உயிரியல் ஆய்வில் முதன்மை பெறுகின்றன.

76 வகையான தாவரங்கள் இங்குப் பேசப்படுகின்றன; அகிற்புகை இன்பத்தின் உயர்வைக் காட்டவும், துன்பத்தின் உயர்வைக் காட்டவும் கம்பர் பயன்படுத்துகிறார். வெள்ளாம்பல் அனுமன் பற்களுக்கு உவமையாகக் கூறப்பட்டிருப்பது புது உவமையாக உள்ளது. செவ்வாம்பல் இராமனின் கண்ணிற்கும் உவமையாக வருகின்றது. கோளி என்ற பெயரால் கம்பர் ஆலமரத்தைச் சுட்டுகிறார். இராமனின் மெல்லிய மானுட உருவில் வலிய அற ஆற்றல் அடங்கியுள்ளது என்பதனைக் காட்டத்தான் போலும் ஆலமரத்தின் சிறு பொருட்களை (இலை, விதை) இராமனோடு தொடர்புபடுத்தியும் பெரும் மரத்தினை இராவணனோடு தொடர்பு படுத்தியும் கூறுகிறார். ஒற்றை இலைத் தாவரங்களில் 21 வகை காணப்படுகிறது. மனித உள்ளத்தில் எழும் ஆழ்ந்த உணர்ச்சிகளை விளக்குவதற்கும் செடி கொடிகள் கவிஞனுக்கு உதவுகின்றன (கம்பனில் தாவரங்கள்).

8 வகை மீன்கள், 36 வகை பறவைகள், 27 வகை விலங்குகள் பேசப்படுகின்றன. சிங்கத்தின் பண்பமையாத பாத்திரங்களைத் தேடுதல் அரிது. சிங்கம் இலக்கினமாகவும், கொடியின் சின்னமாகவும் பயன்பட்டன. கொடிய பாத்திரங்களும் மானிற்கு ஒப்பாகின்றனர். யானைபற்றி மிகுதியாகக் கூறினாராயினும் மதநீரைப் பற்றியே கூறுகிறார் (கம்பன் கண்ட உயிரினங்கள்).

பாம்பையே உண்டு வாழும் கழுகு இயற்கையில் இருக்கிறது. கம்பர் கூறிய கருடன் இந்தப் பாம்புப் பருந்தாகவும் இருக்கலாம். கம்பரே கழுகு, பருந்து, பாறு ஆகிய பறவைகளைத் தனித்தனியே ஒரே பாடலில் கூறியிருப்பதால் அவை வெவ்வேறு பறவைகள் என்பதை அறியலாம். நரியைப் பற்றிய சில கற்பனைச் செய்திகளைக் கூறும் கம்பர் பூனை பற்றிய அறிவியற் செய்தி எதையும் கூறவில்லை. கரடிகளுக்குப் புற்றை உடைத்துத் தள்ளுவதும் தலை கீழாக்குவதும் இயற்கையான குணமாகும். ஒட்டகம் பற்றிக் கூறியவை உண்மைச் செய்திகள். மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் என்பது பனிக்கட்டி சூழ்ந்த சூழ்நிலையில் மயிர்ப் போர்வையை இழந்து வாழாத தன்மையைக் குறித்ததேயாம். கம்பர் கூறிய நீர்க்குரங்கு கற்பனை விலங்கல்ல. கம்பர் சொல்லாது விட்ட கடல்விலங்கு கடற்பசு மட்டும் தான். கம்பர் தமது காவியத்தில் ஏறக்குறைய 46 பறவைகள், 32 விலங்குகள், 14 ஊர்வன, 29 மீன், பூச்சி முதலிய பிறவகை உயிர்களைப் பாடியுள்ளார். (கம்பன் காவியத்தில் உயிரினங்கள்) என்பன இவர்கள் அறிவியல் நெறியில் கண்ட சில முடிவுகளாகும். இவ்வறிவியல் பார்வை இன்றும் அவ்வப்போது எழுவதை எஸ்.உமாதேவியின் கம்பன் கண்ட சிங்கம் (ஆய்வுக் கோவை, 1996, 135–140), கம்பன் கண்ட குரங்கினம் (ஆய்வுக் கோவை,1983, 121–125) போன்ற கட்டுரைகள் கொண்டறியலாம்.

9. உளவியல் : முழுமையாக உளவியல் அணுகுமுறையில் கம்பன் ஆய்வில் அறிந்த வகையில் நூலின்மை ஒரு பெருங்குறைபாடே. ஆங்காங்கே பண்புநலன் ஆய்வில் உளவியல் சிந்தனைகள் சிதறியுள்ளன. ஒரளவிற்குக் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க நிலையில் ம.ரா.போ.குருசாமியின் 'கம்பர் முப்பால்' அமைகிறது (1993). இதில் அவர், உடல், உள்ளம், உயிர் எனும் முப்பாலில் இரண்டாம் பாலான உள்ளம் உளவியற்பாங்கிற்கு இடந் தருகிறது. வாலிவதையை முன்னிறுத்திக் கம்பனின் உளவியற் கோட்பாட்டை வரையறுத்துள்ள கட்டுரை (கம்பன் காட்டும் உளவியற் கொள்கை, ச.சிவகாமி, ஆய்வுக் கோவை 1985, பக்.234–239)யில்,

1. தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைவிட, தன் நம்பிக்கைக்கும் பெருமைக்கும் உரியவரின் தாழ்வு அதிகமாக மனதைப் பாதிக்கின்றது. 2. இதனால் எண்ணங்கள் தொடர்ச்சியாக அமையாது மாறி மாறி அமைகின்றன. குழப்பமான மனநிலை, தன் ஏமாற்றம் ஏமாற்றம் அல்ல என்பதற்கு அமைதி தேடித் தவிக்கின்றது. 3. ஆற்றாமையால் ஏசல் மிகுதி, 4. தன்னை அதிகமாகப் பாதித்ததையே திரும்பத் திரும்பப் பேசுகிறது. 5. புண்பட்ட மனத்தை அமைதிப்படுத்தல் மிகக் கடினம். பகைவர் தரும் துன்பத்தை விட நம்பியவரால் வரும் ஏமாற்றம் மிகக் கொடியது என்பன காணப்படுகின்றன. மற்றும் இது போன்று கம்பரின் காப்பியக் கடலினின்றும் உளவியல் கோட்பாடுகளை, பல்வேறு சூழல்களில் பல்வேறு இயல்புடை மனிதர் எவ்வாறு செயல்படுவர், எண்ணுவர் என்பதனை வடித்தெடுக்க

முடியும். முழுமையாக அவற்றைத் தொகுத்து ஆராயுங்கால் கம்பர் ஒரு காப்பியக் கலைஞர் மட்டுமல்ல, உளவியல் அறிஞரும் கூட என்பது தெளிவாகும் எனும் கருத்தும் சிந்திக்கத்தக்கதாம்.

க.இந்திரசித்து, சூர்ப்பநகை ஓர் உளவியல் பார்வையெனும் தம் கட்டுரையில், 'கம்பன் படைத்த சூர்ப்பநகை என்னும் எதிர்நிலை பாத்திரத்தைப் (Negative Character) பகுப்பாய்வு செய்து பார்க்கும் போது அதனுடைய தீய பண்புகள் வெளிப்படுகின்றன. சூர்ப்பநகையின் இக்கொடிய இயல்புக்குக் காரணம் அவளிடத்திலிருந்த பழிவாங்கும் உணர்ச்சி (Revenge), தாழ்வு மனப்பான்மை (Inferiority Complex) போன்றவைகளே காரணங்களாக அமைகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக அவளுடைய நிறைவேறாத காம இச்சையினால் உள்ளம் முறிந்து விடுகிறது. அந்த உள்ள முறிவே (Frustration) அவளுடைய வீழ்ச்சிக்கும் அவளைச் சார்ந்த இராவணன் போன்றவர்களுடைய அழிவிற்கும் உத்தமத் தெய்வங்களான இராமபிரான், சீதாபிராட்டி ஆகியோரின் துன்பங்களுக்கும் காரணமாக அமைந்துவிடுகிறது' எனச் சூர்ப்பணகையை விமர்சித்துள்ளார்.

கம்பனில் உளவியல் சிந்தனைகள் (வே.இராமசுப்பிரமணியன், ஆய்வுக் கோவை 1995, பக். 243–247) எனும் கட்டுரையும் சுட்டத்தக்க சிறப்புடையதாகும்.

10. தத்துவ இயல் : கம்பர் காப்பியம் பக்திக் காப்பியமாகவும் போற்றப்படுதல் காரணமாகச் சமயங்களின் அடிப்படையிலும் அவை உணர்த்தும் உண்மைப் பொருள் பற்றியும் ஓரளவிற்குச் சுட்டத்தக்க நூல்கள் எழுந்துள்ளன. கம்பன் ஆய்வின் தொடக்க முதல் இன்று வரை இவ்வியல் பரவலாக அணுகப்பட்டுள்ளமையும் சுட்டற்பாலது. 'பக்தியியக்கத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் கம்பனை ஒதுக்கிச் செல்கிறவரை அது முற்றுப் பெற்றது ஆகாது. பக்திதான் எல்லாம்; வேதம், விதிகளெல்லாம் முக்கியமல்ல என்று கூறிப் பிராமணரின் இன்றியமையாமையை இரணியன் வதைப்படலத்தில் அர்த்தமற்றதாக்கி விடுகிறான். எனவே கம்பன் ஆரிய அடிவருடி அல்ல' என்பது க.வீரையனின் (கம்பனும் பக்தி இயக்கமும், 1979) கருத்தாகும்.

ந.சுப்புரெட்டியாரின், கம்பன் கண்ட மெய்ப்பொருள்; முரு.பழ.இரத்தினம் செட்டியாரின் 'கம்பன் உணர்த்தும் பரம் பொருள் நிலை' (1991) ஆகியன சுட்டத்தக்க பிற ஆய்வுகளாம். 'தோற்றம் என்பதொன்று உனக்கில்லை' என்று கம்பன் நான்முகன் வாக்காக வைப்பது, மெய்யே பிறந்தேயும் பிறந்திலாதான் என்பது, திருமாலே முழுமுதற் பொருள் என்பது, உலகத் தோற்றத்திற்கு முதற் காரணன் நாராயணன் என்பது போன்ற கருத்துகளுக்கு ஆழ்வார் பாசுரங்களே அடிப்படை என்பது முன்னவர்

விளக்கமாகும். 'பரம் வியூகம் என்னும் இருவகை நிலைகளை வைத்துக் கம்பன் பாடல்களுக்குப் பொருள் காண வேண்டும்' என்பது பின்னவர் விண்ணப்பமாகும்.

கம்பனில் சரயு பற்றி ஆராயும் துரை. சீனிச்சாமி, "அக்காலத் தீவிர சமயவாதிகளின் தத்துவங்களுக்கு எதிராக வாழ்க்கையினை ஏற்கும் உலக உவப்புத் தத்துவ அடிப்படையில் மனிதனின் மேன்மையை உணர்த்தும் முறையில் (சரயுவைப்) பாடுகிறான். இத்தன்மையுடைய மரபுக் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்கிறான். 'தாய் முலை அன்ன சரயு' என்பதும் இந்நோக்கின்பாற்பட்டதே.... ஒரு கடவுள் உண்டு, பல்வேறு சமயங்கள் போலி என்று கூறிச் சமயக் கூட்டங்களிலிருந்து பிரிந்து நின்று பாடுவதால் அத்தனைச் சமுதாய உண்மைகளோடும் மனிதாபிமான நோக்கோடும் ஆற்றினைப் பார்க்கிறான்' என நவில்கிறார் (இலக்கியத்தில் இயற்கை, பக். 92–93).

பி.எஸ்.ஆச்சார்யா, 'சீதை என்கிற மனித ஆன்மா, லௌகீக பஞ்ச பூதங்களினால் சிறைப்படுத்தப்பட்டு உழன்று நிற்கும் வேளையில் பரமாத்ம பேரானந்தத்தை அடையும் தருணத்தைப் பகவான் பக்த அனுமான் மூலம் தெரியப்படுத்துகிறார். விழுமிய விமுத்தி விமோசனம் பெறுகின்ற ஆனந்த பரவசத்தையே சீதை இராமன் தன்னை மீட்கின்ற நிலையில் அடைகிறாள்' எனத் தத்துவ நோக்கில் இராமாயணத்திற்குப் புதுப்பொருள் படைக்கிறார் (இராமாயண சுந்தரகாண்டம், முன்னுரை).

'இராமகாதையின் ஆறுகாண்டங்களிலும் கம்பனின் கடவுட் காட்சிகள் காப்புப் பாடல்களில் காணக்கிடக்கின்றன. கம்பன் என்ற மானிடன் தான் வளர்ந்து அவ்வளர்ச்சிக்கு ஏற்ற வண்ணம் கடவுட் காட்சியை வளர்த்துக் காட்டுகிறான்' என்பது ப.ஜீவானந்தம் கருத்தாகும் (மானிடம் வென்ற தம்மா, 1967).

அ.அருணகிரி தொகுத்தளித்துள்ள, சமயநோக்கில் கம்பன்' (1988) சைவ, வைணவ, கிறித்தவ, சமண, இஸ்லாமியப் பார்வைகளைக் காட்டுவது கம்பருக்குத் தரும் பிறிதொரு மணிமகுடமாகும். ஏக இறைக் கொள்கை, சமத்துவமும் சகோதரத்துவமும், அறத்தின் ஆற்றல், அடைக்கலம் அளித்தல், பெண்ணின் பெருமை, கற்பொழுக்கம், கள்ளுண்ணாமை, வாக்கினைக் காப்பாற்றல் போன்ற பலவற்றில் கம்பருக்கும் இஸ்லாமியச் சிந்தனைக்கும் உள்ள ஒற்றுமையைச் சாயபு மரைக்காயர் தந்துள்ளார்.

வி.அசோக் குமாரனின் 'கம்பனில் தவம்' (1993) புதிய பார்வையைத் தருகிறது. தவம் செய்வதில் வேறுபாடில்லையாயினும் அதனைப் பயன்படுத்துவதில் மூவகை அமைகிறது. ஆன்ம முன்னேற்றம், தம் வாழ்வைச் சிறக்கச் செய்தல், பிறரை அழிக்கப் பயன்படுத்தல் என்பன

அவை. ஆயின் தன்னை வெல்லுவதே கம்பன் உணர்த்தும் தவம் என்பது இவர் கருத்து. "சீதை அகத்தவம் (மனத்தவம்) செய்தவள், இராவணன் புறத்தவம் செய்தவன். சீதையின் தவம் உலகுக்கு வழி காட்டுவது. அரக்கனின் தவம் உலகுக்கு எச்சரிக்கை செய்வது. தவத்தின் பலன்கள் எவ்வளவாயினும் அவை காமநோய் கொண்டவரைக் காக்க மாட்டா; வீணாய் அழியும் என்பதே எச்சரிக்கை" எனும் ஈ.கோ.பாஸ்கரதாஸ் சிந்தனையும் (கம்பரின் சுந்தரச் சொல்லோவியம், 1982) நோக்கத்தக்கது. ஒ.கே.ஆத்மானந்தத்தின், 'கம்பரின் கடவுட் கொள்கை' எனும் மதுரை பல்கலைக் கழக முதுகலைப் பட்ட ஆய்வேடும் (1971) பாராட்டத்தக்க தொன்றாம்.

11. பிறதுறைகள் : அங்கொன்றும் இங்கொன்றுமாக மிக அரிய நிலையில் காணப்படினும், தமிழாய்வின் இன்றைய வளர்ச்சி கம்பனிலும் அமைந்து கம்பன் ஆய்விற்கும் புதிய பாதையைக் காட்டுதலினால் அவை இங்கே தனித்து உரைக்கப்படுகின்றன. என்.வி.நாயுடுவின் 'கம்பராமாயணத்தில் சில இசைக் குறிப்புகள்' (கம்பன் விழாமலர், சென்னை, 1976) கம்பனின் இசையறிவை இசைக்கின்றது.

வி.ஏ.மாணிக்கம், கம்பரின் வேளாண்மைக் கனவுகளை, "வேளாண்மைக் கேற்ப பருவங்களை மாற்றியமைப்பது, காலமின்றித் தீங்கனி கனிவது, அதற்கும் மேற்படியாகக் கனிகளை மனிதர்களே உருவாக்கம் செய்வது போன்ற கம்பரின் அருங்கனவுகளை இன்றைய விஞ்ஞானம் படிப்படியாகச் செயல்படுத்தி வருகின்றது, சில ஆராய்ச்சியில் தொடர்ந்து முயற்சிக்கப்பட்டு வருகின்றன" (ஆய்வுக் கோவை 1978) எனக் காட்டுகின்றார்.

க.கிருட்டிணசாமியின் 'மயின்முறைக்குலம் – கம்பர்' தொல்லியல் பார்வையைச் (ஆய்வுக் கோவை 13, 1981) செலுத்தியுள்ளது. பழங்குடியினரிடையே மயில் குலமரபுச் சின்னமாக அமைந்துள்ளதை விளக்கி, கேகயனின் குலமரபுச் சின்னமாகிய மயிலும் உணவளித்து உயிர்கொடுக்கும் நிலத்தின் குறியீடாகும் என முடிவுரைக்கிறார்.

ந.கோபாலன், கம்பனும் எந்திரமும் எனும் தலைப்பில் (கம்பனின் தத்துவங்கள் 1992) 'சமுதாய இயக்கத்தினையும் முன்னேற்றத்தினையும் கருத்தில் கொண்டு எந்திரத்தின் பயன்பாட்டினை உணரும் வண்ணம் எடுத்தியம்பியுள்ள கம்பன் திறம் கண்டு வியக்கத் தக்கதாகும். வாழ்க கம்பன் பொறியியல்' (ப.109) என வாழ்த்தியுள்ளார்.

சா.வளவன், 'கம்பனில் சட்ட நுணுக்கம்' (ஆய்வுக் கோவை 1996) கண்டு, 'வாலி, இராமன் ஆகியோரிடையே நிகழும் உரையாடலிலும், இராவணன் கூட்டும் மந்திராலோசனையிலும், சிறையிருந்த செல்வியின்

பேச்சிலும் வீடணன், கும்பகருணன் இடையே நிகழும் உரையாடலிலும் கம்பனுடைய சட்ட நுணுக்க அறிவு சிறப்பாக வெளிப்படுகின்றது' எனத் தருகிறார்.

பிறதுறை அறிஞர் பார்வையில் கம்பன் ஆய்வு பல திறப்பட்டு நிற்பது கம்பரின் பெருமையைத் தமிழறிஞர் மட்டுமின்றிப் பலரும் உறுதிபட உணர்ந்துள்ளதைக் காட்டுகிறது.

12. நடப்பியல் : இன்றைய எரியும் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, அன்றைய படைப்பில் கம்பர் அவை தீர வழிகாட்டியுள்ளாரா என ஆராய முயன்று, தீர்வு தந்துள்ளார் என ஆணித்தரமாக உறுதிபடுத்துவதாகவும் இன்றைய ஆய்வுகள் எழுந்து கம்பருக்குப் புகழ்மாலை சூட்டுகின்றன. காலந்தோறும் வளரும் ஆய்வுநிலை அதன் அணுகு முறையிலும் பல மாற்றங்களைக் கொணர்வதை இப்பகுதி புலப்படுத்துகின்றது.

இவ்வகையில் ம.பொ.சிவஞானத்தின் 'கம்பரின் சமயக் கொள்கை' (1983) முன்னூலாகின்றது. 'இசுலாமிய கிறித்தவ சமயங்களைச் சேர்ந்த தமிழர்களோடு ஒன்றுபட்டு இந்திய தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த வேண்டுமானால் அதற்கு முதலில் தேவைப்படுவது இந்து மக்கள் ஒருமைப்படுவதுதான். ஒரு பலவான்தான் மற்றொரு பலவானுடன் சமநிலையில் உறவு கொள்ள முடியும். பலவானுக்கும் பலவீனனுக்குமிடையே சகோதரத்துவம் ஏற்படுவது சாத்தியமில்லை. இதனால்தான் இந்திய தேசிய ஒருமைப்பாட்டினன் அடித்தளமாக இந்து மதத்தினிரின் ஒருமைப்பாட்டினைத் தமிழ் இலக்கியங்கள் மூலமாகச் செய்ய முடியும் என்று கருதுகிறான்," என்பது அவர் வாய்மொழி.

மு.இராமசாமியின் தேசியகாப்பியமும் (1988) இப்போக்கினதே. தனிமனித நல்லுணர்வை, மக்கட் சமுதாய வளர்ச்சிக்குத் துணையாக்குவதும், மக்கட் சமுதாயப் பொதுப்பண்பினைத் தனி மனித நல்வாழ்விற்கு உரியதாக்குவதும் ஆகிய அருஞ்செயலைச் செய்யும் பொழுது காப்பியம் உலகப் பெருங் காப்பியமாகிறது. பாரத நாட்டில் எந்த ஒரு ஒருமைப்பாட்டைக் காண விழைந்தாரோ, அது முழுமையாக்கப்பட்ட ஒன்றாகக் கம்பர் பாத்திரங்களின் வாயிலாகக் காட்டியிருப்பதைப் பாரதியார் கண்டு அதன் வயமாகிவிட்டதாகத் தெளிவுறுத்துகிறார். தேசிய ஒருமைப்பாட்டுக்கு மேல் ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கும் கம்பரில் வழி துலங்கியிருப்பதும் விளக்கப்படுகிறது. வெறும் காப்பிய உத்தியாகவோ, முருகியலுணர்வின் விளைவாகவோ இயற்கைக் காட்சிகளைக் கம்பர் பாடவில்லை. இயற்கை யரங்கிலும் ஒருமைப்பாட்டுணர்வு, வான்மிகத்திலிருந்து முரண்படு மிடங்களிலும் ஒருமைப்பாட்டுணர்வு காணப்படுகிறது என்பதனை

அறுபதிற்கும் மேற்பட்ட பாடல்களை, சங்கம் முதல் பாரதிவரை மேற்கோள்களாகக் கொண்டு விளக்கியிருப்பது தனிச்சிறப்புப் பெறுகிறது.

இன்று அதிகமாகப் பேசப்படும் மனிதநேயம், மனிதம் பற்றியும் கம்பனில் மனிதம் என இருநூல்கள் எழுந்துள்ளமை (கா.வாசுதேவன், 1999, சித்தன், 2000) குறிக்கத்தக்கது.

கம்பனில் வரும் இளைஞர், மாதர், முனிவர், படைத்தலைவர், அமைச்சர், அரசர் ஆகியோர் தத்தம் சிந்தனைகள் மூலம் உலக அமைதிக்கு எத்தகைய பங்காற்றியிருக்கிறார்கள் என்பதை அறிஞர் பலர் ஆய்ந்துரைக்கத் தொகுக்கப்பட்ட நூலாக அ.அருணகிரியின் 'கம்பனில் உலக அமைதிச் சிந்தனை' (1988) அமைகிறது.

'அழித்தல் அறமன்று; திருத்தப்படுதலும் வாழ்விக்கப்படுதலுமே அறம்', என்ற உணர்வுடன், 'மதப்பிணக்குக் கூடாது, நன்றியறிதல், சகோதர பாசம், வறுமை நீங்க வேண்டும், தொண்டலால் ஊதியமில்லை, யாரொடும் பகை கொளற்க, போரற்ற உலகம்' இவையே கம்பன் குறிக்கோள் எனக் குன்றக்குடி அடிகளார் (கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம், 1994) தெளிவுபடுத்துகிறார். இதற்குத் துணையாக இன்றைய அரசியல், சமூகச் சூழல்களை மேற்கொண்டுள்ளார். சோ.குருலட்சுமியின் 'கம்பன் படைப்பில் உலக சகோதரத்துவம்' (ஆய்வுக் கோவை, 1998) கூறத்தக்கது.

13. பெண்ணியம் : இன்று வளர்ந்துவரும் பெண்ணிய ஆய்வுப் போக்கில் கம்பனில், முழுமையான நூலாகச் செல்வக் கணபதியின் கம்பனில் பெண்ணியம்' (2000) எழுந்துள்ளது. இப்பொருள் பற்றிய கட்டுரைகள் பல எழுந்துள்ளதையும் அறிய முடிகிறது. பெண்ணியப் பார்வையில் கம்பன் தாரை (ச.சிவகாமி), கம்பன் காட்டும் பெண்மையின் மறுபக்கம் (தேவிதாசன்), தீயவையாவினும் சிறந்த தீயாள்—ஒரு பெண்ணியப் பார்வை (க.பஞ்சாங்கம்) எனும் மூன்று கட்டுரைகளை உள்ளடக்கியதாகக் கம்பர் ஆய்வுக்கோவை விளங்குகிறது. கைகேயியின் கலகக்குரல் மூலம் கம்பர் 1. கூட்டாகக் குழந்தை வளர்கின்ற நிலைமாறித் தனிக்குடும்ப அமைப்பை நோக்கி மாறிய சூழலின் உளவியல் நெருக்கடி, 2. தனிக்குடும்ப அமைப்பு உருவாகிய சூழலில் தாய்மை பற்றிய புனைவுகள் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பனவற்றைக் காட்டுவதாக மூன்றாம் கட்டுரை பேசுகிறது. பிரேமா அருணாசலத்தின் கட்டுரையும் குறிக்கத்தக்கது (கம்பராமாயணம், பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்) கம்பராமாயணத்தை மேலோட்டமாகக் கண்டு, எல்லாம் அவனே என ஒன்றிய நிலையில் சார்பு வாழ்வில் மனநிறைவு கொண்டு வாழ்ந்த வாழ்வால் பெண்களிடையே தற்சிந்தனை எழவில்லை என்ற கருத்தும் பிறக்கிறது. எனவேதான் வேண்டாத, முறையற்ற கட்டுப்பாடுகளை உணர்ந்து அவற்றை எதிர்க்கவோ, முறிக்கவோ

முயலவில்லை எனவும் கருதலாம்' என அன்றைய பெண்ணினச் சூழலின் இயல்பைக் காட்டுவர். (ச.சிவகாமி, காலச்சுழலில் பெண், மாதவிபதிப்பகம், சென்னை, 1996,116).

சீதையைத் திறனாய்ந்த பழ.பழநியப்பன், 'சீதையைப் பெண்மையின் குறியீடாகக் கொள்ளலாம். சீதையின் வாழ்வும் தாழ்வும் அனுபவிக்கும் இன்பமும்–துன்பமும் எல்லாமே ஒரு சராசரி மானிடப் பெண் வாழ்வின் சித்திரிப்பாகும். சீதையின் கதையே அந்த வகையில் பார்த்தால் பெண்மையின் பரிணாம வளர்ச்சி; பெண்ணியத்தின் வளர்ச்சியும் கூட' என்றுரைத்திருப்பதும் இவண் சுட்டற்பாலது.

14. ஒப்பியல் : கம்பன் ஆய்வு வரலாற்றில் தனக்கெனத் தனி முத்திரை பதித்துக்கொள்ளும் துறையாக ஒப்பியல் பல சீரிய ஆய்வுகளைத் தந்து சிறந்துள்ளது. இவ்வொப்பியல் பலவகை காட்டி வளர்ந்துள்ளதும் சுட்டற்பாலது. கம்பன் கதை மாந்தரையே ஒருவரோடு ஒருவரை இணைத்துக் காணல், பிறதமிழ்க் காப்பியங்களுடன், இலக்கியங்களுடன் ஒப்பு நோக்கல், பிற மொழி இராமாயணங்களுடன் ஒப்பீட்டாய்தல், உலகப் புகழ்க் கவிஞருடன் இணைத்துப் பேசல் என்பனவாக அவை அமைகின்றன. பட்டிமண்டபம் கண்ட பாஸ்கரத் தொண்டைமானின் கட்டுரைகள் முதல்வகைக்குச் சான்றாகின்றன. இராமசேவையில் தலைநின்ற இலக்குவன், அனுமன், விபீஷணன் ஆகியோரில், 'விபீடணன் நீதியால் வந்த நெடுந்தரும நெறியில் நிற்பவனாகையால் இராமன் ஒரு கால் ஏதாவது தவறு செய்து விட்டால் அவனையும் விட்டு ஓடத் தயாராக இருப்பவன். இராமனுக்குச் சேவை செய்வதன் மூலம் வீட்டரசு கிடைக்கும் என்ற எண்ணம் உடையவன் அனுமன். இராம சேவை செய்கிறவன் என்பதிலேயே பெருமை கொள்பவனாக அவன் வாழ்கிறான். ஆயின் இலக்குவன் தன் சேவையை விளம்பரப்படுத்தவில்லை. வைணவர்கள் கைங்கர்ய லட்சணம் இதுவே. ஆகவே இவனே சிறந்தவன்' என முடிவுரைக்கிறார்.

சங்க இலக்கியம் முதல் தற்காலக் கண்ணதாசன் வரையிலான தமிழிலக்கியங்களுடனும், வான்மீகி, துளசி, காளிதாசன் போன்ற வடமொழிப் புலவர்களுடனும், மில்டன், ஹோமர் போன்ற மேனாட்டுப் புலவருடனும் ஒப்பிடுதல் காணப்படுகிறது. வள்ளுவருடனும் வான்மீகியுடனும் ஒப்பிடுவது பெரும்பான்மையாக உள்ளது.

மா.சுசீலாவின் 'கம்பராமாயணத்தில் சங்க இலக்கிய மரபுகள்' (1993) கம்பரைச் சங்க காலத்துடன் இணைத்து முன்னோக்குகிறது. வள்ளுவருடனான ஒப்பீட்டில் சா.சுந்தரனாரின் கம்பரில் வள்ளுவர் (1964) கம்பர் வள்ளுவரை எவ்வாறெல்லாம் கையாண்டுள்ளார் என்பதை வரையறுத்துக் காட்டுகிறது. ச.தண்டபாணி தேசிகரின் வள்ளுவரும்

கம்பரும் (1975) இவ்வகையில் மிகச் சிறந்த நூலாகும். கம்பர் பெருமான் திருக்குறளைக் கற்றாய்ந்த பெற்றி, இடத்திற்கேற்ப சொல்லையும் பொருளையும் பொருட் பொதிந்த சுவையையும் எடுத்தாண்ட புலமை, பாத்திரங்கட் கேற்ப வள்ளுவர் கருத்துகளை வளைத்து வடித்தாண்ட தனித்தன்மை என்ற கூறுகளை அகல ஆழமுடன் சீர்தோறும் செய்யுள் தோறும் கண்டு உரைப்பதாக நூல் அமைந்துள்ளது.

கம்பரும் சங்க நூல்களும் (செ.வேங்கடராமச் செட்டியார் – முல்லையும் பூத்தியோ); ஒரு குறளுக்குக் கம்பர் கண்ட உரை (வ.பா.தாமரைக்கண்ணி அம்மையார், திரு.வி.உ.அறுபதாம் ஆண்டு நிறைவு விழா மலர், 1941); கம்பராமாயணத்தில் வள்ளுவர் (ரா.பி.சேதுப்பிள்ளை, வழிவழி வள்ளுவர், 1953); திருவள்ளுவரும் கம்பரும் கருதும் நன்மக்களின் வாழ்க்கை வழித்துறை (இரத்தினா நவரத்தினம், தமிழ்ப் பொழில், நவ 1968) எனப் பிற சிறந்த கட்டுரைகளும் அமைகின்றன.

தமிழ்க் காப்பியங்களுடன் கம்பனை ஒப்பு நோக்குவதில் ச.வே.சுப்பிரமணியனின் 'இளங்கோவும் கம்பனும்' குறிப்பிடத்தக்க (1986) நூலாகும். 'காலம், பாடுபொருள், சூழல், தற்சார்பு போன்ற பல அடிப்படைகள், பாதிப்புக் கூறுகள் காரணமாக இளங்கோவடிகள் ஒரு சிறந்த கலைஞராக வெளிப்படுகின்றார்; கம்பர் ஒரு சிறந்த கவிஞராகப் புலப்படுகிறார். ஒரு இலக்கியம் சிறப்புடையதாக அமையவும், காலங்காலமாக அழியாது நிலைத்து வாழவும் காரணமாக அமையும் அடிப்படை இயல்புகள் இவ்விரு நூலிலும் இருவிதமாகப் பொருந்துவதைப் புலவரின் இவ்வியல்பே வலியுறுத்துகின்றன' என்பது இதன் முடிவு.

சிலப்பதிகார உவமைகளைக் காட்டிலும் சிந்தாமணி உவமைகள் கம்பன்பாவில் மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளன. ஓரிடத்தில் உரைக்கப்பெற்ற உவமையைப் பல்லாயிரம் பாக்களைத் தாண்டிப் பின்னும் நினைவு கூர்ந்து தொடர்புறுத்தி கூறும் நீர்மை புதுநெறியாகும். ஆழ்ந்த பொருளை–குறிப்புப் பொருளை உணர்த்த தொன்று தொட்டுவரும் உவமையையும் மாற்றிவிடுகின்றார். உள்ளம் கவரும் முறையில் உவமையைப் புதுமெருகூட்டிக் காப்பியம் படைத்துள்ள கம்பரை உவமைச் சக்கரவர்த்தி என்றும் கூறலாம் என்பர் (ஆர்.எம்.சோம சுந்தரவல்லி, கம்பன் உவமைகள், 1971).

'பெண்ணின் கற்பினைப் போற்றுவதும், ஊழின் வலியை உணர்த்துவதும் சமயப் பொதுமையை அறிவுறுத்துவதும், ஒற்றுமையை உணர்த்துவதும், காப்பியத் தலைமக்கள் நாடுவிட்டேகுதலும், அதன் காரணமாக அல்லற்படுதலும் இரு பெருங்காப்பியங்களிலும் இழையோடிக் கிடக்கும் பொதுக்கூறுகள். பத்தினி வணக்கம் என்ற புதிய கோட்பாட்டை

இளங்கோவடிகள் தாம் படைத்த கற்புடை நங்கையாம் கண்ணகி வாயிலாக வெளிப்படுத்துகின்றார். எத்துனை இடர்ப்பாடு வரினும் அறத்தைக் கம்பர் வலியுறுத்துகிறார்' என்பது மு.நிலாமணியின் தெளிவு (வீரபத்தினியும் கற்பின் கனலியும், ஆய்வுக் கோவை, 1983,ப.127).

கண்ணகி–சீதை தனிமைத்தவம் ஓர் மதிப்பீடு (ம.தேவி, ஆய்வுக் கோவை–1981); கொங்குவேளிரும் கம்பநாடனும் (மா.சின்னு, கம்பன் மணிமலர், காரைக்குடி 1979); திருத்தக்க தேவரும் கம்பநாடரும் (ஆ.வரதநஞ்சையபிள்ளை, தமிழ்ப்பொழில் – பிரமோதூத ஆனி, ஆடி, ஆவணி); காளத்திவேடனும் கங்கை வேடனும் (ரா.பி.சேதுப்பிள்ளை, தமிழ் இன்பம், 1948); சேக்கிழாரும் கம்பரும் (பாலூர் கண்ணப்ப முதலியார், கட்டுரைக் கதம்பம், 1960); இராமாயணமும் கந்தபுராணமும் (பூ.ஸ்ரீநிவாசன், ஆனந்த போதினி 1933 மே,ஜூன்); கன்னனும் கும்பகர்ணனும் (மா.இராசமாணிக்கனார், செந்தமிழ்ச் செல்வி – தொகுதி 12); அனுமன் தூதும் ஆழியோன் தூதும் (செந்தமிழ் டிச 1976); கம்பர் வழி உமறு (சுசீலா மாரியப்பன், ஆய்வுக் கோவை, 1983) எனக் காப்பியங்களுடனான ஒப்பியல் பரந்தமைகிறது.

ந.சுப்புரெட்டியாரின் கம்பனும் ஆழ்வார்களும் (கம்பன் மணிமலர், காரைக்குடி 1981); சித்தனின் கம்பனும் கலியனும் (கம்பன் விழா மலர், புதுச்சேரி, 1988); ஆழ்வார்களும் கம்பரும் (இராமராஜன் 1992); கம்பனும் திருமங்கை மன்னனும் (1993) எனும் ஒப்பீடுகளும் கருதத்தக்கன. க.குலசேகரனின், 'கம்பனைக் காப்பியம் பாடவைத்ததே ராமானுஜப் பெருவாழ்வின் பெரும்பயன் என்பது கருத்து. சீதை போதித்த சரணாகதியே ராமாயணத்தின் கருப்பொருள் ஆதலை ராமானுஜர் அழுத்தமாக உலகுக்கு உணர்த்தியதே கம்பனில் ஒரு ஆசையைத் தூண்டி ராமாயணம் பாட வைத்தது. ராமானுஜர் காலத்திய சைவ–வைணவ சமயப் போட்டிகளும், பூசல்களும் சமுதாய நலத்தில் நாட்டம் கொண்ட கம்பன் ஒரு சமயப் பொதுநோக்கு மிக்க பெருங்காப்பியத்தைப் பாட இன்னொரு காரணம் ஆகியது. எனவே ராமானுஜர் காலம் கம்பன் வரலாற்றின் ஆதிபர்வம் என்றே சொல்லத்தகும்' எனும் கருத்தும் (தமிழின் பொற்காலத்தில் ராமாநுஜரும் கம்பனும், ப.156) எண்ணத்தக்கது.

புதுவைக் கம்பன் கழகம் அ.அருணகிரி தொகுத்து வெளியிட்டுள்ள ஒரு நோக்கில் இருபார்வைகள் (1987) நூல் கம்பரை வில்லிபுத்தூரார், கச்சியப்பர், உமறுப்புலவர், கிருஷ்ணப்பிள்ளை, பாரதிதாசன் எனப் பல காலத்திய பெரும் புலவருடன் ஒப்பிட்டுச் செல்கிறது.

தொடர்ந்து பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் இவர்களுடனான ஒப்பீடுகளும் கம்பனுக்குப் பெருமை சேர்க்கின்றன. கம்பனைப் பாரதியார்

மானிடனாகப் போற்றியதற்கான காரணங்களைப் ப.ஜீவானந்தம் (கம்பனும் பாரதியும் – பாரதி வழி, 1964) எடுத்துக் காட்டுகிறார். இறைமையும், இறைமையின் பொதுத்தன்மையும் இருவரிடையே எப்படி உணர்த்தப்பட்டுள்ளது என்பது மு.மு.இஸ்மாயீலின் 'கவிச்சக்கரவர்த்தியும் கவியரசரும்' நூலுள் (1982) நவிலப்பட்டுள்ளது. வெவ்வேறு வரலாற்று, சமூக, கருத்துச் சூழல்களில் கம்பன் பாரதிதாசன் இவர்களின் வாழ்வும் படைப்பும் அமைந்திருந்த போதிலும் தமிழ் எனும் மணிச்சரட்டில் ஒரு சேரப் பார்ப்பதற்கான வாய்ப்புகளமைவதைச் சிலம்பொலி சு.செல்லப்பனின் 'காப்பியக் கம்பரும் புரட்சிக்கவிஞரும்' (1989) நூல் உறுதிப்படுத்துகிறது. கம்பருக்குப் பின் தோன்றிய இலக்கியங்களுடனான ஒப்பீட்டில் 'கம்பர் கருத்தும் கவிராயர் கீர்த்தனையும்' (தே.சொக்கலிங்கம், ஆய்வுக் கோவை 1981) எனும் கட்டுரையும் உட்படுகிறது.

கம்பன் ஆய்வு வரலாற்றின் தொடக்கத்திலேயே கால் கொண்ட அணுகுமுறைகளுள் ஒப்பியலும் ஒன்றாதலின் பல சிறந்த நூல்கள் இதனுள் காணப்படுகின்றன. பா.வே.மாணிக்க நாயக்கர், 'கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்' (1955) காண, தெ. ஞானசுந்தரம் இரண்டையும் கடைந்து கம்பர் எங்ஙனம் தம் புதிய வார்ப்பில் பிசின் அகற்றி, சுளையெடுத்து, தேனும் வார்த்து காப்பிய விருந்து படைத்துள்ளார் (காப்பிய விருந்து 1986) என விளம்புகிறார். நாமக்கல் கவிஞரின் 'கம்பரும் வால்மீகியும்' (1956) கூறத்தக்க மற்றொரு நூலாகும். மு.மு.இஸ்மாயீலின் 'அடைக்கலம்' (1989) அடைக்கலமாகிய ஒரு கூறினை வால்மீகியுடன் இணைத்துக் காண்கிறது. ஹா.கி.வாலத்தின் இராமாயண ரத்னாகரம் (1977) கம்பர், வான்மீகி, துளசி ஒப்பியலாக அமைவதும் இயம்பத்தக்கது. இரா.பிரேமாவின் இராமாயணக் கிளைக்கதைகள் ஒப்பீடும் (1989) இம்மூன்று நூல்களைக் கொண்டமைகிறது. இளம்பிறை மணிமாறனின் 'கம்பனும் கீதையும்' (1997) குறிப்பிடத்தக்க பிறிதொரு நூலாம். வடமொழியுடனான ஒப்பீடுகள் பெரிதும் கதைமாந்தர் (வான்மீகி – கம்பர் காட்டும் தாரை – சு.நடராசன், ஆய்வுக் கோவை 17,1985); கதை நிகழ்ச்சி (வாலிவதம் – வால்மீகி, கம்பன், துளசிதாசர் ஒப்பீடு – ஜெயலக்ஷ்மி சுப்ரமணியன், ஆய்வுக் கோவை 1989) என்பனவற்றில் அமைகிறது.

மலையாள இராமாயணத்தோடு ப.பத்மநாபன் தம்பியின் நூல் (கம்பன் எழுத்தச்சன் இராமாயணங்கள், 1993) ஒப்பாய்வு செய்கிறது. ஆங்கிலத்தில் மலர்ந்துள்ள எஸ்.சங்கர்ராஜு நாயுடுவின் 'A comparative study of Kambaramayanam and Tulasi Ramayanam;' சி.ஆர்.சர்மாவின், 'The Ramayana in Telugu and Tamil' என்பனவும் இவண் எண்ணத்தக்கன.

கம்பன் ஆய்வு வரலாற்றில் முன்னிற்கும் எஸ்.இராமகிருஷ்ணன் 'கம்பனும் மில்ட்டனும்' (1959) தந்து இங்கும் முன்னோடியாகிறார். இதில்

கம்பன் மில்ட்டனை விஞ்சி நிற்பதை எடுத்துணர்த்தியவர் 'கம்பனும் சேக்ஸ்பியரும்' (1988) என்ற ஒப்பீட்டையும் தந்துள்ளார். கம்பராமாயண ரசனையில் வ.வே.சு.ஐயர், 'பிறருடைய கதைகளைச் சுவீகரித்து அவற்றை முதனூலாசிரியன் போலவே சுதந்திரமாகவும் கம்பீரமாகவும் நடத்திக்கொண்டு போவதில் கம்பன், ஹோமரின் கதைகளைச் சுவீகரித்துக் கையாண்ட எஸ்கூலனுக்கும் ஸோபோ கிளிஸ்க்கும் ஒர்படி உயர்ந்தவன் எனவே அறிஞர் கண்டுகொள்வர்' என்றுரைத்திருப்பதும் இவண் நினைவுகூரத்தக்கது. 'கம்பரும் ஹோமரும்'(1988) தந்த ஆ.ரா.இந்திரா, 'உலக மகா காவியங்களுடன், கம்பனின் காப்பியத்தை ஒப்பிட்டு ஆராய்ந்த முதல் திறனாய்வாளர், தேசபக்தர் வ.வே.சு.ஐயர் தாம். தம்முடைய தலை சிறந்த ஆராய்ச்சியின் பயனாக, விருப்பு – வெறுப்பு உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட தெளிவுடன், 'இலியட், ஏனியட், சுவர்க்க நீக்கம் முதலான பிற நாட்டுக் காப்பியங்கள் மட்டும் அல்லாமல் மகாபாரதம் எனும் நம்நாட்டு இதிகாசம், வால்மீகி இராமாயணம் என்பனவற்றை விஞ்சி நிற்கக் கூடிய ஓர் ஒப்பற்ற காப்பியமாகக் கம்பராமாயணம் விளங்குகிறது. 'இந்த உண்மையை நிலை நாட்டுவதுதான் நோக்கம்' என்று வ.வே.சு.ஐயர் கூற்றை உறுதிப்படுத்துகிறார். 'கம்பனோடு ஒன்றும் பிரெஞ்சு இலக்கியங்கள்' (ச.மதன கல்யாணி, 1990) நூல் ஆற்றுப்படுத்துதல், நட்பு, நூற்பயன் என்பனவற்றில் இவற்றின் ஒப்புமையை எடுத்துரைக்கிறது. பிரெஞ்சு இலக்கிய மொழிபெயர்ப்புகளும் இணைந்திருப்பது குறிக்கத்தக்கது.

தகடூரானின், 'கம்பன் ஓர் ஒப்பீடு' (1980) கம்பனை எப்படியெல்லாம் ஒப்பாய்வு செய்யலாம் என்பதைத் தருகிறது. எஸ்.நல்லபெருமாள், "ஷேக்ஸ்பியரும் ஷெல்லியும் எலியட்டும் மில்டனும் வடமொழி வான்மீகரும், காளிதாசனும், பர்த்ருஹரியும், தெலுங்குக் கவிஞரான போதனாவும், மலையாள நாட்டு எழுத்தச்சனும், பரமேஸ்வர ஐயரும், பணிக்கரும் கம்பனது கருத்துகளையே கொண்டுள்ளனர். பாரதிதாசன், கண்ணதாசன், கருணாநிதி ஆகியோரிடம் கம்பன் கவிதையின் எதிரொலி உண்டு' என நவின்றிருப்பதும் (கம்பன் காவிய சாரம் – கிட்கிந்தா காண்டம் 1988, முன்னுரை) நோக்கத்தக்கது.

இங்ஙனம் கம்பன் ஆய்வுகள் பன்முக நோக்கில், பலவித அணுகு முறைகளுடன் வளர்ந்து கொண்டிருப்பது மேற்கண்டனவற்றால் புலனாகிறது. கம்பனுக்கு இலக்கிய ஆர்வலரிடம் உள்ள சிறப்பிடமும் இதனால் தெளிவாகிறது. ஒப்பியல் ஆய்வில் மகளிர் பலர் நல்ல நூல்களைத் தந்திருப்பதும் மகிழ்விற்குரியதாகும்.

இனி, இவ்வாய்வுகளின் பொதுத்தன்மை – இயல்பு எப்படி அமைகின்றது என்பதை நோக்கலாம்.

ஆய்வு இயல்பு

1. ஆய்வின் தொடக்கம் முதல் இன்றுவரை ஆழமற்ற மேம்போக்கான எழுத்துரைகளும் வந்துகொண்டிருக்கின்றன. இலக்குமி நாராயணனின் கம்பர் தரும் தம்பியர் (1979), பெ.இராமாநுஜரெட்டியாரின் உயிர்தந்த உத்தமன் (1985) தமிழவேளின் கேகயன் மடந்தை (1986) என்பன சான்றுகள்.

2. வெறுமனே கம்பனின் கவிநயம் காட்டிச் செல்லும் பாங்கும் தொடரும் இயல்பாகக் காணப்படுகிறது. மு.இராமசாமியின் ஓவியப்புறா (1987), போல்வன இதன் பாற்படும்.

3. கம்பன் காவியத்தினின்றும் மிக விலகி, தம் கற்பனைத் திறனை உட்படுத்தி, அதற்கு முதன்மையளித்து வரும் இராமாயண ஆய்வுகளும் பலவாக உள. வேலூர் ஸ்ரீபாலனின் இராமாயணப் பாத்திரங்கள் (1993); பி.சி.சீதாபதியின் கம்பன் படைப்பில் குற்றவாளிகள் (1984) போல்வன இவ்வகையின.

4. கம்பன் கதை மாந்தரை, நிகழ்வை வான்மீகக் கண்கொண்டு நோக்கும் போக்கும் பரவலாகத் தென்படுகிறது. தி.மாணிக்கவாசகத்தின் 'தெய்வக் கற்பினள் கைகேயி' (1972) சான்றாகும்.

5. தன் கருத்திற்கேற்ப கம்பன் கதை மாந்தரிடையே குற்றம் கற்பிப்பதும் (நா.சிவசுப்பிரமணியன் – விபீஷணன், 1975) ஆய்விற்கு உகந்ததல்ல.

6. கதைமாந்தர் செய்யும் குற்றங்களுக்கு அமைதி காட்டி இல்லை ஆக்குவதும் (கு.திருமேனி, தூய சிந்தையள்) ஆய்வாளின் அறிவுத்திறனைக் காட்டுமேயன்றி, கம்பனைக் காண்பதற்குத் தடையாகி உண்மை புலப்படாது.

7. புதிய அணுகு முறைகளும் புதிய நோக்குகளும் கம்பன் ஆய்வில் அவ்வப்போது மலர்கின்ற போதிலும் (கம்பன் புதிய பார்வை, அ.ச.ஞானசம்பந்தன், 1984) பழைய மரபு வழிப்பட்ட ஆய்வுகளும் குறிப்பிடத்தக்க அளவில் வெளிவருவதை அறிய முடிகிறது. முத்து எத்திராசனின் கம்பர் காட்டும் கார்காலம் (1982), கமலா சங்கரனின் கம்பன் கைவண்ணம் (1978) என எடுத்துக்காட்டுகள் பல உள. புதிய நோக்கு எனினும் பொருந்தா நோக்குகளும் அமைவதை, நாமக்கல் கவிஞரின் 'காந்தியடிகளும் கம்பநாட்டாழ்வாரும்' கொண்டறியலாம்.

8. கம்பர் வரலாறு, காலம் ஆகியவற்றை ஆய்வு செய்வன, அவர் படைத்ததாகக் கருதப்படும் பிற நூல்களையும் தனிப்பாடல்களையும், வழக்குகளையும் கருத்தில் கொள்வது சுட்டற்பாலது. அ.கி.நாயுடுவின் கவிச்சக்கரவர்த்தி கம்பர் வரலாறு (1963) சான்று.

9. கம்பன் கதைக்கு ஆரியர், திராவிடர் எனும் வண்ணம் பூசிய ஆய்வுகளும் ஆங்காங்கே எழுகின்றன. அண்ணாதுரையின் 'தீபரவட்டும்' இதற்கு வித்திட்டுள்ளது. கு.திருமேனியின் கம்பராமாயணத் தோற்றம் இராமனைத் திராவிடனாகவும், இராவணனை ஆரியனாகவும் காட்டுவது கருதற்பாலது. "ஆரிய – திராவிட அனுமானங்களை வைத்துக்கொண்டு இராமாயணக் கதையைச் சரித்திரத்தோடு சம்பந்தப்படுத்த முயல்வது உண்மைக்கு உகந்ததல்ல" (நாமக்கல் கவிஞர், கம்பரும் வால்மீகியும், 1956); 'இராவணனும் மற்ற அரக்கர்களும் தமிழர் என்பதற்கும் திராவிட ஆரியப் பூசலின் அடிப்படையில் இராமாயணம் எழுந்தது என்பதற்கும் அகச்சான்றோ புறச்சான்றோ கிடையாது. இராவணனைத் தமிழன் என்று உறவு கொண்டாடுவதும், அவனுக்கு ஒரு ஏற்றம் கற்பிக்க முயல்வதும் பெருந்தவறாகும். இராமாயணம் ஒழுக்க சீலத்தின் உயர்வை எடுத்து விளம்பும் ஒரு விழுமிய நூல். உலகில் மனிதனுக்கு வேண்டிய அறங்களையும் அவன் செய்ய வேண்டிய கடமைகளையும் பல்வேறு நீதிகளையும் விரிவாக விளக்கி நிற்கிறது. வடநாடு தென்னாடு என்ற பாகுபாடின்றி இந்திய நாடு முழுமையும் ஒன்றாக ஒற்றுமைப்படுத்திப் பிணிக்க வல்லது ராமாயணம்' (ஜி.சுப்பிரமணியபிள்ளை, கம்பராமாயணத்தின் பெருமை, 1961) என்பன போன்ற இடைப்பட்ட சிந்தனைகளும் உண்டு.

10. கம்பன் ஆய்வில் தனித்துச் சிறப்பிக்கத் தக்க நெறியாக ஒருவர் கருத்திற்கு மாற்றாக எதிர்கருத்தினை அவரது நூல் கொண்டே தருவதும் அமைகிறது. அண்ணாதுரையின் இருநூல்களுமே இத்தகைய மதிப்பிற்கு இடனாகியுள்ளன. கம்பரசத்திற்கு, க.பாலசுப்பிரமணிய முதலியாரும், தீபரவட்டும் நூலுக்குச் சங்கர்லாலும் எதிர்நூல் படைத்துள்ளனர். (கம்பரச ஆராய்ச்சி, செந்தீபரவட்டும்). மு.அண்ணாமலையின் 'கம்பன் கெடுத்த காவியம்' என்ற நூலுக்கு மாற்றாக, நச்சு முறியின் 'கம்பன் கெடுத்த காவியம்?' என வினாக் குறியுடன் (1952) தோன்றியுள்ளது. இவை இந்நூற்றாண்டின் முற்பகுதியில் திராவிட இயக்கத்தார் நடத்திய கம்ப இராமாயண எதிர்ப்பியக்கத்தின் விளைவுகளாகும்.

கம்பன் களத்தின் பொருள் விரிவு காரணமாகவும் எதிர் ஆய்வுகள் நிகழ்ந்ததைத் தமிழ்ப்பொழிலில் இடம்பெறும் (1963) வாலிவதை பற்றிய கட்டுரைகள் கொண்டறியலாம். எஸ்.கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரின் 'சங்ககாலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம்' எனும் நூல், ம.பொ.சி 'கம்பநாடர் சைவரா? வைணவரா?' எனத் தொடர்சியாகப் பதினேழு செங்கோல் இதழ்களில் எழுதியவற்றிற்கான மறுப்பாகும். நுலின் இறுதி மு.மு.இஸ்மாயில் எழுதிய 'கம்பன் கண்ட இராமன்' நூலில் இராமன் வாலியிடம் தன் தவறுணர்ந்து வெட்கப்பட்டு மன்னிப்புக் கேட்டான் என்பதற்கும் மறுப்பாக அமைகிறது.

11. கம்பன் ஆய்வுகள், மலர், கட்டுரைத் தொகுப்பு, நூல், ஆய்வடங்கல், அகராதிகள், வசனங்கள், ஆய்வுக் கோவை எனப்பல வகைமைகளில் அமைகின்றன.

12. கவிதை (கவியரங்கில் முடியரசன், 1960), நாடகம் (பங்கம் இல் பரதன், கோ.செல்வம் 1988) எனும் படைப்பிலக்கிய வடிவங்களிலும் கம்பன் ஆய்வுகள் அமைந்து கம்பருக்குப் புகழ் சேர்க்கின்றன.

கம்பன் கருத்துக்கோவை

கம்பன் ஆய்வுகளில் இருந்து பெறப்படும் சில அரிய தகவல்களும் சிந்தனைக்கு விருந்தாகும் சில சிறந்த விமர்சனக் குறிப்புகளும் கம்பன் ஆய்வுகள் தரும் பயனாக, இங்கே கருத்துக்கோவையாக இயம்பப்படுகின்றன.

கல்வியில் பெரியவன் கம்பன் என்று கூறி மகிழ்வதை விட கல்வியிற் பெரியவன் கம்பன் என்று உணர்ந்து மகிழ்வது அவசியம். கம்பனை நாமாகத் துய்க்க ஆரம்பிக்குமுன் ஆராய்ச்சிகளைக் கையில் எடுத்தல் கூடவே கூடாது. ஆரம்பத்தில் எந்த இடத்தில் விருப்பமோ அந்த இடத்தைப் படிக்கலாம். கம்பனைத் துய்க்க விரும்புவோர் முதலில் காட்சிகளைப் படித்தலே அவசியம். அவன் உணர்த்த விரும்பும் உணர்வோடு கவியின்பத்தையும் அதனால் அடையலாம். பின் பல படலங்களையும் காண்டங்களையும் ஒன்று சேர்த்துப் படித்து ராமாயணத்தின் கட்டுக்கோப்பு முழுமையையும் கண்டு ஆனந்திக்கலாம்.

–பொ.திரிகூடசுந்தரம், கம்பனைத் துய்க்கும் முறை.

வால்மீகி எந்த நற்பயனை மக்கள் அடைய வேண்டுமென்று இராமாயணத்தை ஆரம்பித்தாரோ அந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்யவே கம்பர் மாற்றியமைத்தார்.

–நாமக்கல் கவிஞர், கம்பரும் வால்மீகியும் 1956.

இப்பொழுது அச்சிடப்பட்டிருக்கிற கம்பராமாயணப் பாலகாண்டத்தில் இருக்கிற மொத்தப் பாடல்கள் 1399. இதில் பாடபேதமில்லாத பாடல்கள் 26 தாம். இந்த இருபத்தாறில் 8 பாடல்களுக்குத் தஞ்சை சரசுவதி மகாலில் இருக்கிற ஏட்டுப் பிரதிகளிலே பாடபேதம் கிடைத்திருக்கிறது. எஞ்சிய பாடல் 18 தாம் பாடபேதம் காணப்படாதவையாகும். அனால் இன்னும் சில ஏடுகளைப் பார்த்தால் இவற்றினும் பாடபேதம் நுழைந்தே இருத்தல் கூடும். இப்பொழுது கிடைத்துள்ளதுபடி பாடபேதங்கள் 1 முதல் 26 வரை ஒரு பாடலுக்கு ஏற்பட்டிருக்கின்றன. இந்தப் பாடபேதங்களைக் கொண்ட பாடல்களை எடுத்தெழுதினால் இன்றுள்ள கம்பராமாயண

ஏட்டிலுள்ள 10,559 பாடல்களும் சுமார் ஒரு கோடி பாடல்களாகக் காட்சியளிக்கும்.

சொ.முருகப்பன் – கம்பர் காவியம் (அதன் நிலை விளக்கம்).

அடைக்கலம் பூண்டாரை ஆதரிப்பதையே நோன்பாகக் கொண்டு இராவண சங்காரம் செய்த ஸ்ரீராமன் பெற்றோரின் சொல்லைக் கடவாது சிரமேற்கொண்டு நடக்கையாகிற சாதாரண தருமத்தையும் இலட்சுமணன் பகவானுக்கு அடிமை பூண்டொழுகையாகிற விசேட தருமத்தையும் பரதன் அஃறிணைப் பொருள் போல எம்பெருமானுக்குப் பாதாந்திரனாயிருக்கிற விசேட தருமத்தையும் சத்துருக்கினன் எம்பெருமானுடைய அடியார்களிடத்து அடிமை பூண்டொழுகுகின்ற விசேட தருமத்தையும் காட்டியதோடு சகோதர வாஞ்சையையும் இவ்வுலகத்தார்க்குத் தம்முடைய ஒழுக்கத்தால் வெளியிட்டுக் காட்டினர். அன்றியும் மூத்தோர் சொல்லை அமுதமாகக் கொள்ள வேண்டுமென்பதும் எத்துணைப் பெருஞ்சிறப்புடையோராயினும் பெரியோர்களிடத்து அடங்கி ஒழுக வேண்டுமென்பதும், பெரியோர் கட்டளையை ஆராய்ச்சியில்லாமலே செய்ய வேண்டுமென்பதும், தீயொழுக்ககம் தீமையைத் தருமென்பதும் செருக்குக் கொண்டவர் தாழ்மையடைவரென்பதும் ஒருவரை ஏளனம் செய்வது தீமைக்கு மூலமாமென்பதும் எந்நிலையிலும் கணவனைப் பிரியாதிருத்தலே கற்புடைமாதர்க்கு ஒழுக்கமென்பதும், தனக்கு முறையின்றிக் கிடைக்கும் மேன்மையும் பாராட்டிற்கு உரியதன்று என்பதும் தான்மேற்கொண்ட நோன்பை எந்தக் காரணத்தாலும் கைவிடலாகாதென்பதும், தந்நலங்கருதாது பிறர் குறை நீக்க முயலுதலே பெரியோர் தன்மையென்பதும், காமம் நலத்தைக் குலைக்குமென்பதும், தீக்குணத்தோர்க்குப் பரிந்து உதவுதல் விநாசத்தைத் தருமென்பதும், எவரையும் ஆராய்ந்து தெளிய வேண்டும் என்பதும் ஒருவர்க்கு ஒரு நன்மை செய்தால் அது பின்பு தானே பயனைத் தருமென்பதும், நன்னெறியில் செல்வோர்க்கு விலங்கும் பணி செய்யுமென்பதும், அடைக்கல மடைந்தோர்க்கு ஆவன செய்தல் அறிஞர் கடன் என்பதும் பிறன்மனை நயத்தல் பீழைதருமென்பதும் எப்படிப்பட்டவரும் உலகப் பழிக்கு அஞ்சவேண்டுமென்பதும் முதலிய நீதிகளும் இந்த இராமாயண சரிதத்தில் வெளியாதலைக் காணலாம்.

– வை.மு.கோ, ஸ்ரீகம்பராமாயணம் – பாலகாண்டம் உரை.

காவியப் பண்புகளுக்குக் கம்பராமாயணத்தை விஞ்சியதொரு இலக்கியத்தை உலகம் காண முடியாது என்று சொல்லும்படி அவர் செய்து விட்டார். தமிழ் மொழியின் எளிமையும் வளமும் அவர் அறிவையும் உணர்ச்சியையும் உள்ளபடி எடுத்துக்காட்ட ஏற்ற நிலமாய் அமைந்தன. வடமொழி தென்மொழி நூல்களில் தாம் பெற்ற அறிவாகிய நீரிலே இராமகதை

என்னும் விதையைத் தோய்த்து ஊறவைத்து, பத்தி என்னும் நீரை நீதியுடைமை, நெறியுடைமை என்னும் மடைகளினால் பாய்ச்சி சொல்வன்மை, உவமைச்சிறப்பு என்னும் எருவிட்டு இந்தியப் பண்பென்னும் அறப்பயிரை வளர்த்து, காவியமாகிய அறப்பயனை அறுவடை செய்து அமுதமாக்கிச் சுவைகளாகிய தேனுடன் கூட்டி, 'சேர்ந்துண்ணவாரும் ஜகத்தீரே!' என்று உலகத்துக்குப் பெருஞ்சோற்று விழாவினை அவர் என்றென்றும் அளித்து வருகிறார் என்று கொள்வதே சாலப் பொருந்தும்.

–சுந்தரகாண்டம் பதிப்பு முன்னுரை (உ.வே.சா. நூல் நிலையம்).

ஒரு மனிதன் எவ்வாறு வாழ்ந்து உயரமுடியும்? பிறரை எவ்வாறு வாழ்விக்க முடியும்? அதற்கு ஏற்ற சூழ்நிலைகள் என்ன? அப்படி உருவாகும் இராமராஜ்யம் எப்போது யாரால் எப்படி நிலைபெறும்? – இந்த உயரிய கருத்துகளை எல்லாம் விளக்குகின்ற காப்பியமே இராமாவதாரம்.

–தெ.பொ.மீ. தசரத இராச்சியமும் இராமஇராச்சியமும் 1966.

கம்பனை ஆழ்ந்து படிப்பவர்கள் வாழ்க்கையைத் தெளிவாகச் செப்பனிட்டுக் கொள்ள முடியும். கவிநயம் என்பதையும் தாண்டி, பொதுவாழ்க்கைக்கும் தனிவாழ்க்கைக்கும் கம்பன் உதவ முடியும் என்பதே கம்பன் காவிய சாரம்.

–த.இராமலிங்கம், கம்பன் என்னும் மாநதியில், 1990

ஆத்மாதான் இராமர், ஆனந்தம் தான் சீதை, ஆனந்தமான சீதையைத் தேடிக் கொண்டு ஆத்மா இராமர் போனார். மெய்யுணர்வே ஆனந்தத்தைக் கண்டுபிடிக்கிறது. மெய்யுணர்வு – ஆஞ்சநேயர். சரீரமாகிய இலங்கையிலே இராஜஸகுணமான இராவணன், தாமஸகுணமான கும்பகர்ணன் எனும் இரண்டு குணங்களை அழித்து, சத்துவ குணமான விபீஷணருக்கு முடிசூட்டி ஆனந்தமாகிய சீதையைச் சிறைமீட்டு அயோத்தி (சூட்சம சரீரம்) வந்த ஆத்ம ராமர் என்றைக்கும் ஆட்சி புரிகிறார்.

–கிருபானந்த வாரியார், கம்பர் கவிநயம்.

கம்பர் தமிழ்ச் சான்றோர் உரையின்படிதான் இராமாயணம் பாடியுள்ளார். கம்பர் பாடியது வான்மீகருக்கு எதிர் நூலாகும்.

–கு.திருமேனி, கம்பருக்குக் கதை கொடுத்தவர் வான்மீகரா? 1966.

இவரின் அரசியல் கருத்துகள் வருங்காலப் புரட்சிகளுக்கு வித்து. பல இனம், நிலம், கலைகள் கொண்ட தேசியக்காப்பியமான கம்பன் காவியத்திற்குச் சிற்பங்கள், ஓவியங்கள், நாட்டிய நாடகங்கள், நாடகம், ஓரங்க நாடகம், தனியொருவர் நடிப்பு, மௌன நாடகம், கதகளி, இசையரங்கம் ஆகியவை அப்படியே மாற்றாமலே சேக்ஸ்பியர் நாடகங்களுக்கு

உள்ளது போல் நடத்த வேண்டும்.

–நா.மகாலிங்கம், கம்பன் புகழ், 1964.

கம்பனின் ஒப்பற்ற கலைத்திறனக்குச் சான்றாகத் திகழும் கம்பராமாயணத்தை இது வெளிப்படையாகத் தெரியும்படி 'கம்பாயணம்' என்றலும் தகும்.

–சு.குலசேகரன், தமிழின் பொற்காலத்தில் இராமானுஜரும் கம்பரும்.

இவ்வகையான பதிப்போடு. கம்பனைப் பற்றிய ஆராய்ச்சி முடிந்துவிட்டது என்று கருதுதல் தவறு. எத்தனையோ வகைகளில் நாம் ஆராய்ச்சி செய்ய இடமுண்டு. ஒருசிலவற்றை இங்கே குறிப்பிடுகிறேன்.

கம்பன் பயன்படுத்திய மூல நூல்கள்
கம்பன் கண்ட தமிழுலகம்
கம்பன் கண்ட தமிழ்மொழி
கம்பனது சிற்பத்திறம்
கம்பனது பாத்திர அமைப்பு
ஒப்பு நோக்கு ஆராய்ச்சி
மேற்கோளோடு கூடிய நூற்பொருள் அகராதி
சொல்–தொடர் முதலியவற்றின் அகராதி
கம்பன் அகராதி
கம்பனைக் கற்க உதவும் துணை நூல்கள்
இதிகாசங்களின் இயல்புகள்

இவைபற்றித் தனித்தனி ஆராய்ச்சி நூல்கள் இயற்றப்படுதல் வேண்டும்.

–எஸ்.வையாபுரிப்பிள்ளை, கம்பன் காவியம், 1955.

கம்பன் கவிஞருள் விஞ்ஞான மனப்பான்மை படைத்தவன் என்பது பாரதி கருத்து. கம்பன் யார் என்ற வினாவுக்குக் கவிஞன் என்று விடையளிப்பதே முறையாகும். கம்பன் பாடல்களுக்கு உயிர் பொருளன்று, இசைதான். பொருளை முழுவதும் தெரிந்து கொள்ளாமலே கம்பன் பாட்டுக்களை அனுபவிக்க முடியும்; ரஸிகத் தன்மைதான் வேண்டும்.

இத்தகைய சந்தர்ப்பத்திலே ஷேக்ஸ்பியர், கம்பன் போன்ற உலக மகா கவிகளுக்குச் சொற்களே, மந்திரசக்தி பெற்று வந்து பணி செய்கின்றன. ஆங்கிலத்தைத் தான் ஷேக்ஸ்பியரும் கையாண்டார் மற்ற ஆங்கிலக் கவிகளைப் போல. எனினும் ஷேக்ஸ்பியரின் ஆங்கிலம் அவருக்கே உரியது என்று சொல்லும்படி ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. அப்படியேதான் கம்பன் தமிழும். மகாகவி ஷேக்ஸ்பியரும் மகாகவி கம்பனும் அணிகள் அணி அணியாக வந்து சேவகம் செய்யும் வரப்பிரசாதம் பெற்றவர்கள்.

ஷேக்ஸ்பியரின் அணிகளைப் போல் கம்பனுடைய அணிகளும் அணியிலக்கணத்திலிருந்து இரவல் வாங்கினவை அல்ல. அகண்ட அனுபவத்தின் பரப்பிலே முளைத்தெழுந்த உபமான வகைகள் ஷேக்ஸ்பியருக்கு உரியன என்று விமர்சகர்களும் ரசிகர்களும் கூறுவர். அத்தகைய உபமானங்களையும் அணிகளையும் கொண்டுதான் கம்பன் கவிதையும் காட்சிகளை அப்படி அப்படியே நம் கண்முன் நிறுத்திவிடுகிறது.

சீதையின் தனிமையுரை ஹாம்லெட் தனிமையுரைபோல் இலக்கிய உலகப் பிரசித்தி பெறவில்லையே என்றால் கம்பன் தமிழனாய்ப் பிறந்து தமிழிலே பாடிய குறைதான் காரணம்.

கம்பனுடைய இராமகாதையில் வால்மீகியின் ராமகாதையைக் காட்டிலும் அவதாரத் தத்துவம் முக்கியமானது. இந்த அவதாரத் தத்துவத்திலிருந்து ஒரு சமரச சன்மார்க்கப் பெருநெறியையும் தோற்றுவிக்கிறான் கம்பன்".

--- ?

போரை வர்ணிப்பதில் ஹோமரேதான் சிறந்தகவி என்ற மேனாட்டு ஆசிரியரின் கூற்றுகளைக் கண்டும், ஹோமரின் உத்கிருஷ்டமான யுத்த வர்ணனைகளைப் படித்துப் பார்த்தும் நாம் மயங்கிப்போய் ஹோமரின் போர்ச் சித்திரங்களைவிட உயர்ந்த சித்திரங்கள் கிடையா என மதித்திருந்தோம். ஆனால் கம்பராமாயணத்தின் யுத்த காண்டத்தைப் படித்துப் பார்த்ததும், கம்பன் போர் வர்ணனையில் ஹோமருக்குத் தாழ்ந்தவனில்லை என்றும் சில இடங்களிலும் சில விஷயங்களிலும் ஹோமரது போர் வர்ணனையை வென்றிருக்கிறானென்றும் கண்டு கொண்டோம்.

ஹோமரில் ஓர் குற்றம் இங்கு எடுத்துக்காட்டற்பாலது. அந்தந்த நாயகனைப் போர் முனையில் கொண்டு வரும் போது ஹோமர் அதுவரையில் அவன் சும்மா இருந்தான் என்ற பொருள்படும்படி கதை புனைந்திருக்கிறான்.... ஆனால் கம்பனில் இத்தகைய குற்றம் கிடையாது. போர் நடக்குமிடத்தில் கவிகண்கூடாய் நின்று பார்த்தால் எவ்வாறு வர்ணிப்பானோ அவ்வாறே அவனது வர்ணனைகள் அமைந்திருக்கின்றன. அவன் முதலில் நாற்பெரும் படைகளும் தத்தமக்குள் போர் செய்தன என்று வர்ணனையைத் துவக்கிக் கொள்கிறான். அவ்வர்ணனை போதிய அளவு சென்ற பிறகு தனித்தனி வீரர்கள் யுத்தரங்கத்தில் காட்டிய பராக்கிரமங்களை வர்ணிக்க எடுத்துக் கொள்கிறான். அதுவரையில் அவர்கள் சும்மா இருந்தார்கள் என்ற எண்ணம் படிப்போருக்கு வராதபடி கம்பன் சாமர்த்தியமாய்ப் பார்த்துக் கொள்கிறான். இகல் குறித்த நாயகர் இருவர் போர் செய்து ஒருவர் தோற்றுப் பின்னடைந்ததும் கம்பன் உடனே வேறு நாயகரைப் போர்க்களத்தில் புகுவிக்கிறதில்லை; மறுபடியும் ஓர் பொதுப் போரை விஸ்தாரமாக வர்ணித்த

பிறகு தான் அவன் இரண்டாவது இணையைக் கொண்டு வந்து விடுகிறான். இவ்வாறு அநேகமாய் ஒவ்வொரு போரும் அவியக்தத்தினின்று பரிணமித்து வியக்த தசையையடைந்ததும், அந்த வியக்தம் பரிணமித்து ஆரோகணக் கிரமம் அனைத்தையும் பெற்ற பிறகு படிப்படியாயோ ஒரே அடியாயோ இறங்கி அவியக்தத் தன்மையை மறுபடியும் பெற்றும், பிண்டாண்டங்களின் வளர்ச்சிகளை அனுசரிக்கிறது. வேறு எந்தக் கவியும் இந்த உயர்ந்த வழியைக் கம்பனுக்கும் முன் கையாண்டதில்லை என்று நிச்சந்தேகமாய்ச் சொல்லலாம்.

–வ.வே.சு.ஐயர், கம்பராமாயண ரசனை, 2000.

கம்பராமாயணம் தமிழ் இலக்கியத்திற்கு ஒரு பெரும் பேறு. தமிழ் நாகரிகம், பண்பாடு, பக்தி இவைகளைச் சித்திரிக்கும் வீரசரிதம். கம்பன் தன் கவிச் சிறப்புத் திறனால் அதீத சௌந்தர்ய உணர்ச்சியால், மனோபாவ உயர்வினால், சப்த சித்திரங்களால் ஒப்புயர்வற்ற ஒரு காவியத்தைப் படைத்திருக்கிறான்.

– பி.ஸ்ரீ.

கம்பனது இத்தகு ஆளுமையின் அடிப்படை, அவன் தேடிக் கொண்ட அறிவுவளம் எனலாம். வடமொழியின் வேதஇலக்கியம், புராண இதிஹாசங்கள், தரிசனங்கள், தர்மசாஸ்திரங்கள், காவியங்கள் மற்றும் தமிழின் சங்க இலக்கியம், அறநூல் பரப்பு, பக்திஇலக்கியப் பரப்பு, தொடர்நிலைச் செய்யுட்பரப்பு ஆகிய அனைத்தையும் கற்றுச் சுவைத்துச் சிந்தனைத் தெளிவு எய்தப்பெற்ற ஒரு அறிஞனையும் ஒரு மனிதநேய வாதியையும் ஒரு பக்தனையும் கம்பனிடத்தில் தரிசிக்க முடிகின்றது. உலகப் பொதுமறை எனப்படும் குறளைத் தந்த வள்ளுவனுக்கு எத்தகு ஞானப் பின்புலம் மனித நேயம் என்பன அமைந்திருந்தன என்பது கம்பகாவியத்தைச் சுவைப்போருக்குத் தெற்றெனப் புலப்படும். மணிவாசகருக்கும் குலசேகராழ்வாருக்கும் நம்மாழ்வாருக்கும் எத்தகு பக்திப்பக்குவம் அமைந்திருந்ததோ அதே அளவு பக்திப்பக்குவம் கம்பனிடத்திலும் அமைந்திருந்தது. உணர்வுகளை வடித்தெடுப்பதில் மணிவாசகர் எந்த அளவுக்குத் தமிழ்ச் சொற்களின் பயன்பாட்டெல்லையை விரிவுபடுத்தினாரோ அந்த அளவுக்குக் கம்பனும் தமிழ்ச் சொற்களின் பயன்பாட்டெல்லையை விரிவுபடுத்திச் செல்கிறான். இது புகழுரையன்று; திறனாய்வு நோக்கின் தெளிவு. 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்ற பண்டைவாக்கு, கம்பனை உரியவாறு பயின்றோரின் விமர்சனவாக்கு என்பது துணிவு.

–நா.சுப்பிரமணியன் (இலங்கை), மகாகவி கம்பனின் தத்துவமும் தனித்துவமும், JOTS, 1999.

கம்பர், ராமாயணத்தைப் பாடியபோது தமிழ்நாட்டை விட்டுப் போய்விடவில்லை. அவர் வகுத்திருக்கிற பாத்திரங்களும் தமிழ் நாட்டு மக்களே. தசரதனும் அவனது சத்தியமும் தமிழ் நாட்டில் கண்டவை; சீதையும், கணவனை விட நெருங்கிய கேளிர் பிறர் இல்லை' யென்ற அவளது மனைமாட்சியும் – இலக்குவனும் பரதனும் சத்துருக்கனும் அவர்களது சகோதர வாஞ்சையும் இங்கு இருந்தவையே. இராவணனும் அரக்கர்களும் இதர தேசங்களிலெல்லாம் இருந்தது போலத் தமிழ்நாட்டிலும் இருந்தார்கள். கல்லுகளுக்கிடையே மல்லிகை பூத்த மாதிரி விபீஷணர்களும் தமிழ் நாட்டில் உண்டு. கோசலை, சுமத்திரைகளோடு, கைகேசி, கூனி, சூர்ப்பணகைகளும் சர்வவியாபிகள்தான். இத்தனை வகைப்பட்ட மக்களையும் அவர்கள் இயல்புகளையும் கம்பர் எடுத்துக் காட்டும் போது, எல்லாம் நமக்குத் தெரிந்தவைகளாகத்தான் இருக்கின்றன. மக்களின் மனப்பாங்கு சென்ற ஆயிர வருஷத்தில் மாறுபாடு அடைந்ததாக இல்லை. மக்கட்பண்பு, ஏதோ மாறுபடாத நித்திய வஸ்து போலவே தோன்றுகிறது.

–டி.கே.சி, கம்பர் யார்?, 1941.

உண்மையில் கம்பனுடைய ராமாயணம், வள்ளுவனின் குறள், இளங்கோவுடைய சிலப்பதிகாரம் ஆகியவற்றைப் படிக்கும் ஒருவர், கம்பனுடைய காப்பியத்திற் காணப்பெறும் பல்வேறு சிறப்புக் குவியலினாலேயே அதிசயத்தில் மூழ்கிக் கம்பனுடைய ஒப்பற்ற திறமைக்கு ஆளாகிவிடுவர் என்பதில் சந்தேகமில்லை. கம்பனுடைய எல்லையற்ற ஆற்றலும் வரையறுக்க முடியாத அறிவுத்திறனும் எண்ணற்ற உணர்ச்சி வேறுபாடுகளைத் துல்லியமாக வெளியிடும் அற்புதமான இயல்பும் இத்தகைய மாபெரும் சாதனையை ஒரு மனிதன் செய்திருக்க முடியுமா என்ற கேள்விக் குறியைத்தான் எழுப்பும். இதற்குப் பாரதியும் விதிவிலக்கல்ல. ஆகையால் தான் 'கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்' என்று அவர் பாடுகிறார்.

–மு.மு.இஸ்மாயீல், கவிச்சக்கரவர்த்தியும் கவியரசரும், 1982.

கம்பர் படைத்த ராமாயணக் கதையானது சைவ–வைணவ சமயங்களைப் பின்பற்றும் தமிழர் எல்லோரிடத்தும் செல்வாக்குப் பெறுவது சாத்தியமானது. அந்த வகையில் ஆதிசங்கரருடைய சன்மத ஒருமைப்பாட்டு முயற்சிக்கு முதன்முதல் வெற்றி கிடைத்தது கம்பராமாயணத்தின் வாயிலாகத்தான் – அவரை மக்கள் கவி என்று சொல்வதற்கும் நியாயமுண்டு – வடக்கிலுள்ள அயோத்தியில் பிறந்த ராமனுடைய காதையைத் தென்கோடியிலுள்ள தமிழகத்தில் சாமான்ய மக்களிடையேயும் பரப்பி, தேசிய ஒருமைப்பாட்டுக்கு அதிக அளவில் தொண்டுசெய்ய கம்பரால் முடிந்திருக்கிறது.

–ம.பொ.சிவஞானம், கம்பனில் தேசியம், 1993.

பாலகாண்டம் தொடங்கி ஒவ்வொரு காண்டமாகப் பார்க்கும் பொழுது காப்பியம் என்பதை விட்டுவிட்டுக் கவிதை என்ற முறையில் பார்த்தால் கூடக் கவிதைச் சிறப்பு பால காண்டத்தில் மாணிவடிவம் பெற்ற அனுமன் போல் தொடங்கி அந்த அனுமன் வால் வளர்ந்து நிற்பது போல் இந்தக் கவிஞனின் கவிதைச் சிறப்பும் ஒவ்வொரு காண்டத்திலும்பெருவளர்ச்சி பெற்று யுத்தகாண்டத்தில் கவிதை உலகில் – பிற மொழிக் கவிதைகள் கூட – உவமை சொல்ல முடியாதபடி இணையற்ற ஒரு முறையில் சிறந்து நிற்கக் காணலாம். இக்கவிஞன் பயன்படுத்தாத விருத்தப்பா முறையே இல்லை என்பதை அறியலாம். கலிவிருத்தங்களில் 40 வகையை உண்டாக்கிய பெருமை கம்பனுக்கே உண்டு. நதியில் படகு செல்வது, கருடன் பறந்து வருவது போன்ற நிகழ்ச்சிகளைக் கூடக் கவிதையின் ஓசைச் சிறப்பால் நம்முடைய மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் ஆற்றல் இக்கவிஞன்பால் உண்டு. இறைத்தத்துவம், இறைஇயல்பு என்பவற்றை வெளிப்படையாகக் கூறாவிடினும் சொற்களை அமைக்கும் முறையில் இக்கருத்துகள் உள்ளடங்கி இருக்குமாறு பாடும் ஆற்றல் கம்பனுக்கு உரியதாகும்.

–அ.ச.ஞானசம்பந்தன், கம்பன் எடுத்த முத்துக்கள், 1996.

இராமாயணத்தில் பலவகையான நிலப்பகுதிகளும் அங்கு வாழும் மனிதர் குழாங்களும் பேசப்படுகின்றன. ஆங்காங்கே வாழும் மனிதர்களின் கூற்றில் அந்தந்த இடத்தின் தனியான மணம் வீசும். அங்குவாழும் பறவை, விலங்கு, வளரும் மரம், செடி, கொடி, மலரும் பூக்கள் இவற்றின் குறிப்புகள் விரவி வரும். அந்தந்த வட்டார வழக்கும் கூற்றிலே வெளிப்படும். ஆங்காங்கு வெவ்வேறு சூழ்நிலைகளில், வெவ்வேறு தொழில் புரிந்து வாழும் மக்கள் பயன்படுத்தும் பழமொழிகள், உவமைகள், தனிப்பட்ட சொற்சிறப்புகள் இவை இயற்கையாகக் கூற்றில் வெளிப்படுவன. இவற்றால் அந்தந்தக் காப்பியப் பகுதியில் அந்த இடவகையின் தன்மை அழகுற வெளிப்படுகிறது. சூழல், பகைப்புலன் என்றெல்லாம் கூறப்படும் சிறப்பு எய்துகிறது.

–அ.வெ.சுப்பிரமணியன், கம்பன் காப்பியம் – கதை மாந்தர் கூற்று, 1995.

சூர்ப்பணகையின் காதல் கைக்கிளையில் தொடக்கம் பெற்றது. பின்பு அது பெருந்திணையாக மாற்றம் பெற்றுள்ளது. இங்ஙனம் கம்பரின் புனைவு பொருந்தாக் காதலிலும் தமிழ் நூல் மரபை ஒட்டியே புனையப்படுகிறது. சிறுபொழுது வருணனையில் காணப்படும் தற்குறிப்பேற்றம் கதைப்போக்கிற்கு அடிக்கடி மெருகூட்டுகிறது. உழிஞைப் போர் நொச்சியாகவும் பிரிக்கப்பட்டுள்ளதாலும், தொல்காப்பியத்தில் இடம் பெறாத பலதுறைச் செய்திகள் இடம் பெற்றுள்ளதாலும் பிற்கால இலக்கண வளர்ச்சியை மனத்தில் கொண்டே கம்பர் பாடியுள்ளார் எனத் தெரிகிறது.

– மா.சுசீலா, கம்பராமாயணத்தில் சங்க இலக்கிய மரபுகள், 1993.

உலக அமைதிச் சிந்தனைக்கு இராமாயணத்தில் வரும் இளைஞர்கள் காட்டும் வழிகள் யாவை என்று நினைத்துப் பார்க்கும் பொழுது இராமன், ஒருவனுடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணம் அவனது விதி என்று எண்ணினால் பகையொடுங்கும்; புகழ் ஓங்கும் என்கிறான். அவனுடைய தம்பியர்கள் முனைப்பு இன்றித் தொண்டுள்ளம் கொண்டால் பதவிப் போட்டியைத் தவிர்த்துப் பாசம் வளர்க்கலாம் என்கிறார்கள். இராமனது வாழ்க்கை, நாம் சந்திக்கும் மனிதர்களைத் தோழர்களாகக் கொண்டு, அன்பால் அவர்களை உடன்பிறந்தவர்களாக ஆக்கிக் கொண்டால் உலகம் அமைதியில் திளைக்கும் என்பதனைக் காட்டுகிறது.

–தெ.ஞானசுந்தரம், கம்பனில் உலக அமைதிச் சிந்தனை, 1988.

'அவதார புருஷனைப் பொருளாகக் கொண்டு நடைபெறும் கம்பன் காவியத்தில் பக்திக்கும் – காவிய நாயகன் மீது கவிநாயகன் கொண்ட பக்திக்கும் குறைவில்லை. ஆதலால் அது உடல் மிசைக் கரந்து ஒளிரும் உயிரையும் (ஆன்மாவையும்) அந்த உயிருக்கு இடமான உள்ளத்தையும் பதப்படுத்துகிறது.

– ந.சுப்புரெட்டியார், பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம் 1996.

கம்பராமாயணம் பாமரர்களைப் பண்டிதர்களாக்கிய காப்பியம்.

–ம.பொ.சிவஞானம், கம்பர் கவியின்பம், 1969.

மொழி வளர்ச்சிக்குக் கம்பர் பல துறையில் வழிகாட்டி.

–வ.சுப.மாணிக்கம், கம்பர், 1972.

கவிமாமன்னன் கம்பன் இயற்றிய இராமாவதாரக் காவியக்களன், பேரண்டத்தையே (Macrocosm) தன்னுள் அடக்கிய நுண்ணமைப்பாகி (Microcosm), மக்கள் வாழ்வின் சகக் கலை பண்பாட்டுப் பரிமாணங்களின் பதிவைத் தாங்கிய நிரந்தரக் களஞ்சியமாக அமைகின்றது.

– அன்னிதாமசு, தமிழர் கொடிகள், 2000.

கம்பராமாயணம் நாடுநகர், அரசு,அமைச்சு, போர், ஒழுக்கம், உலகநெறி முதலியவற்றைப் பேசுமாற்றால் இலக்கண நூலுமாகும்.

–இரத்தினா நவரத்தினம், திருவள்ளுவரும் கம்பரும் கருதும் நன்மக்களின் வாழ்க்கை வழித்துறை, 1968.

இராமாயணத்தைக் கவிச்சுவையின் களஞ்சியமாகவும் வாழ்வில் தெளிவூட்டும் அறநெறிச் சாரமாகவுமே காண்பது நம்மளவில் நன்று.

—சரோஜினி தேவி, அறம் வளர்த்த கண்ணாளன்,

இன்றைய தலைமுறையினரான நமக்கு நேற்றைய தலைமுறையினனான கம்பன் நாளைய தலைமுறை அறிவோடு பேசுவதினாலேயே அவன் கடந்த காலத்தவன் அல்லன்; காலங்கடந்தவன் ஆவான். கம்பன் அறிவுடையவன் மட்டுமல்லன்; எல்லாம் உடையவன் மட்டும் அல்லன்; எல்லா அறிவுடையாரிலும் எல்லாம் உடையவன்.

—பழ. பழனியப்பன், கம்பன் விழாமலர். 1976

கம்பனை வேண்டாம் என்றால் இன்றைக்கு 800 ஆண்டுகட்கு முன் வாழ்ந்த சிறந்த வாழ்க்கைச் சுவட்டை அழிக்க முற்படுகிறோம் என்றுதான் பொருள்.

—குன்றக்குடி அடிகளார்; கம்பன் வேண்டாமா? 1966.

கம்பனில் சங்கத்தமிழ் சந்தத்தமிழாக மாற்றமுற்றது. விரிந்த பாடல் விருத்தப் பாடலுக்கு இடம் விட்டது. தமிழின் அளவில் பெரிய காப்பியம் உருவாயிற்று. அழகும் நளினமும் மிக்க சொற்கூட்டுகள் பல எழுந்தன. பொருளாழமிக்க தொடர்கள் பல தோன்றி வியப்பூட்டின. இராமாயணக்கதை பரப்புப் பெற்றது. பல இராமாயண வகைகள் பல யாப்பு வடிவங்களில் உருவாக வாய்ப்பேற்பட்டது. இசுலாமியரும் கிறித்தவரும் கம்பன் வடிவைக் கையாண்டு தத்தம் சமயக் காப்பியம் உருவாக்க இடமேற்பட்டது. கம்பனுக்குப் பின் அவன் தாக்கமும் தோய்வும் பாதிப்பும் இல்லாத இலக்கியமே இல்லை எனுமளவுக்கு அவன் உயிர் மூச்சு, காற்றாகப் பரந்தது. எதிர்நூல் எழுமளவிற்கு அவன் வன்மை வெளிப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் புரட்சிக்கவிதைகளும், புதுக்கவிதைகளும் அவன் நிழலிலே வளரும், ஒளிரும் விழுதுகளாயின.

—ச.வே.சுப்பிரமணியன், இளங்கோவும் கம்பனும், 1986.

A great national poet, a true son of the Goddess of Tamil, a well read scholar, and a great critic, Kamban will always remain a permanent force in Tamil Literature. A true benefactor, a man of simple habits and profound thoughts, a great moralist, a straight forward citizen loyal to his king and patron, he is ever the glory of the Tamil Country. the mention of his name cannot but stir feelings at once of admiration, and love in the minds of every Tamilian.

-C.P.Venkatarama Aiyar, Kamban and his art, 1913.

A String of cut gems with glittering facets sparkling at each turn.

-Rajaji.

In the Ramayana of Kanban the world posses an epic which can challenge comparison not merely with the Iliad and the Aenecid, the Paradise lost and the Mahabharata, but with its original itself, namely the Ramayana of Valmiki.

- V.V.S. Aiyar.

Given the characters and the situations already in the Adikavya what is it that Kamban's unique? I would say two things: first his sense of drama and secondly his extraordinary command of the Tamil language, and the beauty and dexterity of his use of it.

-P.S.Sundaram, Kambaramayanam - Balakandam, 1989.

Nothing can equal the sweetness of this real poet.

-Pope (பிரான்சிஸ் முராயிஸ்–காப்பியக் கவிஞன் கம்பன், ப.76)

The Poet combines the idealism of Puranic stories with the realism of the present day.

-A.C.Paul Nadar, Kamban's Modernism, 1956.

Kamban can be read in any age in ones life.

-S.Nallaperumal, Kambaramayanam - A literary Appreciation, 1969.

It was only after the birth of the great epic poem, that Tamil could justly lay claim to a place of rank with the classical languages in literary wealth.

-A.V.Subramaniya Aiyar.

Finally Kampan's genius may be ascribed to his deep moral conviction and idealism, to his capacity to express them with his tremendous literary skill and to his success in conveying them to ordinary folks... The moral is that man can win over all his obstacles if he leads a virtuous life. This advice would been excellent remedy to most of our social problems today. No wonder that Kampan is a claimed as the king of literary kings.

- C.R.Krishnamurti, 1998.

Kamban can never become out of date, because he speaks to us and to the whole world with the voice of Tomorrow.

- S.Maharajan, Kamban, 1972.

தொகுப்புரை

தமிழகத்தில் கம்பன் பெருமை நன்கு உணரப்பட்டு, உணர்த்தப்பட்டு வருகிறது. என்றாலும், காலந்தோறும் அதன் ஆய்வாளரும் ஆய்வு வெளியீடுகளின் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டிருந்தாலும் அவை போதுமானவை அல்ல. ஆய்வுப் பெருக்கில் அகலம் இருப்பினும் ஆழம் தேவை. மிக அண்மைக்காலத்தில் இவற்றில் தொய்வும் தென்படுகிறது. உலகப் பெருங்கவிகளாகப் போற்றப்படும் சேக்ஸ்பியர், மில்ட்டன் போன்றோருக்கு இணையான அளவிலும் அதற்கு மேலும் ஆய்வுகள் எழ வேண்டும்.

"கம்பராமாயணத்தின் பரப்பு பலரை மருட்டுகின்றது. நூலை அணுகுவதற்கு முன்பே தயக்கம் ஏற்படுகின்றது. கம்பரோடு ஒட்டி உறவாடத் தொடங்கினவுடன் இத்தயக்கம் பொருத்தமற்றது என்பதை உணரலாம். கம்பரைக் கற்பதற்கு நாம் கம்பரையே பற்றுதல் வேண்டும். அந்நிலையில் அக்காப்பியத்தின் ஆழமும் அருமையும் புலப்படும்... இனி, இன்றைய நிலையிலும் கம்பர் பெருஞ்சிறப்புப் பெற்றிலரே எனின் அதற்கும் சில காரணங்கள் தோன்றுகின்றன. முதலாவதாக இராமாயணத்தைப் பத்தி நூலாக, இராமனைத் தெய்வமாகக் காணும் போக்குள்ளவரை குறைநிறைகளைக் காணும் முயற்சியில் வெற்றிபெற இயலாது. கம்பராமாயணக் காப்பியம், இலக்கிய நோக்கிற்குப் புறம்பான ஆரிய-திராவிட இனப்பூசல்களில் சிக்குண்டு தன் பெருமை குன்றி நிற்கிறது. இளைஞர்களில் பலர் கம்பனைக் கற்பதற்கு இப்பூசல்கள் பெருந்தடையாக இருக்கின்றன என்பதில் ஐயமில்லை" என்ற அ.பாண்டுரங்கனின் கூற்று (காப்பிய நோக்கில் கம்பராமாயணம், 1989) கருதத்தக்கது.

எனினும், 'கம்பராமாயணத்தால் தமிழ்மொழி பன்மடங்கு உயர்வும் பெருமையும் மேன்மையும் செழுமையும் அடைந்திருக்கிறது' எனும் கோ.சுப்பிரமணியபிள்ளையின் கூற்றை (கவி இன்பம், ப.64) எழுந்துள்ள ஆய்வுகளில் பல உறுதிப்படுத்தியிருப்பதும் நவிலத்தக்கது.

நிறைவாகக் கூறுமிடத்துக் கம்பன் ஆய்வுகள் அவனை எதிர்ப்பாரையும் தம்பக்கம் ஈர்க்கும் வண்ணம் சிறப்புற்று, அதனையும் தம் ஆய்வின் நோக்கில் ஒன்றாகக் கொண்டு செயல்படல் வேண்டும். அதுவே உண்மையில் கம்பனுக்குச் செய்யும் பெருந்தொண்டாகும். இதன்பின் அவன் உலக அரங்கில் வெற்றிவலம்வரல் மிக எளிதாகும்.

இலக்கிய உலகில்

தமிழும் இராமாயணமும் இணைபிரியாத உறவு கொண்டுள்ளதை இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் உறுதிப்படுத்தியுள்ளது. காலத்திற்கு ஏற்பவும் சூழலுக்கு ஏற்பவும் பலவித மாற்றங்களுடன் அவ்வப்போது புதுவடிவம் பெற்றுக் கொண்டிருக்கிறது. உவமை, உருவகம், குறியீடு என இலக்கிய வெளியீட்டு உத்திகளிலும் மிகுதியாகப் பயன்படுத்துவதையும் காணலாம். தமிழகத்தில் இராமாயணம் பெற்றுள்ள இச்செல்வாக்கிற்குக் கம்பராமாயணமே மூலகாரணம் என்பதில் ஐயமில்லை. எனவே தமிழிலக்கியப் பரப்பில் இராமாயணம் கொண்டுள்ள தாக்கத்தை அளவிடுவது கம்பன் பெற்றுள்ள தாக்கத்தைப் புலப்படுத்துவதாகும். இக்கருதுகோளின் அடிப்படையில் இங்குத் தமிழில் இன்று பல்கிப் படர்ந்துள்ள புதுக்கவிதை மற்றும் உரைநடையிலக்கியம் கொண்டு இருபதின் இலக்கிய உலகில் கம்பர் பெறுமிடம் இங்குக் கணித்துரைக்கப்படுகிறது. புதுக்கவிதைக்கு மு.மேத்தாவும் உரைநடைக்குப் புதுமைப்பித்தனும் களமாகின்றனர்.

இராமாயணமும் மேத்தாவும்

புதுக்கவிதைப் படைப்பாளர் வரிசையில் முன்னணியில் ஒருவராகப் புகழ்பெற்றுள்ளமை; தீப்பூத்த நந்தவனம், காத்திருந்த காற்று எனும் அவரின் இரு படைப்புகள் இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டமை மற்றும் தம் பிற படைப்புகளிலும் அதற்குச் சிறப்பளித்துள்ளமை எனும் காரணங்களால் மு.மேத்தாவின் படைப்புகள் இங்கு ஆய்வுக்களமாகின்றன. இருநூல்களும் நாடக வடிவில் புதுக்கவிதை படைத்திருப்பதுடன், சில புதுமைகளையும் இணைத்துள்ளன என்பதும் சுட்டத்தக்கது.

'தீப்பூத்த நந்தவனம்' இராமாயண நிகழ்ச்சியினை விமர்சிக்கும் போக்கிலமைந்த நாடகமாகும். இராமாயண நிகழ்ச்சியினைத் தம் போக்கில் தரும் படைப்பாகக் 'காத்திருந்த காற்று' அமைகிறது. இரண்டிலும் இராமாயணத்தை முன்னிலைப்படுத்தும் மற்றும் சில கவிதைகளும் உள. மு.மேத்தா, கம்பன் மீது தனிப்பற்றுடையவர் என்பதும் குறிக்கத்தக்கது.

'கம்பராமாயணம், சிலப்பதிகாரம் இவற்றின் கதைகள் இன்றைக்குப் பாமரர்களோடு பழகி வருபவையே. ஆனால் இவை பாமரமக்களின் படிப்பறிவிற்கு எட்டாத தொலைவில் இடம் பெயர்ந்திருக்கின்றன. இத்தகைய இலக்கியங்களைப் புதிய வடிவத்தில் இக்காலம் ஆக்கிக் கொடுக்கக்கூடும். புதுக்கவிதையின் சமகால உணர்வும் எளிய நடையும், பாமர மக்களின் இதயங்களில் எளிதாக்கப்படுகின்றன' என்று இவர் இலங்கை இதழான வீரகேசரிக்கு அளித்த பேட்டியும் (அங்கங்கே சில அம்புகள், ப.79) கூறத்தக்கது. இராமாயணம் பற்றிய இவரின் புதுக்கவிதைகளுக்கு இவ்வெண்ணம் அடித்தளமாகிறது எனலாம்.

எனவே, செம்மையிலக்கிய வடிவில் இடம் பெற்று கல்வித்தேர்ச்சியுடையார்க்கே பெரிதும் சுவையளிக்கும் கம்பராமாயணத்தைப் பாமரருக்கும் கொண்டு செல்ல வேண்டும்– இன்றைய இலக்கிய வடிவான புதுக்கவிதை வடிவில் என்பது இவண் இவரின் நோக்காக வெளிப்படக் காணலாம்.

தீப்பூத்த நந்தவனம், சூர்ப்பணகையின் மூக்கறுத்த செயலுக்காக, இராமனைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி நீதிவிசாரணை செய்து தீர்ப்பு வழங்குகிறது. இவ்விசாரணை, இராமாயணத்தின் இந்நிகழ்ச்சி பற்றிய விமரிசனம் என்று கூறத்தக்க வகையில் அமைந்துள்ளது. சீதையின் இரண்டாம் வனவாசத்தைப் பேசுவதாக, கல்லிலிருந்து மீண்டும் உயிர் பெற்ற அகலிகையின் நிலையைக் காட்டுவதாகக் 'காத்திருந்த காற்று' இராமாயணத்திற்கு ஒரு மீள் ஆக்கமாக அமைகிறது. இந்நாடகத்திற்குப் புதுமைப்பித்தனின் 'சாபவிமோசனம்' முன்னோடி என்பதிலும் அதில் அகலிகை சீதையின் வனவாசத்திற்காகக் காட்டும் வேகம் இதில் இல்லை என்பதிலும் ஐயம் இல்லை. இனி இவ்விரு நாடகங்களும், இவற்றுடன் இணைத்து வெளியிடப்பட்டுள்ள இராமாயணக் கவிதைகள் வழியும் வெளிப்படும் செய்திகளை வரிசைப்படுத்தலாம்.

1. பழைய இலக்கியங்கள் புத்துரு பெறும் பொழுது புதிய சிந்தனைகள், பார்வைகள் அமைகின்றன. இலக்குவன் சூர்ப்பணகையின் மார்பைச் சிதைப்பதைப் பிழையில்லை என ஏற்றுக்கொள்ளும் நடுவர் அதற்குரிய காரணமாக,

> ஆனால், / நாய் என்று
> குழந்தைகள் அவளைக் /கூப்பிட முடியுமா?
> அதனால் / மார்பை அறுத்தது
> மனம் வருந்தத்தக்கதுதான்
> இருந்தாலும் அதனை
> இளையவன் ஏன் செய்தான்?
> அவளுடைய/ பாலை எவரும்
> பருகக் கூடாதென்றா?/ அது
> 'நஞ்சு' என்பதனால் இந்த
> நடவடிக்கை எடுத்தானோ?
> உண்மைதான்; அது
> 'ஆவின்பால்' அல்ல
> அரக்கர்குலம் தயாரித்த
> சாவின்பால் என்பதனைச்
> சாட்சிகளால் நாமறிந்தோம்' (ப.29)

என்பதனை இதற்குக் காட்டாக்கலாம். கைகேயி விடாப்பிடியாகப் பெற்ற வரங்களுக்கான காரணத்தைக் 'காத்திருந்த காற்றில்',

கைகேயி:

அந்த/ வால் நட்சத்திரம் மட்டும்
வராமல் இருந்திருந்தால்
வன்பழி மட்டுமல்ல/ வைதவ்யக் கோலமும்
எனக்கு/ வந்திருக்காது
மரணத்தின் விலாசத்தோடு/ அன்று – அந்த
மகுடம் காத்திருந்தது.
பரதனை இழந்தால்/ பரவாயில்லை...
மகனே உன்னை இழக்க/ மனம் துணியவில்லை
அதனால் தான்...

இராமன்:

தேவ ரகசியங்கள்
மனிதர்களுக்குத் தெரிவதில்லை...
அன்னையின் செயலெல்லாம்
என்னைக் காக்கவே/என்பதை/ அறிவேன் நான் (பக். 110–111)

என்று புதிதாகப் புகுத்தியிருப்பதும் நோக்கத்தக்கது. கைகேயியைக் குற்றமற்றவள் என அறிவிப்பதற்காக இப்புதுப்பாதை வகுத்து அவளின் செயலுக்கு அமைதி காட்டுகிறார்.

பொதுவாக முன்சுட்டியது போன்று இராமாயணக் கதைநிகழ்ச்சி அல்லது கதைமாந்தர் குறித்த விமர்சனங்களும், மறு ஆக்கங்களுமே புதுக்கவிதையுலகில் மிகுதியாகக் காணப்பட, கதை நாயகனின் கைவில்லிற்குத் தனிச்சிறப்பளித்துப் புதிய கோணத்தில் காட்டியிருப்பதும், சுவைக்கத் தக்கதாய் உள்ளது. 'வில்லின் கதை' எனும் அக்கவிதையில்,

ஏகபத்தினி விரதன்/ என்றே
இராமனை/ எல்லாரும் நினைக்கின்றீர்...
அவனுடைய/ முதல் மனைவி நான்தான்
....

அதனால் தான்–/ என்னை
விவாகரத்து செய்வதன்/ அடையாளமாக
வில்லொன்றை முறிக்க/ வேண்டினான்
....

என்றாலும்.......
இராமனது/ கால்பட்ட காரணத்தால்
செருப்புக்குக் கூட/ சிம்மாசனம் கிடைக்குமென்றால்
அவனுடைய/ தோள் சேர்ந்த என்னைத்
துரத்திவிட முடியுமா?

எனும் சில வரிகளைச் சான்றாக்கலாம்.

2. இராமாயணம் பற்றிய தற்காலக் கருத்துகள் முன் வைக்கப்படுகின்றன என்பதனை,

மிதிலையிலேயே
முறிந்திருந்த வில்லைத்தான்
முறித்தான் (நீப். பக்.7)

என்பது கொண்டு விளக்கலாம்.

3. இன்றைய சூழலுடன் இணைத்துப் பேசப்படுதலும் அறியத்தக்கதாம். இராமன் மீது திணிக்கப்பட்ட வழக்கினை விசாரிக்கும், நீதிபதியை, 'தராசும் பொய் சொல்லும் தர்மம் மிகு காலமப்பா!' என நையாண்டி செய்திருத்தல் இதனை உணர்த்தும்.

ஆண்டவனே ஆனாலும்/ அவதாரமானாலும்
இலக்கிய நாயகனாய்/ இருந்தாலும் அனைவரையும்
நீதியின் முன்னே/ நிறுத்தத்தான் வேண்டுமென்றும்
எடை போட்டுப் பார்த்துத்தான்
ஏற்றிட வேண்டுமென்றும்
எழுச்சி முரசொலிக்கும் புதுயுகத்தின்
சிந்தனையைப்/ போற்றுகின்றேன்.

சிம்மாசனத்தில் மட்டுமே
செருப்பிருக்க வேண்டும்
அதை எடுத்து
சரமாரியாக வீசுவதற்குத்
தடைவிதிக்க வேண்டும்" என்று
உயர்நீதி மன்றத்தில்
வால்மீகி போட்ட
வழக்கு
தக்க காரணங்களுடன்
தள்ளுபடி செய்யப்பட்டது...
சட்ட சபையின் நடவடிக்கைகளில்
தலையிட முடியாதாம்! (நீப். ப.34)

எனச் சமூகப் பின்புலப் பதிப்பு பரவலாகக் காணப்படுகிறது.

4. இராமாயண உவமை, குறியீடு போன்றவற்றின் வழியும் தாம் கூறவந்த கருத்தினை வலியுறுத்துதல் மிகுதியாக அமைகிறது. அரசியல் மற்றும் சமூகச் சீர்கேடுகளைப் புலப்படுத்துவதற்கு இவை பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியா என்கிற/ சீதை
அசோக வனத்தில்/ அமர்ந்து தவிக்கிறாள்
நாம்/ அனுப்பிவைத்த
அனுமார்களோ/ இலங்கைக்கல்ல

அவளுடைய/ இதயத்துக்கே
தீவைத்துக் கொண்டிருக்கிறார்கள் (கா.கா.ப.12)

இந்திர மயக்கங்களால்/ ஏமாற்றப்பட்டு
கௌதம வறுமைகளால்/ சபிக்கப்பட்ட
அப்பாவி அகலிகைகளை/ ஆட்கொள்வதற்காகப்
பொதுவுடைமை இராமபிரான்/ பூமியெங்கும் வலம் வரட்டும்
(தீப்.ப.3)

என்பனவற்றைச் சான்றாக்கலாம்.

5. இராமாயணம் பற்றிய தங்கள் கருத்துகளைப் பதிவு செய்வதற்குரிய களனாகவும் புதுக்கவிதை இலங்குவதை,

கம்பன் சொல்லாத ஒரு
கதை சொல்கிறேன்/ இராமனின் கைகளில்
முறிபட்டவுடன் அந்தவில்/ முனகியதாம்
'அடே இராவணா!– உன்
எலும்புகளுக்கு என்/ ஆழ்ந்த அனுதாபங்கள்'

என்பதினின்றும் பெறலாம். இது போன்றே கம்பராமாயணக் களனில் திருமணத்தின் பின் முகம் காட்டாத இலக்குவனின் மனைவி ஊர்மிளையைக் காட்சிப்படுத்தி, 'சீதா ராமரின் எண்ணங்களாம் புண்ணிய நதிகளில் இறங்கிடும் போது – தனியாக எங்களுக்கென்று தாகங்கள் ஏது' (கா.கா.ப.116) எனக் கூறவைத்திருப்பதையும் சுட்டலாம்.

6. இராமாயணம் என்றால் அதில் கம்பனுக்கென்று தனித்த இடமுண்டு; அவனை விலக்கி இராமாயணத்தைப் பார்த்தால் இயலாது என்பதும்,

வம்புக்கு இடமாய்
வார்த்தைகளை எழுதிவைத்த
கம்பனது கருத்தையும் நாம்
கவனத்தில் கொண்டால்தான்
முடிவுக்கு வரஇயலும் (தீப்.ப.25)

இராமன் ஆண்டாலென்ன
இராவணன் ஆண்டாலென்ன
பாராளுமன்றங்களின்
கேள்வி நேரம்
பசியின் படையெடுப்புக்கு
பதில் சொல்லவில்லையே/ என்று
கம்பனும்/ புதுக்கவிதை எழுதுகிறான் (தீப்.ப.32)

என்பன போன்ற பகுதிகளால் அறிய வருகின்றது.

7. அன்றைய, இன்றைய அரசியல், சமுதாயச் சூழல்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் இராமாயணம் துணையாகிறது என்பதைக் 'கம்பன் கண்ட இல்லறம்', 'இன்றைய இல்லறம்' எனும் கவிதைகள் உணர்த்துகின்றன. இவ்வொப்பீடு

உன்னையன்றி – ஒரு/ பெண்ணை
நெஞ்ச விரல்களையும்/ நீட்டித் தொடேன்
என்று/ அஞ்சன வண்ணன்
அறிவிப்புச் செய்தது/ கம்பன் நமக்குக்
காட்டும் இல்லறம்
வைர அட்டிகையும்/ வரதட்சணை பாக்கிகளும்
உன்னுடைய/ தந்தை வந்து/ உடனே
தராவிட்டால்
தோகையே/ உன்னைத் தொடமாட்டேன் என்று
இளைஞர்கள் சொல்வது/ இன்றைய இல்லறம் (கா.கா.ப.30)

என்பது போன்று வெளிப்படையாக, அல்லது

கனவில் வரும்/ ராஜகுமாரர்களாம்
இராமர்களோ/ தசரதத் தந்தைமார்களே
தந்தனுப்பிய/ வலிமை பொருந்திய
வரதட்சணை விற்களைத்/ தூக்கி வருகிறார்கள்
முறிப்பதற்கு அல்ல
இவளால்/ சுமக்கமுடியுமா
என்று/ சோதித்துப் போவதற்கு (தீப்.ப.51)

என்பது போன்று உள்பொதிந்து அமைந்திருக்கிறது.

8. இராமாயணக் கூறுகள் இன்றைய பெண்ணியச் சிந்தனைக்கு வெகுவாகப் பயன்கொள்வதும் குறிப்பிடத்தக்கது. முன் சுட்டியுள்ள சான்றுகளே இதற்கும் பொருந்தும்.

9. இராமாயணத்தை எள்ளல் சுவையுடன் பார்க்கும் பார்வையும் வெளிப்படுகிறது. 'இராமாயணம் நேற்று – இன்று– நாளை' எனும் கவிதையை இதற்குச் சான்றாக்கலாம்.

நிறைவாகக் கூறுமிடத்துப் புதுக்கவிதை வழி இராமாயணத்தைப் பரவலாக்க வேண்டும் என்ற மேத்தாவின் நோக்கு அவர் படைப்புகளில் நிறைவேறியுள்ளது. இராமாயணம் இன்றைய இலக்கியப் படைப்புகளிலும் தனித்த இடத்தினைப் பிடித்துள்ளது என்பதும் உறுதிப்படுகிறது. சூழலுக்கேற்ப, தேவைக்கேற்ப இராமாயணக் கதைமாந்தர் உருமாற்றம் பெறுவதால் இராமாயணம் பற்றிய மேம்போக்கான சிந்தனைகளைக் காண முடிகிறதேயன்றி ஆழமான, நிலையான கருத்துகளைப் பெறமுடியவில்லை.

புதுமைப்பித்தனும் இராமாயணமும்

சிறுகதைகள், கவிதைகள், ஓரங்க நாடகம், மொழிபெயர்ப்புகள், இலக்கியக் கட்டுரைகள், அரசியல் கட்டுரைகள் எனத் தம் குறுகிய கால வாழ்வில் (1906–1948) 15 ஆண்டுகள் எழுத்துப்பணியில் செலவிட்டுள்ளார். ஆங்கில இலக்கியம் பயின்றவராகவும், ஊழியன், தினமணி, தினசரி என இதழ்களில் பணியாற்றியவராகவும் அமைந்தது இதற்குக் காரணமாகிறது. தினமணியில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் அவர் தமிழ் இலக்கிய ஆண்டுமலர் கொணர்ந்ததும் குறிப்பிடத்தக்கது. புதுமைப்பித்தன் தமிழ் இலக்கியத்திலும் பரவலான பயிற்சி பெற்றிருந்ததை, 'நான் அவரைச் சந்தித்த காலத்தில் அவர் சித்தர் பாடல்கள் முக்கியமாகச் சிவவாக்கியார் மற்றும் கம்பராமாயணம்–முக்கியமாக யுத்தகாண்டம் மற்றும் கலிங்கத்துப் பரணி, திருமந்திரம் என்று பேசிக்கொண்டிருப்பார். என்னைச் சில சமயங்களில் யுத்தகாண்டத்திலுள்ள பாடல்களைப் படிக்கச் சொல்லுவார்' எனும் க.நா.சுவின் கூற்று (பு.பி.ப, ப.X 11)* உணர்த்தும். பழந்தமிழ்க் கதைகளுக்குப் புத்துருவம் அளிப்பது அவரது படைப்பு நோக்கங்களில் ஒன்றாக அமைவதை, அன்றிரவு (திருவிளையாடற் புராணம்), கட்டிலை விட்டிறங்காக்கதை, திருக்குறள் செய்த திருக்கூத்து, இலக்கிய மம்ம நாயனார் புராணம் போன்றன காட்டுகின்றன.

ஏனையவற்றைவிட, இராமாயணத்தின்பால் ஈர்ப்பு அதிகமிருந்ததை அவரது கட்டுரைகளும் அறிவிக்கின்றன. 'உணர்ச்சி வேகமும் நடைநயமும்' எனும் கட்டுரை சிறப்பான கவிதை அமைப்பிற்கு, நடைக்குக் கம்பன் கவிகளைச் சான்றாக்குவதும், பிறிதொரு இடத்தில் 'கம்பராமாயணம் ஒரு மோகனமான கனவு. இலட்சியத்தின் தரிசனம். அது ஒரு புதிய சமுதாயத்தை எழுப்பியது' எனப் பாராட்டியிருப்பதும் (பு.பி.க.ப.112),* 'ஒரு பாரதி ஒரு கம்பன் ஒரு தாகூர், ஒரு வால்ட் விட்மன் பிறக்காவிட்டால் வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்படாது' என மொழிந்திருப்பதும் (பு.பி.க., ப.95) நோக்கத்தக்கன. இங்ஙனம் இயன்ற விடமெங்கும் தம் கட்டுரைகளில் இராமாயணத்தைக் கையாண்டிருப்பதற்குக் கம்பனின் கவித்திறன் காரணமாகிறது. கம்பன் கவியழகில் மூழ்கித் திளைக்கும் அவரால் இராமகாதையை ஒரு தெய்வமாக்கதையாக ஏற்றுக்கொள்ள இயலாமையும் இங்குச் சுட்டற்பாலது. அவரது இராமாயணப் படைப்புகள் இதனைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. 'ராவணன் மண்ணோடு பெயர்த்துச் சீதையைத் தூக்கிக் கொண்டு போய், அசோக வனத்தில், சிறை வைத்தானாம்; அது நிஜமோ பொய்யோ எனக்குத் தெரியாது' எனும் அவர் கூற்றும் (பு.பி.க., ப.133) இதனை மெய்ப்பிக்கும்.

---

* பு.பி.ப. – புதுமைப்பித்தன் படைப்புகள் (சிறுகதைத் தொகுப்பு)
* பு.பி.க. – புதுமைப்பித்தன் கட்டுரைகள்

புதுமைப்பித்தனின் இராமாயணம் தொடர்பான படைப்புகள்

சிறுகதைகள், கவிதைகள் இராமாயணக் கதைக் கூறுகளைக் கருவாகக் கொண்டு எழுந்துள்ளன. அகல்யை, சாபவிமோசனம், நாரத ராமாயணம் எனும் கதைகளும், மாகாவியம், அசரீரி எனும் கவிதைகளும் இவற்றுள் அடங்குகின்றன. இவை இராமாயணத்தின் மறு ஆக்கம், உருவாக்கம், மதிப்பீடு எனும் மூவகையாக அமைகின்றன.

மறுஆக்கம் : இராமாயணக் கதையைத் தன்விருப்பிற்கேற்ப மாற்றியமைத்தல் மறு ஆக்கமாகிறது. 'அகல்யை' இவ்வகையின் பாற்படும். இக்கதையினுள் அகலிகையும் கௌதமரும் ஒருவர் மேல் ஒருவர் மாசற்ற உயிர்க் காதல் கொண்டவராகக் காட்டப்படுகின்றனர். அவள் அழகில் தன்னையிழந்து மிருகமாகிய (பு.பி.கூற்று) இந்திரன் பின் தவறுணர்ந்து வருந்துகிறான். உண்மையறியும் முனிவர் மிகுந்த மனமுதிர்ச்சியுடன், 'அப்பா இந்திரா! உலகத்துப் பெண்களைச் சற்று சகோதரிகளாக நினைக்கக் கூடாதா?... உணர்ச்சி தேவனையும் மிருகமாக்கி விடுகிறது. மனத்தூய்மையில்தான் கற்பு. சந்தர்ப்பத்தால் உடல் களங்கமானால் அபலை என்ன செய்ய முடியும்?... இந்திரா போய் வா' எனப் பெருந்தன்மையுடன் நடந்து கொள்கிறார்.

தம் சிறுகதைகளைப் பற்றிப் புதுமைப்பித்தன் கூறும் பொழுது, 'நான் கேட்டது, கண்டது, கனவு கண்டது, காண விரும்பியது, காண விரும்பாதது ஆகிய சம்பவக் கோவைகள் தாம் இவை. நான் கதை எழுதுகிறவன்... தவிரவும் பழைய கதைகளை எடுத்துக் கொண்டு, அதை இஷ்டமான கோணங்களில் எல்லாம் நின்று பார்க்க எங்களுக்கு உரிமை உண்டு' (பு.பி.ப., ப.LXXI - LXXII) என நவின்றிருப்பது 'அகல்யை' படைப்பின் நோக்கத்தினைப் புலப்படுத்துகிறது. அகலிகை, கௌதமன், இந்திரன் பற்றிய தமது கருத்தினைப் பதியவைத்தலாக இக்கதை அமைகிறது.

உருவாக்கம் : இராமாயணக் கதை மாந்தர்களைக்கொண்டு, இராமாயணத்துள் முற்றுவிக்கப்பட்ட நிகழ்ச்சிகளை மீண்டும் தொடரச் செய்வது இதன்பாற்படும். இம் மேனிகழ்வுகள் முற்றிலுமாக இவரது படைப்பாக, கற்பனையாக அமைதலின் 'உருவாக்க'மாகிறது. தன் எண்ணங்களை, கருத்துகளை வெளிப்படுத்தற்குரிய வாய்க்காலாக இராமாயணத்தைப் பயன்கொண்டமையை இவை காட்டுகின்றன. சாப விமோசனமும், நாரதராமாயணமும் இதனுள் கருதத்தக்கன.

'சாப விமோசனம்' கல்லாகி மீண்ட அகலிகையின் வாழ்க்கையைப் பேசுகிறது. "ராமாயண பரிசயமுள்ளவர்களுக்கு இந்தக்கதை பிடிபடாமல் (பிடிக்காமல் கூட) இருக்கலாம். அதை நான் பொருட்படுத்தவில்லை" என்ற முன்னுரையுடன் தொடங்கும் இக்கதை, சீதையைத் தீக்குளிக்கச்

செய்த இராமனின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க அகலிகை, மீண்டும் தன்னைத் தானே கல்லாகிக் கொள்வதுடன் நிறைவுறுகிறது.

“காஞ்சனைக்குப் பிறகு ‘சாபவிமோசனம்’ இதே மாதிரி அவதிக்கு உள்ளாயிற்று. முக்கால்வாசிப் பேருக்கு அந்தக்கதை பிடிக்கவில்லை. காரணம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி. விமரிசகர் ‘சென்று தேய்ந்து இறுதல்’ என்றார். ஆனால் இன்னும் ஒருவர் வால்மீகி கதையில் அகலிகை கல்லாகவில்லை என்றும் ஜனங்களுக்கு உண்மையை விட உண்மையின் மீதுள்ள பாசிதான் கண்களுக்குப் பளபளப்பாக இருக்கிறது என்றார். பாசி என்பதுதான் என்ன? மனப்பக்குவத்தின் ஒருநிலை தானே அதுவும்” எனும் புதுமைப்பித்தன் கூற்று (பு.பி.ப.பக்.3–4) இக்கதைக்கு அன்று அவர் பெற்ற எதிர்ப்பினை எடுத்துரைக்கிறது. தெய்வமாகக் கருதப்படும் இராமனின் செயலைக் கண்டித்திருப்பது இராமாயணப் பற்றாளர்க்கும், இராமபக்தியாளர்க்கும் வெறுப்பை விளைத்திருக்கலாம். “கதையிலே கல் உயிர்பெற்று மனிதத்தன்மை அடைந்துவிடும்... நீங்கள் கண்கூடாகக் காணும் உலகத்தில் மனிதன் கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருப்பதைப் பார்க்கவில்லையா? மனிதன் கல் மாதிரி இருக்கும் போது, கல்தான் சற்று மனிதன் மாதிரி இருந்து பார்க்கட்டுமே” என இதற்குப் பதிலுரைத்த (மேற்படி) புதுமைப்பித்தனின் இலக்கியக் கோட்பாடு இவண் எண்ணத்தக்கது.

“இலக்கியத்தின் உயிர்நாடி உணர்ச்சி, உணர்ச்சியில் எழாத தர்ம சாஸ்திரங்கள், வாழ்க்கையைக் கீழே இழுக்கும் பாறாங்கல்லுகள். இந்த உணர்ச்சியின் உண்மைதான் புதிய விழிப்பிற்குக் காரணம். உண்மையே இலக்கியத்தின் இரகசியம்” (பு.பி.க., ப.113) எனும் இக்கோட்பாடே ‘சாப விமோசனத்’தின் எழுச்சிக்கு அடிப்படையாகலாம். சீதையின் எரிபுகுதலை, இராமனின் பண்பிறக்கமாகக் காட்ட விழைந்த புதுமைப்பித்தன், அகலிகையின் சாப விமோசன வாழ்க்கையை அதற்குக் களனாக்குகிறார். “மறுபடியும் துன்பவலையா? சாப விமோசனத்துக்குப் பிறகு வாழ்வு எப்படி என்பதை மனசு அப்பொழுது நினைக்கவில்லை” (பு.பி.ப.,ப.187) என்பது இதனை உணர்த்தும். உடல் உயிர்ப்பிக்கப் பட்டிருப்பினும் உள்ளம் ஒடுங்கி நின்றதை, ‘அவர்கள் மனசில் பூர்ணமான கனிவு இருந்தது. ஆனால் இருவரும் இருவிதமான மனக்கோட்டைகளுக்குள் இருந்து தவித்தார்கள். கோதமனுக்குத் தான் ஏற்றவளா என்பதே அகலிகையின் கவலை, அகலிகைக்குத் தான் ஏற்றவனா என்பதே கோதமனின் கவலை” என்று காட்டுகிறார். அவளின் மனத்தடுமாற்றத்தினை மிக இயல்பாக எடுத்துக்காட்டும் புதுமைப்பித்தன் இக்கதையுள் அவர்கள் இருவரையும் காதலராகவின்றிக் கணவன் மனைவியராக மட்டுமே காட்டியிருப்பதும் சுட்டத்தக்கது. பசுவை வலம் வந்து அவளைக் கைப்பிடித்த கோதமன்

தற்பொழுது முழுக்க முழுக்க அவள் விருப்பப்படி நடப்பினும் மனப்போராட்டமே தொடர்வது கண்டு, 'மனச்சுமையை நீக்கிப் பழைய பந்தத்தை வருவிக்க குழந்தை ஒன்றை வரித்தால் என்ன? அதன் பசலை விரல்கள் அவள் மனசின் சுமையை இறக்கிவிடாவா?' என்று எண்ணுகிறான். ஆனால் எண்ணம் செயலாவதற்கு முன் அவள் மீண்டும் கல்லானாள். மாற்றான் செய்த தவற்றிற்காகத் தண்டனை பெற்ற ஒரு பெண்ணால் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத்திரும்ப இயலாது என்பதும் புதுமைப்பித்தனால் இக்கதையில் குறிக்கப்படுகிறது.

'மனசுக்கும் கரணசக்தியின் நிதானத்துக்கும் கட்டுப்படாமல் நிகழ்ந்த ஒரு காரியத்துக்கா பாத்திரத்தின் மீது தண்டனை?' என வினவிய ராமனே தன் மனைவியைத் தீக்குளிக்கச் செய்ததில் அகலிகை துடித்து விட்டாள். 'அவர்' என்ற மரியாதை 'அவன்' எனச் சுருங்கியது. சீதையின் தூய்மை உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? உண்மையை உலகுக்கு நிரூபிக்க முடியுமா?... நிரூபித்துவிட்டால் மட்டும் அது உண்மையாகிவிடப் போகிறதா; உள்ளத்தைத் தொடவில்லையானால்? நிற்கட்டும்; உலகம் எது?' என்று தம் உள்ளத்துள் எழுந்த கேள்விகளை அகலிகையின் வாய்மொழியாக்குகிறார். அவளது கோபம் அவனைக் காணக்கூட மறுக்கிறது. இச்செயல் "ராமன் மனசைச் சுட்டது; காலில் படிந்த தூசி அவனைச் சுட்டது" என்கிறார். அவன் கால் தூசி கல்லை உயிர்ப்பித்தது; ஆயின் அவள் பாதம் பட்ட தூசி அவனை எரித்தது; அவனது தனக்கொரு நீதி–மாற்றானுக்கொரு நீதி என்ற அநீதியை எரித்தது; ஆண்மையின் ஆணவத்தை எரித்தது. இராமன் செயலுக்கான தன் எதிர்ப்பினை மிகத் தெளிவாகப் புதுமைப்பித்தன் இக்கதையுள் பதிவு செய்துள்ளார்.

இவரின் நாரதராமாயணம், இராமனின் அரசாட்சியில் தொடங்கி அவனது பரம்பரையின் ஆட்சிக்காலம் எனத் தொடர்கிறது. அங்கதச் சுவையுடன் அமையும் இந்நீண்ட கதை அந்நியர் ஆட்சியின் அவலத்தையும் இனப்பாகுபாட்டின் இழிவினையும் இயம்புகிறது. சமூகச் சீர்திருத்தம் இப்படைப்பின் நோக்கமாகத் தென்படுகிறது. அந்நியரின் ஆட்சிக்கான எதிர்ப்பும் இழையோடியுள்ளது. சமயமும், அந்நியர் ஆட்சியும் இந்தியநாட்டை, மக்களை முன்னேறவிடாமல் தடுக்கின்றன என்ற கருத்தை இந்நூலுள் புதைத்துள்ளார். 'இதனால் மனக்கசப்படைந்த இளைய பரதன் அயோத்திக்குத் திரும்பினான். கோட்டை வாயிலைத் தாண்டியதும், வெள்ளியம்பலத் தம்பிரான்கள் இவனைச் சிறைக்கு மரியாதையாக அழைத்துச் சென்றார்கள். அங்கு இருந்த இளைய பரதன் குகவம்சத்தினரையும் ராமவிக்ரகத்தின்முன் மணியடித்துக் கொண்டு இருக்கிற விபீஷண வம்சத்தையும் மற்றொரு மூலையில் குடித்துக் கொண்டிருக்கும் சுக்ரீவ வம்சத்தையும் நாட்டின் நன்மைக்காகப் பழைய பகையை மறந்து ஆலசேன வம்சத்தையும், ஒன்று

சேர்த்தால் தான் காரியம் கைகூடும் என்று கண்டார்' எனும் பகுதியைச் (நா.ரா.ப.56) சான்றாக்கலாம். தன் கருத்துரைத்தலுக்கு இராமாயணத்தைப் பயன்படுத்தலாக இது அமைகிறது.

மதிப்பீடு : இராமாயணக்கதை நிகழ்வு மற்றும் கதைமாந்தர் பற்றிய மதிப்பீடுகளாக அமையுமாறு இரு கவிதைகளைப் புதுமைப்பித்தன் படைத்துள்ளார். முதல் கவிதை 'மாகாவியம்' அந்நியர் ஆட்சிக்கான எதிர்ப்பினை வஞ்சப்புகழ்ச்சியாகக் காட்டுகையில், அதற்கு ஒரு வழியாக இராமனின் செயல்களை,

இன்றைக்கு, யாரையா காட்டுக்கு
அப்பன் மடத்தனத்தை, அப்படியே ஏற்றுத்தன்
பெண்டாட்டி கைப்பிடித்து, பெரிய நிதியிழந்து
திண்டாடி நின்று, தீமைதனை சங்கரிக்க
ராவணனார் காதுக்கு
'ரதிபோல்வாள் என் மனைவி'
என்பதனைச் சொல்லுதற்கு, இடும்பு பலபுரிந்து
அன்னவளைத் தானிழந்து, அதற்கப்பால் மதியிழந்து
போகும் வழியினிலே, பொல்லாப்புக் கச்சாரம்
வாலி வயிறெறிய, வாங்கிச் சுமந்து கொண்டு
பெரிய கடல் கடந்து, பெண்ணை, தன் நாயகியை
வில்லால், திறத்தால், விதிவலியால், மீட்டுப்பின்
அன்னவளைத் தீக்குழியில், அருகிருந்தோர் நம்புதற்காய்
இறக்கி, தருமத்தை ஏந்தி, எடுத்து
அரியாசனத் தேற்றும் அதிசயங்கள் உண்டோ காண்!

என விமர்சிக்கக் (பு.பி.கவி.ப.60–61)* காணலாம். இராமனின் செயல்கள் அனைத்தும் பொறுப்புள்ள மனிதனின் செயல்களாக அமையவில்லை என்பதே புதுமைப்பித்தனின் கருத்தாகத் தெரிகிறது. இதனை, 'தருமத்தை நிர்த்தாரணம் செய்ய வந்த தெய்வப்பிறவியின் தர்மாதர்மத்தைப் பற்றிய சர்ச்சையை அந்தப்பகுதி கிளப்பிவிடுகிறது' எனும் ரகுநாதன் (மேற்படி ப.96) கூற்றும் வலியுறுத்துகிறது.

'அசரீரி' எனும் மற்றொரு முற்றுப் பெறாத கவிதை வாலி வதம் பற்றியதாகும். அக்கவிதைக்கு முன் ஒரு நீண்ட முன்னுரையை, 'முதல் காட்சி'யாக, வாலி வதைக்கான முன்னறிவித்தலாக அமைத்துள்ளார். உலகீன்ற துயர் ஏற்ற உயர்தோள் வாலியை, இராமன் 'சித்தங்கலங்கச் சிலையெடுத்து, சித்தங்கலங்கச் சினமெடுத்து... நொந்த மனத்தவர் சொல்லெனவே' தாக்கியதாகக் காட்டுகிறார். நலிவுற்று நிலைபெற்ற உயர்தோள் வாலி என்பதுடன் கவிதை நின்றுள்ளது. எனினும் வாலி பெருமைக்குரியவனாக இக்கவிதையுள் பாராட்டப்பட்டுள்ளது வெளிப்படை.

* புதுமைப்பித்தன் கவிதைகள்

'புதுமைப்பித்தனின் கதைகள் ஒவ்வொன்றும் ஒரு பிரச்சனையைப் பற்றியதாகவே இருக்கும். அவருடைய கதைகள் பொழுது போக்குக் கதைகள் அல்ல. அவரது கதைகள் சமூகத்தை நோக்கிப் பல்வேறு ஆணித்தரமான கேள்விக் குறிகளை அடுக்குகின்றன. அழுகி நாற்றமெடுத்துப் போன சமூகத்தின் ஊழல்களைக் கீறிப்பிளந்து காட்டுகின்றன' என ரகுநாதன் (பு.பி.ப.ப.XLLVI) மொழிவது இக்கவிதைகளை நோக்க உறுதிப்படக் காணலாம். 'வாலிவதை நியாயமா, அல்லது கம்பராமாயணம் எந்தப் பொருளாதாரப் பிரச்சனையை விளக்குகிறது என்றெல்லாம் கவிதையில் ஆராய்ந்து கொண்டிருப்பவர்களைக் கண்டால் சிரிப்புத்தான் வருகிறது' (பு.பி.க.,ப.51) என்ற புதுமைப்பித்தன் கம்பனுள் நின்று வாலிவதையை மதிப்பீடு செய்யாது, பொதுவான தம் கருத்தை இக்கவிதையுள் உணர்த்தியுள்ளார்.

மேற்கண்டவற்றைத் தொகுத்து நோக்கும் பொழுது, கம்பனைச் சுவைத்து மகிழும் அளவிற்குப் புதுமைப் பித்தனால் இராமாயணத்தைப் போற்ற முடியவில்லை. அவர் பார்வையில் இராமன் மிகுந்த குறைபாடுடையவனாக அமைகிறான்; வாலிவதை, சீதை தீக்குளிப்பு ஆகியன மிகுந்த கண்டனத்திற்குரியன; அகலிகை குற்றமற்றவள்; மனதின் தூய அன்பும், பிற ஆடவரிடம் காணும் அருவருப்புமே கற்பாகின்றன. கைகேயி வாங்கிய வரம், குழந்தை அறியாமையால் நெருப்பிட்டதை ஒக்கும்; பிறருடைய உணர்ச்சிகளைப் பொருட்படுத்தாத தர்மவைராக்கியத்தினால் (கைகேயியை மன்னிக்காத பரதன்) பயனில்லை, பழந்தமிழ் இலக்கியங்கள் படைப்பாளின் கருத்து வெளிப்பாட்டிற்குத் துணையாகும் என்பன புதுமைப்பித்தனின் இராமாயணம் தொடர்பான படைப்புகளால் புலப்படுகின்றன.

ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற கூற்றடிப்படையில் தமிழ் இலக்கிய உலகில் கம்பரின் நிலை, இருபதின் முன்பகுதி சார்ந்த புதுமைப்பித்தன், பின்பகுதி சார்ந்த மேத்தா' கொண்டு உணர்த்தப்பட்டுள்ளது.

இராமாயண உலகில்

தமிழைப் போன்று இராமாயணமும் தமிழகத்தில் மிகப் பழமையானது. சங்க இலக்கியம் தொட்டே இதன் கதைக்கூறுகள் இலக்கியத்துள் இடம்பெற்று வருகின்றன. அவ்வப்போது தனித்து எழுந்தும் சிறப்புற்றுள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றில் தனி முத்திரை பதித்துள்ள கம்பராமாயணத்திற்குப் பின்பும் செம்மை மற்றும் நாட்டுப்புற இலக்கியங்களில் இதன் ஆளுமை தொடர்ந்து சிறப்பிடம் கொண்டுள்ளது. கம்பராமாயணம் தமிழகத்தில் தோற்றுவித்த விளைவு என இவற்றைக் கொள்ளலாம். இராமாயண ஆர்வலர் தமது தகுதி மற்றும் விருப்பிற்கேற்ப பலவகைமைகளில் மறு ஆக்கம் செய்துள்ளனர். அவை முழுமை அல்லது ஏதேனும் ஒரு பகுதியாக அமைந்துள்ளன. அவை பற்றியதொரு கண்ணோட்டமாக அவற்றின் எழுச்சி மற்றும் கதைமாற்றங்களுக்குரிய காரணிகளைச் சுட்டுவதாக இக்கட்டுரையமைகிறது.

மறுஆக்கக் காரணிகள்

1. இராமனின் இறுதிவரையிலுமாக உத்தரகாண்டத்துடன் வால்மீகி இராமாயணத்தை நிறைவு செய்துள்ளார். இராமனின் முடிசூட்டுடன் கம்பர் தம் இராமாயணத்தை முடித்துவிட்டார். தம் கதைக்கு மங்களகரமான முடிவு வேண்டும் என்பது அவரின் நோக்கமாகலாம். தீவிரமான இராம பக்தரான அவருக்கு இராமன் சீதையை மறுபடியும் காட்டுக்கு அனுப்புவதில் உடன்பாடின்மையும் இதற்குக் காரணமாகலாம். ஆனால் பின் வந்தோர்க்கு உத்தரகாண்டமும் இடம்பெற்றால்தான் இராமாயணம் முழுமை பெறும் என்ற உணர்வு தோன்றியிருக்கலாம். எனவே ஒட்டக்கூத்தரால் உத்தரகாண்டம் படைக்கப்பட்டுள்ளது. நாட்டுப்புறவியலிலும் சீதா வனவாசம், லவகுச சரித்திரம் போன்றன எழுந்துள்ளன.

2. இராமாயண வானில் பல சிறு கதைமாந்தர் விண்மீன்களாய் ஒளிவிடுகின்றனர். முதன்மை மாந்தரின் பேரொளியில் அவற்றின் பெருங்குணங்களும், வலிமை முதலான தனித்துவங்களும் மங்கி மறைந்துள்ளன. அவற்றின் இப்பண்பில் தம்மை இழந்த படைப்பாளர் தம் திறனால் அவற்றிற்கு முதன்மைச் சிறப்பளித்துத் தனிநூலாக்கிப் பெருமையளிக்கின்றனர். சான்றிற்கு எஸ்.கே.ராமராஜனின் 'மேகநாதனை'ச் சுட்டலாம். இராவணன் மைந்தன் இந்திரசித்துக்கு உயர்வளிப்பது இந்நூல். அவனின் இல்லறச்சிறப்பினை விளக்கி நிற்கிறது. அவன் தன் மனைவி சுலோச்சனா மீது கொண்ட காதல் துலங்கும் வகையில் அமைந்துள்ளது. இந்திரசித்து இலக்குவனால் வீழ்த்தப்பட்ட பின் அவன் தன் காதலும் (மனைவி) உடன்கட்டை ஏறுவது இதன் சிறப்பாகும்.

3. கம்பராமாயணத்தில் இடம் பெறாத, இராமாயணக் கதையோடு தொடர்புபடுத்தப்படும் கதை மாந்தரையும் தமிழருக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கும் இத்தகு படைப்புகளுக்குக் காரணமாகின்றது. இந்திரசித்து மனைவி சுலோச்சனாவும், இராவணனின் உறவினனான மயிலிராவணனும் அதிகமாகப் பாராட்டப்பெறுகின்றனர். சுலோச்சனாவிற்கு அவள் தன் கற்பு இப்பெருமைக்குக் காரணமாகிறது. ஆதிசேடனின் மகளான அவளை, சீதையோ என இராவணனும், அனுமனும் ஐயுறுதல் இதனை உணர்த்தும். இராவணன் தான் இராமனுடன் போரிடுமுன் முதலில் மயிலிஇராவணனை அனுப்புகிறான். ஆனால் அவன் அனுமனால் கொல்லப்படுகிறான். நாட்டுப்புற நாடகங்கள் இவ்வகையில் மிகுதியாக உள்ளன.

4. மயிலிராவணன் கதையில் மற்றொரு நோக்கும் வெளிப்படக் காணலாம். அனுமனைச் சிறப்பிப்பதாகவும் அது காணப்படுகிறது. அவனின் உடல் வலிமை, இறைப்பற்று, பணிவு, உண்மைத் தொண்டு ஆகியவற்றைப் பாராட்டும் முகமாக, அவற்றின் குறியீடாக அவனைத் தனித்தெய்வமாக்கி மகிழ்கின்றனர். மனிதர்களாக அவதார மெடுத்த இராம, இலக்குவரைக் காப்பாற்ற அவன் மேற்கொண்ட அளத்தற்கரிய வலிமையுடைய செயல்கள் இந்நிலைக்கு உயர்த்தியுள்ளன.

5. அகலிகை கதை பலருக்கும் தம் கருத்துரைக்கும், விமர்சிக்கும் வாயிலாகப் பயன்பட்டுள்ளது. புதுமைப்பித்தனின் 'சாபவிமோசனம்' சிறுகதையும், ச.து.சு.யோகியாரின், 'அகல்யை' குறுங்காவியமும் இங்கு எண்ணத்தக்கன. தற்காலத் திறனாய்வு மனப்பாங்கு இவற்றில் இடம் பெற்றுள்ளன. ஆணுக்குப் பெண் அடங்கியவள் என்ற அன்றைய சமுதாய நோக்கில் அகலிகையின் கல்லாக்கம் மூலக்கதையில் அமைந்துள்ளது. ஆணுக்குப் பெண் சமம் என்ற சமநோக்குடைய இன்றைய சமுதாயப் பார்வையை இவர்கள் இவள் மீது செலுத்தித் தம் படைப்பைத் தந்துள்ளனர். இராமனால் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்ட அகலிகை, அவனால் சீதை மீண்டும் காட்டிற்கு அனுப்பப்பட்டாள் என்பதறிந்தவுடன் மீண்டும் தன்னைத் தானே கல்லாக்கிக் கொள்வதாகப் புதுமைப்பித்தனின் சாபவிமோசனம் எழுந்துள்ளது. புதுப்பிறவியெடுத்த அகலிகையை ஏற்க மறுக்கும் கௌதமனைக் குற்றவாளியாக்கி விசுவாமித்திரர் வசைபாடுவதாக யோகியார் புனைந்துள்ளார். இருவருமே இன்றைய சமுதாயச் சூழலில் சமூகக் கருத்துகள் மாறுபடுவதைச் சுட்டி, பெண் விடுதலை வேண்டுபவர்களாகக் காணப்படுகின்றனர்.

6. புதிய கருத்துகளை உருவாக்கும் போக்கிலும் இராமாயணத்தை இன்றைய படைப்பாளிகள் கையாண்டுள்ளனர். மு.மேத்தாவின் 'ஒரு கல்லின் கதையும் கவிஞனின் விமர்சனமும்' புதுக்கவிதை, ஆண்களால்

ஏமாற்றப்படும் மகளிரைக் குறிக்கும் குறியீடாக அகலிகையைச் சுட்டுகிறது. தங்கள் மறுவாழ்விற்குத் துணையாகும் இராமனின் வரவிற்காக இவர்கள் காத்திருக்கின்றனர். புதுமைப்பித்தனின் நாரதராமாயணம், 'பணமும் பதவியும் உடன் பிறப்புகளையும் பகையாக்கும்' தன்மையை எடுத்துக்காட்டுகிறது. இராமாயண உடன்பிறப்புகளின் அன்பும் ஒற்றுமையும் புராணத்தில் இடம்பெற முடியுமே தவிர நடைமுறை வாழ்க்கையில் காண இயலாது என்பதை அங்கதச் சுவையுடன் வெளிப்படுத்தியுள்ளது. பதவிக்காதத் தம் உடன்பிறப்புகளை எதிர்த்துப் பொதுப்பகைவருடன் உறவு கொள்ளும் நிலையைக் காட்டி, இராமாயணத்துள் மிக உயர்வாகச் சித்திரிக்கப்பட்டுள்ள உறவினை விமர்சனத்திற்கு உட்படுத்தியுள்ளார் புதுமைப்பித்தன்.

7. வாழ்க்கை நெறிகளையும் அதன் தத்துவங்களையும் தம் நோக்கில் எடுத்துரைக்கவும் இராமாயணம் பயன்பட்டுள்ளது. விடுதலைப் போராட்ட வீரர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, தமிழக மக்களை ஆங்கில அரசுக்கு எதிராக எழும்படி தம் 'இராமராச்சியம்' கவிதை வழி தூண்டியுள்ளார். இராமநாமத்தின் பெருமையைத் தெளிவாக்க விரும்பிய சண்முகம் 'இராம மந்திர நாடகம்' எழுதியுள்ளார். சேது அரசன் பசுபதியைச் சூரிய உதயத்திற்குள் அழிப்பதாக இராமன் சபதம் எடுக்கிறான்; ஆனால் பசுபதி அனுமனின் அன்னை அஞ்சனையிடம் புகலிடம் புகுகிறான்; அவனைக் காப்பாற்ற அனுமன் இராமநாமத்தை விடாது ஓத இராமன் தன் சபதம் நிறைவேற இயலாது தோல்வியடைகிறான் என்பதாகக் கதை அமைந்துள்ளது. இதன்வழி இராமநாம மகிமையை வலியுறுத்தி இராமனால் கூட அதன் பெருமையை மீற இயலாது என உணர்த்துகிறார்.

8. 'ஞானராமாயணக்கப்பல்' இராமாயணக் கதைக்கும் கதை மாந்தருக்கும் தத்துவ நோக்கில் விளக்கம் அமைப்பதாக எழுந்துள்ளது.

9. கம்பனை எளிமைப்படுத்தித் தரும் கருத்தில் வாலி புதுக்கவிதையாக அவதார புருஷனைத் தந்துள்ளார்.

10. கற்றோர் மட்டுமின்றிப் பொதுமக்கள், சிறுவர், இளைஞர் என அனைவரும் பயன்கொள்ளும்படியாகவும் பல மறு ஆக்கங்கள் எழுந்துள்ளன. ஐயாசாமியின் 'பாலராமாயணம்', சரசுவதி இராமனாதனின் 'இளைஞர்களுக்கு இராமாயணம்' மற்றும் சில நாட்டுப்புற இலக்கிய வடிவங்கள் என்பன இங்குக் குறிக்கத்தக்கன.

11. இராமாயணத்தை முழுமையாகத் தம் விருப்பப்படி மாற்றித்தரும் பாங்கும் இவண் சுட்டற்பாலது. இராமாயணச் சிறப்பாசிரியராகக் கருதப்படும் மூவரையும் இணைத்து (கம்பன், வால்மீகி, துளசி) தி.வேங்கட கிருஷ்ண ஐயங்கார் 'இராகவகாவியம்' இயற்றியுள்ளார். இலக்குவன் மனைவி

ஊர்மிளா, அவன் சீதை இராமனுடன் காட்டுக்குச் சென்றவுடன் அவர்கள் நலமாக நாடு திரும்ப தவமியற்றுவதாக இவர் பாடுகின்றார்.

12. எந்தவொரு பெருமை மிகு படைப்பும் எதிர்ப்புப் பெறுவது இயல்பானதே. அவ்வகையில் இராமாயணம் எனும் புராணத்தை ஆரிய–தமிழ் இனப் போராட்டமாக உருமாற்றி இராவணனைத் தலைவனாகக் கொண்டு குழந்தை 'இராவண காவியம்' கண்டுள்ளார்.

தங்கள் தனித்துவத்தைக் காட்ட, இராமாயணக் கதையில் புதுமை புகுத்த, தன் கருத்திற்குத் துணையாக, விமர்சிக்க எனப்பல சிந்தனைகளுடன் இராமாயணத்திற்கு மறு ஆக்கங்கள் அவ்வப்போது தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

இராமாயணக் கதைமாற்றங்களுக்கான காரணிகள் :

1. இராமாயணக் கதையில் அதிக மாற்றங்களுக்கு உள்ளாகி இருப்பது அகலிகை கதையாகும். வால்மீகியும் கம்பனும் அகலிகை, இந்திரனை அறிந்த பின்னும் அவன் செயலுக்கு உடன்படுவதாகக் காட்டுகின்றனர். அகலிகை மீது இப்பழிவிழுவதை விரும்பாத வெ.ப.சுப்பிரமணிய முதலியார் தமது 'அகலிகை வெண்பா'வில் அவள் தன் கற்பைக் காக்கப் போராடி அதில் தோல்வியுறுவதாகக் காட்டுகிறார். ச.து.சு.யோகியார் அவள் இந்திரனை உணரவில்லை; கௌதமனாகவே கொண்டாள் என உரைக்கிறார். அவள் உடலால் அழிந்தாலும் உள்ளத்தால் தூயவள் என்பதை இவர்கள் உறுதிப்படுத்த விழைகின்றனர். விடுதலைப் போராட்ட காலத்தில் எழுந்த இந்நூல்கள் சமூகத்தில் பெண்கள் நிலை உயர வேண்டும்; தாழ்தல் கூடாது என்ற கருத்தையும் உள்ளடக்கியுள்ளன. இதனால் சுப்பிரமணிய முதலியார் உலகின் வஞ்சனை மற்றும் பழிச்சொல்லிலிருந்து அகலிகையைக் காக்கவே கௌதமன் அவளைக் கல்லாக்கினான் எனப் பேசுகிறார். முனிவனாக இருந்தும் இந்திரனின் மாயத்தை அறியாது அகலிகையைச் சபித்த கௌதமனே குற்றவாளி; அவனை மன்னித்து அகலிகை ஏற்றுக் கொள்வது அவளது பெருந்தன்மை எனப் பெண்மைக்குப் பெருமையளிக்கிறார் யோகியார்.

2. கைகேயியைத் தூயவளாகச் சிறப்பிப்பதிலும் சிலர் அக்கறை கொண்டுள்ளனர். நஜனின் 'இராமன் பேசுகிறான்' எனும் சிறுவர்களுக்கான கதை அவளை இராமனுக்காகத் தன் மகன் பரதனை இழக்கும் தியாகியாகக் காட்சிப்படுத்துகிறது. தனக்குப் பின் பதவி யேற்போன் மிக விரைவில் அழிந்துவிடுவான் எனத் தான் கண்ட கனவைத் தசரதன் மறந்து இராமனுக்கு முடிசூட முனையவே அவள் அவ்விரு வரங்கள் பெற்றதாகப் பேசுகிறாள். சிறுவர்களிடையே கைகேயியை நல்லவளாகக் காட்சிப்படுத்துவதுடன், இறைவனிடம் (இராமனிடம்) அடைக்கலம் புகுந்தோர் தம்மிடம் உள்ள

எதனையும் தியாகம் செய்வர் என்பதனை உணர்த்தவும் இம்மாற்றம் செய்துள்ளார். சிறுவர்களுக்காக இலக்கியம் படைக்கும் பொழுது மிகக் கவனத்துடன் சில நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்; நற்பண்புகளை மட்டுமே அவரறியச் செய வேண்டும் எனும் குறிக்கோளும் இதற்குக் காரணமாகலாம்.

3. இராமனை அவன் நண்பர்களும், ஆதரவாளர்களும் புகழ்வதை விட, பகைவர் புகழ்வதே அவன் பெருமைக்கு அணி சேர்க்கும் என்ற எண்ணத்தைக் கதிரேசன் செட்டியாரின் 'சுலோச்சனா' கதை தருகிறது. இலக்குவனால் வெட்டப்பட்ட இந்திரசித்தின் கை, சுலோச்சனாவிடம் சென்று, 'நான் இராமனுடன் இணைந்து பிறவி ஒழித்துப் பேரின்ப வெள்ளத்தில் ஆத்ம திருப்தியடைந்துள்ளேன்; நீயும் வந்து இணைந்து மகிழ்; ஆத்மா முக்தி பெறும்' என எழுதுகிறது. இதனால் தன் இறப்பில் இந்திரசித் இராமனின் உண்மையறிகிறான்; இராமனின் பெருமையை உயர்த்துகிறான்.

4. கம்பனை அடியொற்றி 'இராமநாடகக் கீர்த்தனை' படைத்த அருணாச்சல கவிராயர் தந்துள்ள புதிய இணைப்பு அனுமனுக்கும் இராமனுக்கும் பெருமை சேர்ப்பதாக அமைகிறது. சீதை மீட்சியின் பின் அயோத்தி திரும்பும் வழியில் பரத்துவாச முனிவர் அனைவருக்கும் விருந்தளிக்கிறார்; அதில் ஒரே இலையில் தன்னெதிரே அனுமனை அமரச் செய்து ஒன்றாக உணவருந்தி அவன் செய்த அளவிடற்கரிய உதவிகளுக்குத் தன் நன்றியினை இராமன் தெரிவிக்கிறான். எனவே கதைமாந்தரின் பண்புநலனை மிகுவிக்கும் நிலையிலும் கதைமாற்றங்கள் அமைகின்றன.

முடிவுரை

இராமாயணம் தமிழகத்தில் பெற்றுள்ள தாக்கத்திற்கு இவையும் சான்றாகின்றன. அழியாச் சிறப்புடைய இலக்கிய ஆக்கங்கள் காலத்திற்குக் காலம் அரசியல், சமுதாய, பொருளாதார, ஆன்மீகச் சூழல்களுக்கு ஏற்பவும், படைப்பாளரின் தகுதி மற்றும் விருப்பிற்கு ஏற்பவும் மாற்றங்கள் பெறுதல் இயற்கை. புதிய புதிய சிந்தனைகளுக்கும், கற்பனைகளுக்கும் தொடர்ந்து ஓர் இலக்கியம் இடம் தருவது அதன் தன்னிகரற்ற புகழுக்கும் பெருமைக்கும் சான்றாகும். இவை அப்பேரிலக்கியத்திற்கு இறவாப் பெருமையான நிலைபேறு அளிக்கின்றன. எனவே இராமாயணம் அள்ள அள்ளக் குறையாத ஒரு கருத்துச் சுரங்கம்; என்றும் வற்றாத அறிவு ஊற்று; புலமைப் பறவைகளின் புகலிடமாம் பழுமரம்.

புகழேணிகள்

மிகச் சிறந்த பக்திக்காப்பியம் என்ற எல்லையைத் தாண்டி ஒப்புயர்வற்ற கவிதையிலக்கியம் என்ற பெருமையுடன் தமிழிமயமாகத் திகழும் கம்பராமாயணத்தின் இவ்வெற்றிக்குத் துணை நின்ற கூறுகள் இவண் எண்ணப்படுகின்றன. புகழின் உச்சத்திற்குக் கம்பரை ஏற்றிவிட்டவை இவையாதலின் இவை புகழேணிகளாக இங்கே குறிக்கப்படுகின்றன. கம்பராமாயணம் தமிழகத்திலும் அதற்கு அப்பாலும் பெற்றுள்ள செல்வாக்கினை அறுதியிடுவனவாகவும் இவை அமைகின்றன.

இதழ்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதின் தொடக்கத்திலும் கம்பராமாயணத்தைப் பெருமைப்படுத்தும் பணியை இதழ்கள் மேற்கொண்டன. கம்பநாடர், கம்பன் கலைநிலை என்பன கம்பனுக்கு மட்டுமே இடமளித்தன. இவை பற்றிய விரிவான செய்திகள் 'ஆய்வுகள்' பகுதியில் விளக்கம் பெற்றுள்ளன.

கம்பன் கழகங்கள்

கம்பரின் இன்றைய பெருமைக்குக் கம்பன் கழகங்களின் பணி தலையாயது. கம்பனாய்வுகளில் முன்னிற்பது போன்றே பொதுமக்களிடம் கம்பரை அறிமுகப்படுத்திய சிறப்பிலும் அவை முன்னிற்கின்றன. கம்பர் பிறந்ததாகக் கருதப்படும் தேரழுந்தூரில் 1910 இல் அவருக்கு முதன் முதல் கழகம் டி.ஏ.பழனியப்பமுதலியார் என்பவரால் தோற்றுவிக்கப்பெற்றது. இடையிடையே தொய்வு காணினும் இன்றும் தொடர்வது குறிப்பிடத்தக்கது. இதன்பின் 1921 இல் திருநெல்வேலி கம்பன் கழகம் தோன்றியது.

கம்பன் காவியத்தில் இதயம் களித்தோர் பல்லோராயினும் அக்காவியத்தை உணர்ந்து போற்றுவதை ஒரு மக்கள் இயக்கமாக வளர்த்து அப்புலவர் பெருமானுக்குக் கழகங்கள் கண்ட பெருமை காரைக்குடி சா.கணேசனுக்கு உரியதாகும். இவர் 1938 இல் கம்பன்கழகத்தைக் காரைக்குடியில் தோற்றுவித்தார். அதுமுதல் இது கம்பன் கழகங்களுக்கெல்லாம் தாய்க் கழகமாக இலங்கி நல்வழி காட்டி வருகிறது. இவரது முயற்சியால் கோவை, சென்னை, பாளையங்கோட்டை, புதுவை, கரூர், சேலம், திருப்பத்தூர், நாமக்கல் எனப் பலவிடத்தும் பெருகி வளர்ந்துள்ளது. இவரது உந்துதலால் மலேசியா வாழ் தமிழன்பர் வெங்கா எனும் வெங்கடாசலம் 1984 மே திங்கள் மலேசியா கம்பன் கழகத்தைத் தோற்றுவித்துள்ளார். புதுவை, கல்கத்தா, யாழ்ப்பாணம், மலாக்கா என அயல்மாநிலம் மற்றும் அயல்நாடுகள் உட்பட தமிழகத்தில் 47 கம்பன்

கழகங்கள்* 1988 வரை ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. நாட்டரசன் கோட்டையில் மட்டும் இரண்டிருப்பது காணத்தக்கது. இவ்வெண்ணிக்கை அடுத்த பன்னிரு ஆண்டுகளில் இன்னும் பெருகியிருக்க வாய்ப்புண்டு.

கம்பன் கழகங்களின் செயற்பாட்டை வரையறுத்த ஆய்வாளர் கா.அ.ச.ரகுநாயகன், 'கம்பருடைய இராமாவதாரத்தைப் படிப்பது, மற்றவரைப் படிக்கச் செய்வது, கம்பரின் புலமைத் திறத்தைக் கற்றறிந்தாரிடம் கேட்டறிவது, பிறரையும் கேட்கச் செய்வது ஆகியவையே கம்பன் கழகங்கள் அனைத்துக்கும் பொதுவான அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளன என்று கூறலாம்.... இலக்கிய ஆய்வு ஒன்றே அவற்றின் இலக்காக அமைந்துள்ளது... கருத்தரங்கம், ஆய்வரங்கம், கவியரங்கம், வழக்காடு மன்றம், இன்று சந்திக்கும் இவர்கள், எங்களையும் கேளுங்கள், கலைதெரி அரங்கம், செந்தமிழ்ச் சதுக்கம், இவர்கள் பார்வையில் இவர், காப்பியத்தில் இவர்கள், தன்னிலை விளம்பல், பட்டிமண்டபம் போன்ற புதிய உத்திகளுடன் தனிப்பேச்சு, சிறப்புரை, கருத்துரை, இசையுரை, நாடக அரங்கு போன்ற பழைய மரபு வழிப்பட்ட நிகழ்ச்சிகளையும் இக்கழகங்கள் அமைத்து வருகின்றன' என்றுரைக்கிறார் (எண்பத்திரண்டில் தமிழ், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பக்.835–836).

கம்பன் கழகங்களின் கடமைகள் எனப் பொதுவாகச் சிலவற்றைக் கீழ்க்கண்டவாறு பி.ஸ்ரீ. ஆச்சாரியா வரையறுத்துள்ளார். அவை சமூக நல நோக்குடனும் அமைதலின் இங்கே மீண்டும் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

1. ஸ்ரீராமபிரானின் காசில் கொற்றத்தைப் பேணிக் காப்பது.
2. கவிச்சக்கரவர்த்தி கம்பனுடைய புகழை வளர்ப்பது.
3. கம்பரது காவியப் பாடல்களைப் பொதுமக்கள் எளிதிற் பெற்றுப் படித்துப் பயன்பெற உதவுவது.
4. ஆங்காங்கே கம்பராமாயணத் தனிச்சொற்பொழிவுகளும் தொடர்சொற்பொழிவுகளும் நடத்துவது.
5. பட்டி தொட்டிகளில் கம்பராமாயண இன்னிசைக் கதாகாலட்சேபங்கள் நிகழ்த்துவது.
6. மூன்றாவது திட்டத்துக்கு உறுதுணையாகக் கம்பன் பாடல்களைத் தக்க விளக்கங்களுடன் சிறுசிறு நூல்களாக மலிவுவிலையில் அச்சிட்டு

* காரைக்குடி, நாட்டரசன் கோட்டை (2), தேரழுந்தூர், கள்ளிப்பட்டி, நாமக்கல், கோபிச்செட்டிப்பாளையம், நெய்வேலி, ராசிபுரம், கோயமுத்தூர், சேலம், சென்னை, புதுக்கோட்டை, பாளையங்கோட்டை, திருவாரூர், பட்டுக்கோட்டை, திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்), சிவகங்கை, பரமக்குடி, வேலூர், திண்டிவனம், திருச்சி, காஞ்சிபுரம், தஞ்சாவூர், மதுரை, அவினாசி, கவுந்தபாடி (வழி – ஈரோடு), பொள்ளாச்சி, திருநெல்வேலி, தென்திருப்பேரை, வாழியூர், கரூர், திருமங்கலம், கிழக்குத் தாம்பரம், பெரம்பலூர், கும்பகோணம், ஆலடிப்பட்டி – நல்லூர், ராமேச்வரம், ராஜபாளையம், திருத்துறைப்பூண்டி, வையப்பமலை, உதகமண்டலம், புதுச்சேரி, கல்கத்தா, யாழ்ப்பாணம், கொழும்பு, மலாக்கா.

மக்களுக்குக் கிடைக்கச் செய்வது.

7. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கம்பராமாயணப் பாடப் பகுதிகளைத் தக்க விளக்கங்களுடன் சிறுசிறு நூல்களாக மலிவுவிலையில் அச்சிட்டு மக்களுக்குக் கிடைக்கச் செய்வது.

8. கம்பச் சித்திரத்தின் நயங்களைப் பிறநாட்டு அறிஞர்களும் வேறு மொழி பேசும் வெளி மாநில மக்களும் தெரிந்து கொள்ளும் வகையில் தக்க மொழிபெயர்ப்போடு அச்சிட்டுப் பரப்புவது.

9. வால்மீகி, கம்பன், துளசி – இம்முப்பெருங் கவிஞர்களின் ராமகாதைகளில் காணப்படும் பாத்திரப்படைப்புகளையும் கவிநயங்களையும், கதைப்போக்கின் வேறுபாடுகளையும் ஆராய்ந்து, அவற்றில் கம்பனுக்குரிய உயர்ந்த இடங்களை ரசிகர்களுக்கு எடுத்துக் காட்டுவது.

10. கம்பன் காவியத்தில் ஆங்காங்கே பாத்திரங்கள் மூலம் வழங்கும் அறிவுரைகளை மக்கள் மனத்தில் பதிய வைத்து, அதன் மூலம் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முயல்வது.

11. கம்பன் தன்காவியத்தில் காட்டியுள்ள அன்றைய கோசல நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், அறநெறியையும், ஒழுக்கக்கட்டுப்பாட்டையும் எடுத்துக்காட்டி, அத்தகைய வாழ்க்கை முறைகளைப் பின்பற்றாததே இன்றைய மக்களின் அமைதியற்ற அவலநிலைக்குக் காரணம் என்பதை எடுத்துரைத்துக் கம்பன் காட்டிய வாழ்க்கை முறையைப் போதிப்பது.

12. இன்றைய அரசியலையும், ராமராஜ்ய அரசியலையும் ஒப்பிட்டு இன்றைய அரசியலில் காணப்படும் சீர்கேடுகளைச் சுட்டித் திருத்தமான ராமராஜ்ய அரசியல் வழிமுறைகளைக் கூறி ஸ்ரீராம ராஜ்யத்தின் பெருமையை மக்களிடையே பரப்புவது.

13. மேல் நாட்டுக் கவிஞர்களாகிய ஹோமர், ஷேக்ஸ்பியர், வேர்ஸ்வொர்த், மில்டன், ஷெல்லி போன்றோரின் காவியப் படைப்புகளையும் கம்பனது காவியப் படைப்பையும் ஒப்பிட்டு ஆராய்ந்து, அவற்றுள் கம்பன் காவியப் படைப்பின் உயர்வைச் சொற்பொழிவுகள் கலந்துரையாடல்கள் மூலம் ரசிகர்களுக்கு எடுத்துக் காட்டுவது.

14. கம்பன் காவியத்திற்கும் அதன் பாத்திரப்படைப்புகளுக்கும் இழுக்கு நேராத முறையில் பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள் மூலம் கம்பராமாயணப் புகழைப் பரப்புவது.

15. பள்ளிகள், கல்லூரிகள் மாணவர்களுக்குக் கம்பன் பரிசுக் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டிகள் நடத்திக் கம்பனை வளர்ப்பது.

16. கம்பன் பெயரில் டிரஸ்ட் ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி அதன்மூலம் ஏழை மாணவர்க்கு உதவி செய்து பொதுநலச் சேவை செய்வது.

17. மேலே கூறிய டிரஸ்டுகளின் மூலம், ஏழைஎளியவர்கட்கு மருத்துவவசதி, குடிநீர்வசதி போன்றவற்றைச் செய்வது.

18. உலக அரங்கில் கவிஞர்களின் தலைமைப் பீடத்தில் கம்பனை அமர்த்துவது.

19. தாய் நாட்டில் மட்டுமின்றி, உலகம் முழுவதும் கம்பன் கழகங்கள் அமைக்க ஆவன செய்வது.

20. கம்பனைத்தான் கற்க வேண்டுமென்ற குறுகிய மனப்பான்மையில்லாமல் ஏனைய தமிழ்க்காப்பியங்களையும் படித்து அவற்றில் காணப்படும் நயங்களைக் கம்பனின் காவிய நயங்களோடு ஒப்பிட்டு மகிழ்வது.

21. கம்பன் கழகங்களில், நூல்நிலையங்கள் ஏற்படுத்தி, அறிஞர் பெருமக்களின் ஆய்வுப்பணி வளர்ச்சிக்கும் பொதுமக்களின் அறிவு வளர்ச்சிக்கும் பயன் தரும் வகையில் நடத்துவது.

22. அவ்வப்போது கழக உறுப்பினர்கள் தனியாகவோ கூட்டாகவோ இராமாயணம் தொடர்புடைய தலங்களுக்குச் சுற்றுலாப் பயணம் சென்று, கம்பராமாயண அடிச்சுவடுகள் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு அதனால் ஏற்படும் அனுபவங்களைச் சொற்பொழிவுகள் மூலமாகவோ, புத்தக வடிவில் அச்சிட்டளிப்பதன் மூலமாகவோ, மக்களிடையே கம்பன் புகழைப் பரப்புவது.

23. ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு உன்னத சமுதாயத்தை அமைக்கும் நோக்கினைக் கம்பன் தன் பாத்திரப்படைப்புகள் மூலம் எவ்வாறு அழுத்தமாகக் காட்டியுள்ளான் என்பதை மக்களிடையே விளக்கிக் காட்டுவது.

24. தமிழ்ப் புலவர்களுக்கும், கவிஞர்களுக்கும் முதுமைக் காலத்தில் கைகொடுத்து உதவுவது.

25. பழந்தமிழ்ப் புலவர்களால் ஆக்கப்பட்டு, அச்சுக்கு வராமல், நெடுங்காலமாக ஏட்டுச் சுவடிகளிலேயே காணப்படும் சிறந்த இலக்கிய நூல்களை ஆராய்ந்து நல்ல முறையில் அச்சேற்றி வெளிக்கொணர்வது.

26. தமிழ் நெடுங்கணக்கெழுத்துக்களில் அவ்வப்போது ஏற்பட்ட வரிவடிவ வேறுபாடுகள் பற்றியும், இன்றைய தமிழக அரசு செய்துள்ள எழுத்து மாற்றங்களால் ஏற்படும் நன்மை தீமைகள் பற்றியும் ஆராய்வது.

27. கம்பனுக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிக் காலஞ்சென்ற பெருமக்களாகிய திருவாளர்கள் டி.கே.சிதம்பரநாதமுதலியார், தொ.மு.பாஸ்கரத்தொண்டைமான், எஸ்.வையாபுரிப்பிள்ளை, வெ.ப.சுப்பிரமணிய முதலியார், வ.வே.சு.ஐயர், பாரதியார், ராஜாஜி,

கல்கி, ரா.பி.சேதுப்பிள்ளை, இராய.சொக்கலிங்கம் போன்றவர்கட்கு விழா எடுத்து, அவர்கள் தொண்டினை மக்கள் உணருமாறு சொற்பொழிவுகள் மூலமாகவும் வெளியீடுகள் மூலமாகவும் பணிபுரிவது.

28. அஃதே போன்று இன்று நம்மிடையே வாழ்ந்துவரும் கம்பராமாயணத் தொண்டர்களாகிய திரு.கம்பனடிப்பொடி, திரு.மு.மு.இஸ்மாயீல், திரு.கே.பட்சிராஜன், திரு.தி.ஆறுமுகம் போன்றவர்களுடைய சேவையைப் போற்றும் வகையில் அவ்வப்போது பாராட்டுக் கூட்டங்கள் நடத்துவது.

29. திருக்கோவில்களிலும் மற்றும் வேறுபல இடங்களிலும் காணப்படும் பண்டைய கலாச்சார நினைவுச்சின்னங்களாகிய சிற்பங்கள், ஓவியங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றை ஆராய்வதும் பேணிக் காப்பதுமாகிய பணிகளையும் இயன்றவரை இயற்றுவது.

30. கம்பன் பெயரால் வழங்கப்படும் இதர நூல்களான சரஸ்வதி அந்தாதி, சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது போன்றவை கம்பனால் எழுதப்பட்டனவா அல்லவா என்ற சர்ச்சைக்கு விடைகாணும் முறையில் அவற்றை நன்கு ஆய்ந்து பார்த்து ஒரு முடிவு காண முயல்வது.

31. மற்றும் கம்பனால் பாடப்பட்டதாகப் பேசப்படும் தனிப்பாடல்களை ஒன்று சேர்த்து அவற்றிலுள்ள நிறை குறைகளை ஆராய்வது.

32. கம்பனுடைய வாழ்க்கை வரலாற்றில் தெளிவு காணும் வகையில் அவன் பிறந்த ஊர், வருடம், மாதம், நாள், மதம், குலம், தந்தை, தாய், மனைவி, மக்கள், சமகாலப் புலவர்கள், மன்னர்கள், வள்ளல்கள் போன்றவை குறித்து முனைந்து ஆராய்வது.

33. சடையப்ப வள்ளல் தமிழுக்கும் தமிழ்ப் புலவருக்கும் அள்ளியள்ளி வழங்கியவரென்பது உண்மையாயின் கம்பரையன்றி வேறு எவ்வெப் புலவர்கள் அவரைப் பாராட்டிப் பாடியுள்ளனர் என்பது பற்றி ஆராய்வது.

இவை போன்று இன்னும் எத்தனையோ நற்செயல்களுக்குக் கம்பன் கழகங்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு மக்களுக்கும் மொழிக்கும் நாட்டுக்கும் சேவை செய்யின் அச்சேவை பரம்பொருளுக்குச் செய்த சேவையாக அமையுமென நம்புகின்றோம்.

கம்பன் வாழ்க
கம்பன் புகழ் வாழ்க
கன்னித் தமிழ் வாழ்க

(நான் ரசித்த கம்பனும் கம்பன் கழகங்களின் கடமையும், கம்பராமாயண மேதை பி.ஸ்ரீ.ஆச்சாரியா.பக்.1–4).

இவரின் எண்ணப்படியே கம்பன் கழகங்கள் பல கம்பனுடன் பிற இலக்கிய ஆய்வுகளுக்கும் இடனளித்தல் சுட்டத்தக்கது (சென்னை,

காரைக்குடி, திருப்பத்தூர், பரமக்குடி, திருநெல்வேலி). 1982 ஆம் ஆண்டு பாரதியின் நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடப்பட்டதால் புதுவைக் கம்பன் கழக நிகழ்ச்சிகள் அனைத்தும் கம்பனையும் பாரதியாரையும் பிணைத்தே அமைந்தன. (மு.மு.இஸ்மாயீல்–கவிச்சக்கரவர்த்தியும் கவியரசரும் முன்னுரை) மற்றும் பொதுமக்களிடையே கம்பனைப் பரப்புதல், சமூகப்பணிபுரிதல், மாணாக்கரிடையே பல்வேறு வகைகளில் வளர்த்தல் எனும் இவர் விருப்பங்களும் நிறைவேற்றப்படுதல் குறிக்கத்தக்கது (கா.அ.ச.ரகுநாயகன், கம்பன்கழகங்கள்–எண்பத்தொன்றில் தமிழ், எண்பத்திரண்டில் தமிழ், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியீடு).

சென்னை, கோவை, இராஜபாளையம், புதுவை போன்ற கம்பன் கழகங்கள் ஆண்டுதோறும் கம்பன் ஆய்வுப் படைப்புகளை வெளிக் கொணர்வதில் மிகுந்த அக்கறை காட்டுவதும் அறிதற்பாலது. புதுவைக் கம்பன் கழகம் சிறந்த எழுத்தாளர்களுக்குப் புதுவை அரசின் கம்பன் புகழ் இலக்கியப் பரிசுகளை வழங்குவதோடு கம்பர் தொடர்பான சிறந்த ஆய்வு நூலுக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசும் தருகிறது. சென்னைக் கம்பன் கழகம் போல்வன பல அறக்கட்டளைகளின் வழி தமிழறிஞர்க்கு விருதுகள் பல வழங்குவதும் சுட்டத்தக்கது. உலகஅளவில் கம்பன் பணியாற்றும் சான்றோரில் ஒருவருக்கு ஆண்டு தோறும் 'கம்பன் காவலர்' எனும் விருதினைக் கொழும்புக் கம்பன் கழகம் வழங்குவதும் ஒருதனிச் சிறப்பாகும்.

இக்கழகங்களில் பல ஆண்டுதோறும் தாம் நடத்தும் கம்பன் விழாவினைக் குறிப்பிட்டநாட்களில் நடத்துதலும் குறித்தற்பாலது. 'எண்ணிய சகாப்தம் எண்ணூற்றேழின்' எனும் தனிப்பாடலைக் கொண்டு, காரைக்குடி கம்பன் கழகம், விசுவாவசு ஆண்டு பங்குனித் திங்கள் 4ஆம் தேதி புதன் கிழமை, துதியை திதி, அத்த நட்சத்திரம் கூடிய நன்னாளில் இராமாவதாரத்தைக் கம்பர் அரங்கேற்றினார் எனக் கணக்கிட்டுள்ளது. எனவே தாங்கள் நடத்தும் கம்பன் விழாவிற்குப் பங்குனி மகம், பூரம், உத்தரம், அத்தம் நாட்களைத் தேர்ந்துள்ளனர். இதனைச் சில கம்பன்கழகங்கள் பின்பற்றுகின்றன. சென்னைக் கம்பன் கழகம் ஆகஸ்டுத் திங்கள் இரண்டாவது வெள்ளி, சனி, ஞாயிறு; திருப்பத்தூர் சூலைத்திங்கள் மூன்றாம் சனி, ஞாயிறு; கோவை பிப்ரவரித் திங்கள் இரண்டாவது சனி, ஞாயிறு; புதுவை மே திங்கள் இரண்டாவது சனி, ஞாயிறு என்பன போன்று பிறவும் கொண்டாடுகின்றன. மார்கழித்திங்கள் வைகுண்ட ஏகாதசியைத் தாம் கம்பரைச் சிறப்பித்தற்குரிய காலமாகக் கோபிச்செட்டிப்பாளையம், கள்ளிப்பட்டி போல்வன போற்றுகின்றன (கா.அ.ச.ரகுநாயகன், முன்சுட்டியது).

ஆண்டுக்கொரு முறையே கம்பனை நினைத்தல் என்ற கட்டுப்பாடின்றித் திங்கள் தோறும், வாரந்தோறும் அல்லது இயன்ற வழி பணியாற்றுதல் எனும் பண்பினையும் பல கம்பன் கழகங்கள் கொண்டுள்ளன. காரைக்குடி கம்பன் கழகம், 'தமிழ் ஆராய்ச்சி மையம்' ஒன்றை நிறுவ

முயன்றுள்ளதும் குறிக்கத்தக்கது. இவற்றின் ஆய்வுப்பணிப் பெருமையை 'ஆய்வுகள்' கட்டுரையிலும் காணலாம். சென்னை, புதுவை கம்பன் கழகம் போல்வன 'அறக்கட்டளை' வழி கம்பராமாயணச் சொற்பொழிவுகளை ஆண்டு தோறும் நடத்துதலும் குறிக்கத்தக்கது. பல்வகைப் போட்டிகளால் மாணாக்கர் அறிவுத்திறனைப் பெருக்குதலிலும் பல கம்பன் கழகங்கள் முன்னிற்கின்றன.

சொற்பொழிவாளர்

கம்பர் புகழேணிகளில் குறிப்பிடத்தக்க முன்னோடிகளில் கம்பராமாயணச் சொற்பொழிவாளரும் அடங்குவர். கம்பராமாயண வாசிப்பு மற்றும் சொற்பொழிவு எனக் கம்பர் ஆர்வலர் இல்லங்களிலும் கோயில் முதலான பொதுவிடங்களிலும் இவர்தம் பணி சிறந்துள்ளது.

'கம்பர் காலம் முதல் பக்திக்காகவோ, கதைக்காகவோ, இலக்கியத்துக்காகவோ கம்பரை ஆழ்ந்து பயின்று அனுபவித்துத் தம் அனுபூதியை மக்களுக்கு எடுத்துக் கூறுவதையே தலைசிறந்த தமிழ்ப்பணியாகக் கொண்ட புலவர் பெருமக்கள் நெடுகிலும் இருந்திருக்கிறார்கள். இவர்களைக் 'கம்பராமாயணப் பிரசங்கிகள்' என்றே அழைத்து மக்கள் சிறப்புச் செய்துள்ளனர். இதைக் கம்பராமாயணக் காலட்சேபம் அல்லது வாசிப்பு என்பர். தமிழ் நாட்டில் மட்டுமின்றி, கன்னட, மலையாள, தெலுங்கு நாடுகளிலும் கூட இப்பிரசங்கிகள் இருந்திருக்கின்றனர். கருநாடகத்தில் நாராயணன், ராமப்பன் என்ற இருவர் கம்பராமாயணக் காலட்சேபம் செய்து வந்தனர் என்பது கி.பி.1376 ஆம் ஆண்டுக் கல்வெட்டால் புலனாகின்றது' என்பர். (துக்கை ராமாயணம், கு.அருணாசலக் கவுண்டர், பதி, ஆய்வுரை ப.XLIV).

வெ.ப.சுப்பிரமணிய முதலியார் தம் கம்பராமாயண சாரம்–யுத்த காண்டம் முன்னுரையில், 'மலையாள ஜில்லாவில் (Malabar) கோவில்களில் கம்பராமாயணத்தைப் பிரசங்கித்தற்கு மானியங்கள் ஏற்பட்டுத் திருவிழாக் காலங்களில் அயல் மொழியினரான மலையாளிகள் கம்பராமாயணப் பாட்டுப்பாடிப் பொருள் கூறும் திருப்பணி செய்து வருகின்றார்கள். இவ்வழக்கம் மலையாளத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழே தாய்மொழியாய் இருந்த காலத்தில் ஏற்பட்டு, வெகுபிரபலமாய் இருந்திருக்க வேண்டுமென்பதும் அந்தப் பிரபலத்தின் ஆற்றல் அவ்வழக்கத்தைத் தமிழராயிருந்த மலையாளிகளின் தாய்மொழி மலையாளமாக மாறியபின்னும் நிலைத்திருக்கச் செய்திருக்கிறது என்பதும் ஊகித்தற் பாலவையாயுள்ளன. தெலுங்கு ஜில்லாக்களில் கம்பராமாயணத்திலுள்ள சுந்தர காண்டம் தெலுங்கெழுத்தில் எழுதப்பட்டுப் பாராயணம் செய்யப்பட்டு வருவதும் கம்பராமாயணச் சிறப்பை வலியுறுத்தும். கம்பராமாயணப் பிரசங்கமே தங்கள் வாழ்வு முயற்சியாகக் கொண்டு கம்பராமாயணப் பிரசங்கிகளென்ற பெயர் வகித்த புலவர் பெருமக்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் பலர் பல

இடங்களில் இருந்து வந்திருப்பது வேறெந்த நூலுக்குமில்லாத தனிச்சிறப்புடையது கம்பராமாயணம் என்பதை இறுதியாகவும் உறுதியாகவும் நிலைநாட்டுகிறது' என்றுரைத்திருப்பதும் (பக்.XXVI-XXVIII) கூறத்தக்கது.

வீரராகவ முதலியார் என்பவர் கம்பராமாயணம் முழுமையையும் நெட்டுருப்பண்ணியிருந்தார். இலங்கையை அரசாண்ட பரராச சேகரரிடம் கம்பராமாயண அவதானம் செய்து யானைக் கன்றும் வளநாடும் பரிசில் பெற்றார் என்ற கூற்றும் இணைத்துக் கருதற்பாலது. தங்கம்மா அப்பாக்குட்டி எனும் பெண்பாற் புலவர் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து கம்பராமாயணச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். இவை பாரெல்லாம் பரந்த கம்பன் புகழைக் காட்டுகின்றன.

"977 ஆம் ஆண்டு கோட்டாற்றில் வைத்தியநாதன் செட்டியார் இராமாயணம் வாசிக்க வைத்த போதும் இராமாயணம் இராமசாமியும் ஒரு தரம் பிழைபார்த்தான் (இரத்தினக் கவிராயரின் கி.பி.1777 ஐச் சார்ந்த கம்பராமாணச் சுவடி)" என்ற உ.வே.சா.நூல்நிலைய சுந்தரகாண்டப் பதிப்பு முன்னுரையும் நோக்கத்தக்கது. 'சில ஆண்டுகள் (ஐம்பதுகளில்) ராய.சொ.தலைமையில் சொ.முருகப்பா அவர்களின் இல்லத்தில் கம்பராமாயண ஆராய்ச்சி நடைபெற்றது. செருகு கவிகள் இவை என்று இனங்கண்டு அவற்றை நீக்க வேண்டுமென்பது திட்டம்' எனச் சுப்புரெட்டியார் (இராமர் தோத்திரம், முன்னுரை) கூறியுள்ளார். இவை இராமாயண வாசிப்புகள் தனியார் இல்லங்களில் நிகழ்த்தப்பட்டதுடன் அவை ஆராய்ச்சிக்கும் இடமளித்ததையும் காட்டுகின்றன.

'எங்கள் குடும்பத்தில், என் தந்தையார் காலத்தில் புரட்டாசி மாதந்தோறும் கம்பராமாயணம் படித்தல் வழக்கம். பக்கத்தில் உள்ளவர்கள் பலரும் கதை கேட்க வருவார்கள். பட்டக சாலையில் உள்ள மாடத்தில் இராமர் பட்டாபிஷேகப்படம் கொலுவிருக்கும். அதற்குப் பலவகை அலங்காரங்கள் செய்யப்பட்டிருக்கும். அதன் எதிரில் மரத்தாலான சிக்குப்பலகையில் கம்பராமாயண வசனப் புத்தகம் மஞ்சள்–குங்குமம் – மாலை சார்த்தப் பெற்று மங்கலமாக அமர்ந்திருக்கும். இராமன் படத்திற்கு வழிபாடு நடந்து தீபாராதனை காட்டப்பெறும்; அதன் பிறகு கம்பராமாயணப் புத்தகத்திற்கும் அப்படியே நடைபெறும். எல்லாம் ஆனபின் என் தந்தையார் அல்லது என் சிறிய தந்தையார் இறைவணக்கம், பல சுருதி முதலிய பாடல்களைப் படித்தபின் இராமகாதையை முதல்நாள் விட்ட இடத்திலிருந்து படிப்பார்கள்' எனும் கூற்று (கம்பன் அடிப்பொடி, கட்டுரைக்களஞ்சியம், ப.145) இல்லங்களில் கம்பன் சிறப்பிக்கப்பட்ட முறைமையை வெளிப்படுத்துகிறது.

"கம்பநாடர் இதழைத் தோற்றுவித்துக் கம்பன் புகழ் பேசிய மோகனூர் கோவிந்தராஜருக்குக் கம்பராமாயணப் பாடல்கள் எல்லாம் மனப்பாடமாகத்

தெரியும். இவர் இராமாயணச் சொற்பொழிவுகளையும் செய்து வந்தார். பத்துநாள் இருபதுநாள் தொடர் சொற்பொழிவு செய்வார். அப்போது அவர் கையில் எந்த நூலும் இருக்காது. தொடர்ந்து மூன்று நான்கு மணிநேரம் சொற்பொழிவாற்றுவார்...... பலர் அவரிடம் பாடம் கேட்டனர். தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கம் அவர்களுள் ஒருவராவார்' என்பதும் அறியத்தக்கது (கா.அ.ரகுநாயகன், முன்சுட்டியது.)

'இன்று தமிழகத்தில் கம்பராமாயணப் பாடல்கள் யாவையும் மனப்பாடம் செய்தவர்; கம்பனே தமிழ், தமிழே உயிர் என்று வாழ்பவர் திரு.வி.தியாகராஜன். கம்பனின் சொல்லழகும், பொருளழகும், சுவையழகும் தெரிந்து மற்றவர்களுக்கும் திரிபின்றி பக்தியுடன் எடுத்துரைப்பதில் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை' என்று ர.சு.நல்லபெருமாள் (கம்பன் காவியச் சாரம் – கிஷ்கிந்தா காண்டம், முன்னுரை) பாராட்டுவார்.

கம்பனை முழுமையாக மனதில் பதிய வைத்தோருள் பூண்டி அரங்கநாதமுதலியாரும் குறிக்கத்தக்கவராவார் (மயிலை. சீனி.வேங்கடசாமி – பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்,ப.226). கெ.என்.சிவராஜபிள்ளையின் தமையனார் கம்பராமாயணப் பிரசங்கம் செய்வதையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்து, 'கம்பராமாயணம் குமரேச பிள்ளை' எனச் சிறப்புற்றுள்ளார். இடையூர் சதாசிவஅடிகள், மகிபாலன்பட்டி செய்யது இபுராஹிம் புலவர் முதலானோர் சிறந்த கம்பராமாயணப் பேருரையாளராகப் புகழ் பெற்றுள்ளனர்.

1908 இல் யுனிடேரியன் சர்ச்சில் (இங்கிலாந்தில்) கம்பனைப் பற்றி ஆங்கிலத்தில் வ.வே.சு. ஐயர் நிகழ்த்திய சொற்பொழிவு லண்டன் இதழில் பின் வெளியிடப்பட்டதும் அறியத்தக்கதாம். இதன் சுருக்கம் அவரது ஆங்கில நூலின் (Kambaramayana - A study) இரண்டாம் கட்டுரையாக உள்ளது என்பர் (பெ.சு.மணி, வ.வே.சு.ஐயரின் கம்பராமாயணக் கட்டுரைகள்,ப.10).

கம்பன் கழகங்கள் நடத்தும் கம்பன் விழாக்களில் நிகழும் பலவகையான சொற்பொழிவுகளையும் இவண் எண்ணலாம். புலவர் கீரன் தொடர்ந்து 17 ஆண்டுகள் புதுவை கம்பன் கழகத்தில் சொற்பொழிவாற்றிச் சாதனை புரிந்துள்ளார். இவற்றால் கம்பன் கழகங்களின் குறிக்கோள்களுள் ஒன்றான சொற்பொழிவுகள் வழி கம்பன் புகழ் பரப்பும் பணி இன்று இனிதே நிறைவேறுவது அறியலாகும்.

"கொங்கு நாட்டு மக்கள் குறிப்பாகக் கொங்கு நாட்டு வெள்ளாளர் தங்களைக் கம்பனுக்கு அடிமையாகவே கூறிக்கொண்டனர். 'கல்லும் காவிரியும் உள்ள அளவும் கம்பநாடன் தமிழுக்கு அடிமை நாம்' என்று கூறிக்கொள்ளும் அளவுக்குக் கடந்த 350 ஆண்டுகளுக்கும் மேலாக, கம்பனின் அடியார்களாக அவனது இலக்கியத்தில் மெய்மறந்திருப்பவராக

வாழ்ந்த பெருமை அவர்களுக்கும் உண்டு" எனும் இரா.நாகசாமியின் மொழி (துக்கை ராமாயணம் – கு.அருணாசலக் கவுண்டர் (பதி) முகவுரை) இத்தகு சொற்பொழிவுகளால் பொது மக்களிடையே கம்பர் பெற்ற செல்வாக்கினை உணர்த்துகிறது.

கம்பனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த வி.எஸ்.முதலியாருக்குக் கம்பராமாயணத்தில் ஈடுபாட்டை உருவாக்கியது, சென்னை ஒய்.எம்.சி.ஏ.இல் ரா.பி.சேதுபிள்ளை நிகழ்த்திய கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவுகள் என்பதும் கூறற்பாலது.

பாளையங்கோட்டை கம்பன் கழகத்தில் பன்னிரண்டு ஆண்டுகட்குமேல் கே.பக்ஷிராஜன் தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிறும் மாலை 7 மணி முதல் 9 மணி வரை இராமாயணச் சொற்பொழி வாற்றியுள்ளார் (கம்பராமாயண ஆழ்கடலில் சில முத்துக்கள்)

கம்பனடிப்பொடி (மூலநாசம்), ரா.பி.சேதுபிள்ளை (கம்பராமாணத்தில் வள்ளுவர்), ச.வே.சுப்பிரமணியன் (கம்பனும் உலகியலறிவும்), சி.பாலசுப்பிரமணியம் போன்றோரின் வானொலி உரைகளையும் இவண் எண்ணலாம். கம்பன்விழாக் கருத்துரைகளை வானொலியும், தொலைக்காட்சியும் ஒலி, ஒளி பரப்பிக் கம்பன் புகழ் பரப்பும் பணியில் தம்மையும் இணைத்துள்ளன. இங்ஙனம் பொதுவிடங்களில் பேசப்படும் உரைகள் பின்னாளில் நூலாக்கம் பெற்று நிலைப்பதும் கூறத்தக்கது. ப.அருணாசலம் சனவரி 1967இல் கோலாலம்பூர் அந்தர் யோகத்தில் நிகழ்த்திய உரையின் விரிவு 'வீடணன்' ஆக நூலாக்கம் கண்டதைச் சான்றாக்கலாம். இன்றும் தமிழகத்திலிருந்து சிலர் அவ்வப்போது இராமாயணச் சொற்பொழிவுகளை மலேசியா, சிங்கப்பூரில் நிகழ்த்துவது குறிக்கத்தக்கது.

1955 இல் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நிகழ்ந்த கம்பன் கருத்தரங்கு, சென்னைக் கம்பன் கழகம் சாகித்திய அக்காதெமியுடன் இணைந்து நடத்திய 'Kambaramayana Meet' (1989), மலேசியா கோலாலம்பூரில் நிகழ்ந்த முதலாவது அனைத்துலக இராமாயண மகாபாரத ஆராய்ச்சி மாநாடு (1999) மற்றும் பல்கலைக் கழகங்களிலும் நிறுவனங்களிலும் நிகழும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் போன்றவற்றையும் இவண் எண்ணலாம்.

ஜி.கே.சுந்தரம் கம்பன் புகழ் பரப்புவதற்காக மேடையேறிய பெரியோர்களாக, பண்டிதமணி கதிரேசன் செட்டியார், வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், எஸ்.வையாபுரிப்பிள்ளை, இரா.பி.சேதுப்பிள்ளை, கோவைக்கிழார் இராமச்சந்திரஞ்செட்டியார், இராகவையங்கார், பிஸ்ரீ.பாஸ்கரத் தொண்டைமான், எஸ்.மகராசன், அ.சீனிவாசராகவன், கி.வா.ஜகந்நாதன், மு.மு.இஸ்மாயீல், அ.ச.ஞானசம்பந்தன், தெ.ஞானசுந்தரம் முதலானோரையும்,

கம்பன் மேடைக் கவிஞராக அப்துல் ரகுமான், மரியதாஸ், சாலமன் பாப்பையா ஆகியோரையும் சுட்டுகிறார் (புதுவைக் கம்பன் விழா மலர், 1985, பக்.39–42). இப்பட்டியல் இன்று மிக நீளும் பெற்றியது. அரங்கசீனிவாசன், அறிவுநம்பி, அ.அருணகிரி, தி.இராசகோபாலன், மு.இராமசாமி, இளம்பிறை மணிமாறன், உமையாள் முத்து, காந்திமதி, சுகி.சிவம், சு.சிவகாமசுந்தரி, சுதாசேஷய்யன் என மிகச் சிலரை இங்கு எடுத்துக் காட்டாக்கலாம். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் பெண் பேச்சாளர்களும் பெருகி நிற்றல் கூறத்தக்கது.

இந்தியா மற்றும் உலக அளவில் அவ்வப்போது நிகழும் இராமாயண ஆய்வு மாநாடுகளில் தவறாது கம்பனது புகழும் ஓங்கி ஒலிக்கக் கேட்கலாம்.

கலைகள்

கம்பராமாயணத்தின் புகழ் இசை, நாட்டியம், நாடகம் எனப் பல்வேறு கலைகளாலும் இசைக்கப்படுதல் நவிலத்தக்கது. வில்லிசையால் கம்பனைச் சுவைக்கச் செய்பவர் சுப்பு ஆறுமுகம். டி.என்.சேஷ கோபாலன் போன்றோரால் தமிழிசை மேடைகளில் கம்பன் பாடல்கள் முழங்கப்படுகின்றன.

கம்பன் விழாக்கள், கம்பன் இசையமுதுக்குத் தனியிடம் தருவதும் அறிதற்பாலது. ஆண்டுதோறும் பல இசைக்கலைஞர்கள் தம் இசையால் கம்பருக்குப் புகழ் சேர்க்கின்றனர். கிருபானந்த வாரியார், வி.தியாகராஜன், சிவானந்த விஜயலக்ஷிமி போன்றோர் இசைச் சொற்பொழிவாற்றிச் சிறப்பித்துள்ளனர். இன்று இதனைச் சரசுவதி ராமனாதன், சாரதா நம்பியாரூரன் போன்றோர் கம்பன் விழா மேடைகளில் இசைக்கின்றனர்.

இசைவடிவிலே மேடைகளில் பாடுவதற்கு ஏற்றமுறையில் இருநூறுக்கும் மேற்பட்ட பாடல்களை இராகம், தாளம் அமைத்து பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற சங்கீதப் பாணியில் அப்பாடல்களை எழுதி திருச்சி வானொலியில் கம்பனடிப்பொடி பாடச்செய்தார் என்பதும் இங்கே உணர்த்தத்தக்கது. (கம்பன் விழாமலர்; 1988,ப.41)

கம்பராமாயணத்தை நாட்டிய நாடகமாக, நாட்டியக் கலைஞர் பத்மா சுப்பிரமணியம், இந்திராணி போன்றோர்வழி பலரும் கண்டுகளிக்க, திருப்பத்தூர் கம்பன் கழகத்தினர் துணை நிற்பதும் குறிப்பிடற்பாலது.

சுத்தானந்த பாரதியார், கம்பன்கலைஓவியங்கள் பலபரத நாட்டியங்களுக்குப் பொருத்தமாக இருக்கின்றன என்றுகூறிச் சில பாடல்களுக்குத் தாளமும் ராகமும் சுட்டியுள்ளதும் (கம்பன் மலர், 1965) எடுத்துக்காட்டத்தக்கதாகும்.

திருப்பத்தூர் கம்பன் கழகம் மாணாக்கர்களுக்காகக் கம்பராமாயண ஓவியப் போட்டிகளை நடத்துவதும் பாராட்டத்தக்கது.

கு.அழகிரிசாமியின் வஞ்சமகள் முதற்கண் மேடைநாடகமாக 1963 இல் அரங்கேறியது சுட்டத்தக்கதாகும். டி.கே.எஸ்.சகோதரர்களின் சம்பூர்ண ராமாயணமும் மேடை நாடகமே. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதின் முற்பாதியிலும் நடந்த இராமாயண நாடகங்களையும் இங்கு எண்ணலாம் (உடுமலை முத்துச்சாமிகவிராயர், ஏகை சிவ சண்முகம்பிள்ளை...). சங்கரதாசு சுவாமிகள் லங்காதகனம், வாலிமோட்சம், ராம–இராவண யுத்தம், பாதுகாபட்டாபிஷேகம் எனப்பல இராமாயண நாடகங்களால் கம்பரையும் நினைக்கச் செய்துள்ளார். ஆய்வு நூல்கள் பல நாடகவடிவம் கொண்டிலங்குவதும் கூறத்தக்கது.

காவ்யராமாயணம் படைத்த கே.எஸ்.ஸ்ரீனிவாசன் கம்பர் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு பாட்டும் உரைநடையும் கலந்த வடிவில் 'கம்பர்' எனப் பெயரிய நாடகம் ஒன்றைத் தயாரித்துள்ளதும் தனித்துச் சிறப்பிக்கத்தக்கதாகும். இதற்கு ஆங்கில மொழிபெயர்ப்பும் நல்கியுள்ளார். இதனைச் சென்னை சின்மயா யுவகேந்திராவினர் ஒலி–ஒளி நாடகமாக வழங்கியுள்ளது கம்பரின் தனிப்பெருமைக்கு மற்றொரு மணிமகுடமாகும். இதன்கண் உள்ள பாடல்களுக்குக் கே.வி.மகாதேவன் இசையமைக்க, பிரபல திரைப்படப் பின்னணிப் பாடகர்களான எஸ்.பி.பாலசுப்பிரமணியம், வாணிஜெயராம் ஆகியோர் பாடியுள்ளனர். இக்கம்பர் ஒலி–ஒளிக் காட்சி (Kambar in Light and Sound)1980/1981 இல் நிகழ்ந்ததாகத் தெரிய வருகிறது. (கம்பர், Kambar, சின்மயா யுவகேந்திரா, சென்னை.

ராமானந்த சாகர் இந்தியத் தொலைக்காட்சிக்காக இந்தியில் எடுத்த சின்னத்திரை 'இராமாயணம்' நிகழ்வுகளுக்குக் கம்பராமாயணமும் துணைநின்றதும் கம்பர் இந்திய அளவில் பெரும் புகழ் பெற்றுள்ளதற்குச் சான்றாகும்.

கேரளத்தில் கம்பர் காவியத்தைத் தோற்பாவை நிழற்கூத்தாகக் கிருஷணன் குட்டிப் புலவர் நடத்தி வருவதும் அறிந்து மகிழத்தக்கது[1]

---

1. The performance of leather shadow puppet theatre is popularly known as, 'Kamba Ramayana Aadal Parru' performed as part of the ritual or the votive offering to the Mother goddess especially to Bhagavathy Amman, the presiding deity of most of the temples in Kerala. Krishnan Kutty Pulavar, the recipient of the Sangeet Natak Akademi Award of 1980, is one of the living exponent of the art form who in herits the tradition of leather shadow puppet theatre from the family of puppeteers who migrated from Ramanathapuram district of Tamilnadu to Kerala during the reign of Nayakas and Marathas in Tamil Nadu.

-C.Raveendran, Kamban's epic as shadow play, ஆய்வுக் கட்டுரையின் சுருக்கங்கள், முதலாவது அனைத்துலக இராமாயண மகாபாரத ஆராய்ச்சி மாநாடு, கோலாலம்பூர், மலேசியா, 1999,ப.120.

இவரது அயோத்தியா காண்டத்தை மட்டும் சங்கீத நாடக அகாதெமி வெளியிட்டுள்ளது என்பர் (மு.இராமசுவாமி, இராமாயணம் தோற்பாவை நிழற்கூத்து, ப.XX).

டி.என்.சேஷாசலத்தின் கலாநிலய இதழ் கம்பன் கவிகளுக்கான சொல்லூடாட்டம் (Cross Word) எனும் சொல் அறிவு விளையாட்டைக் காட்டியிருப்பதும் எண்ணி மகிழத்தக்கது.

திருப்புவனக் கோயிலில் அமைந்துள்ள இராமாயணச் சிற்பங்கள் கம்பன் பாடல்களுக்கு எழுந்தவை என்ற கருத்தும்[2] சுட்டற்பாலது.

இங்ஙனம் பல்வேறு கலைகளாலும் சிறப்பிக்கப்படும் தனிச்சிறப்பும் கம்பரின் பெருமையை மிகுவிக்கிறது. இன்றைய திரைப்படப்பாடல்களும் கம்பரின் புகழுரைத்து நிற்பதும் காணத்தக்கது.

வழித்தோன்றல்கள்

கம்பராமாயணம் தோன்றிய காலந்தொட்டே தன் கவித்துவத்தால் அது பலரையும் தன்பால் ஈர்த்துள்ளதை உணர முடிகிறது. சொற்பொழிவாளரால் அதன் புகழ் பரவியது போன்று புலவர் பலர் அதனை அடியொற்றி அதன் மாற்று வடிவங்களாகக் கவிதை படைத்துக் கம்பருக்கு வழித்தோன்றல்களாகியுள்ளனர். மரபு வடிவம், நாட்டுப்புறவியல் வடிவம், புதுக்கவிதை வடிவம், உரைநடை வடிவம் எனப் பல வடிவங்களை அவர்கள் தம் படைப்புக்கு வழங்கியுள்ளனர்.

பத்தர்பாடி எம்பெருமான் என்பவர் கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் நல்லதம்பிக் காங்கேயனால் ஆதரிக்கப்பட்டு 'தக்கைராமாயணம்' படைத்துள்ளார். கம்பன் வழி நூல்களுக்கு முன்னோடியாகப் பெருமையுறும் இந்நூல் தக்கை எனும் இசைக்கருவியின் துணையுடன் பாடப்படும் சிறப்புடையது. கு.அருணாசலக் கவுண்டர், தமிழ்நாடு அரசு தொல்பொருள்

---

2. The entire Ramayana as told by Kamban, is given a stamp of permanance in stone at Tribhuvanam. We are quite aware of the intimacy that existed between the Cola king and Kamban, both sharing an immense mutual admiration. They were the kings of the material and literary worlds respectively, living in mutual influence. One king created the 'Ramavatara' in verbal grace, while the other king, with his royal grace, sponsored yet another king to transform both these into sculptural grace. Thus the Ramayana sculptures of Tribhuvanam temple stand in eternal silence to proclaim the immortality of genuine beauty in Literature, Art and more than anything else in Human Relationship. (The Tribhuvan temple is said to have been built between 1202 and 1209 A.D. by Kulothunga III) - Padma Subramanyam - Ramayana Sculptures in Tribhuvanam, கம்பர் – Kamban, Chinmaya Yuva Kendra, Madras, 1981,P.150.

ஆய்வுத் துறைக்காக 1983 இல் இதனைப் பதிப்பித்துள்ளார். அதன் முன்னுரையில், 'கம்பராமாயணத்தின் தனிக்காப்பியச் சிறப்பும், அதன் கற்பனைத் திறனும் உன்னதமான கருத்துக்களும் எம்பெருமானை முற்றிலும் தம்வயம் ஆக்கியிருந்தன. அந்தத் தெய்வமாக் கவிதையின் அழகு அனைத்தையும் ஆழ்ந்து அனுபவித்து அந்த ஆனந்தத்திலேயே திளைத்திருந்தார். தம் அனுபவத்தை எடுத்து வழங்குவதையே வாழ்வின் தனிப்பெரும் நோக்கமாகக் கொண்டு அதற்கென்றே தம்மைத் தத்தம் செய்திருந்தார். அதனால் அவரது உள்ளத்திலிருந்து உணர்ச்சி மயமாய்க் கம்பரது கருத்துகள், கற்பனைகள், அவைகளைத் தாங்கி நிற்கும் சொற்கள், சொற்றொடர்கள் எல்லாம் அடுக்கடுக்காய் இசைந்து கானவிலாசமாய் உளங்கசிந்து பெருகியது தான் தக்கைராமாயணம்' (XXVI) என நவிலப்பட்டுள்ளது.

கம்பருடைய கருத்து, கற்பனைகளுக்குப் புதுவிளக்கமாகவும், அருஞ்சொல் தொடர்களுக்கு நுண்பொருளாயும் உள்ள தக்கையின் பாடல்களை இனங்காட்ட அவற்றின் அடிக்குறிப்பாகக் கம்பர் பாடல்கள், பாடற்பகுதிகள் கொடுக்கப்பட்டிருப்பதும் (பதிப்புரை) சுட்டத்தக்கது.

இந்நூலின் ஆய்வுரை, 'பண்டைய காலட்சேப மரபில் வந்த வில்லுப்பாட்டு உடுக்கைப்பாட்டு முறையைப் பின்பற்றித் தமது பிரவசனத்துக்குத் தக்கையின் தாளகதியை ஆதாரமாய்க் கொண்டு கம்பர் விருத்தங்கள் பத்தாயிரத்தையும் 3250 இசைப் பாடல்களாக மாற்றியமைத்துப் பாடியிருக்கிறார். கம்பர் காவியத்தின் கட்டுக்கோப்பு, கதைப்போக்கு, கற்பனை நயம், கவிதைப் பண்பு, நாடகபாவம் முதலியவை சிறிதும் சிதையாதவாறு அவர் காப்பியத்தை எளிமையாக்கியிருக்கிறார். அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனைகள் பிற்கால மராட்டியத் தொடர்பால் பிரபலமான அரிகதையைத் தழுவி அமைந்தவை. தக்கைராமாயணமோ மக்களிடையே வழங்கி வந்த காலட்சேபக் கலைமரபில் தோன்றியது (XLV). இதன் மூலம் தமிழ் இலக்கிய வகையிலே புதுமாதிரி (நாட்டார் பாடலாய் பாமர காவியமாய் இசைப் பாடலாய்) ஒன்றைப் படைத்துள்ளார். இசைத்தமிழ்க் காப்பியம் என இந்நூலை எண்ணலாம் (LIX).

நானூறாண்டுகளுக்கு முன்னம் இயற்றப்பெற்ற தக்கை ராமாயணம், கொங்கு நாட்டுப் பக்கம் வழங்கிய கம்பராமாயணத்தின் மறுபதிப்பாக இருப்பதால், அப்போது வழங்கிய கம்பர் கவிகளை இனங்காட்டுவதுடன் அதன்பின் புகுந்துவிட்ட செருகுகவிகள், களையப்பட்ட கம்பர் பாடல்கள், பாடல்களின் பிறழ்ச்சிகள் இவைகளை அறிவதற்கும் பாட பேதங்களை ஓர்ந்துணர்ந்து உண்மைப் பாடத்தை நிச்சயிப்பதற்கும், கம்பர் பாடலின் நுண்பொருள், புதை பொருளைக் காண்பதற்கும் இது உதவுகிறது" (LXX) என மொழிந்துள்ளது. இப்பெருமை காரணமாகவே, இந்நூல் இருபதாம்

நூற்றாண்டிற்குரியதன்றாயினும் இங்கே இணைக்கப்பட்டுள்ளது. மற்றும் கம்பர் வழித்தோன்றல்களில் இவரே மூத்தவராக முதல்வராக அமையக்கூடும் என்ற கருத்தினாலும் இதனைச் சுட்டிச் செல்லுதல் தேவையாகின்றது.

இதன்பின் கம்பனுக்குப் புகழ்சேர்த்த மற்றொரு வழிநூலாக அருணாசலக் கவிராயரின் 'இராமநாடகக் கீர்த்தனை' சிறந்துள்ளது. இது தெருக்கூத்தாக நடிக்கப்பெற்றது என்பர் (ம.பொ.சி.,கம்பனில் தேசியம், ப.42).

பத்தொன்பதின் இறுதி அல்லது இருபதின் முற்பகுதியில் தோன்றியதாகக் கருதப்படும் நலங்கு மெட்டு இராமாயணம் ஆறு காண்டங்களில் கம்பன் கதைப் போக்கைத் தருகிறது. சங்கராபரணம் இராகத்தில் பாடக்கூடியது. உடுமலைப் பேட்டை வழக்கறிஞர் சோ.கிருஷ்ணன் என்பவர் பாடியுள்ளார். 13 மாதங்களில் எழுதி முடிக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்நூலை எஸ்.சௌந்தரபாண்டியன் (1992) பதிப்பித்துள்ளார்.

1897இல் கோ.பெரியண்ணன் பதிப்பித்துள்ள 'ஏற்றப்பாட்டில் இராமாயணம்' கம்பனோடு மிக நெருங்கிய தொடர்புள்ளதாகச் சான்றுகளோடு நிறுவப்பட்டுள்ளது.

128 பாடல்களில் 'கூவாய்–குயிலே' எனும் மகுடத்துடன் கம்பனைத் தழுவி இயற்றப்பட்டுள்ள ஆசிரியர் அறியப்படாத (அமிர்த கவி?) குயில்ராமாயணம் அடுத்துக் குறிக்கத்தக்கதாகும். இதனைச் சரசுவதி மகால் வழி ம.சிராளன் 1969 இல் பதிப்பித்துள்ளார். அதனின்றும்,

தேனந்த மொழி கைகேயி உரைகேட்டு நம்மை அவர்
தெண்ட காரணிய வனம் சேர்ந்து – குயிலே
மானந்த மொழிச் சீதை மான் வந்தது கண்டு
மருள் கொண்டு சொல்லும் வார்த்தை கேட்டு – குயிலே
நான் வந்தேன் இத்தூரம் நன்குலத்தில் உள்ளதோர்
நாரியர்கள் வார்த்தைதனைக் கேட்டு – குயிலே
ஏன் வந்தாய் இலட்சுமணா என்று மிகவே அழுத
சோதி ரெகுநாதன் வரக் கூவாய் – குயிலே (5)

எனும் பாடலைச் சான்றுரைக்கலாம்.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் கோட்டையூர் சுப்பிரமண்ய ஐயர் என்பவரால் 'இராமாயண வெண்பா' படைக்கப்பட்டுள்ளது. 9379 வெண்பாக்களை உடைய இந்நூலை 1930இல் ராமநாதன் செட்டியாரின் பொருளுதவியுடன் வெங்கட்டராம ஐயர் வெளியிட்டுள்ளார். 'தாமும் இந்த ராமாயணமே செய்ய வேண்டுமென்றும் அதிலும் மற்றெவர்களுடைய கருத்துமின்றிக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பன் சொல்லிய வழியே தாம் செய்ய வேண்டுமென்று துணிவுடையவராய் கம்பகவி விருத்தப்பா

வானபடியால் தாம் வெண்பாவாகப் பாடவேண்டுமென்று உத்தேசித்துக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு பெரும்பாலும் நேரிசையும் இன்னிசையுமாகவே ஆறு காண்டங்களையும் பாடியுள்ளார்' என்பர்.

இக்கூற்றின் உண்மையை உணர்த்த,

திசைத்ததுவும் இல்லை எற்குத் தீயோர் தெரிய
இசைத்ததுவும் இல்லை முனம் ஈந்தாய் நசைத்த வரம்
இன்று தர நன்றாம் இலையேல் வசையாக்கிப்
பொன்றுதலாம் என்றாள் பொரிந்து.

இந்த நெடுமாற்றம் ஏழை வழங்குதல் முன்
வெந்த கொடும் புண்ணின் வேலென்னச் சிந்தை
திரிந்து செயிர் கொண்டான் சிறந்த மகன் அன்றி
வருந்தும் உயிர் வேறு அறியா மன்னன்
(கைகேயி சூழ்வினைப் படலம் : 19,20)

எனும் இவ்விரு பாடல்களே போதுமானதாகும்.

தி.கோ.நாராயணசாமிப்பிள்ளை யென்பவராலும் ஓர் இராமாயண வெண்பா இயற்றப்பட்டதாக மயிலை சீனி வேங்கடசாமி (முன் சுட்டியது ப.284) குறித்துள்ளார்.

யோகி சுத்தானந்த பாரதியார் கம்பராமாயண ஆரண்ய காண்டத்தின் விராதன் வதைப் படலம் முதல் சபரிப் படலம் வரையுள்ள கதைப்பகுதியை 'மாயமான்' (கம்பராமாயணக் கலைக்காட்சி) எனத் தந்துள்ளார். கம்பனைப் புது வடிவில் தமிழர் நுகர வேண்டுமென்ற பேரவாவில் படிக்கவும், நடிக்கவும், கம்பன் கலையமுதைப் பருகவும் ஏற்ற நாடக வடிவில் இதனை ஆக்கியுள்ளார். கம்பன் சொற்றொடர்களும் பாடல்களும் இதில் விரவியுள்ளன.

கம்பனையும் வால்மீகியையும் இணைத்து உரைநடையில் கே.எஸ்.ஸ்ரீனிவாஸன் என்பார் 'காவ்ய ராமாயணம்' தந்துள்ளார் (1971). இந்நூல் சுமார் நான்கு ஆண்டுகள் கணையாழியில் தொடராக வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

தி.வேங்கட கிருஷ்ணய்யங்காரின் 'அருள்மிகு இராகவ காவியம்' (1975) 6000 பாடல்களைக் கொண்டது. பல்வகை யாப்புகளால் ஆனது. இவர் தம் முன்னுரையில், 'மிக விரிந்து பரந்து செல்லும் கம்பராமாயணத்தை விடச் சுருக்கமாகவும் எளிமையாகவும் அதே கதையைப் புதுக்கி அமைத்தால், பெரும் புலமையில்லாத ஆனால் தமிழ்ப் பற்றுள்ள பெரியோர்களும் மாணவர்களும் பிறரும் இதைப் படித்து இன்புறலாம் என்ற எண்ணத்தால் இதை இயற்றியுள்ளேன்... இந்நூல் கம்பராமாயணத்திலிருந்து ஏறத்தாழ 50 இடங்களில் வேறுபடுகிறது' என்று குறித்துள்ளார். கம்பர், வால்மீகி, துளசிதாசர், மைதிலி, சரண் குப்தா ஆகியோர் படைப்புகளின் கலவை இந்நூல்.

திரிவேணி ராமாயணத்தை (1976) எஸ்.ஜகந்நாராயணன் கம்பர், வால்மீகி, துளசி என மூவரையும் உட்கொண்டு வியாக்யான உரைநடையில் உருவாக்கியுள்ளார்.

'காலம் காலமாகக் கிளைபரப்பி நிற்கும் கம்பநாடன் புகழைக் காயப்படுத்தாமல் கூடிய வரையில் என் சிற்றறிவின் துணை கொண்டு, இந்த வசனகவிதையை மிக மிகக் கவனமாகப் புனைந்தேன்' என்று, இன்று கம்பருக்குப் பொது மக்களிடையே பெரும் மதிப்பினைத் தோற்றுவித்துள்ள வாலி தம் 'அவதார புருஷன்' (1996) முன்னுரையில் கூறியுள்ளார். கம்பர் படைப்பே இங்கே புதுக்கவிதையாய்ப் பெருக்கெடுத்துள்ளது.

மான்தான்
கானல் நீரைக் கண்டு ஏமாறும்
இங்கே மானே
கானல் நீராய் மாறி ஏமாற்றியது
ராமன்
தொடுவான்;
தொடட்டும் என்று
துள்ளிவரும்
பக்கம்; தொடப் போனால் –
தொடுவான் தனைப் போல –
தொலை தூரம் போய் நிற்கும் (ப.104)

என்பது போன்று தம் எளிய, இனிய சொல்லடுக்கால் கற்பார் சிந்தை கவர்ந்துள்ளார்.

அ.அறிவுநம்பியின் திருஅம்மானை 20 பாடல்கள் கொண்டது. கம்பராமாயணத்தின் மதிப்பினை, பெருமையினை ஆய்வுப்போக்கில் தற்காலச் சமூக அறிவியல் நிகழ்வுடன் ஒப்பிட்டு கம்பர் மற்றும் கதைமாந்தர் வழி வெளியிடுவதாக இது அமைந்துள்ளது. ரா. சீனிவாசனின் 'தெய்வத் திருமகனும்' கம்பர் காப்பியத்தைத் தற்காலச் சூழலுக்கு ஏற்ப வசன கவிதையாக மறு ஆக்கம் கண்டதாகும்.

அருணாசலக் கவிராயரின் அனுமன் பிள்ளைத்தமிழ் (மு.இராமசாமி உரை); கொத்தமங்கலம் சுப்புவின் கம்பராமாயணச் சிந்து, மதுரகவி சீனிவாச ஐயங்காரின் இராமாயண வெண்பா, வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் அகலிகை வெண்பா, கனகராச ஐயரின் இலங்கைப்பரணி, வேம்பு அம்மாளின் இராமாயணக் கீர்த்தனை, கோவி.மணிசேகரனின் கோவிராமாயணம் என நாளும் கம்பருக்கு வழித்தோன்றல்கள் தோன்றுதல் கம்பர் புகழ் என்றும் மங்காது என்பதைத் தெளிவாக உணர்த்துவதாகும்.

மைய, மாநில அரசுகள்

கம்பரின் கவித்திறனுக்குத் தலைவணங்கி இந்திய மையஅரசும் தமிழ்நாடு மற்றும் புதுவை அரசுகளும் அவருக்குத் தங்கள் சார்பில் பலவிதமான மரியாதை செய்துள்ளன. அவற்றை இங்குக் காணலாம்.

மைய அரசு 05.04.1966 இல் கம்பருக்கு அஞ்சல் தலை வெளியிட்டது. சென்னையிலிருந்து காரைக்குடி செல்லும் தொடர் வண்டிக்குக் 'கம்பன் எக்ஸ்பிரஸ்' எனப் பெயர் சூட்டியுள்ளது.

தமிழக அரசு இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டிக் கம்பருக்குச் சிலையைச் சென்னை கடற்கரையில் நிறுவியது. மற்றும் கம்பர் பிறந்த தேரழுந்தூரில் பலர் உதவியுடன் மணி மண்டபம் கட்டியது. கம்பராமாயணத்தை எரித்தோரே இவற்றையும் செய்தது பகைவராலும் அழிக்க இயலா புகழுக்குரிய பெருமையாளர் கம்பர் என்பதை உறுதிப் படுத்துவதாகும். இது போர்க்களத்தில் தன் வலியிழந்து நின்ற இராவணன் தன் பகை இராமனைப் பார்த்து,

சிவனோ அல்லன்; நான்முகன் அல்லன்; திருமாலாம்
அவனோ அல்லன்; மெய்வரம் எல்லாம் அடுகின்றான்;
தவனோ என்னின் செய்து முடிக்கும் தரன் அல்லன்;
இவனோ தான் அவ்வேதமுதல் காரணன்? என்றான் (9837)

என வியந்து நின்றநிலையை நினைவூட்டுகிறது.

தமிழ்நாடு அரசின் நிதிவுதவியால் பி.எஸ்.சுந்தரத்தின் முழுமையான ஆங்கில மொழிபெயர்ப்பு எழுந்ததும் (1991) நவிலற்பாலது.

புதுவை அரசு, மாநில கலை அரங்கிற்குக் 'கம்பன் கலை அரங்கம்' எனப் பெயரிட்டு அவர் பெயரை நிலைப்படுத்தியுள்ளது. புதுவை கம்பன் கழக விழாவில் 'கம்பன் புகழ்' பரிசு வழங்கிக் கம்பரைச் சிறப்பிப்பதும் அறியத்தக்கது.

கம்பர் தேனீக்கள்

கம்பர் கவிச்சோலையில் நுழைந்து, அதன் பலவண்ண மலர்களால் கவரப்பட்டு அதன் தேனருந்திக் களித்த, களிக்கும் தேனீக்கள் பல அது தரும் போதையில் மயங்கி அதனின்று அகல விரும்பாது அதனுள்ளேயே மயங்கிக் கிடக்கின்றன. இத்தகையோர் சிலர் அம்மயக்கத்தைத் தம் புனை அல்லது விருதுப் பெயரால் வெளிப்படுத்தியுள்ளனர். கம்பர் புகழுக்கு அவையும் அணிசெய்வதால் இங்கு இணைக்கப்பட்டுள்ளது.

இராமாயண சாயபு – ஜனாப் தாவூதுஷா (தாருல் இஸ்லாம் இதழாசிரியர்)
இளங்கம்பன் –எம்.கே.இராமன்
இரண்டாம் கம்பன் – வாலி
கம்பநாடகக் கலைஞர் – வி.தியாகராஜன்

கம்பதாசன் – (கவிஞர்)
கம்பர் பித்தன் – என்.எஸ்.குப்புசாமி முதலியார் (என்.எஸ்.கே.)
கம்பர் மாணிக்கர் – ?
கம்பரசிகர் – எஸ்.மகராஜன்
கம்பரப்பர் – ஆ.கு.ஆதித்தர்
கம்பரன்பன் – பி.எஸ்.ஜி.ஜி.கோவிந்தசாமி
கம்பராமன் – எஸ்.கே.ராமராஜன்
கம்பராமாயணக் காவலர், கம்பன் அடிப்பொடி – சா.கணேசன்
கம்பராமாயணத்திலகம் – கே.பக்ஷிராஜன்
கம்பவாணர் – அ.அருணகிரி
கம்பன் அறநெறிச் செல்வர் – ஜி.கே.சுந்தரம்
கம்பன் கவிநயச் செல்வர் – எஸ்.நல்லபெருமாள்
கம்பன் செஞ்சொற் கொண்டல் – ச.கு.கோதண்டராமன்
கம்பனடிசூடி – பழ.பழனியப்பன்
கள்ளிக் காட்டுக் கம்பன் – இரா.வைரமுத்து
கிறித்துவக் கம்பன் – எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை
ரசிகமணி – டி.கே.சிதம்பர நாதமுதலியார்

இவர் தவிர மற்றும் சிலர் தம் கம்பர் பற்றினை, பக்தியைத் தம் இல்லங்களுக்கு 'கம்பநிலையம்' 'கம்பர் வளாகம்' எனவும் பெயரிட்டு வெளிப்படுத்தியுள்ளனர். இத்தகையோரில் ஒருவரான ஆ.கு.ஆதித்தர் கம்பர் தவிர வேறு புலவர் பற்றிப் பேசமாட்டார்; நாளும் 100 முதல் 200 பாடல் வரை கம்பனைப் படிக்காமல் உறங்கமாட்டார் என்பதும் நவிலத்தக்கது. மற்றும் வ.வே.சு.ஐயர் போன்று தம் நூல் வெளியீட்டகங்களுக்குக் கம்பர் பெயரிடுதலும் பரவலாகக் காணப்படுகிறது. (காண்க : கம்பன் ஆய்வுகள் – நூல்வரிசை).

கம்பர் புகழ் தமிழரிடையே ஆழ வேரூன்றி உள்ளதையே இவை காட்டுகின்றன. இங்கு, 'தமிழகத்தில் குறிப்பாக இராமநாதபுரம், தஞ்சை, குமரி, சேலம், செங்கல்பட்டு மாவட்டங்களில் இராமாயணம் அதிகம் தாக்கம் பெற்றுத் திகழ்ந்திருக்க வேண்டும். இலக்கியம், சிற்பம், நடனம், நாடகம், காலட்சேபம் போன்ற கலைநிகழ்வுகளில் தாக்கம் பெற்றிருந்த இராமன் கதை, பூகோள ரீதியாக இடச் செல்வாக்கும் பெற்றிருந்தது' எனும் இரா.பிரேமா அதனைத் 'தமிழகத்தில் இராமாயணத் தாக்கம்' (1995) என நூலாக வெளிப்படுத்தியிருப்பதையும் கருதலாம். தமிழகத்தில் இராமாயணம் பெற்றுள்ள செல்வாக்குக்குக் கம்பராமாயணமே ஆணிவேர் என்பதில் ஐயமில்லை.

கம்பன் புகழ் நாளும் ஆல் போல் தழைத்து அருகுபோல் வேரோடி, கற்பார் உள்ளங் கவர் கள்வனாய், தமிழ் மொழிக்கு ஓர் கோபுரமாய் ஓங்கி உயர்ந்து நிற்றல் தமிழரின் பெரும் பேறாம்.

புகழ்ப்பூக்கள்

கம்பராமாயணத்தைச் சுவைத்து, களித்து, திகைத்து நின்றோர் தம் மன உணர்வுகளைப் புகழ்ப்பூக்களாக்கிக் கம்பரைப் போற்றியுள்ளனர். அப்பூக்களுள் சில, இங்கு மாலையாகத் தொடுக்கப்பட்டு அம்மாபெரும் கவிஞருக்குக் கவிதாஞ்சலியாகச் சூட்டப்படுகின்றன. கல்வியில் பெரியவன் கம்பன், விருத்தமெனும் ஒண்பாவிற்குயர் கம்பன், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், கம்பசித்திரம், கம்பசூத்திரம், கவிச்சக்கரவர்த்தி, கம்பநாடகம் கம்பன் புகழ் உரைப்போர்க்கு நாவாயிரமும் கேட்போர்க்கு நாளாயிரமும் வேண்டுமாம் எனும் பழம் பெருமைகளை விஞ்சும் வகையிலும் திறனாய்வுப் பார்வையிலும் அவை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
  வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை

– பாரதியார்

கல்வியிற் சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
  கம்பன் பிறந்த தமிழ்நாடு

– பாரதியார்

அம்புவிக்கு வாய்த்த அருட்கவி, ஐயமின்றி
  உம்பர் அமுதொத்த உயிர்க்கவி – கம்பனும் தன்
மந்திரச் சொல்லால் வனைந்த கவி, என்றேனும்
  வெந்திடுமோ, தீயால்? விளம்பு

ஓலை எரியும் தாளெரியும்
  உள்ளத்து எழுதி வைத்து நிதம்
காலை மாலை ஓதுகவி
  கனலில் வெந்து கரிந்திடுமோ?

சிந்தை மகிழ விழாக்கண்டு
  தேர்ந்த புலவர் முன்வந்து
சந்தம் எழவே பாடுகவி
  தழலில் வெந்து நீறாமோ?

உள்ளத்து உவகை பொங்கியெழ
  உரைகள் சொல்லப் பொருளேறித்
தெள்ளத் தெளிந்த கவியமுதம்
  தீயில் வெந்து பொடியாமோ?

– கவிமணி சி.தேசிக விநாயகம் பிள்ளை

கற்பனை சிறந்தது கம்பன் சொல்
கலைத்திறம் நிறைந்தது கம்பன் சொல்
அற்புதச் சித்திரம் அவன் பாட்டு
அறிவுக்கு இனிப்பது இங்கவன் பாட்டு

ஆராய்ச்சிகளால் மயங்காமல்
அவைதரும் சண்டையில் தயங்காமல்
நேராய்க் கம்பனைப் படிப்பவரே
நிச்சயம் கவிரசம் குடிப்பவராம்

– நாமக்கல் வெ.இராமலிங்கம்பிள்ளை

சத்தியத்தைப் போதித்துத் தருமத்தை
எதிர்காட்டித் தகைமை நீதி
யுத்திகளை இனிதுணர்த்தி உலகியலும்
அறிவியலும் ஒழுக்கம் தூய்மை
நித்தியமும் நெஞ்சிலே நிலைத்துவர
நேர் அருளி நீதித் தேவாய்
எத்திசையும் துலங்கியுள்ள கம்பர் பிரான்
இன்பநூல் என்றும் வாழ்க

– கம்பன் கலைநிலை, செகவீரபாண்டியனார்

கம்பன் பாவரும் கனிவினைக் கனிதர இயலா
கம்பன் பாவரும் கடிமணம் மலர்தந்து கமழா
கம்பன் பாவரும் கவினுரு கலை தந்து நிலையா
கம்பன் பாவரும் கண்டிசை எண்திசை காட்டா

– கெ.என்.சிவராஜபிள்ளை, கம்பராமாயணக் கௌஸ்துபம்

பளிங்கனைய கவிக்கரசன் கம்பனெனும் தேவன்
பண்ணி வைத்த காவியத்தின் பசும்பொன் முடிதரித்த
இளங்குமரி தமிழ்த்தாய்

– ச.து.சு.யோகியார்

எக்காலும் எந்நாட்டும் ஏய்கவிகள் தம்முள் எவன்
மிக்கான் அவன் கம்பன் மெய்

நூல்கள் எலாம் ஆறுகளாம் நூற்பொருள்கள் நீர்களாச்
சால்கவின் ஆர் அந்நீர்கள் சார்ந்துறையும் – மால்கடலே
இம்பரார் எல்லார்க்கும் இன்பம் இனிது ஊட்டும்
கம்பராமாயணமாம் காண்

– வெ.ப.சுப்பிரமணிய முதலியார்

கல்லில்லை, செம்பில்லை, பொன்னுமில்லை
கனத்த திரைச் சீலையுமே இல்லை இல்லை
வெல்லுகின்ற உளியில்லை விளக்கஞ் செய்யும்
வெவ்வேறு வண்ணமுடன் கோலுமில்லை
சொல்லொன்றே அவன்கருவி; சொல்லப் போனால்
தோன்றுகின்ற நிலைக்களமோ கவிஞன் நெஞ்சே
எல்லையிலா எவ்வுலகும் இவன் கைக்குள்ளே
எழுத்துருவில் அடங்கிடுங்காண்! இவனே தெய்வம்

–?

தொட்ட இடமெல்லாம் தோய்ந்த கவிதைவெறி
இட்ட முடனென்றும் எடுத்துப் படித்திடவே

முட்டும் கலைநலங்கள் மோதிப் பெருக்கெடுக்கக்
காட்டும் திறனுடையோன் கம்பன் மாகவிஞன்

– நாக முத்தையா

உலகத்துப் புலவர்களிலே உயர்புலவன் கம்பன்
என்றே உயர்ந்தோர் கொள்வர்

– அ.கு.ஆதித்தர்

எப்படியோ கம்பனுக்கும் எனக்கும் தொடர்புண்டு
செப்புவதெல்லாம் கம்பன் செந்தமிழாய் வருவதனால்
அக்காலம் அப்பிறப்பில் அழகு வெண்ணை நல்லூரில்
கம்பனது வீட்டில் கணக்கெழுதி வாழ்ந்தேனோ
நம்புகின்றேன்; அப்படித்தான் நான் படித்த படிப்பெல்லாம்
எட்டாம் வகுப்பன்றி எட்டுக்கு மேல் வகுப்பை
எட்டியும் பார்த்ததில்லை இலக்கணமும் கற்றதில்லை
கம்பன் கொடுத்த கவிப்பிச்சை ஓரளவு
கண்ணன் கனிந்தளித்த கைமுதல்கள் ஓரளவு
கம்பனை நான் பாடிக் களிப்பதற்குக் காரணமே
தம்பிக்குக் கொஞ்சம் தந்து வைத்தான் என்பதனால்
தந்தை எனக்குத் தந்ததெல்லாம் புத்திமதி
கம்பன் எனக்குக் கருணை செய்தான் இந்தமதி
தாயார் எனக்குத் தந்ததெல்லாம் அன்பு மொழி
தாயான கம்பன் தந்ததுதான் இந்த மொழி

– கண்ணதாசன் (1972, புதுவை கம்பன் விழா கவியரங்கில்)

திடமுடைய கலைகளெனும் செழுநதிகள் புக மண்டும்
கடலெனவே திகழ்வானை, கம்பன் எனும் பெரியானை
இடமுடைய உலகெல்லாம் ஏத்துபுகழ் உடையானை
உடல்படிய நிலம் பணிந்து உளம்படிய வாழ்த்துவெனே

– கம்பன் அடிப்பொடி (கம்பன் மணிமலர் 1978)

ஒப்பற்ற பாத்திரங்கள் ஒவ்வொன்றும் நனி சிறக்க
எப்போதும் வாடாத எண்ணற்ற நிகழ்ச்சிகளைத்
தப்பேதும் இல்லாமல் தந்தகவி கம்பன் தன்
மெய் போதாம் பதயுகத்தின் மிதியடியாய் ஆகேனோ

– கம்பன் அடிப்பொடி (கம்பன் மணிமலர் 1977)

உலகியல் அறிந்துரைக்கும் உத்தமக் கவிஞன் என்கோ?
பல்கலை தெரிந்து பாடும் பாநலம் வல்லோன் என்கோ?
நலமிகு கணிதம் வானூல் நாட்டியக் கலைகள் வல்ல
புலமையில் சிறந்த கம்பன் புகழையென் உரைக்கு மாறே

– பி.எஸ்.ஜி.ஜி.கோவிந்தசாமி
(கோவை, கம்பன் கழகம், கம்பன் மலர் 1984)

விதித் தொழில்செய் நான்முகன் போல விடுத்த யாப்பை
விளையாட்டுப் பொருளாக்கிக் கையிலேந்திக்
கதித்தெழுந்து கடல்கலக்கிச் சுறையாடும்

காற்றைப்போல் ஓடவிட்டும் அனிச்சப்பூவை
மிதித்தாலும் இடருழக்கும் மென்சூல் கொண்ட
மெல்லியர் போல் அசைந்தாடித் துவள வைத்தும்
குதித்தாடும் இளமான் போற் குதிக்க விட்டும்
குன்றின்வீழ் அருவியெனக் கொழிக்கவைத்தும்

கொஞ்சுகின்ற சதங்கையொலி குலுங்கு மாறும்
கொட்டுகின்ற போர் முரசு முழங்கு மாறும்
குஞ்சரத்தின் மணியோசை இரட்டுமாறும்
கோதண்டச் சிலையினொலி தெறிக்குமாறும்
கிஞ்சுகவாய்க் கிள்ளைமொழி கிளக்குமாறும்
கீதமிசைக் குயிலோசை கேட்குமாறும்
பஞ்சியொளிர் சந்தமுறை பலவும் நாட்டிப்
பசுந்தமிழுக்கு முடிசூட்டி வைத்தான் கண்டீர்

– பூ. அமிர்தலிங்கன் (கம்பன் கவியரங்கில் மலரமுதன், 1964)

ஆதவன் புதல்வன், முத்தி
அறிவினை அளிக்கும் ஐயன்
போதவன் இராம காதை
புகன்றருள் புனிதன் மண்மேல்
கோது அவம் சற்றும் இல்லான்
கொண்டல்மால் தன்னை ஒப்பான்
மாதவன் கம்பன் செம்பொன்
மலரடி தொழுது வாழ்வோம்

– நாமக்கல் கம்பன் கழகம்

பாவியலின் பண்பையெல்லாம்
பண்ணமைப்பில், தான் படைத்த
காவியத்தின் ஜீவியத்தில்
காட்டி விட்ட கம்பனவன்

– சிதம்பர ரகுநாதன்

கற்பனைச் சோலைதானோ
கம்பனின் கவிதைக்காடு
கற்பகத் தேன் விருந்தோ
கலைதரும் அமுதம் தானோ
சொற் பொருள் சொர்க்கந் தானோ
சொக்கிளங் கங்கை ஊற்றோ
அற்புத மனிதன் கண்ட
அற உயிர் அகல் விளக்கோ

– தே.ப.பெருமாள்

கல்வியிலே மாப்புலவன் கம்பன் அன்றோ? மானுடத்தால்
வெல்ல முடியும் என்றான் மேலவரை – நல்லதமிழ்ப்
பண்பாடு காட்டி, உயர்பாட்டுத்திறம் காட்டிக்
கண்போல் குறள் விளக்கம் காட்டி – நண்பாலே

ஆரோடும் போர் செய்யா அன்பு வழி காட்டி இக்
காரிகைக்குக் காதல் எனும் நோய்காட்டிப் – பாரில் உயர்
காவியத்தால் பேதை கருத்தைக் கவர்ந்து விட்டான்

– இரா. திருமுருகன்

கம்பனே
கல்வியில் பெரியவனே!
பாரிஜாதப்
பூவிற்கு – ஒரு
காகிதப்பூவின் கைகூப்பு....
கவிச்சக்கரவர்த்தியே! நீ
மரபில் பாடியதை – நான்
புதிதில் பாடுகிறேன்
நீச்சல் தெரியாமல்
நீரில் இறங்கிவிட்டேன்
கூச்சல் போடுவேன்
காப்பாற்று
நாட்டரசன் கோட்டையில்
நீள்துயில் கொண்ட
பாட்டரசே
எழுந்துவா
என்னுள் புகுந்து எழுது
இறைஞ்சுகிறேன் தொழுது
விதைப்பது என் வேலை
விளைவிப்பது உள்மூளை
வணக்கமுடன், வாலி

– வாலி (அவதாரபுருஷன் முன்னுரை)

சூரியன் தான் நீ
உன்னைச்
சுற்றிவருகின்ற
பூமிகள் நாங்கள்
நீ கொடுத்த
தமிழின் போதை
தலைக் கேறிப்
போனதால் தான்
தன்னையே சுற்றித்
தடுமாறிக் கொண்டபடி
உன்னையும் சுற்றி
உலா வருகின்றோம்

– மு.மேத்தா (முத்துக்கு முகம் – கம்பன் ஒரு கதிரவன்)

It would there fore be speaking only the bare truth when we say of Kamban and of his Ramayanam,

"Then read from the treasure volume
The poem of thy choice
And lend to the rhyme of the poet
The beauty of thy voice
And the night shall be filled with music
And the cares that infest the day
shall fold their tents like the Arabs
And as silently steal away"

- C.P. Venkataramayaiyar.

ஆய்வுக்களங்கள்

கம்பன் ஆய்வுகள் இருபதில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காட்டியுள்ளன. எனினும் கம்பன் கடலினின்றும் பெற வேண்டிய வளங்கள் இவற்றைவிட மிகுதியாக உள்ளன என்பதும் உணர்த்தத்தக்கது. கம்பன் வற்றாத ஊற்று; தொட்டனைத்தூறும் மணற்கேணி; அள்ள அள்ளக் குறையாத சுரங்கம் என்பன போன்றவற்றை உறுதிப்படுத்தும் வகையில் இருபத்தொன்றில் அதன் ஆய்வுகள் பெருக பேரிடம் உளது. அவற்றுள் சிலவற்றை இக்கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

கம்பன் ஆய்வுகள் சமூகவியல், பண்பாட்டியல், அறிவியல், ஒப்பியல், இலக்கியவியல் முதலான பல கோணங்களில் அணுகுவதற்கு வாய்ப்புகள் பலவாக உள. சமூகவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டிருப்பினும் அதன் உறுப்பினரான குழந்தைகள், சிறுவர், இளையர், முதியோர் பற்றிய விரிந்த ஆய்வுகள் தேவை. சமூகத்தில் இடம்பெறும் பல்வேறு தொழில்கள்/ தொழிலாளர்கள் பற்றியும் தனித்து நோக்கலாம். சமூகக் கடமைகள், சமூக மதிப்புகள் பற்றியும் எண்ணலாம். தாய் – மகள், தந்தை – மக்கள், கணவன்– மனைவி, ஆசிரியர் – மாணாக்கர், அண்ணன் – தம்பியர், மாற்றாந்தாய் – மக்கள், மாமி– மருகியர் என்பன போன்ற பலவித உறவுகளையும் ஆராயலாம். இன்றைய அரசியல், சமூகச் சூழ்நிலைகளுக்குக் கம்பன் எப்படிப் பயன்படக் கூடும் என ஆய்வதும் சுவை பயக்கும்.

தமிழ் மரபிலும், பண்பாட்டிலும் கம்பர் காட்டியுள்ள அக்கறை கம்பனில் நன்கு வெளிப்பட்டுள்ளது. இவை முற்றுமாக நோக்கப்படவில்லை. குலமுறைகிளத்துதல், வரிசையறிந்து விடைகொடுத்தல், மகப்பேறு, தமையனுக்குத் தம்பியர் கட்டுப்படல் போல்வன அகன்ற ஆழ்ந்த ஆய்விற்கு வழிவகுப்பனவாகும். இப்பண்பாட்டியல் நோக்கு ஆய்வு முழுமைபெறின் கம்பர் தமிழ் மற்றும் தமிழினம் மீது கொண்டுள்ள பற்று ஐயத்திற்கிடமின்றிப் புலனாகும்; இராமகாதை படைப்பு நோக்கும் தெளியலாம்.

இலக்கியவியல் நோக்கும் எண்ணற்ற ஆய்வுக்குக் களமாகிறது. கம்பரின் தற்குறிப்பேற்றம், குறியீடு, படிமம் என ஒவ்வொன்றும் தனித்துக் காணத்தக்கன. கம்பன் ஒவ்வொரு கதைமாந்தருக்கும் வழங்கும் அடைகள், மற்றும் இட, பொருள் வருணனைகளில் அமையும் அடைகள் கம்பரின் புகழுக்குக் கட்டியம் கூறுவனவாகும். தனித்தனி ஆய்விற்கும் இடமளிப்பனவாகும். இயற்கை, செயற்கைக் (மீ இயற்கை) கூறுகளும் அகழாய்விற்கு உகந்தன. சிறுபொழுது, பெரும்பொழுது, கதிரவன், திங்கள் என இப்பட்டியலும் நீளும். உவமை போன்று உருவகம், உயர்வு நவிற்சி, தன்மை, இரட்டுற மொழிதல், சொல்லணிகள் போல்வனவும் தனித்து நோக்கி

மகிழ்தற்குரியன. கம்பரின் தனித்துவத்தை அளவிடற்கு இவ்விலக்கிய ஆய்வுகள் பெரிதும் துணையாகும்.

கம்பருக்குப் பின் தோன்றிய பெருங்கவிஞர் முதல் இன்றைய புதுக்கவிஞர் வரை அவரின் தாக்கம் பலரிடம் பலவாகப் பொருந்தி நிற்கக் காண்கிறோம். அதனைத் தனித்தனிப் புலவராகவோ (மீனாட்சி சுந்தரம் பிள்ளை, கண்ணதாசன், ஆ.கு.ஆதித்தர்) அன்றித் தேவைக்கேற்ப சிலரை இணைத்தோ அறுதியிடலாம். கம்பர் புகழினைக் கணித்துரைக்க இவை துணையாகும்.

தொல்காப்பியம் வழி கம்பனை அணுகுதலும் வேண்டற்பாலது, அவரின் இலக்கியக் கொள்கைகள், அகத்திணை, புறத்திணை விதிகள், உவமை, மெய்ப்பாடு என ஒவ்வொரு கூறும் கம்பரிடம் தொல்காப்பியர் கொண்ட ஆளுமையை வெளிப்படுத்துகின்றன; விரிந்த ஆய்விற்கும் இடம்கொடுக்கின்றன. கம்பரின் மொழிப்பற்றிற்கு இவ்வாய்வு கட்டளைக் கல்லாக அமையும்; மரபு போற்றுதலையும் துலக்கும்.

கம்பனை முழுமையாக, முறையாகக் கற்காது தவறான கொள்கை அல்லது கருதுகோள்களின் அடிப்படையில் தோன்றியுள்ள, தோன்றும் குறைபட்ட ஆய்வுகளுக்குத் தக்க பதிலுரைகளாக, கம்பர் மீது வாரியிறைக்கப்பட்டுள்ள களங்கத்தைத் துடைப்பனவாக, உண்மைகளை வெளிப்படுத்துவனவாக அமையும் ஆய்வுகளும் பலவாக எழுதல் இன்றியமையாததாகும்.

மொழியியல் அணுகுமுறையில் மிகக் குறைவாகவே கம்பன் ஆய்வுகள் காணப்படுகின்றன. இத்துறை ஆய்வுகளும் பெருகும் பொழுது கம்பன் புகழ் மேலும் மெருகேறும். குறிப்பாக இதனுள் 'கம்பரும் தமிழும்' என்றொரு ஆய்வு நிகழின் கம்பர் தமிழ்ப்பற்றின் செயல் வீரத்தைக் கண்டு வியக்கலாம். தமிழை உயிர் மூச்சாகக் கொண்ட எவருக்கும் அவர் சற்றும் சளைத்தவரல்ல என்பதும் புலனாகும். புதிய புதிய சொற்களை உருவாக்கித் தம் இலக்கியத்தை வளப்படுத்தியுள்ள அறிவுத்திறம் எதிர்ப்பாளரை நாணச் செய்யும்.

நவீனத்துவம், பின் நவீனத்துவம், அமைப்பியல் எனப் பலவாறாக இயம்பப்படும் மேலை ஆய்வு நெறிகளுக்கும் எதிர்காலவியல் போன்ற புதிய பார்வைகளுக்கும் தோன்றவுள்ள புதுப்போக்குகளுக்கும் இனிக் கம்பனில் இடமுண்டு என்பதும் அறியத்தக்கது.

தமிழிலக்கிய உலகில் ஒப்பிலக்கிய ஆய்வில் கம்பனின் இடம் முதன்மையானது. பல கோணங்களில் பலவிதமாக ஒப்பீடு செய்வதற்குக் கதையும், அதன் விரிந்த களமும் துணையாகின்றன. ஒப்பியல் ஆய்வுகள்

அவ்வப்போது தோன்றிக் கொண்டிருப்பினும், செய்ய வேண்டியனவற்றை நோக்க அவை மிகமிகக் குறைவே. இந்திய இலக்கியமாக இராமாயணம் திகழ்வதால் இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள இராமாயணங்களுடன் மலையாள, தெலுங்கு ராமாயணங்களுடனான ஒப்பீடு போன்று தனித்தனியே, கதைப் போக்கின் பொருண்மை மற்றும் வெளியீட்டு உத்திகளுடன் ஒப்பு நோக்கலாம். தாய், மலேசியா போன்ற அயல் நாட்டவரிடையே வழங்கும் இராமாயணங்களுடன் ஒப்பு நோக்குதல் மிகத் தேவையாகும். இவற்றால் கம்பர் பெற்றதும் கொடுத்ததும் அறியவரும். கம்பரின் மேதைமையையும் உலகறியும்.

உலகப் பெருங்கவிஞருடனான விரிவான, ஆழமான ஆய்வு உலகரங்கில் கம்பர் கொள்ளும் பெருமையுடன் தமிழையும் உயர்த்தி நிறுத்தும்.

தமிழகத்திலும் கம்பருக்குப் பின் தோன்றியுள்ள செம்மை வடிவம் மற்றும் நாட்டுப்புற வடிவ இராமகாதைகளுடன் ஒப்பு நோக்குதல் தேவையாகும். இராமாயண வெண்பா, இராகவ காவியம், தக்கை இராமாயணம் எனப் பல இதற்கு வாய்ப்பாகின்றன.

சைன, பௌத்த இராமாயணங்களுடனான முழுமையான ஒப்பாய்வும் கம்பர் புகழுக்கு அணி சேர்க்கும்.

முழு அளவில் ஆதிகவி வால்மீகிக்கும், கம்பருக்கும் இடையே வேறுபடும் இடங்கள் அனைத்தையும் தொகுத்து அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களையும், நோக்கங்களையும் ஆராய்ந்தால் இராமாயண வரலாற்றில் சில உண்மைகள் புலனாகலாம். இது போன்றே இந்திய மொழிகள் ஒவ்வொன்றுடனான முதல் இராமாயணப் படைப்புடன் ஒப்பு நோக்குதல் இராமாயண ஆய்விற்கு வலு சேர்க்கும். இராமாயண உலகில் தமிழ் மொழியின் இடம் தெளிவுறும்.

கம்பனில் இடம்பெறும் பொதுவான அறிவியல் செய்திகள் கம்பரின் அறிவியல் அறிவை அறிதற்குத் துணையாகும். கம்பனில் உளவியல் ஆய்வை முழுமையாக நிகழ்த்தும் பொழுது வெளிப்படும் கம்பரின் உளவியல் அறிவு அவரை மிகப் பெரிய உளவியல் அறிஞனாக, உளவியல் மேதைகளுக்கு முன்னோடியாகப் பாராட்டச் செய்வது உறுதியாகும். அவரது உளவியற் கோட்பாடுகளை ஆய்வு முடிவில் வார்த்தெடுக்கவும் முடியும். கம்பனில் வானியல், கம்பனில் பொருளியல் எனப் பிற துறை ஆய்வுகளும் ஏற்புடையனவே.

இவை தவிர பொது நிலையிலும் பல ஆய்வுகள் எழுவதற்கு மிகுதியான வாய்ப்பமைகிறது. கட்டுக்கதைகள் நீங்கிய கம்பர் வரலாறு தெளிவாக அறியப்படுதல் வேண்டும். கள ஆய்வும், கல்வெட்டாய்வும்

இதற்குத் துணையாகும். தமிழின் மாபெரும் கவிஞர் பற்றிய முழுமையான, உண்மையான வரலாறு எழுதுதல் அம்மாக்கவிக்குச் செய்யும் தொண்டாகும்.

இன்று திசைதோறும் கம்பன் புகழ் பரப்பும் கம்பன் கழகங்கள் பற்றிய ஆய்வும் கம்பனைப் பெருமைப்படுத்தற்குரியதாகும். கம்பன் கழகங்களின் கம்பன் பணி, தமிழ்ப்பணி, சமுதாயப்பணி எனப் பொதுவாகவும், தனித்தனியே ஒவ்வொரு கழகமாகவும் இவ்வாய்வு நிகழ்த்தற்கூடும்.

ஆய்வுகளை ஆய்வு செய்தலும் இன்றைய இலக்கியக் களனில் சிறப்புறுகிறது. அவ்வகையில் கம்பனறிஞர் பலரின் ஆய்வுகள் (எஸ்.ராமகிருஷ்ணன், அ.ச.ஞானசம்பந்தன், ச.வே.சுப்பிரமணியன், மு.மு.இஸ்மாயில், கு.திருமேனி......) மீதும் ஆய்வுகள் மேற்கொளப்படலாம். ஆண்டுதோறும் கம்பனுக்கு எழும் ஆய்வுகள் மீதும் ஆய்வு செய்யலாம்.

இவைதவிர அவ்வப்போது புதிது புதிதாகத் தோன்றுகின்ற ஆய்வுப்பாதைகளிலும் கம்பன் ஆய்வு நிகழலாம். இவற்றால் கம்பனுக்கு இன்னும் பன்னூறு ஆய்வுகள் தோன்றவும், அவற்றால் கம்பருக்கும் தமிழுக்கும் பெருமையும் பாராட்டும் மிகவும் வாய்ப்புள்ளது என்பது தெளிவாகும். கம்பருக்கு நேற்று, இன்று மட்டுமல்ல நாளையும் தமிழுலகில் பிறரால் கவர்ந்து கொள்ளவோ, அழிக்கவோ இயலாத தனியிடம் உண்டு என்பதும் உண்மை.

நிறைவுரை

இருபதாம் நூற்றாண்டில் கம்பன் பெற்றுள்ள செல்வாக்கு பின்வரும் நூற்றாண்டுகளிலும் தொடரும் என்பதை உறுதிப்படுத்த, மேலும் ஒளிவிட்டுச் சுடரத் தேவையான செயற்பாடுகளாக ஆய்வாளர் கருதுவன இதன்வழி கம்பன் அன்பரிடையே முன்வைக்கப்படுகின்றன.

1. ஞானபீட விருது போல் மிகவுயரிய விருது ஒன்று 'கம்பர் விருது' எனும் பெயரில் தமிழக அரசால் வழங்கப்பட வேண்டும். இது ஆண்டுதோறும் இந்திய மொழிகளிடையே சிறந்து விளங்கும் சமூக அக்கறையுடைய படைப்பாளி ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும்.
2. பல்கலைக் கழகங்கள் மற்றும் உயராய்வு நிறுவனங்களில் தமிழக அரசு வள்ளுவர், பாரதியார், பாரதிதாசன் ஆய்வு இருக்கைகள் போன்று 'கம்பர் ஆய்வு இருக்கை' ஒன்றினை உருவாக்க வேண்டும்.
3. கம்பர், கம்பராமாயணத்தை அரங்கேற்றியதாகப் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பங்குனி அத்த நாளைக் (சகாப்தம், 807, விசுவாவசு, பங்குனி 4ஆம் நாள், 25.2.886) கம்பர்நாளாக/ இலக்கிய நாளாக தமிழக அரசு அறிவித்து, கம்பர் விழாவாகக் கொண்டாட வேண்டும்.
4. கல்வித்திட்டத்தில் அனைத்து வகுப்பினருக்கும் கம்பராமாயணம் கட்டாயப்பாடமாக இயன்றளவு கூட்டி அமைக்க வேண்டும். கல்லூரிகளில் கம்பன் கல்வி இளங்கலை, முதுகலை வகுப்புகளில் தனித்தாளாக இடம்பெற வேண்டும்.
5. ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு வெளியிட்டது போன்று பிற முதன்மையான உலக மொழிகளிலும், அனைத்து இந்திய மொழிகளிலும் கம்பனின் முழுமையான மொழிபெயர்ப்பினைத் தமிழக அரசு வெளியிட முனைய வேண்டும்.
6. இந்திய அரசைக் 'கம்பர் நாணயம்' ஒன்று வெளியிடச் செய்ய வேண்டும்.
7. மேற்கூறியனவற்றைச் செயற்படுத்துமாறு தமிழக அரசைக் கம்பன் கழகங்கள் வலியுறுத்த வேண்டும்.
8. ஆண்டுதோறும் வெளிவரும் சிறந்த கம்பனாய்வு நூல் மற்றும் கட்டுரைகளுக்குப் பரிசு வழங்குதலை மேற்கொண்டு கம்பன் கழகங்கள் கம்பன் கல்வியைப் பெருக்கலாம்.
9. கம்பன் ஆய்வுக் கென்று தனிஇதழ் மீண்டும் தொடங்கி நடத்த வேண்டும்.
10. கம்பன் கவிதைகளுக்குத் தக்காரைக் கொண்டு இசை அமைத்து, ஒலி, ஒளி நாடாக்கள் வெளியிடலாம். அவ்வாறே நாட்டியம், நாடகம் எனும் பிற கலைகளிலும் கம்பன் புகழ் வளரச் செய்யலாம்.

11. கம்பன் நூலகம் ஒன்றை உருவாக்கி அதனுள் கம்பன் பற்றிய அனைத்து இதழ்கள், மலர்கள், நூல்கள், கட்டுரைகள், செய்திகள் ஆகியவற்றைத் தொகுத்துப் பாதுகாக்க வேண்டும். பிறவிடங்களில் உள்ள அனைத்துக் கம்பராமாயணச் சுவடிகளையும் முயன்று பெற்றுப் பாதுகாக்க வேண்டும். ஒரேயிடத்தில் அவற்றை ஒருசேர நோக்க இது துணையாகும்.

12. அதனைச் சிறந்த கம்பன் ஆய்வகமாகவும் வளர்க்க வேண்டும். ஆய்வாளருக்குப் புகலிடமாகவும், தம் கருத்துரைக்கும் ஆய்வரங்காகவும் ஏற்றமுற வேண்டும்.

13. இராமாயணத்தைத் தழுவி இதுவரை தமிழில் எழுந்துள்ள அனைத்து நூல்களும் (செம்மையிலக்கிய வடிவங்கள், நாட்டுப்புற இலக்கிய வடிவங்கள், உரைநடையிலக்கியங்கள்) தொகுக்கப்பட வேண்டும்.

14. கம்பன் கழகங்கள் பற்றிய கையேடு (தோற்றம், வளர்ச்சி, நிறுவனர், செயற்பாடுகள், திட்டங்கள் போல்வன) உருவாக்கப்பட வேண்டும்.

15. பல்வகையான கம்பன் பதிப்புகளும் உருவாக்கப்பட வேண்டும். அவை: அ) கம்பனின் சமூகச் சிந்தனைகளை உள்ளடக்கியவற்றின் தொகுப்பு, ஆ) அரசியலறம் பேசுவனவற்றின் தொகுப்பு, இ)வாழ்வியலறம் அறிவுறுத்துவனவற்றின் தொகுப்பு, ஈ) இசைப்பாடல்களின் தொகுப்பு, உ) தொல்காப்பியர் வழியில் திணை, துறை, மெய்ப்பாடு சுட்டப்படக் கூடியனவற்றின் தொகுப்பு என்பன போன்று கருதப்படலாம். இவை தற்காலச் சார்புடன் மாணாக்கரும், ஆய்வாளரும், பொதுமக்களும், சுருங்கக்கூறின் எத்தரப்பினரும் பயன்கொள்ளுமாறு உரை மற்றும் தேவையான விளக்கங்களுடன் வெளியிடப்பட வேண்டும்.

16. கம்பன் களஞ்சியம், கம்பராமாயண மூலத்தைக் கொண்டு உருவாக்கப்படுதலும் வேண்டும். கம்பனில் இடம்பெறும் கதைமாந்தர், இடங்கள் (ஊர், மலை...), போர்க்கருவிகள், அளவைப் பெயர்கள், உயிரினங்கள், அணிகலன்கள் என அனைத்தும் உள்ளடங்கிய நிலையில் அகரவரிசையில் முழு அளவில் இடஞ்சுட்டித் தேவையான விளக்கங்களுடன் அது அமைதல் தேவை. மற்றும் உவமைகள், குறியீடுகள் பிற அணிகள், புராணங்கள், போல்வனவும் இடம்பெறவேண்டும். கம்பனின் எப்பொருள் குறித்துக் கேட்பினும் உடன் அறியும் வகையில் மூன்று முதல் ஐந்து தொகுதிகளாக அமையின் நன்றாம்.

17. கம்பன் ஆய்விற்கு உறுதுணையாகும் கம்பராமாயணச் சொல்லடைவு உடனடித் தேவையாகும். நாளும் பதிப்புகள், புதிய புதிய பாட வேறுபாடுகள் மற்றும் மிகைப்பாடல்களுடன் வெளிவருகின்ற போதும், இன்று ஆய்வாளரால் பெரிதும் பின்பற்றப்படுகின்ற சென்னை, கம்பன் கழகப் பதிப்பின் அடிப்படையில் அச்சொல்லடைவு

அமைதல் நன்று. இங்குக் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் உள்ள கோவிந்தன் குட்டியின் கம்பராமாயணச் சொல்லடைவு (வை.மு.கோ.பதிப்பைப் பின்பற்றியது, வெளிவராதது) எண்ணற்பாலது.

18. ஐந்து ஆண்டுகளுக்கொரு முறையாவது கம்பன் ஆய்வுகளைத் தொகுத்துரைக்கும் கம்பன் ஆய்வடங்கல் புதுப்பிக்கப்பட வேண்டும்.

19. செகவீரபாண்டியனாரின் கம்பன் கலைநிலை, டி.என்.சேஷாசலத்தின் கம்பராமாயண உரை போல்வன மீண்டும் பதிப்பிக்கப்படல் வேண்டும்.

20. இதுவரை எழுந்துள்ள கம்பனாய்வுகளில் மிகச் சிறந்த ஆய்வுகள், கிடைப்பதற்கு அரியனவாய் அமைவனவும் விரைவில் மறுபதிப்புப் பெறல் வேண்டும்.

21. தனிநூலாக அன்றிப் பல்வேறு கட்டுரைகளுக்கிடையே அமையும் ஆய்வுகளையும் தனிநூல்களாகத் தொகுத்து வெளியிடல் வேண்டும்.

22. கம்பன் ஆய்வுகளின் மிகச் சிறந்த கருத்துரைகளைத் தொகுத்தும் பல தொகுதிகளாக வெளியிடல் கம்பன் சுவைஞருக்குப் பெருவிருந்தாகும்.

23. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையாவது (தமிழக, இலங்கை, மலேசிய கம்பன் கழகங்கள் இணைந்து அல்லது தனித்து) உலகளாவிய நிலையில் 'கம்பன் கருத்தரங்குகள்' நடத்த வேண்டும். உலகளவில் கம்பன் புகழ் நிலைபெற இது ஒருவாயிலாகும்.

24. தமிழகத்தின் தலைநகரில் அழகிய இயற்கைச் சூழலின் நடுவே, கம்பன் மணிமண்டபமொன்று பிரமாண்டமாக அமைக்கப்பெற வேண்டும். அதில் கம்பராமாயணக் கதை முழுவதையும் பல்வகை சிற்பம் மற்றும் ஓவியங்களாக அமைத்து நிறைக்க வேண்டும். மிகச் சிறந்த கண்காட்சி சாலையாக, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் தலமாக அது மாண்புற வேண்டும். கம்பன் ஒலி–ஒளி காட்சியையும் நாள்தோறும் நிகழச் செய்து மகிழ்விக்கலாம்.

கம்பனைச் சுவைப்பதிலும், பொதுமக்களிடையே பரப்புவதிலும், கம்பனாய்வை வளர்ப்பதிலும் பெருவிருப்புடன் செயல்படும் கம்பன் கழகங்கள் கருதின் இவற்றுள் பலவற்றை மிக எளிதாக நிறைவேற்றக்கூடும். ஆகவே சிறப்பு நிலையில் இவற்றை அவர்களிடம் எனது பணிவான விண்ணப்பமாக முன்வைக்கிறேன்.

உள்ளம் மகிழ உரைநா அமுதூறக்
கொள்ளும் இருகாதும் குளிரவே – தெள்ளரிய
செந்தமிழ்க் கம்பத் திருநாடன் செய்நூலுக்கு
எந்நூலாகும் இணை?

– கவிமணி.

பின்னிணைப்பு

கம்பன் ஆய்வுகள்

நூல்கள்

நூல், ஆசிரியர், வெளியீடு, இடம், (ஆண்டு) பக்கம் எனும் வரிசை.

1901–1910

1. The Tamilian Antiquary No.2, A critical review of the story of the Ramayana & An account of the South Indian Castes; V.P.Subramania Mudaliar, The Tamilian Archaeological Society, 1908,-, Reprint : The South India Saiva Siddanta Publishing Society.

2. கம்பநாடர், தி.செல்வகேசவராய முதலியார், –,–,1909,மறு.ப. 1974, கழகம், 4+84.

3. கம்பர் சரித்திரத்தின் ஒரு பகுதி, தி.எ.இராஜரத்தினம் பிள்ளை, கிறித்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1909, 27+71.

1911–1920

4. Kamban and his art, C.P.Venkatrama Aiyar, C.Coomaraswamy Naidu & Sons, Madras, 1913, 110.

5. Kambar an Essay, T.Chelvakesavaroya Mudaliar, S.P.C.K. Press, Madras, 1917,-, மறு.ப. 1926

1921–1930

6. கம்பராமாயண ஆராய்ச்சிக் கட்டுரை, வ.வே.சு.ஐயர், 1921 4+46,மறு.ப.1971.

7. கம்பர் சரித்திரம், நெ.ரா.சுப்பிரமணிய சர்மா, இ.மா.கோபால கிருஷ்ணகோன், மதுரை, 1922, 126.

8. தசரதன் குறையும் கைகேயி நிறையும், ச.சோமசுந்தர பாரதியார், நாவலர் புத்தக நிலையம், மதுரை, 1926, நா.ப.1972, 129.

9. அனுமான் = இராமதூதன், எல்.உலகநாதபிள்ளை,–,–,1926,–

10. Some Characteristics of Kamban's genius and art, K.V.Sivaraja Pillai,-,-,1926.-.

11. Kamban's Kosala, T.N.Seshachalam, The Educational Publishing & Co, Madras, 1929.-

12. கம்பராமாயண கௌஸ்துப (மணிமாலை)ம், கெ.என்.சிவராஜபிள்ளை, செந்தமிழ் தொகுதி–28,29,மதுரை, 1930, (1979, சென்னைப் பல்கலைக்கழகம், 104)

1931–1940

13. வீரமாநகர், ரா.பி.சேதுப்பிள்ளை, எஸ்.ஆர்.சுப்பிரமணிய பிள்ளை பப்ளிஷர்ஸ், திருநெல்வேலி, 1932, ஏ.ப.1964,5+112.

14. கம்பர், ஏ.சி.பால்நாடார், கரந்தைத் தமிழ்ச்சங்கம், கரந்தை, 1938,–

15. பாளையங்கோட்டை ஸ்ரீமத் கம்பராமாயண ஆராய்ச்சிக் கூட்டம் நினைவு மலர்,–,–,1939,13+42

1941–1950

16. கம்பர் யார்? டி.கே.சிதம்பரநாத முதலியார், புதுமைப்பதிப்பகம், சென்னை, 1941, 124,மறு.ப.1981

17. கம்பன் கலைநிலை–தொகுதி1, செகவீரபாண்டியனார், சி.வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, 1941,–

18. கம்பராமாயணச் சிதைவின் கண்டனத் தொகுதி, – கரு.மெ.இராமசாமிசேர்வை வெளியீடு,–,1942,–

19. ஸ்ரீராம தூதன் (கம்பன் கலை நாடகம்), சுத்தனாந்த பாரதியார், அன்புநிலையம், திருச்சி, 1942, 2+156.

20. கம்பன் கலைநிலை – தொகுதி–2, செகவீரபாண்டியனார், சி.வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, 1943,–

21. தீ பரவட்டும் (இராமாயணச் சொற்போர்),–,–,–,1943,– எ.ப.1972

22. கம்பன் கலைநிலை – தொகுதி–3, செகவீரபாண்டியனார், சி.வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, 1944,–

23. கம்பன் கலை நிலை – தொகுதி – 4, செகவீரபாண்டியனார், சி.வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, 1945,–

24. கம்பன் கலைநிலை – தொகுதி – 5, செகவீரபாண்டியனார், சி.வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, 1946,–

25. கம்பன் கவிதை (தொகு) கட்டுரைகள், வ.வே.சுப்பிரமணிய ஐயர், நவயுகப்பிரசுராலயம், காரைக்குடி, இ.ப.1946,140.

26. ஸ்ரீராமர் தியாகம் (நாடகம்), சுத்தானந்த பாரதியார், அன்பு நிலையம், திருச்சி, 1946, 106.

27. கம்பன் கலைநிலை தொகுதி–6, செகவீரபாண்டியனார், சி.வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, 1947,–

28. கம்பன் கலைநிலை தொகுதி–7, செகவீரபாண்டியனார், சி.வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, 1948,–

29. சுந்தர காண்ட விமர்சனம், தி.சுந்தராசாரியார்,–,–,1948,–

30. கம்பன் கலைநிலை தொகுதி–8, செகவீர பாண்டியனார், சி.வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, 1949,–

31. கம்பரசம், சி.என்.அண்ணாதுரை,–,–,மறு.ப.1961,1971,1995 (கண்ணம்மாள் பதிப்பகம், சென்னை), 103.

32. கம்பரச ஆராய்ச்சி, கு.பாலசுப்பிரமணிய முதலியார், கம்பர் பதிப்பகம், சென்னை, 1949, 10+187.

33. கம்பன் கலைநிலை தொகுதி–9, செகவீரபாண்டியனார், சி.வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, 1950,–

34. Kamban's Sita-Valmiki,-,-,1950.-

35. Kambaramayana-A Study, V.V.S. Aiyar, Bharatiya Vidya Bhavan, Bombay, 1950, Re-ed 1965,1970,10+342.

1951–1960

36. கம்பன் கலைநிலை – தொகுதி10, செகவீரபாண்டியனார், சி.வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, 1951,–

37. கல்வியில் பெரியவர் கம்பர், ஏ.வி.சுப்பிரமணிய ஐயர், பாரி நிலையம், சென்னை, 1951,1970,4+14+145.

38. சடையப்ப வள்ளலும் கம்பரும், கு.பாலசுந்தர முதலியார், லோடஸ் பப்ளிஷர்ஸ், சென்னை, 1951, 114.

39. கம்பன் கலைநிலை, தொகுதி 11, செகவீரபாண்டியனார், சி.வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, 1952,–

40. கம்பன் கெடுத்த காவியம், மு.அண்ணாமலை,–,–,–,–

41. கம்பன் கெடுத்த காவியம்?, நச்சுமுறி, கன்னிவெளியீடு,–, 1952,39.

42. கம்பர் காவியம் (அதன் நிலை விளக்கம்), சொ.முருகப்பன், கம்பன் பதிப்பகம், அமராவதிபுதூர், 1953,6+147.

43. கம்பன் கலை (அரசியர் மூவர்), அ.ச.ஞானசம்பந்தன், பாரி நிலையம், சென்னை, 1954, 1956,2+113.

44. கம்பன் கலைநிலை – தொகுதி 12, செகவீரபாண்டியனார், சி.வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, 1954,–

45. இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும், அ.ச.ஞானசம்பந்தன், பாரி நிலையம், சென்னை, 1955, நா.ப.1965,43+167,மறு.ப.1995.

46. கம்பர் யார், மா.ராசமாணிக்கனார், சாந்திநூலகம், சென்னை, 1955,1958,128.

47. கம்பன் கண்ட தமிழகம், சாமி சிதம்பரனார், இலக்கிய நிலையம், 1955, மூ.ப.1962,152,2000,என்சி.பி.எச்.

48. கம்பன் கலைநிலை – தொகுதி – 13, செகவீரபாண்டியனார், சி.வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை, 1955.

49. கம்பன் காவியம், எஸ்.வையாபுரிப்பிள்ளை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1955, நா.ப.1965,3+149+35.

50. நாரணன் விளையாட்டு (கம்பன் கவியுள்ளம்), மாசி, தமிழ்நாடு வெளியீடு, மதுரை, 1955, மூ.ப.1959,7+400.

51. இலக்கியச்சுவை (முதற்பாகம்) கம்பர், ம.ரா.மாணிக்கம், ஆசிரியர், சென்னை, 1956,111.

52. கம்பரும் வால்மீகியும், நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்பிள்ளை, இன்பநிலையம், சென்னை, 1956, 4+370.

53. கம்பனும் பாரதியும், பா.ஜீவானந்தம், ஜனசக்தி பிரசுராலயம், சென்னை, 1956,111.

54. காவிய அரங்கில், அ.சீநிவாசராகவன், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1956, 225.

55. Kamban and Tulasi or Pre Matrimonial love of Raman & Sita in Ramayana, S.S.Shankarraju Naidu, University of Madras, Madras, 1956,-

56. கம்பர், ஆர்.ஸ்ரீநிவாஸன்,–,–,1957,–

57. கம்பன் கலைநிலை – தொகுதி–14, செகவீரபாண்டியனார், சி.வி.என்.பிரஸ்,மதுரை, 1957,–

58. கவிஇன்பம், கோ.சுப்பிரமணிய பிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1957, 150.

59. சிறியன சிந்தியாதான், எஸ்.இராமகிருஷ்ணன், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1957, ஐ.ப.1968,4+148.

60. கம்பர் காட்டும் மகளிர், எம்.ராதாகிருஷ்ணபிள்ளை, அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, 1958,2+115.

61. கம்பன் கலைநிலை – தொகுதி 15, செகவீரபாண்டியனார், சி.வி.என்.பிரஸ், மதுரை, 1958,–

62. அழியா அழகு, கி.வா.ஜகந்நாதன், கலைமகள் காரியாலயம், சென்னை, 1959,6+243.

63. உங்கள் கம்பன் (கட்டுரைக் கொத்து), பி.ஸ்ரீ.,கலைமகள் காரியாலயம், சென்னை, 1959,6+243.

64. கம்பன் இயற்கை வருணனைகள், செந்துறைமுத்து, அருணோதயம், சென்னை, 1959, 128

65. கம்பன் கண்ட அமைச்சர்கள், அ.க.நவநீதகிருட்டிணன், கழகம், சென்னை, 1959,ஏ.ப.1967,–

66. கம்பன் கதாபாத்திரங்கள், கி.லக்ஷ்மணன், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1959, இ.ப.1963,65

67. கம்பன் காதல் வர்ணனைகள், செந்துறைமுத்து, அருணோதயம், சென்னை, 1959, 128

68. மன்னர் மன்னன் (இராவணன்) நாடகம், தி.மாணிக்க வாசகம், ஸ்ரீவிசாலாட்சி பதிப்பகம், மதுரை, 1959,1961,75

69. இலக்கிய இன்பம், வெ.இராமலிங்கம் பிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, ஐ.ப.1960, 6+248

70. பரதன் (நாடகம்), தி.மாணிக்க வாசகம், விசாலாட்சி பதிப்பகம், மதுரை, 1960, 4+66

1961–1970

71. கம்பராமாயணத்தின் பெருமை, ஜி.சுப்பிரமணியம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1961,–

72. கம்பன் கலை (நாடும் மன்னனும்) அ.ச.ஞானசம்பந்தம், பாரிநிலையம், சென்னை, 1961, 3+117, மறு.ப.1995

73. கற்பின் கனலி, எஸ்.ராமகிருஷ்ணன், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1961, இ.ப.1961, மூ.ப.1973, 192,மறு.ப.1997

74. கம்பன்கலை (தம்பியர் இருவர்), அ.ச.ஞானசம்பந்தம், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோவை, 1962?,147,மறு.ப.1995

75. கவிச்சக்கரவர்த்தி (நாடகம்),கு.அழகிரிசாமி, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1963, 22+220,மறு.ப.1987

76. கவிச்சக்கரவர்த்தி கம்பர் வரலாறு, அ.கி.நாயுடு, முப்பால் நிலையம், கோவை, 1963, 4+135

77. கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி, மாதவச் சிவஞான யோகிகள், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1964,32

78. கம்பரில் வள்ளுவர், சா.சுந்தரனார், விசாலாட்சி பதிப்பகம், சென்னை, 1964,7+160

79. கம்பன் கவியரங்கில் மலரமுதன், பூ.அமிர்தலிங்கன், பாரிநிலையம், சென்னை, 1964,–

80. காந்தியடிகளும் கம்பநாட்டாழ்வாரும், வெ.இராமலிங்கம் பிள்ளை, கவிஞர் பதிப்பகம், கோவை, 1964, 1+68

81. கம்பநாடகம், தெ.துரைசாமி, அருளகம், திருச்சி, 1965,–

82. கம்பர்,வ.சுப.மாணிக்கம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1965,1967,1972,1974,144

83. கம்பன் கவியமுதம் (கம்பராமாயணக் கட்டுரைத் தொகுப்பு),–, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை, இ.ப.1965,6+207, மறு.ப.1972

84. கம்பன் மலர் (கம்பராமாயணக் கட்டுரைத் தொகுப்பு),–, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை,1965,190, மறு.ப.1979

85. கவிச்சக்கரவர்த்தி கம்பர், இரா.பழனிசாமி, மல்லிகைப் பதிப்பகம், சென்னை, 1965, 2+129, மறு.ப.1995

86. கம்பர் கதை, நாக சண்முகம், அழகுபதிப்பகம், காரைக்குடி, 1966, 1+76

87. கம்பருக்குக் கதை கொடுத்தவர் வான்மீகரா?, கு.திருமேனி, இலக்கிய நிலையம், திருச்சி, 1966, 138

88. கம்பனும் சிவனும், ராய.சொ, அழகப்பா கல்லூரி, காரைக்குடி, 1966, 18+240+14

89. சீதை, ஆர்.இராசாமணி அம்மையார், பேகன் பதிப்பகம், காரைக்குடி, 1966,–

90. கம்பராமாயண அருஞ்சொல் அகராதி (மாதிரிப்பிரதி), அ.சே.சுந்தரராஜன் (தொகு), ஆசிரியர், சிதம்பரம், 1967, 76

91. வீடணன்,ப.அருணாசலம், மனோன்மணி விலாச புத்தக சாலை, கோலாலம்பூர், 1967, 1+107

92. கம்பர் விருந்து, ஜி.சுப்பிரமணியம், மணிவாசகர் நூலகம், சென்னை, 1968, 4+136

93. கம்பன் கண்ட உயிரினங்கள் மே.பிளாரன்சு தாசு, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1968, 10+195+15

94. சொல்லின் செல்வன் (நாடகம்), ரா.சீனிவாசன், அணியகம், சென்னை, 1968, 164, மறு.ப.1995

95. கம்பர் கவி இன்பம், ம.பொ.சிவஞானம், இன்பநிலையம், சென்னை, இ.ப.1969,–

96. கம்பர் தரும் இராமன் அருட்செல்வம், மு.சதாசிவம், பாரிநிலையம், சென்னை, 1969, 16+171

97. கம்பன் கண்ட அரசியல், எஸ்.இராமகிருஷ்ணன், ஸ்டார்பிரசுரம், சென்னை, 1969, 4+136

98. கம்பனில் தாவரங்கள், கி.மோகனகுமாரி, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர் கோயில், 1969, 18+228+2

99. தெய்வப்புலவர் கம்பர், மு.இராகவையங்கார்,–,–,1969,–

100. கம்பர் காட்டும் பெண்ணோவியம் – சீதை, மு.சதாசிவம், பாரி நிலையம், சென்னை, 1970, 68

101. கம்பர் வாக்கும் நோக்கும்,ச.கணபதிராமன், திருமகள் நூலகம், தூத்துக்குடி, 1970, 9+96

102. கம்பராமாயணக் கருத்தோவியம் (2. சரணாகதி), சாந்தமூர்த்தி, இராம மந்திரம், சென்னை, 1970, 2+52

103. கம்பனில் நட்பு, ஜான்மின் ஆசீர், ஜெயகுமாரிஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1970, 147+7

104. வாலிகதி (கவிதை+உரை)–வாலியை இராமன் மறைந்திருந்து எய்யவில்லை, ஈ.எஸ்.இராமசாமி ஜோதிடர், ராஜா பிரிண்டிங் & பப்ளிஷிங் ஒர்க்ஸ், பொள்ளாச்சி, 1970 (கம்பராமாயணத்தின் நுட்பச் சாரம்)

1971–1980

105. கம்பரும் மெய்ப்பாட்டியலும் கு.கோதண்டபாணி, அ.ப.க, அண்ணாமலைநகர், 1971, 6+105

106. ஸ்ரீமத் கம்பராமாயண அகராதி (தொகுதி 1 அ முதல் ஔ வரை) ஆ.சே.சுந்தரராஜன், ஆசிரியர், பாண்டிச்சேரி, 1971, 45+391

107. A Comparative study of Kambaramayanam and Tulasi Ramayanam, S.Sankarraju Naidu, University of Madras, Madras, 1971

108. கம்பன் காவிய மாண்பு, சோ.ந.கந்தசாமி,–,–,1972,–

109. தெய்வக் கற்பினள் கைகேயி, தி.மாணிக்கவாசகம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1972,4+51

110. Kamban, S.Maharajan, Sahitya Akademi, Delhi, 1972, 2+80

111. இலக்கிய நாயகி சீதை, ரெ.இராமசாமி, ஆசிரியர், கண்டனூர், 1973, 46 (கவிதை)

112. Essays on Kamban,-, Bharathi Tamil Sangam, Calcutta, 1973, 2+185

113. The Ramayana in Telugu and Tamil (A Comparative study), C.R.Sarma, Lakshminarayana Granthamala, Madras, 1973, 177

114. அனுமன் ஆய்வும் வழிபாடும், ச.சிவகாமி, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோயில், 1974, 216, மறு.ப.1996

115. அனுமனை அனுபவித்த ஆழ்வார்களும் கம்பநாட்டாழ்வாரும், ஜி.தி.கோபால கிருஷ்ணநாயுடு, மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர், 1974, 23+3

116. இராவணேசுவரன், தி.மாணிக்கவாசகம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1974, 5+132

117. கம்பர் கவிநயம், அ.கு.ஆதித்தர், வானதிபதிப்பகம், சென்னை, 1974,–

118. கம்பன் கவிதை மலர்,–, கம்பன் கழகம், காரைக்குடி, 1974,–

119. தீ பரவட்டும், சி.என்.அண்ணாதுரை,–,–,–,–

120. செந்தீ பரவட்டும், சங்கர்லால், லெட்சுமிடைகர் பப்ளிஷர்ஸ், மதுரை, 1974, 91

121. வாலி, கு.திருமேனி, இலக்கிய நிலையம், திருச்சி, 1974, 4+136

122. கம்பன் காவியத்தில் உயிரினங்கள் (ஓர் அறிவியல் விளக்கம்), பி.எல்.சாமி, கம்பன் கழகம், புதுச்சேரி, 1975, 2+99

123. கம்பன் மணிமலர்,–,கம்பன் கழகம், காரைக்குடி, 1975,148

124. கம்பன் விழா மலர்,–, கம்பன் கழகம், சென்னை, 1975,–

125. கவியரங்கில் கம்பன், அரு.நாகப்பன், கண்ணா பதிப்பகம், சென்னை, 1975, 86

126. வள்ளுவரும் கம்பரும், ச.தண்டபாணி தேசிகர், அ.ப.க., அண்ணாமலை நகர், 1975, 2+542+28

127. வாலி வதம் சரியா?, முரு.பழ.இரத்தினம் செட்டியார், மீனாட்சிப் பதிப்பகம், புதுக்கோட்டை, 1975, 2+92

128. விபீஷ்ணன், நா.சிவ சுப்பிரமணியன், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1975, 1+44

129. கம்பன் கண்ட இராமன், எம்.எம்.இஸ்மாயீல், வானதிபதிப்பகம், சென்னை. 1976, 11+239

130. கம்பன் மூன்றாம் ஆண்டு விழா மலர்,–, கம்பன் கழகம், சேலம், 1976,–

131. வாலும் கோலும் (வாலி வதம் பற்றிய புதிய ஆராய்ச்சி), கீரன், மனோன்மணி பதிப்பகம், லால்குடி, 1976, 44.

132. இராமாயண ரத்னாகரம் (மோகனக்கடல்), ஹா.கி.வாலம், மோகனாப் பதிப்பகம்,–,1977,16+395

133. கம்பன் கழக மலர்,–, கம்பன் கழகம், புதுச்சேரி, 1977,–

134. கிருஷ்ணப் பிள்ளையும் கம்பரும், எஸ்.மாரிமுத்து, குருகுல இறை இயல் ஆய்வுக்குழு, சென்னை, 1977,–

135. நெஞ்சில் நெருஞ்சி (கும்பகருணன் திறனாய்வு), அ.அறிவொளி, அன்பரசி வெளியீட்டகம், சிக்கல், 1977, 172.

136. The Epic Muse : The Ramayana and Paradise lost, S.Ramakrishnan, Peoples Publishing House, New Delhi, 1977,-

137. கம்பர் பிள்ளைத்தமிழ்க் கோவை, நா.மீனாட்சி சுந்தரம் முத்து சம்பந்தன், நாச்சி குளத்தார் பதிப்பகம், உதயமார்த்தாண்டபுரம், 1978,–

138. கம்பன் ஆய்வடங்கல், ச.சிவகாமி, தமிழ்ப்பதிப்பகம், சென்னை, 1978, X+415

139. கம்பன் கற்பனை, ச.வே.சுப்பிரமணியன், தமிழ்ப்பதிப்பகம், சென்னை, 1978, 286.

140. கம்பன் கைவண்ணம், கமலா சங்கரன், பூரம் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1978, இ.ப.1980, 120

141. கம்பன் மணிமலர்,–,கம்பன் கழகம், காரைக்குடி, 1978,72.

142. கம்பன் விழாமலர்,–,கம்பன் கழகம், புதுக்கோட்டை, 1978,90.

143. கும்பகர்ணன், தா.நடராஜசர்மா, இந்திரா பப்ளிகேஷன்ஸ், திருவனந்தபுரம், 1978, 150.

144. கோசிகன், எஸ்.சுப்பிரமணியன், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1978,–

145. மும்மடங்கு பொலிந்தன, மு.மு.இஸ்மாயீல், வானதி பதிப்பகம், சென்னை, 1978, மறு.ப.1992, XXVIII + 272

146. Kambans Treatment of Tirukkural, Kamala Sankaran, Pooram Publications, Madras, 1978, 287

147. கம்பர் கவித்திறன், ஆ.கு.ஆதித்தர்,–,–,1979,–

148. கம்பரிடம் யான் கற்ற அரசியல், ம.பொ.சிவஞானம், பூங்கொடிப் பதிப்பகம், சென்னை, 1979, 192

149. கம்பன் – ஒரு திறனாய்வு, செந்துறைமுத்து, அருண்மொழி பதிப்பகம், சேலம், 1979, 312

150. கம்பன் கண்ட பெண்கள், சாண்டில்யன், வானதி பதிப்பகம், சென்னை, 1979,VIII+234

151. கம்பன் தரும் தம்பியர், ம.இலக்குமி நாராயணன், கண்ணம்மை பதிப்பகம், திருச்சி, 1979, 8+110

152. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள், ந.சுப்புரெட்டியார், நாவலர் புத்தக நிலையம், மதுரை, 1979,–

153. கம்பன் மணிமலர்,–, கம்பன் கழகம், காரைக்குடி, 1979,–

154. கம்பன் மலர்,–,தமிழுறவு வெளியீடு, சென்னை, 1979,XII+168

155. கம்பனும் பக்தி இயக்கமும், க.வீரையன், தீபா பதிப்பகம், திருவெண்காடு, 1979, 328

156. தூய சிந்தையள் (கைகேயி), கு.திருமேனி, கோவலநிலையம், திருச்சி, 1979, 172

157. பாத்திரமும் பாத்திறமும், வே.இராம சுப்பிரமணியம், கண்ணம்மை பதிப்பகம், திருச்சி, 1979,–

158. Metres in Kambaramayanam; K.V.Dakshayani, Parinilayam, Madras, 1979,-

159. இராமனும் இராமானுஜனும், எஸ்.சங்கரராமன், பூங்கொடிப் பதிப்பகம், சென்னை, 1980,–

160. கம்பர் காட்சி, ஔவை நடராசன், சேகர் பதிப்பகம், சென்னை, 1980, 274.

161. கம்பராமாயணக் காட்சிகள், சி.கணபதிப்பிள்ளை, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம், 1980,–

162. கம்பரின் உவமை விளக்கம் : அகரவரிசையில், நெ.துரைசாமி, ஆசிரியர், திருச்சி, 1980,–

163. கம்பன் ஒரு திறனாய்வு – இரண்டாம் பாகம், செந்துறைமுத்து, அருண்மொழி பதிப்பகம், சேலம், 1980, 72

164. கம்பன் – ஓர் ஒப்பீடு, தகடூரான், தேன்தமிழ்ப் பதிப்பகம், சேலம், 1980, 372

165. கம்பன் கலைக் கோயிலுக்கு ஒரு கைவிளக்கு, பி.ஸ்ரீ+சரசுவதி இராமநாதன், வானதி பதிப்பகம், சென்னை, 1980,–

166. கம்பன் சுவை, செவ்வேள், சேகர் பதிப்பகம், சென்னை, 1980,–

167. கம்பன் மணிமலர்,–, கம்பன் கழகம், காரைக்குடி, 1980, 112

168. கம்பன் மலர், நா.நஞ்சுண்டான் (பொறுப்பு), கம்பன் கழகம், கோவை, 1980,73

169. கம்பனின் உவமைகள், மா.இலக்குமி நாராயணன், கண்ணம்மை பதிப்பகம், திருச்சி, 1980,–

170. காவியக் கம்பன், ஏ.கே.வேலன், வி.எஸ்.கே.வெளியீடு, சென்னை, 1980,–

1981

171. இராமாயணம் உண்மையும் புரட்டும், கே.முத்தையா, ஏ.அப்துல்வஹாப், மதுரை,160

172. இலங்கை மூவர், கீரன், சங்கப்பலகை, சென்னை,86

173. கம்பர்–Kamban (தொகு)–சின்மயா யுவகேந்திரா, சென்னை, 156

174. கம்பரும் காந்தியடிகளும், ம.பொ.சிவஞானம், சேகர் பதிப்பகம், சென்னை,–

175. கம்பரும் நாடகக் கலையும், ஆ.கு.ஆதித்தர், வானதி பதிப்பகம், சென்னை, 201.

176. கம்பன் உத்திகள், தகடூரான், தேன் தமிழ்ப் பதிப்பகம், சேலம், 151

177. கம்பன் திருப்புகழ் (சந்தப்பாக்கள்), அரங்க சீனிவாசன், மணிவாசகர் நூலகம், சென்னை,–(உரையுடன்)

178. கம்பன் மணிமலர்,–,கம்பன் கழகம், காரைக்குடி, 121

179. கம்பன் மலர், நா.நஞ்சுண்டான் (பதி), கம்பன் கழகம், கோவை,–

180. கம்பன் விழா (5ஆம் ஆண்டு மலர்),–,கம்பன் கழகம், திருப்பத்தூர் (வ.ஆ.),–

181. கம்பனும் உலகியல் அறிவும், ச.வே.சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை,1+158.

182. கலைந்த கனவு (சூர்ப்பணகை ஆய்வு), வி.சா.பால சுப்ரமணியன், சா.பா. மீனாட்சி சுந்தரம், தஞ்சாவூர், 184

183. கவிச்சக்கரவர்த்தி கம்பன்–மகாகவி வேமனா,–, கம்பன்கழகம், இராஜபாளையம்,–

184. சிறையிருந்த செல்வி, என்.கிருபானந்தன், பாரிநிலையம், சென்னை,VIII+116

185. நான் ரசித்த கம்பனும் கம்பன் கழகங்களின் கடமையும், பி.ஸ்ரீ.ஆச்சாரியா, நெல்லை மாவட்டம் கம்பன்கழகம், பாளையங்கோட்டை, 100

1982

186. இராமாயணக் காட்சிகள், எம்.நாராயண வேலுப்பிள்ளை, ரேவதி பதிப்பகம், சென்னை, 166, மறு.ப.1995

187. இலக்குவன்–பிரியாத்தம்பி, தே.வீரராகவன், பாரிநிலையம், சென்னை, 146

188. கம்பர் காட்டும் கார்காலம், முத்து எத்திராசன், சேகர் பதிப்பகம், சென்னை, 101

189. கம்பர் கவிவளம், ஆ.கு.ஆதித்தர்,–,–,–

190. கம்பராமாயணத் தோற்றம் ஓர் ஆராய்ச்சி, கு.திருமேனி, கோவல நிலையம், திருச்சி, 182+8

191. கம்பரின் சுந்தரச் சொல்லோவியம், ஈ.கோ.பாஸ்கரதாஸ், தமிழ் உறவு, சென்னை,–

192. கம்பன் இலக்கிய உத்திகள், ச.வே.சுப்பிரமணியன், மெய்யம்மை பதிப்பகம், காரைக்குடி, XVI+496

193. கம்பன் கண்ட சமுதாயம், அரு.நாகப்பன், கம்பன் கழகம், கோவை,–

194. கம்பன் சொல்லும் பொருளும், பி.சி.சீதாபதி,–,–,–

195. கம்பன் மலர்,–,கம்பன் கழகம், கோவை,–

196. கம்பன் விழா ஆறாம் ஆண்டு மலர்,–, கம்பன் கழகம், திருப்பத்தூர் (வ.ஆ),–

197. கவிச்சக்கரவர்த்தியும் கவியரசரும், மு.மு.இஸ்மாயீல், வானதி பதிப்பகம், சென்னை, இ.ப.1993, VIII+224

198. வழக்காடு மன்றம் (கம்பனில்), சொல்–சக்தி, வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை, 192.

1983

199. கம்ப ஓவியத்தில் ஆன்மீகமும் அறநெறியும், மு.த.வேலாயுதனார், சேகர் பதிப்பகம், சென்னை, 96

200. கம்பராமாயணக்காவலர் சா.கணேசன்,–,நெல்லை மாவட்டக் கம்பன் கழகம், பாளையங்கோட்டை, 83

201. கம்பராமாயணம், ஆ.க.கணேசன், ஹிக்கின் பாதம்ஸ், சென்னை, 4+99

202. கம்பரின் சமயக் கொள்கை, ம.பொ.சிவஞானம், பூங்கொடிப் பதிப்பகம், சென்னை,–

203. கம்பன் கண்ட இராமனும் சீதையும், மு.சதாசிவம், மீரா நிலையம், ஈரோடு,–

204. கம்பன் காவிய சாரம் – ஆரண்ய காண்டம், எஸ். நல்லபெருமாள், வானதி பதிப்பகம், சென்னை,–

205. கம்பன் விசுவரூபம், பழ.பழனியப்பன், வானதி பதிப்பகம், சென்னை, இ.ப.1988, 88

206. கம்பன் விழா மலர் (ஏழாம் ஆண்டு),–, கம்பன் கழகம், திருப்பத்தூர் (வ.ஆ),–

207. கம்பனில் மக்கள் குரல், ந.சுப்புரெட்டியார், வானதி பதிப்பகம், சென்னை,–

208. சொல்லின் செல்வன், மு.சாயபு மரைக்காயர், வானதி பதிப்பகம், சென்னை, 107

209. டி.கே.சியின் திறனாய்வுப் போக்கு, பாலமுருகன், திருமொழிப் பதிப்பகம், கரூர்,–

210. மந்தரை (கூனி), கு.திருமேனி, கோவலநிலையம், திருச்சி, 56+8.

211. Epic Heroism in Milton and Kamban, A.A. Manavalan, Kamban Kazhagam, Coimbatore.

1984

212. இராமாவதாரம், எம்.நாராயண வேலுப்பிள்ளை, நர்மதா பதிப்பகம், சென்னை, 194

213. இராமாயண சுந்தர காண்டம், பி.எஸ்.ஆச்சார்யா, நர்மதா பதிப்பகம், சென்னை, 164

214. உலகப் பெருங்கவிஞர், வ.கமலக்கண்ணன், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 464

215. கம்பராமாயணக் கிளைக்கதைகள், மு.நிலாமணி, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 162

216. கம்பராமாயணம், பூவண்ணன்,–,–,மறு.பதி,1985–

217. கம்பன் கவிநயம், கிருபானந்தவாரியார், திருப்புகழமிர்தம் காரியாலயம், சென்னை,–

218. கம்பன் காட்டும் தீராக் காதலன், அ.அருணகிரி, வானதி பதிப்பகம், சென்னை, 138+XXIV, மறுப.1988,1999

219. கம்பன் படைப்பில் குற்றவாளிகள், பி.சி.சீதாபதி, அபிராமி பப்ளிகேஷன்ஸ், சென்னை, VI+266

220. கம்பன் புதிய பார்வை, அ.ச.ஞானசம்பந்தன்,கம்பன் கழகம், சென்னை, மறு.ப.1993, XVI+392

221. கம்பன் மலர், நா.நஞ்சுண்டான் (பொறுப்பு), கம்பன் கழகம், கோவை,–

222. கம்பனிடம் கற்போம், பழ.பழனியப்பன், வானதி பதிப்பகம், சென்னை,–

223. சங்க காலத் தமிழர் சமயமே கம்பனின் சமயம், எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார் (ஸுதர்சனர்), ஆசிரியர், சென்னை, 18+220

224. ராமராஜ்யமும் மார்க்ஸியமும், ராகுலசாங்கிருத்தியாயன், என்சிபிஎச், சென்னை,–

225. வான்மீகி – கம்பன் மாற்றங்கள் (பாலகாண்டம்), பி.சி.சீதாபதி, கம்பன் கழகம், கோவை,–

226. வேலும் வில்லும், ரா.பி.சேதுப்பிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, இ.ப.,–

1985

227. இராமபக்தி அல்லது தம்பியர் அன்பு, நா.பாலுசாமி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை,–

228. இராமாயணசாரம், திலீபன், அநுராகம், சென்னை, 208

229. உயிர் தந்த உத்தமன், பெ.இராமநுஜ ரெட்டியார், பாரி நிலையம், சென்னை, XVI+144

230. கம்பர், மாரிமுத்து, திருமுருகநிலையம், சென்னை, இ.ப.1986,83.

231. கம்பராமாயண அகராதி – பாகம் 5, அ.சே.சுந்தரராஜன், மணிவாசகர் நூலகம், சென்னை, 278.

232. கம்பன் கண்ட சமரசம், மு.மு.இஸ்மாயீல், வானதி பதிப்பகம், சென்னை,–

233. கம்பன் காட்டும் கும்பகருணன், அ.அருணகிரி, வானதி பதிப்பகம், சென்னை,–

234. கம்பன் காவியப் பாத்திரங்கள், பி.தரும நடராசன், சஞ்சீவியார் பதிப்பகம், சென்னை, 148.

235. கம்பன் சொல்லும் பொருளும் – யுத்தகாண்டம் (பகுதி–1), பி.சி.சீதாபதி, அபிராமி பப்ளிகேஷன்ஸ், சென்னை, 246.

236. கம்பன் படைத்த காவிய இராமன், நடராஜசிவம், அணுபதிப்பகம், சென்னை, 100

237. மூன்று வினாக்கள், மு.மு.இஸ்மாயீல், கம்பன் கழகம், சென்னை, XVI+432, மறு.ப.1995

238. ஜெகவீரபாண்டியனாரின் 'கம்பன் கலைநிலை' –ஓராய்வு, அன்பு அரசி, பூங்கொடி பதிப்பகம், சென்னை, XVI+372

1986

239. அனுமான் அருட் செல்வம், ஜலஜா சக்திதாசன், நித்தியானந்த ஜோதி நிலையம், சென்னை, 59

240. இளங்கோவும் கம்பனும், ச.வே.சுப்பிரமணியன், உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், சென்னை, V+420

241. கம்பசூத்திரம், எஸ்.இராமகிருஷ்ணன், கம்பன் கழகம், சென்னை, XVI+147

242. கம்பரும் உலகியலும், அ.சே.சுந்தரராஜன், மணிவாசகர் நூலகம், சென்னை, 96

243. கம்பன், எஸ்.மகராஜன், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 86

244. கம்பன், கா.மீனாட்சி சுந்தரம்,–,–,–

245. கம்பன் விழா மலர்,–, கம்பன் கழகம், விழுப்புரம்,–

246. கம்பனா? காமுகனா?, கே.தங்கராசு, பாரதி புத்தகாலயம்,–,–

247. கவிச்சக்கரவர்த்தி கம்பர், ச.நா.மூர்த்தி,–,–,–

248. காப்பிய விருந்து, தெ.ஞானசுந்தரம், உலகத்தமிழ்க்கல்வி இயக்கம், சென்னை, 207+ VI

249. கேகயன் மடந்தை, தமிழவேள், ஸ்ரீ அர்ச்சனா பதிப்பகம், குறிஞ்சிப்பாடி, 140.

250. தாயினும், மு.மு.இஸ்மாயீல், வானதி பதிப்பகம், சென்னை,–

1987

251. அயோத்தி கதை, வைதி.நடராசன், இராஜேஸ்வரி வெளியீடு, நாகர்கோவில், 452

252. ஓவியப்புறா, மு.இராமசாமி, கம்பன்கழகம், நாமக்கல், 124

253. கம்பர் தரும் பழமொழிகள், முத்து எத்திராசன், நர்மதா பதிப்பகம், சென்னை, VIII+176

254. கம்பராமாயணக் களஞ்சியம், கீரன், அல்லி நிலையம், சென்னை,480

255. கம்பன் காட்டும் களன், அ.வெ.சுப்பிரமணியன், நர்மதா பதிப்பகம், சென்னை, 128

256. கம்பன் பாடிய வண்ணங்கள், இரா.திருமுருகன், வானதி பதிப்பகம், சென்னை,–

257. கம்பன் விட்ட அம்புகள், கீரன், அல்லி நிலையம், சென்னை, 96

258. கம்பனில் பழமொழிகள், தே.வீரராகவன், வானதி பதிப்பகம், சென்னை, IV+136

259. மாவீரன் வாலி, இரா.பழனிச்சாமி, கோடி முருகன் பதிப்பகம், சென்னை, 128

260. வால்மீகியும் கம்பனும் கண்ட சமூகங்கள், நா.வரதராஜுலு நாயுடு, கம்பன் கழகம், சென்னை, XII+156

1988

261. கம்பக் கதம்பம், அ.அருணகிரி, வானதிபதிப்பகம், சென்னை, 256

262. கம்பநாடகம் (துனி உறு செல்வம்), கோ.செல்வம், புவனம் பதிப்பகம், சென்னை, 144 (பாலகாண்டம்)

263. கம்ப நாடகம் (பங்கமில் பரதன்), கோ.செல்வம், புவனம் பதிப்பகம், சென்னை, XXXIV+88 (அயோத்தியா காண்டம்)

264. கம்பராமாயண ஆழ்கடலில் சில முத்துக்கள், கே.பக்ஷிராஜன், கம்பன் கழகம், பாளையங்கோட்டை,–

265. கம்பரும் ஹோமரும் (சுவைகள்), ஆ.ரா.இந்திரா, வானதி பதிப்பகம், சென்னை, 172

266. கம்பன் கலை (3 நூல் இணைவு), அ.ச.ஞானசம்பந்தன், கழகம், சென்னை, XXIV+460

267. கம்பன் காவிய சாரம் – கிஷ்கிந்தா காண்டம், எஸ்.நல்லபெருமாள், வானதி பதிப்பகம், சென்னை, IX+187

268. கம்பன் விழா மலர்,–,கம்பன் கழகம், புதுச்சேரி,166

269. கம்பனில் உலக அமைதிச் சிந்தனை, அ.அருணகிரி (தொகு), வானதி பதிப்பகம், சென்னை, 152

270. கம்பனும் சடையனும், மு.இராமசாமி, கம்பன் கழகம், இராசிபுரம், 228.

271. கம்பனும் சேக்ஸ்பியரும், எஸ்.இராமகிருஷ்ணான், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 202

272. கோசலை நாயகன், இராம.ஸ்ரீனிவாசன், கல்யாணி பதிப்பகம், சென்னை, 88.

273. சமயநோக்கில் கம்பன், அ.அருணகிரி(தொகு), வானதி, பதிப்பகம், சென்னை, 168

274. தேசியக் காப்பியம், மு.இராமசாமி, கம்பன் கழகம், நாமக்கல், 272+14+18

275. புகழ்க் கம்பன், சு.சிவகாம சுந்தரி, வானதி பதிப்பகம், சென்னை, XII+162

276. புதுவைக் கம்பன் விழா மலர்,–, கம்பன் கழகம், புதுவை

277. ராமாயணம்; சீதாராமகதை, வி.எஸ்.ஸ்ரீனிவாச கோபாலன், ஹரிதா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 198

1989

278. அடைக்கலம், மு.மு.இஸ்மாயீல், வானதி பதிப்பகம், சென்னை, 10+254

279. இராமாயணக் கிளைக் கதைகள் ஒப்பீடு, இரா.பிரேமா, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 280

280. இராமாயணச் சிந்தனை, ம.ரா.போ.குருசாமி, அம்மன் புக் கம்பெனி, கோவை, X+156

281. ஒரு நோக்கில் இருபார்வைகள், அ.அருணகிரி (தொகு) வானதி பதிப்பகம், சென்னை, 4+148

282. கம்பர் காட்டும் பாலைநிலம், முத்து எத்திராசன், அருண் புத்தகாலயம், சென்னை, 112

283. கம்பன் கண்ட காரிகையர், இரா.சரோஜினி, தமிழ் வளர்ச்சி மன்றம், சென்னை, VIII+184

284. கம்பன் காவிய சாரம் (சுந்தர காண்டம்), எஸ்.நல்ல பெருமாள், வானதி பதிப்பகம், சென்னை, 308

285. கம்பனுக்குச் சீட்டுக்கவி (புதுவைக் கம்பன் விழாக் கவியரங்கத் தொகுப்பு), அ.அருணகிரி (தொகு), வானதி பதிப்பகம், சென்னை, 152.

286. கவிச் சக்கரவர்த்தி கம்பர், சதா.மூர்த்தி, கலாநிலையம்,–,207

287. காப்பியக் கம்பரும் புரட்சிக் கவிஞரும், சிலம்பொலி சு.செல்லப்பன், கம்பன் கழகம், சென்னை, 206

288. காப்பிய நோக்கில் கம்பராமாயணம், அ.பாண்டுரங்கன், என்சிபிஎச், சென்னை, XX+296

289. சுந்தரகாண்டச் சுரங்கம், சுந்தர சண்முகனார், வானதி பதிப்பகம், சென்னை, IV+252

290. நடையின் நின்றுயர் நாயகன், ந.சீனிவாசன், கவிதா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 204

291. நல்வழி காட்டும் இராமாயணம், என்.பார்வதி, நர்மதா பதிப்பகம், சென்னை, 172

292. பெருஞ் சோற்றுக் கடன் கழித்தோருள் மிகச் சிறந்தவன் கும்பகருணனா? கர்ணனா? (பட்டிமன்றம்), ஜெயராமனார், சக்தி வெளியீடு, காஞ்சிபுரம்,–

1990

293. அயோத்தியா காண்ட ஆழ்கடல், சுந்தர சண்முகனார், வானதி பதிப்பகம், சென்னை, 236

294. இராமாயண ரத்தினங்கள், தங்கவயல் லோகிதாசன், ஓரிநிலையம், சென்னை, 236

295. இஸ்லாமிய நோக்கில் கம்பர், சாயபு மரைக்காயர்,–,–,–

296. கம்பன் என்னும் மாநதியில், த.இராமலிங்கம், வானதி பதிப்பகம், சென்னை, XXIV+166

297. கம்பன் பாடிய அறம், சு.வேல்முருகன், கம்பன் பதிப்பகம், புதுவை, 128

298. கம்பனின் அரசியல் கோட்பாடு, எஸ்.அப்துல் ரகுமான், கம்பன் கழகம், சென்னை, IV+160

299. கம்பனுக்குப் பாட்டோலை, இரா.திருமுருகன், கங்கை புத்தக நிலையம், சென்னை, IV+104

300. கம்பனோடு ஒன்றும் பிரெஞ்சு இலக்கியங்கள், ச.மதன கல்யாணி, கங்கை புத்தக நிலையம், சென்னை, IV+116

301. சீதா கல்யாணம், கோக்கலை ஜெ.ராஜன், மகராணி, சென்னை,96

302. சீதை, பி.ஆர்.ராஜம் அய்யர், பீக்காக் பதிப்பகம், சென்னை, 92

303. சீதை கருத்துரை, சைதன்யானந்தர், ஹிந்து தர்ம வித்யாபீடம், கல்படி அஞ்சல், 97

304. சீதையை வணங்குவோம், என்.எஸ்.முத்துக்கிருஷ்ணராஜா, கம்பன் கழகம், ராஜபாளையம்,–

305. சுந்தர காண்டச் சூறாவளி, சுந்தர சண்முகனார், வானதி பதிப்பகம், சென்னை,–

306. ராம பக்தி, இரா.பழனிசாமி, கோடி முருகன் பதிப்பகம், சென்னை,–

307. வகுப்புவாத வரலாறும் இராமரின் அயோத்தியும், ஆர்.எஸ்.சர்மா, என்சிபிஎச், சென்னை, 4+48

1991

308. இராமாயணம்– காவியநாயகர் கலைக் களஞ்சியம், டி.வி.சண்முகம், கல்வி உலகம், இரத்தேரி, IV+265

309. கம்பர் உணர்த்தும் பரம்பொருள் நிலை, முரு.பழ.இரத்தினம் செட்டியார், கம்பன் கழகம், சென்னை, XII+136

310. கம்பர் காட்டியவழி, இரா.பழனிசாமி, பழனிபதிப்பகம், சென்னை, IV+144

311. கம்பர் சொன்ன கடவுளர் கதைகள், முத்து எத்திராசன், நர்மதா பதிப்பகம், சென்னை, 188

312. கம்பன் கருத்துக் களஞ்சியம், சரோஜினி செல்லக் கிருஷ்ணன் (தொகு), வானதி பதிப்பகம், சென்னை, XVI+232

313. கம்பன் மலர்,–,கம்பன் கழகம், கோவை,–

314. கம்பனில் அறிவு, சு.வேல்முருகன், கம்பன் பதிப்பகம், புதுவை,160

315. கம்பனில் சில முத்துக்கள், முத்து எத்திராசன், மும்மணிப்பதிப்பகம், சென்னை, 120

316. சொல் : இராமகாதை (நாடகம்), நீல மதுமயன், புத்தகப் பூங்கா, சென்னை, 108

317. பாலகாண்டப் பைம்பொழில், சுந்தர சண்முகனார், வானதி பதிப்பகம், சென்னை, 258

318. பேசாத பேச்சு, கி.வா.ஜகந்நாதன், அமுத நிலையம், சென்னை, மறு.ப.,148

319. வள்ளலின் வள்ளல், மு.மு.இஸ்மாயீல், வானதி பதிப்பகம், சென்னை, XII+246

320. வாலிவதை குற்றமா? (வழக்காடு மன்றம்), பூ.சொல் விளங்கும் பெருமாள் + சக்திப் பெருமாள், ஜி.பிரிண்டர்ஸ், மதுரை, 101+12

321. விபீஷணன் வெளியேற்றம் (கம்பராமாயணம் – மந்திரப் படலம்) கா.மு.ஷெரீப், தமிழ் முழக்கம் பதிப்பகம், சென்னை, 51

1992

322. ஆழ்வார்களும் கம்பனும், இராமராஜன், வானதி பதிப்பகம், சென்னை, 184

323. இராமாயணக் குறியீடுகள், ச.சிவகாமி, மாதவி பதிப்பகம், சென்னை,84

324. இராமாயணத்தில் நக்கீரன், கொடைக்கானல் காந்தி, இராசராசன்–இராசமாறன் பதிப்பகம், சென்னை, 219

325. கம்பன் திருவுள்ளம், அ.அருணகிரி, வானதிபதிப்பகம், சென்னை, VIII+116

326. கம்பன் மலர்,–,கம்பன் கழகம், கோவை, X+112+3

327. கம்பனின் தத்துவங்கள், ந.கோபாலன், வளவன் பதிப்பகம், தஞ்சாவூர், 112

328. கம்பனும் கண்ணதாசனும், சரசுவதிராமநாதன், வானதி பதிப்பகம், சென்னை, VII+112, மறு 1994, 1998

329. களம் கண்ட சீதை, ஆரணிப்பட்டு சுப்பிரமணியம், விசாலாட்சி பதிப்பகம், சென்னை, 212

330. கிட்கிந்தா காண்டத் திறனாய்வு, சுந்தர சண்முகனார், வானதி பதிப்பகம், சென்னை, 318.

331. சூர்ப்பணகை, ஆர்.வீரபத்திரன்,–,–,–

332. பாட்டரங்கில் கம்பன், சித்தன், வானதி பதிப்பகம், சென்னை, XXIV+136

1993

333. அகலிகை, ஆர்.வீரபத்திரன், இராமலிங்கம், நாகர்கோவில், 170

334. அடி சூடும் அரசு, மு.இராமசாமி, திருவரங்கப் பதிப்பகம், இராசிபுரம், 256

335. ஆரண்ய காண்ட ஆய்வு, சுந்தர சண்முகனார், வானதி பதிப்பகம், சென்னை, 296

336. இராமாயணப் பாத்திரங்கள் ஒரு கண்ணோட்டம், வேலூர் ச.ஸ்ரீபாலன், யாழ் வெளியீடு, சென்னை, 72

337. இளவரசன் இந்திரசித்து, வி.சா.பாலசுப்பிரமணியன், ஆர்.ஜெயலட்சுமி, சென்னை, 136

338. கம்ப களஞ்சியம், இரகுபரன் (தொகு), அகில இலங்கைக் கம்பன் கழகம், யாழ்ப்பாணம்

339. கம்பர் முப்பால், ம.ரா.போ.குருசாமி, கம்பன் கழகம், சென்னை, 216

340. கம்பராமாயணத்தில் சங்க இலக்கிய மரபுகள், மா.சுசீலா, பொன்னி வெளியீடு, மதுரை, X+286

